மா. சு. அண்ணாமலை



இந்திய தேசிய ராணுவம் தமிழர் பங்கு



பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

இந்திய தேசிய ராணுவம்
(INA)
தமிழர் பங்கு

பேராசிரியா

மா.சு. அண்ணாமலை,
M.Sc.,M.Sc(IIT)., M.Phil., B.Ed.,

ஆர்த்தி பதிப்பகம்

சென்னை - 90

□ முதற்பதிப்பு 1995

□ நூல் விபரம்:

□ நூல் தலைப்பு: **இந்திய தேசிய ராணுவம்**

□ ஆசிரியர் : **மா.சு. அண்ணாமலை**

□ மொழி : தமிழ்

□ பொருள் : இந்திய விடுதலை - வரலாறு

□ தாளின் தன்மை : 16 KG. J.K. மேப்லித்தோ

□ நூலின் அளவு : 17 X 10 செ.மீ.

□ மொத்தப் பக்கங்கள் : 256

□ நூல் கட்டுமானம்: சாதா அட்டை பைண்டு

□ மேல் அட்டை : டிராட்ஸ்கி மருது

□ உரிமை : ஆசிரியருக்கு

□ விலை : ரூபாய் 80

□ நூல் வெளியிடுவோர்:

ஆர்த்தி பதிப்பகம்
M39-D, புதிய எண்.24
7வது குறுக்குத் தெரு,. பெசன்ட் நகர்
சென்னை - 90, ☎ 4910235

□ கணிப்பொறி அச்சு : **மாணவர் நகலகம்**
அடையாறு, சென்னை - 20 ☎ 4911358

□ அச்சிட்டோர்: **நாதன் & கம்பெனி**
வேளச்சேரி, சென்னை - 42 ☎ 2351906

முனைவர் இரா.இளவரசு மாநிலக் கல்லூரி
தமிழ்ப் பேராசிரியர் சென்னை - 5.

பரிந்துரை

வரலாறும் இலக்கியமும் இரட்டைப் பிறவிகள் என்பர். வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய இவ்விரண்டும் ஒட்டிய உறவுடையன என்பதே இதன் பொருள். வரலாறு என்பது அரசியல் வரலாறு, குமுகாய வரலாறு, பண்பாட்டு வரலாறு முதலிய பலவகைக் கிளையுடையது. எனினும் அரசியல் வரலாறே வரலாறு என்னும் பகுப்பில் பெரிதும் கற்கப்படுவதாகவும் கருதப்படுவதாகவும் உள்ளது. அந்த அரசியல் வரலாறும் சமகால அரசியலைப் பெரிதும் பேசாமல் முடிமன்னர்கள் சார்ந்ததாகவே அவர்களின் போர்கள், வெற்றிகள், தோல்விகள் பற்றியதாகவே பெரிதும் நிலவுவதைக் காணலாம்.

இந்திய தேசிய ராணுவம் **(இதேரா)** பற்றிய இந்நூல், நடந்த நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில் வரலாறாகவும் அந்நிகழ்ச்சிகளைச் சுவை தோன்றச் சொல்லும் வகையில் இலக்கியமாகவும் விளங்குகின்றது. வரலாற்றிலக்கியமாகத் திகழும் இந்நூல் நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டின் எழுச்சிமிகு போராட்டத்தைத் துலக்கிக் காட்டும் சமகால வரலாறாய்ச் சிறக்கிறது.

இனிய நண்பர் மா.சு.அண்ணாமலை அவர்கள் இந்த நூலின் வாயிலாகத் தன்னையும் தன் தந்தையார் திரு.சுந்தரமூர்த்தியைப் போல நூலாசிரியராகத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்திக் கொள்கிறார். கணிதப் பேராசிரியரான இவர் எத்தியோப்பியாவில் வரலாறு கற்பித்தவர். உணவை உண்ணுவதைப் போலவே வேக வேகமாக நூல்களைப் படிக்கும் பழக்

கம் உள்ளவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏராளமான நூல்களைப் படித்தவர் என்பதற்கு இந்த நூலே சிறந்த எடுத்துக் காட்டு.

என்னைப் போன்ற பலரும் இதற்குமுன் படித்தும் கேட்டும் அறியாத பல செய்திகள் இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 'இலண்டன் நகருக்குக் காந்தியடிகள் ஒரு வழிகாட்டி நூல் எழுதியுள்ளார்' (பக்கம் 9); 'இளமைப் பருவத்திலேயே வ.வே.சு.ஐயர் பங்குச் சந்தையில் புலி' (11); 'குதிரையேற்றத்தில் தோற்றதால் அரவிந்தர் ஐ.சி.எஸ். தேர்வில் வெற்றி பெற முடியவில்லை' (15); 'நாற்காலிகளில் அமராமல் ஜமக்காளத்தில் உட்காரும் பழக்கம் அகமதாபாத் காங்கிரசில்தான் முதன் முதல் ஏற்பட்டது' (17); 'சீனிவாச ஐயங்கார் இந்திய விடுதலைக்காக ஸ்டாலினைச் சந்தித்து உதவி கேட்டார்' (36); 'இர்வின் சோதிடர்களை நம்பும் பழக்கம் உடையவர்' (48); 'காந்தியடிகள் 1934 முதல் காங்கிரசுக் கட்சியின் அடிப்படை உறுப்பினர் கூட இல்லை' (77).... இப்படிப் பற்பல வெளிச்சப் பொறிகள்!

வீரத்திருவுருவினராகிய சுபாஷைப் பற்றி அவர் மாணவப்பருவத்தில் ஒரு முதியவளுக்கு உதவுவதற்காக நடந்தே சென்று பணத்தைச் சேமித்துக் கொடுத்த செய்தி தொடங்கி, ஐ.சி.எஸ் பதவியைத் தூக்கி எறிந்த முதல் இந்தியராகவும் (16) இனிப்பு வகைகளைச் சிறப்பாகச் செய்யும் சமையல் வல்லவராகவும் (21) 23 ஆம் அகவையிலேயே கல்கத்தா மாநகர ஆணையராகவும் (26) போர்ப்படைத் தலைமையேற்று ஜப்பானியர்களுக்குப் பத்து விமானங்கள் வழங்குபவராகவும் விளங்கிய பற்பல செய்திகள் பக்கங்கள் எங்கும் பளிச்சிடுகின்றன.

அருந்துவதற்குப் பால் மட்டுமே அளிக்கும் பழக்கம் நிலவிய வார்தா ஆசிரமத்தில் அன்னை கஸ்தூரிபாய் சுபாஷுக்கு மட்டும் தேநீர் வழங்கியதையும் (83) காந்தியடிகள் இறப்பதற்கு ஏழு நாட்களின் முன் ''நான் எந்தப் பிறந்த நாளையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது இல்லை. ஆனால் நேதாஜியின் பிறந்நாளை மட்டும் என்னால் மறக்கவே முடியாது. நேதாஜியின் நற்பண்புகளை இந்திய மக்கள் மனதில் கொள்ள வேண்டும்'' (162) என்று குறிப்பிட்டதையும் இந்த நூலின் வாயிலாகவே நான் அறிந்து கொள்கிறேன்.

எதிரிகள் பிடிக்கும் போது பொட்டாசியம் சயனைடு உட்கொண்டு மாய்த்துக் கொள்வதும் (58) எதிரிகளின் கப்பல்களைத் தாக்கிய தற்கொலைப் படை பற்றிய குறிப்பும் (139) இன்றைய தமிழீழத்தின் பக்கம் நம் நினைவை இழுத்துச் செல்கின்றன.

தூக்கிலப்பட்ட பாலமுகுந்துவின் மனைவி 'ராம் ராக்கி' பற்றியும் (106) டி.பி.குமார் தன் மனைவிக்கு எழுதிய மடல் பற்றியும் (111) படிக்கும்போது நெஞ்சு நெகிழ்ந்து போகின்றது. அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற முத்தையா என்பவர் அம்பட்டராக மாற்றப்பட்ட சூழ்நிலையை நகைச்சுவை இழையோட விளக்குகிறார் ஆசிரியர்.

தொடர்புடைய, இன்றியமையாத வரலாற்றுச் செய்திகளை ஆங்காங்கே இணைத்தும் (22, 23, 31, 32, 34.....) தக்க மேற்கோள்களைப் பொருத்தமான இடங்களில் கையாண்டும் (14, 21, 25, 65, 130.....) நூல் எழுதப்பட்டிருப்பது தனித்துக் குறிப்பிடத்தக்கது. நேருதான் திட்டக்குழுவை உருவாக்கியவர் என்னும் கருத்து மறுக்கப்பட்டு அந்தப் பெருமை சுபாஷுக்கே உரியது என நிறுவப்படுகிறது (78).

நூலின் மையப் பொருளோடு தொடர்புடைய பல செய்திகள் எங்கெங்குக் கிடைக்கும் எனத் தேடித் துருவிச் சேர்த்துள்ளதோடு **இதேரா**-வில் பணியாற்றி இன்று உயிரோடு வாழும் பலரையும் பல இடங்களுக்கும் சென்று நேரில் கண்டு அவர்களின் கருத்துக்களையும் நூலில் பதிவு செய்துள்ளார் (93, 111-112, 129-129, 151, 157, 177....) பேராசிரியர். இந்த நூலின் தனிச்சிறப்பு என்று இதனைக் குறிப்பிட வேண்டும்.

தமிழர்கள் **இதேரா** வில் தங்களை இணைத்துக் கொண்டு நேதாஜியின் தொண்டர்களாகவும் தோழர்களாகவும் எவ்வெவ்வாறு சிறப்பாகப் பாடுபட்டனர் என்பது நூலின் பிற்பகுதியில் செறிவாகப் பேசப்படுகிறது. நேதாஜியின் சமையல்காரர் காளி தொடங்கி, சிங்கப்பூரில் அவரை முதலில் வரவேற்ற சிதம்பரம், அவரின் படைப் பிரிவிலும் அமைச்சரவையிலும் பணியாற்றிவர்கள், மலேயாவிலும், ஜெர்மனியிலும் துணை நின்றவர்கள், பொருளுதவி செய்தவர்கள் என்று தமிழர்களின் பங்கும் பணியும் இந்த அளவு வேறு எந்த நூலிலும் பதிவு

செய்யப்பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 'தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' என பிரிட்டிசு தலைமையமைச்சர் சர்ச்சில் குறிப்பிட்டதற்கு 'இந்தத் தமிழர்கள்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இரத்தத்தைக் குடிப்பார்கள்' என நேதாஜி விடையிறுத்தது வியப்பிற்குரிய வரலாற்றுப் பதிவு. 'தூக்கிலிடப்பட்ட ஒற்றர்கள் பதின்மூன்று பேரில் ஐவர் தமிழர்' (133). 'டோக்கியோ பயிற்சிக்குச் சென்ற நாற்பத்தாறு பேரில் பதினாறு பேர் தமிழர்' (172) என ஆங்காங்கே புள்ளி விவரங்கள் பேசுகின்றன. தூக்கிலிடப்பட்ட **இதோரா** வீரர்களாகிய வைக்கம் அப்துல்காதர், குமரன் நாயர் ஆகியோரின் நினைவைக் கேரள அரசு போற்றியுள்ளதைக் குறிப்பிட்டு அவர்களைப் போலவே தூக்கிலிடப்பட்ட இராமுத்தேவர் முதலிய பல தமிழர்கள் நினைவாகத் தமிழ் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்? என்று வினா எழுப்புகிறார் அண்ணாமலை. நேதாஜியின் தலைமையில் நடந்த வீரஞ்செறிந்த போரட்டத்தில் ஆடவரும் மகளிருமாகிய தமிழர்கள் பலர் தலையாய பங்கு பெற்றனர் என்பதைச் சான்றுகளோடு அறியும் போது 'தமிழன் என்று சொல்லடா - தலை நிமிர்ந்து நில்லடா' என்னும் நாமக்கல் கவிஞரின் கவிதை வரிகள் பொருள் பொதிந்தவையாகி விடுகின்றன.

என் இனிய நண்பர் அண்ணாமலையின் அரிய நூலைப் பற்றி இன்னும் நிறைய எழுதலாம். பருக்கைப் பதமாகத் தான் சில செய்திகளைக் குறிப்பிட்டுள்ளேன். 'கற்றது கையளவு, கல்லாதது உலகளவு' என்பதைக் கற்பவர்க்கு நினைவுறுத்தி அறிவை விரிவு செய்யும் இத்தகு நூல்கள் தான் இன்று தேவை. புதிதாக ஒன்றை அறிந்து கொள்வதில் ஏற்படும் இன்பம் அளப்பரியது. அத்தகு இன்பத்தை அளிக்கவல்ல இந்த நூலை உலக முழுவதுமுள்ள தமிழ் மக்களுக்குப் பரிந்துரை செய்கிறேன். விலை கொடுத்து வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

அன்புடன் சென்னை

இரா.இளவரசு *15.12.95*

FOREWORD

Captain D. DASAN

Honorary Consul of
Seychelles

Madras
6.12.95

The Author has produced a powerful and thought-provoking volume that will definitely give the reader much to ponder. The book talks about the significance of the Indian National Army (INA) and the phenomenon that was Netaji Subhas Chandra Bose. It speaks of the heroic struggle of the death-defying soldiers of the INA whose valiant deeds form a glorious chapter of our freedom struggle. And the implicit faith these men had in their leader Netaji speaks volumes of this man's leadership qualities and his ability to change the destiny of a nation. This is the first book of its kind in Tamil and I congratulate the author for this highly commendable effort.

The book might mean different things to different people: an account of history... a highly charged story of confidence, courage and sacrifice... a reiteration of the adage "Faith can move mountains"... a look at the way many of us could live. It is a book that will challenge and perhaps even change your life. This publication is an attempt to portray vividly the contribution of the INA in our freedom movement and to bring Netaji a step closer to his countrymen so that our present and future generations may derive inspiration from these brave sons of India and serve our country better. For, what India needs today are men of vision and character. Men like Netaji and his INA soldiers who fought against great odds, gave up their lives but never gave up their mission.

Capt. D. Dasan
Ex. INA

FOREWORD

Major E. BHASKARAN Madras

Confidential Secretary to Netaji 6.12.95

Prof.Annamalai has done a creditable job in bringing to the South Indian Public, especially Tamil speaking people - some very important and hitherto neglected facts about the Indian National Army and the Indian Independent movement in East Asia during the second world war. No Indian needs an introduction to Netaji Subhas chandra Bose and how he commanded the Indian National Army, formed and headed the provisional Government of free India in East Asia. His achievements and his leadership are well known but there is a little known aspect of the Independence movement, which by the very nature of it remained a secret. I am referring to the sacrifices made by many young Indians from East Asia who are almost forgotten today and who were part of a secret service and many of whom sactificed their lives in the service of the country.

Prof.Annamalai has gone to a great length in trying to find them out and bring them to the knowledge of the people in India of the present their sactifices of yesterdays. He has done great research and toured the country from one end to the other and collected the information contained in this book bit by bit. It must have been a very difficult task for a man who was not connected with the Independence movement of the time.

This book will be very useful for a young man to understand and try to emulate the services of the young men whose names form part of this work. For the youth of today, on whom depends the country's future, this book will be a great encouragement and a great lesson to learn. I recommend this book to one and all who can understand Tamil and look forward to an English Translation of the book for the benefit of the youth in other parts of the country.

I congratulate Prof.Annamalai for his very good work in producing this excellent book which forms part of history of the independence movement.

Jai Hind!

முன்னுரை

இந்திய விடுதலைக்காக காந்தியடிகள் அகிம்சை வழியில் பல ஆண்டுகள் போராடினார். ஆனால் ஆங்கிலேயரை இந்தியாவை விட்டுத் துரத்த அவர்களுக்குத் தெரிந்த வன்முறை வழியில் சுபாஷ் சந்திரபோஸ் போராடினார். நேதாஜியின் தலைமையில் ஆயிரக்கணக்கான இந்திய தேசிய ராணுவ - INA - வீரர்கள் பர்மா போர்க்களத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக இறுதி யுத்தம் நடத்தினர்.

இப்போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டவர்கள் தமிழர்கள். தமிழர்கள் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் நாட்டின் விடுதலைக்காகப் போரில் ஈடுபட்டனர். பலர் வீர மரணத்தையும் தழுவினர்.

1942 ஆம் ஆண்டு காந்தியடிகள் ''வெள்ளையனே வெளியேறு'' என்ற போராட்டத்தை நடத்தினார். இது ''செய் அல்லது செத்துமடி'' என்ற அடிப்படையில் உண்டானது ஆகும்.

1942 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பித்த போராட்டம் தீயைப்போல இந்தியா முழுவதும் பரவியது. ஆங்கில அரசு, தாலுக்கா முதல் டில்லி வரை உள்ள தலைவர்களை கைது செய்தது. ஜெயபிரகாஷ் நாராயண், லோகியா போன்ற தலைவர்கள் வீரத்துடன் போராடினார்கள். ஆனால் தகுந்த திட்டங்கள் தீட்டப்படாததால், இப்போராட்டம் வலுவிழந்தது - தலைவர்கள் சிறையில் வாடினர்.

இந்தியப் போராட்ட தீபத்தை ஒளி மங்காமல் வைத்த பெருமை நேதாஜிக்கு உண்டு; அவர் கிழக்கு ஆசியாவில் ஜப்பானியரின் உதவியோடு சுதந்திரமாக ஆயிரக்கணக்கான இந்தியர்களைக் கொண்டு வீரப்போர் நடத்தினார். தோல்வி

யையும் தழுவினார்.

1945 ஆம் ஆண்டு இரண்டாவது உலகப்போர் முடிந்தது. ஜெர்மனியையே நான்காகப் பிரித்து, ஒரு பகுதியை ஆங்கிலேயர்கள் ஆள ஆரம்பித்தனர். அவர்களைக் கேள்வி கேட்க யாரும் இல்லை.

இந்த நிலையில் இந்தியா எப்படி விடுதலை பெற்றது?

உலகப் போரின் முடிவில் ஆயிரக்கணக்கான INA வீரர்கள் டில்லி செங்கோட்டையில் சிறையில் வைக்கப்பட்டனர். INA வின் மூன்று படைத்தலைவர்கள் மேல் வழக்குகள் நடைபெற்றன. மலேயாவிலும் பர்மாவிலும் இந்திய ராணுவம், INA வீரர்களுடன் தொடர்பு கொண்டது. இந்திய ராணுவ வீரர்கள் INA வீரர்களின் நாட்டுப்பற்றைப் பாராட்டினர்; INA மேல் அவர்களுக்கு வெறுப்பு உண்டாகவில்லை.

வெள்ளையர்கள் INA படையினரைக் கண்டு மிகவும் பயந்தனர். துப்பாக்கி சுடத் தெரிந்த ஆயிரக்கணக்கான INA வீரர்கள் இந்தியாவில் இப்பொழுது வந்துள்ளனர். எனவே தங்களுக்கு ஆபத்து வரும் என நினைத்தனர். தாமாகவே இந்தியாவை விட்டு போகலாமா அல்லது இந்தியர்கள் துரத்தினால் பின்பு போகலாமா என எண்ணினர்.

INA வீரர்களைப் பாராட்டிய இந்தியப் படை வீரர்கள், இந்திய விடுதலைக்காகப் புரட்சியில் இறங்கினர். 1946 பிப்ரவரியில் நடந்த இந்தப் புரட்சிக்குக் கடற்படைப் புரட்சி என்று பெயர்.

எனவே இந்திய நாட்டைவிட்டு சீக்கிரத்தில் ஆங்கிலேயர் வெளியேற மிகப்பெரிய காரணம் INA படைதான்; வரலாற்று ஆசிரியர் டாய் ''INA படை தன் தோல்வியின் மூலமாகவே, இந்திய விடுதலைக்கு வழி வகுத்தது'' என்றார்.

INA பெருமையை இந்தியத் தலைவர்கள் தேர்தலில் நன்கு பயன்படுத்தினர். பிறகு கை கழுவினர். INA வீரர்களைச் சிறையிலிருந்து விடுவிக்கும் தீர்மானத்தை ஆங்கிலேய முப்படை

தளபதி வேண்டுகோளுக்கு இணங்க, காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம் லீகும் டெல்லி பாராளுமன்றத்தில் கொண்டு வர வில்லை என்று நேரு கூறியிருப்பது நமக்கு வியப்பாக இருக் கும்.

சிறையிலிருந்து வெளியே வந்த INA வீரர்களில் பலர் பிறகு வறுமையில் வாடினர் - வதைந்தனர்.

இந்திய நாட்டின் விடுதலைக்காக சென்னை சிறையில் தூக்கிலிடப்பட்ட INA தமிழ் வீரர்களைப் பற்றி ஆராய ஆரம் பித்தேன். பல நகரங்களுக்கு சென்றேன். தூக்கிலிடப்பட்டINA வீரர்களைப் பற்றி திரு. C.G.K. ரெட்டி என்னிடம் பல தகவல் களை அளித்தார். இந்திய விடுதலைப் போரில் ஐந்து ஆண்டு கள் சென்னை சிறையிலும் வேலூர் சிறையிலும் இருந்தவர் இவர். இன்று அவர் அமரர். அவர் புகழ் வாழ்க.

பகத் சிங் போன்றவர்களின் வீரத்திற்கு இணையான இத்த மிழ் வீரர்களைத் தமிழகம் பாராட்டாமல் விட்டது பற்றி என்ன கூறுவது?

கத்தியின்றி ரத்தமின்றி நடந்த யுத்தத்தில் நாம் விடுதலை பெறவில்லை; தியாகிகளின் ரத்த வெள்ளத்தில்தான் நாம் விடு தலை பெற்றோம். உத்தம் சிங், குதிராம்போஸ், வாஞ்சிநா தன், பகத்சிங், அந்தமானில் வாடிய போராளிகள், ராமுத்தே வர், ஞானாராம், கத்தார் போராளிகள், பர்மாவில்INA வீரர்கள், சிந்திய ரத்தம்தான் இந்திய விடுதலைப் போராட்டத்தின் உர மானது.

கடற்படைப் புரட்சி நடந்த பொழுது பம்பாயில் முன்னூ றுக்கும் அதிகமானவர்களை ஆங்கில ராணுவம் டாங்கிகள் உதவியுடன் சுட்டுக் கொன்றது. ஜாலியன் வாலாபாக் நிகழ்ச் சிக்கு ஈடான இந்தப் போராட்டத்தைச் சுதந்திர வரலாற்றில் முக்கியத்துவம் தந்து எழுதப்படவில்லை. தூக்கிலிடப்பட்ட INA வீரர்களின் வரலாறுகள் முழுமையாக மறைக்கப்பட்டன; அந்த வீரர்கள் ''சுவர்க்க வாசிகள்'' ஆனார்கள் என்று அன்று கூறப்பட்டது. ஆனால் அவர்களைப் பெற்றவர்கள் இன்றும்

தமிழகத்தில் வறுமை என்ற ''நரக வாசிகளாக'' வாழ்கின்றனர்.

இந்நூல் வெளிவர பலர் முழுமையாக உதவினர். இந்நூல் அச்சாக என் எழுத்துக்களைத் தெளிவாக எழுதிய என் மனைவி திருமதி.லலிதா, இந்நூல் தயாரிப்பில் பல சீரிய கருத்துக்களைக் கூறிய என் உடன் பிறவா சகோதரரும், முன்னாள் தின மணி செய்தி ஆசிரியருமான திரு.ராமதுரை, அவைகளை கணிப்பொறி அச்சாக்கிய அடையாறு மாணவர் நகலகத்தைச் சேர்ந்த செல்வி வெ. சரஸ்வதி, புத்தகத்திற்கு உரு தந்த டிராட்ஸ்கி மருது ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றி.

இந்நூல் வெளிவர முக்கியமானவர்கள்

கேப்டன் தாசன் குடும்பத்தினர் - நேதாஜியை எனக்குக் காட்டிய கேப்டன் தாசன், அவர் மனைவி திருமதி. கிரேஸ், அவர் மகள் டாக்டர் ஜூலியா, அவர் மருமகன் டாக்டர் வைத்தியநாதன் ராமதாஸ்.

கேப்டன் தாசன் அவர்கள் சென்னையில் இன்று வாழும் ஒரு காவியத் தலைவன் ஆவார். இந்திய விடுதலைக்காக நேதாஜியின் ஆணையை ஏற்று டோக்கியோ சென்று விமானப்படையில் பயிற்சி பெற்றவர். வீரவாள் வாங்கியவர். ஹாங்காங்கில் சிறையில் வாடியவர்.

சுதந்திர இந்தியாவில், நாட்டை வளப்படுத்த மிகவும் உழைத்தவர். சுதந்திர இந்திய வரலாற்றின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளில் எல்லாம் பங்கெடுத்தவர். சீனா - இந்திய எல்லைப்போரில் மிக அதிக நேரம் இமாலய மலைகளின் மேல் விமானம் ஓட்டியவர். போபால் விஷவாயு நிகழ்ச்சியில் தானாகவே அங்கு சென்று, சொந்தப் பணத்தைச் செலவழித்து ரேடியோ நிலையங்கள் அமைத்து விஷ வாயுவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியவர்.

நேதாஜியை என்றும் நெஞ்சில் கொண்டவர். ஏழை INA வீரர்களுக்கு மிகவும் உதவுபவர். பிற நாட்டுப் போராளிகளைப் போற்றும் ஒரு தலைசிறந்த போராளி கேப்டன் தாசன்

கேப்டன் தாசன் இல்லையேல் இந்நூல் இல்லை! அவர் நட்பு எனக்குக் கிடைத்தது என் வாழ்வின் பாக்கியமாகும். அவர் குடும்பத்தினரும் நேதாஜியின்பால் பேரன்பும் பக்தியும் கொண்டவர்கள்.

கிழக்கு ஆசியாவில் நேதாஜியின் நம்பிக்கைக்குரிய செயலர் மேஜர் E. பாஸ்கரன் அவர்கள் - மாமனிதர்! நேதாஜி என்றாலே நெஞ்சுருகுபவர். நேதாஜி இறுதியாக விமானம் மூலம் புறப்பட்டபோது பாங்காக்கில் அன்புடன் கண்ணீர் மல்க வழியனுப்பியவர். பலமணி நேரங்கள் தளராமல் என் கேள்விக்கெல்லாம் பதில் தந்த பெரியவர்.

ஜான்சி ராணிப் படையைச் சேர்ந்த திருமதி ஜானகிதேவர் - முன்னாள் மலேஷியா பாராளுமன்ற உறுப்பினர்.

திருச்சியைச் சேர்ந்த காது, மூக்கு, தொண்டை நிபுணர் டாக்டர் வே. அனந்தகிரி.

சென்னையைச் சேர்ந்த திருமதி/திரு. டி. ரங்கநாதன், அவர் மகன் டாக்டர் ஆர். வீரபாண்டியன், அவர் மனைவி டாக்டர் நளினி வீரபாண்டியன்.

என் ''கண்ணினும் இனிய'' உடன்பிறவா சகோதரர்கள் திருச்சியைச் சேர்ந்த காது, மூக்கு, தொண்டை நிபுணர் டாக்டர் ஏ. வேணுகோபால், ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த டாக்டர் ஆர். வேணு கோபால்

சிறந்த முறையில் அச்சிட்ட நாதன் & கம்பெனி, சென்னை

- இவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

ஜெய் ஹிந்த்!

சென்னை - 90
6 டிசம்பர் '95

அன்புடன்,

மா.சு. அண்ணாமலை

இந்திய தேசிய ராணுவம்
INA

தமிழர் பங்கு

"நேதாஜியே தமிழ் வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்திய தமிழனாகப் பிறக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்".

— பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

1613 ஆம் ஆண்டு வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு கால் ஊன்ற இந்தியாவில் இடம் கிடைத்தது. அந்த ஒரு காலடி, அரக்கப்பாய்ச்சலாக முழு பாரதத்தையும் ஆக்ரமித்து தனது காலனியாக்கிக் கொண்டது.

அடிமைப்பட்ட தேசத்தின் விடுதலைப் போராட்டம் எவ்வளவோ தேச பக்தர்களைக் காவு கொண்டது. சாதிகளும், மதங்களும், தன்னலமும், பொறாமையும், இந்தியர்களைப் பிளவுபடுத்தின. வெள்ளையரின் பிரித்தாளும் தந்திரம், இந்திய சுதந்திரத்தை எட்டா உயரத்திற்கு இட்டுச் சென்றது. வானில் மின்னி மறையும் எரி நட்சத்திரங்களாய் எத்தனையோ போராட்ட வீரர்கள் தோன்றி மறைந்தார்கள். அடிமைத்தளை அறுபடுவதாக இல்லை.

விழித்தெழுந்து வீறு கொண்டு எரிய ஆரம்பித்த போராட்டத்தீ இந்திய கண்டத்தை நெருப்புத் துண்டமாக்கியது. சிப்பாய் கலகம் மூண்டது. வடக்கே ஒரு ஜான்சிராணி, தெற்கே ஒரு வேலு நாச்சி, மங்கள் பாண்டே, திப்புசுல்தான், புலித்தேவன்... இப்படி வரிசையாகப் பல தியாகத்தூண்கள் சாய்க்கப்பட்டன!

காலம் சற்று புரண்டு கொடுத்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து புதுயுகத் தாக்கத்தோடு சுதந்திரப் போராட்டம் புது அத்தியாயம் கண்டது. படித்தவர்களும், பாரிஸ்டர்களும் களத்தில் குதித்தனர். சிலர் ரத்தம் சிந்திதான் தாயின் மணிக்கொடியைப் பறக்க வைக்க முடியும் என்று நம்பினார்கள்.

சிலர் காந்தீயத் தலைமையின் கீழ் அஹிம்சா வழியில் அணி வகுத்தார்கள். எஞ்சிய பலரும் வேடிக்கை மட்டுமே பார்த்தனர்.

அந்த காலகட்டத்தில், குறிப்பாக இரண்டாவது உலக மகா யுத்தம் ஏற்பட்ட கொந்தளிப்பான சமயத்தில் இந்திய சுதந்திரப் போரும் சூடு பிடித்தது!

சுபாஷ் சந்திரபோஸ்!

சுதந்திர நாயகன் உதயமானார்.

ஏகாதிபத்திய வெள்ளையரை எட்டி உதைத்துத்தான் வெளியேற்ற முடியும் என்று துணிந்தார்!

சாத்வீகம் பேசிய சத்திய சீலன் காந்தி ஒரு பக்கம்!

சங்கநாதம் எழுப்பிய யுத்த மூர்த்தி போஸ் ஒரு பக்கம்!

இரத்தப் புரட்சிக்குப் படை திரட்டி, ஆங்கிலேயப் பேரரசுக்கு எதிராய் மார் தட்டி, இந்திய தேசிய இராணுவத்திற்குக் கூர்தீட்டி, இடியாய் கர்ஜித்து, மின்னலாய் ஒளிர்ந்து பாய்ந்து வந்த வங்கம் தந்த சிங்கம் -

சுபாஷ் சந்திரபோஸ்!

அவரது சரித்திரம் - இந்திய வீரத்தின் சரித்திரம்!

அவரது வரலாறு - சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வரலாறு!

இந்திய தேசிய ராணுவ வீரர்களுக்கு காணிக்கை

அன்றலர்ந்த முழுமையான ரோஜா மலரின் சுகந்த மணம் வேண்டுமா?

அப்படியானால் முட்கள் குத்தினால் பொறுத்துக்கொள்.

மனதை மலரவைக்கும் இளஞ்சூரியனின் வைகறைப் பொழுது வேண்டுமா?

அப்படியானால் இரவில் இருண்ட நேரங்களில் வாழக் கற்றுக் கொள்.

விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும் சுதந்திரத் தினால் உண்டாகும் மனதிருப்தியும் வேண்டுமா?

அப்படியானால் அதற்கு விலை உண்டு. அவைகளுக் கான விலை துன்பமும் தியாகமும் தான்!

பாகம் - ஒன்று

சுபாஷ்

பகுதி - 1

1897 கட்டாக்

இந்தியா சுதந்திரம் பெறுவதற்குச் சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்:

விக்டோரியா மகாராணி ஆட்சியின் பொன்விழாவை வெள்ளை துரைமார் களும், இந்தியாவின் கருப்பு துரைமார்களும் கொண்டாடி மகிழ்ந்த அதே வருடத்தில் -

தென் ஆப்பிரிக்காவின் டர்பன் துறைமுகத்தில் இறங்கிய காந்தியடிகளுக்கு கன்னத்தில் அறையும், அழுகின முட்டை அபிஷேகமும் கிடைத்த அதே 1897 ஜனவரியில் கட்டாக் நகரில் பிறந்தார் 'போஸ்' - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்! அப்பா

ஜானகிநாத். அம்மா பிரபாவதி தேவி. அவர்களின் 14 குழந்தைச் செல்வங்களில் ஒன்பதாவது திருமகனாய் உதித்தவர் போஸ்! போஸ் பரம்பரை பிரபலமான ஒன்று. வங்காள நவாபின் யுத்த மந்திரியாகவும், நிதி மந்திரியாகவும் அவர்களது முன்னோர்கள் பணிபுரிந்தது உண்டு. போஸின் தந்தை, ராய் பகதூர் பட்டத்துக்குச் சொந்தக்காரர். அரசாங்க வக்கீலாக உத்தியோகம். அவரது முன்னோர் வங்காள நவாபின் போர் அமைச்சராகவும், நிதி அமைச்சராகவும் இருந்தார்கள். தாயின் பாரம்பரியமோ கல்வியில் சிறந்திருந்தது. ஒரு முன்னோர் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய முதல் இந்தியர். இவ்வாறு பெரிய பாரம்பரியம் சுபாஷுக்கு உண்டு.

சுபாஷ் சிறுவயதில் வறுமையில் வாடி, அதில் சுயநலம் பெறவில்லை. அதே நேரத்தில் செல்வச் செழிப்பினால் கெட்டழியவும் இல்லை. ஊதாரித்தனமும் பெறவில்லை. எளிய இனிய குடும்பம்தான், குழந்தைகள் அதிகம் இருந்த காரணத்தால் தாய் தந்தையரிடமிருந்து தள்ளி நிற்க வேண்டியிருந்தது. இருப்பினும் தன் அண்ணன், அக்காள்களிடமிருந்து ஒன்றை உணர்ந்தார். வாழ்க்கையில் வெற்றிபெற உழைப்பும், நற்பண்பும்தான் வழிகாட்டிகள் என்பது அது.

ஐந்து வயதில் ஆங்கிலேயப் பள்ளியில் சேர்ந்தார். ஆங்கில மொழிமூலம் பயிற்சி தரப்பட்டது. 'சரி கம பதநிச' என்று பாடாமல், 'டோ, ரோ, மீ யா' என்ற மெட்டில் பாட்டுக்கள் பாடினார்! ஆங்கிலேய இனம் வேறு; இந்திய இனம் வேறு என்ற உணர்வும் பெற்றார்.

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு ரேவன்ஷா கல்லூரிப் பள்ளியில் சேர்ந்தார். வங்க மொழி பயின்றார். வாழ்வின் வெற்றிக்கு அடிப்படையான தன்னம்பிக்கையைப் பெற்றார். அங்கு தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த மாதவதாஸ், அவரை இயற்கையை ரசிக்கக் கூறினார். இயற்கை அழகு மூலம் மன அமைதி, மகிழ்ச்சி, மன உறுதி ஆகியவற்றைப் பெற்றார்.

வாழ்வின் குறிக்கோள் என்ன என்பதை விவேகானந்தரின்

நூல்கள் மூலம் உணர்ந்தார். ''மக்கள் சேவைதான், மகேசன் சேவை. இந்தியர்கள் அனைவரும் சகோதரர்க்ள். இந்த நாட்டிற்கு உழைப்பதின் மூலம் மோட்சம் பெறலாம்'' என்று சுபாஷ் படித்தார். ''அச்சப்படாத நரம்புகளும், மிகக் கூர்மையான அறிவுடைய மூளையும் இருந்தால் உலகம் உன்காலில் தான்'' என்ற விவேகானந்தர் கூற்றுக்கு ஏற்ப அச்சமின்மை பெற்றார். படிப்பில் தலைசிறந்து விளங்கினார்.

சுபாஷ் மட்டுமல்ல; இந்திய விடுதலைப் போரில் பங்கு பெற்ற பல தீவிரவாதிகள் விவேகானந்தரின் நூல்களைப் படித்தவர்கள். வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட விவேகானந்தர் ''தாய்நாட்டுக்குச் செய்யும் தியாகங்கள் மூலம் இறைவனை அடையலாம். நாட்டுக்கு உழைப்பதினால் ஏற்படும் மரணம், சித்ரவதைகளை என்றும் அழியாத ஆத்மா உணராது'' என்று கூறினார். பல தீவிரவாதிகளை போலீசார் கைது செய்த பொழுது அவர்களிடம் விவேகானந்தரின் நூல்களும், கீதையும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

சுபாஷ், மனதைக் கட்டுப்படுத்த ராஜயோகத்தையும், உடலைக் கட்டுப்படுத்த ஹடயோகத்தையும் செய்ய ஆரம்பித்தார். குரு ஒருவரைத் தேடி அலைய ஆரம்பித்தார். பூரி சென்று துறவிகளிடம் பேசினார்.

அம்மா கவலைப்பட ஆரம்பித்தார். பல நேரங்களில் பெற்றோரிடம் சச்சரவு ஏற்பட்டது. தாழ்ந்த இனத்தோடு உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார். ''இதுவரை இருந்த தளை அறுந்ததால் குழந்தை பிறந்தவுடன் அழுவதே ஒரு போராட்டக் குரல்தான் - எனவே தான் வாழ்ந்து முழுமை பெற போராடித் தான் ஆக வேண்டும்'' என்ற விவேகானந்தரின் எண்ணம் பெற்றார்!

1913-ஆம் ஆண்டு மார்ச் மெட்ரிகுலேஷன் தேர்வில் மாநிலத்திலேயே இரண்டாவது மாணவனாகத் தேர்ச்சி பெற்றார். பெற்றோர் மனமகிழ்ந்தனர்!

பகுதி - 2

1913 - கல்கத்தா

வங்க மாநிலத்தின் தலைநகர், இந்தியாவின் தலைநகரம் என்ற பெருமையை டெல்லிக்குத் தந்துவிட்ட நேரம் அது. ''நீங்கள் எங்களுக்கு ஒளிதர மறுக்கிறீர்கள். எனவே, நாங்கள் இருளில் உங்களுக்கு எதிராகத் திட்டம் தீட்டுகிறோம்'' என்ற வீர சவர்க்காரின் வார்த்தைப்படி ஆங்கிலேயருக்கு எதிராகப் பல தீவிரவாதிகள் வளர்ந்த காலம் அது.

கல்லூரியில் படிப்பதற்காக கட்டாக் நகரை விட்டு கல்கத்தா வந்தார் சுபாஷ். பஸ்களிலும், டிராம்களிலும், பாதைகளிலும் வெள்ளையர்களின் திமிரான நடத்தையைக் கண்டார்.

எளிய வங்காள கிளார்க்குகளை, வெள்ளையர்கள் கேவலமாக நடத்துவதைக் கண்டார். ஆனால், அதே நேரத்தில் திரும்பி அவர்களை உதைத்தால், ஆங்கிலேயர்கள் மதிப்பு தருவதை யும் பார்த்தார்.

கல்லூரி திறப்பதற்கு முன் தன் நண்பர்களுடன் ஹரித்வார் சென்று பார்த்தார். வங்காளத்தின் சரித்திரப் புகழ்பெற்ற ஊர்க ளையும், சாந்தினிகேதனையும் பார்த்தார்.

முறையே ராஜதானிக் கல்லூரி, மாகாணக் கல்லூரி, இறு தியாக மாநிலக் கல்லூரி என்று தமிழில் அழைக்கப்படும் மாநிலக் கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்தார்.

கல்கத்தாவைப் போலவே சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியும் ராணுவத் தலைவர் பீல்ட் மார்ஷல் கரியப்பா, நோபல் பரிசு பெற்ற சி.வி. ராமன், தர்மபுரியில் மறைந்து போன நக்சலைட் தலைவர் பாலன் போன்றவர்களை உருவாக் கிய பெருமை வாய்ந்த கல்லூரி!

கல்கத்தாவில் உள்ள மாநிலக் கல்லூரியில் சேர்ந்த பொழுது பலதரப்பட்ட மாணவர்கள் இருந்தனர். மகாராஜா மற்றும் பிரபுக்களின் வாரிசுகள் படிக்காது மகிழ்ச்சியாக இருந் தார்கள்! படிப்பைத்தவிர வேறு ஒன்றும் தெரியாத சோடா புட்டி அணிந்த புத்தகப் புழுக்களாகச் சில மாணவர்கள்! ஒரு சில மாணவர்கள் விவேகானந்தர், ராமகிருஷ்ண பரமஹம்சர் தத்துவங்களில் மூழ்கியவர்கள்! இறுதியாக தீவிரவாதிகள் கொண்ட மாணவர் குழு!

சுபாஷ், விவேகானந்தரின் வழிநடந்து ஒரு குருவைத் தேடி அலைந்தார். சில நேரங்களில் மக்களுக்குச் சேவை செய் தார். ஒரு முதியவளுக்கு உதவி செய்வதற்காகத் தினமும் ரயி லில் செல்லாமல் நடந்து சென்று அதனால் சேர்ந்த பணத்தை அவளுக்குத் தந்தார்.

இவரும் இவர் நண்பர்களும் ஒன்றாகச் சேர்ந்து ஹரித் வார், மதுரா, ரிஷிகேஷ் என பல ஊர்களுக்கு அலைந்தார்கள். ''வானமே கூரை! புல்லே படுக்கை! கிடைப்பதே உணவு!''

என்று வாழும் விந்தையான துறவிகளைப் பார்த்தனர். குரு கிடைக்காமல் வீட்டிற்கு வந்த சுபாஷுக்குக் கிடைத்தது, அம் மாவின் அழுகையும், டைஃபாயிட் சுரமும்தான்.

மீண்டும் கல்லூரி வாழ்க்கை! இடைநிலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். ஆனால், முதல் இடம் கிடைக்கவில்லை. ஹானர்ஸ் வகுப்பில் தத்துவப் பாடத்தை எடுத்துப் படித்தார்.

மாநிலக் கல்லூரியில் பல ஆங்கிலேயப் பேராசிரியர்கள் இருந்தனர். சிலர் இந்தியப் பண்பாட்டினை மிகவும் தாழ்வா கப் பேசினர். இத்தகு பேராசிரியர்கட்கும் வங்காள மாணவர் கட்கும் சில சமயங்களில் சண்டை ஏற்படும். சுபாஷ் அவர் வகுப்பின் பிரதிநிதியாக இருந்தார். அவரது வகுப்பு மாண வனை இனத்திமிர் பிடித்த 'ஓட்டன்' என்ற பேராசிரியர் உதைத்துவிட்டார். இவர் நடத்தையைப் பற்றி சுபாஷ் கல்லூரி முதல்வரிடம் முறையிட்டார். ஆனால், ஓட்டன் ஒரு இந்திய கல்விப்பணியில் வேலை செய்பவர். அவரைத் தாம் ஒன்றும் செய்ய முடியாது என்று முதல்வர் கூறிவிட்டார். உடனே கல் லூரியில் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாது புறக்கணித் தனர்.

பிறகு மறப்போம், மன்னிப்போம் என்ற உணர்வில் வகுப்புக்குச் சென்றனர்.

ஆனால், மீண்டும் ஓட்டன் ஒரு முதலாண்டு மாணவனை உதைத்தார். மாணவர்கள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்த னர். ஓட்டன் நன்கு உதை வாங்கினார். சுபாஷ், மாணவர்கள் ஓட்டனைப் பின்னிருந்து அடித்ததாகக் கூறியதை அறவே மறுத்தார்; முன்னிருந்துதான் அடித்தார்கள் எனக் கூறினார்.

மாநிலக் கல்லூரி அரசாங்கத்தால் மூடப்பட்டது!

தன்னைக் கேட்காமல் கல்லூரியை மூடியதற்காக கல்லூரி முதல்வர் அமைச்சரிடம் சென்று தகராறு செய்தார்; அமைச் சரை அவமதித்ததாகக் கல்லூரி முதல்வர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

அவர் வேலையை விட்டுப் போகும் முன் சுபாஷை அழைத்தார். "சுபாஷ் - இக்கல்லூரியில் நீதான் மிகப்பெரிய தொல்லை தருபவன். எனவே, உன்னைக் கல்லூரியில் இருந்து நீக்குகிறேன்" என்றார். சுபாஷ் "நன்றி ஐயா!" எனக் கூறிக் கல்லூரியை விட்டு வெளியே வந்தார்.

கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்ட மாநிலக் கல்லூரி மாணவர்களை போலீஸ் கைது செய்ய ஆரம்பித்தது. சுபாஷின் அண்ணன் தன் தம்பியை கட்டாக் ரயிலில் ஏற்றி வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

ரயிலில், சுபாஷ் நடந்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தார். கல்லூரிப் படிப்பு ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. எதிர்காலம் இருளடைந்து விட்டது. ஆனால், சுயமரியாதைக்காகத்தான் கல்வியை இழக்க ஏற்பட்டது. தலைவனாக இருந்தால் கட்டாயம் தியாகம் செய்ய வேண்டும் என்று உணர்ந்தார். உள்ளம் வருத்தப்படாமல் நிம்மதியாக உறங்கலானார்.

கட்டாக்கில் அவரது பெற்றோர்கள் எந்தக் கேள்வியும் அவரைக் கேட்கவில்லை. சகோதரர்கள் அவர் செய்தது சரி என்றே நம்பினர். சுபாஷ் தன் நண்பர்களுடன் மீண்டும் சமூக சேவையில் இறங்கினார். காலரா வந்த நோயாளிகளுக்கு ஊசி போட்டார். அக்காலத்தில் காலரா நோயாளிகள் பக்கத்தில் யாருமே போகமாட்டார்கள். அனாதையாக இறந்தவர்களின் பிணத்தைத் தன் நண்பர்களின் உதவியுடன் புதைத்தார். ஜாதி, மத வேறுபாடுகளை அவர் நினைத்ததே இல்லை.

ஒரு வருடம் கழித்து கல்கத்தாவிற்கு மீண்டும் சென்றார். அங்கு ஸ்காட் கிரைஸ்ட் கல்லூரி முதல்வர், அவரைத் தன் கல்லூரியில் மீண்டும் சேர்த்துக் கொள்ள அனுமதியளித்தார். சுபாஷ் மீண்டும் மாணவனாக மாறினார்.

இக்கல்லூரியில் அமைதியான மாணவ வாழ்க்கை. மேலும் கல்லூரி ராணுவப் பயிற்சியில் சேர்ந்தார். சாமியார்களின் காலருகில் உட்கார்ந்து கொண்டு, கடவுளை அறியும் நிலையைவிட்டு வெள்ளைய ராணுவ அதிகாரிகளின்

ஆணையை ஏற்று, தோளில் துப்பாக்கியுடன் அலைந்தார். துப்பாக்கி சுடும் பயிற்சியில் சிறந்து விளங்கினார்.

பி.ஏ. தேர்வில் முதல் வகுப்பில் இரண்டாவது இடத்தில் தேர்வு பெற்றார். மீண்டும் பயன் உளவியலில் எம்.ஏ. சேர்ந்தார். சில மாதங்கள் கழித்து அவரது தந்தை சுபாஷை லண்டனுக்குச் சென்று ஐ.சி.எஸ். தேர்வுக்குப் படிக்கச் சொன்னார். முடிவு எடுக்க ஒருநாள் அவகாசம் கொடுத்தார்.

ஐ.சி.எஸ். தேர்வுக்கு 8 மாதங்களே இருந்த நிலையில் தேர்வு பெறுவது கடினம் என்று உணர்ந்தாலும், ஆங்கிலேயர்களை அவர்களின் சொந்த நாட்டிலேயே சந்திக்க விருப்பப்பட்டு, லண்டன் செல்ல ஒப்புக் கொண்டார்.

தந்தை விருப்பப்படி சுபாஷ் 1919 ஆம் வருடம் செப்டம்பர் 15 ஆம் நாள் 'சிடி ஆப் கல்கத்தா' என்ற கப்பலில் ஏறி லண்டன் புறப்பட்டார்.

பகுதி - 3

1920 - லண்டன்

'சிடி ஆப் கல்கத்தா' என்ற கப்பல் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு ஐந்து வாரங்கள் கழித்து அக்டோபர் 25 ஆம் தேதி லண்டன் வந்தடைந்தது. பயணத்தின்போது ஆங்கிலேயர்கள் தனியாகவும், இந்தியர்கள் தனியாகவும், உணவு சாப்பிட்டார்கள். ஆங்கிலேயரின் இனவெறியைச் சுபாஷினால் உணர முடிந்தது. கப்பலில் இந்திய மாணவர்கள் ஒன்றாக இருந்து தங்கள் நேரத்தைப் போக்கினர். தன் காதலியின் அழகை ஒருவர் புகழ்ந்து பாட அதை மற்றவர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

லண்டன்!

''நான் இந்தியாவைத் தவிர உலகில் வேறு எந்தப் பகுதியிலேனும் தங்க நேர்ந்தால் லண்டனில்தான் தங்குவேன்'' எனக் காந்தியடிகளால் விரும்பப்பட்ட நகரம். லண்டன் நகரத்திற்குக் காந்தியடிகள் ஒரு 'கைடு' கூட எழுதியுள்ளார். இந்திய விடுதலைப் போரில் தலைமை ஏற்ற காந்தியடிகள், நேரு, போன்ற தலைவர்கள் லண்டனில்தான் படித்தார்கள்.

ஆரம்பகாலத்தில் லண்டன் சென்ற இந்திய மாணவர்கள் ஆங்கிலேயப் பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு, ஆங்கிலேயர்களாகவே மாற முயன்றனர். *1833*-ல் இந்தியாவில் ஆங்கிலக் கல்வி முறையை ஆரம்பித்த மெக்காலே கூறினான்:

''ரத்தத்திலும் தோல் நிறத்திலும் இந்தியர்களாக இருப்பினும், ஆங்கில மேல்நாட்டுக் கல்வித் திட்டத்தால் சுவை அறிவதிலும், எண்ணங்களிலும், கருத்துக்களிலும், நடை, உடை, பாவனைகளிலும், நீதி அறிவதிலும், ஆங்கில உணர்வுகள் உள்ள இனம் இந்தியாவில் ஏற்படும். இந்த இனம் ஆங்கிலேயர்களுக்கு உதவத் தேவைப்படும். ஆனால், என்றாவது ஒரு நாள் இந்த இனம் வெள்ளையரிடம் சுதந்திரம் கேட்கலாம். எனினும் அவ்வாறு அவர்கள் கேட்பது நம் காலத்தில் இல்லை.''

ஆங்கில உணர்வு கொண்ட இந்திய மாணவர்கள் லண்டனில் உருவானார்கள். இவர்கள் இந்தியாவிற்கு வந்து பெரும் பதவிகளை ஏற்றனர். ஆங்கிலேயர்களுக்குத் தாசானுதாசனாக இருந்தனர்.

காந்தியடிகள்கூட லண்டனில் படித்துக் கொண்டு இருந்த போது வெள்ளையரின் பழக்க வழக்கங்களை ஏற்க முயன்றார். பின்பு உண்மை உணர்ந்து மாறினார். அழகிய இளம் பெண்களுடன் பழக வேண்டி, தனக்குத் திருமணமே ஆகவில்லை என்றும் கூறினார். பின்பு அந்தப் பெண்ணிடம் உண்மையைக் கூறி மன்னிப்பும் பெற்றார். படிப்பை முடித்து லண்டனை விட்டுத் திரும்பியபோது ஆங்கிலேய ஏகாதிபத்யத்திற்கு நன்றியுள்ள பிரஜையாகவே சென்றார்.

மற்ற இந்தியர்களோ, குடித்து ஆங்கிலேயப் பாணியில் உடை அணிந்து மகிழ்ந்தனர்.

1906 ஆம் ஆண்டில் மாற்றங்கள் ஏற்படலாயின. பொதுவாக லண்டனுக்குப் பணக்கார இளைஞர்களே சென்றனர். இந்நிலை மாற ஒரு பெருமகனார் தோன்றினார். அவர் பெயர் 'கிருஷ்ணவர்மா ஷியாமாஜி'. இங்கிலாந்தில் வக்கீல் தொழிலுக்குப் படித்துப் பின்பு இந்தியாவில் பல சுதேச மன்னர்களிடம் திவானாக இருந்து பெரும் பொருள் குவித்து, லண்டனுக்குச் சென்று அங்கு ஒரு கட்டிடம் வாங்கி, அதற்கு 'இந்தியா ஹவுஸ்' என்று பெயரிட்டார். இங்கு ஏழை, எளிய மாணவர்கள் தங்க வசதிகள் ஏற்படுத்தினார். இந்தியாவிலிருந்து எளிய, நாட்டுப்பற்று மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுத்து லண்டனுக்கு மேற்படிப்புக்கு அனுப்பினார். இவ்வாறு ஷியாமாஜியால் தேர்ந்தெடுக்கப்பட்டு வக்கீல் தொழில் படிக்க லண்டனுக்கு வந்தவர்தான் வீர சவர்க்கார் ஆவார்!

இந்திய விடுதலைப் போரில் சவர்க்கார் செய்த தியாகத்தை எந்த இந்தியனாலும் மறக்க முடியாது. மகாராஷ்டிர சித்பவன் பிராமண இனத்தைச் சேர்ந்த சவர்க்கார் இந்தியா ஹவுசில் தங்கி சட்டம் படித்தார்.

இந்தியா ஹவுசில் மேலும் சிலர் தங்கியிருந்தனர். அவர்களில் ஒருவர் கையில் எப்பொழுதும் கம்பராமாயணத்தை வைத்துக் கொண்டிருந்தார். அவர்தான் வ.வே.சு. ஐயர்! அவர் திருச்சியைச் சேர்ந்தவர். பெரிய அறிவாளி. அக்காலத்திலேயே பங்கு மார்க்கெட்டில் புலி. சில ஆண்டுகள் ரங்கூனில் இருந்துவிட்டு படிப்பதற்காக லண்டன் வந்தவர். இன்னொருவர் டி.எஸ்.எஸ். ராஜன் என்ற திருச்சியைச் சேர்ந்த ஒரு மருத்துவர். இறுதியாக ஒருநாள் கையில் பெட்டியும், படுக்கையுமாக ஒரு இளைஞர் வந்து சேர்ந்தார். அவர்தான் திருவல்லிக்கேணியிலிருந்து வந்த M.P.T. ஆச்சாரியார் எனப்பட்ட - மண்டயம் பிரதிவாதி பயங்கரம் திருமலாச்சாரியார்.

நம் கவிஞர் பாரதியாருக்கு நல்ல நண்பர் திருமலாச்சாரியார். இவர் இந்தியா ஹவுசில் சமையல்காரர் ஆகவும், பொறுப்பாளராகவும் மாறினார்.

இந்தியா முழு சுதந்திரம் அடையவேண்டும் என்று ஷியாமாஜி விரும்பினார். அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட சவர்க்கார், T.S.S. ராஜன், M.P.T. ஆச்சாரியார் போன்றவர்களுடன் சேர்ந்து லண்டனிலேயே இந்திய விடுதலைக்காக முழங்க ஆரம்பித்தனர். வெள்ளையர்கள் 1857-ஆம் ஆண்டு விடுதலைப் போரில் பங்கேற்ற ராணி ஜான்சியையும் மற்ற மன்னர்களையும் தாக்கி நாடகம் நடத்தினர். அதற்குப் பதிலடி தரும் வகையில் சவர்க்கார் குழு ஜான்சி ராணியைப் புகழ்ந்து நாடகம் நடத்தியது. இந்தியா ஹவுசில் கூடி தசரா, தீபாவளிப் பண்டிகைகளைக் கொண்டாடினர். 'இந்தியர்கள் நாம்' எனப் பெருமைகொள்ள ஆரம்பித்தனர்.

இந்தியா ஹவுசில் ஆங்கிலேயனை இந்தியாவிலிருந்து வெளியேற்ற ரகசியமாகத் திட்டம் தீட்டினர். சவர்க்கார், ராஜன், ஆச்சாரியார் கொண்டகுழு, எகிப்து தீவிரவாதிகளுடன் சேர்ந்து சூயஸ்கால்வாய் வழியை எப்படி அடைக்கலாம் என்று ஆராய்ந்தது. அவ்வாறு அக்கால்வாய் மூடப்பட்டால் ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு விரைவில் வர முடியாது. அவர்கள் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றனர். குண்டுகள் செய்ய முயன்றனர்.

லண்டனில் உள்ள 'ஸ்காட்லாண்ட்-யார்டு' என்ற துப்பறியும் போலீஸ், இந்தியா ஹவுசின்மேல் கண்வைக்க ஆரம்பித்தது. தந்திரக்காரரான திருமலாச்சாரியார் போலீஸ்காரரிடம் இருந்தே பணம் வாங்கி பொய்யான தகவல்களைத் தந்தார். இப்பணம் இந்தியா ஹவுசின் செலவிற்கு உதவியது.

இவர்களின் நண்பர் மதன்லால் திங்கரா என்ற இளைஞர் பொறியியல் கல்லூரியில் படித்துக் கொண்டு இருந்தார். திங்கரா 1909-ஆம் ஆண்டு ஜூலை 1-ஆம் தேதி சர் வில்லியம் கர்சன் வில்லி என்ற ஆங்கில அதிகாரியைச் சுட்டுக் கொன்றார். சர் கர்சான் அகங்காரமும் திமிரும் பிடித்த அதிகாரி. அவர் இந்தியாவில் இருந்தபோது ஷியாமாஜிக்குப் பலவகையில் தொல்லை தந்தார். தூக்கிலிடுவதற்கு முன்பு திங்கரா கூறினார்:

''என்னுடைய அன்னைக்கே நான் மீண்டும் பிறந்து இந்திய விடுதலைக்காகப் போராடித் தூக்கிலிடப்பட வேண்டும் என்பதே நான் இறைவனிடம் வேண்டும் கடைசி விண்ணப்பம் ஆகும். வந்தே மாதரம்!''. ஆகஸ்டு - 17ஆம் தேதி திங்கரா தூக்கிலிடப்பட்ட பின்பு இவரின் உடலை இந்து முறைப்படி அடக்கம் செய்யக் கூறி சவர்க்கார், வ.வே.சு. ஐயர் ஆங்கில அரசை வேண்டினர். அரசு மறுத்துவிட்டது.

''திங்கராவின் இறுதி வார்த்தைகள் நாட்டுப்பற்றினால் உண்டான மிகச் சிறந்த வார்த்தைகள்'' என சர்ச்சில் புகழ்ந்தார். இன்னும் 2000 ஆண்டுகள் ஆனாலும் திங்கராவை யாரும் மறக்க முடியாது என்றும் கூறினார். வின்ஸ்டன் சர்ச்சில் பிற்காலத்தில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்தார். அவர் இறுதிவரை இந்திய சுதந்திரத்தை எதிர்த்தார்.

ஆங்கிலேயர்களுக்கு எதிராக விடுதலைக்காக அயர்லாந்து போராடிக் கொண்டு இருந்தது. அதன் தலைநகர் டப்ளினில் திங்கராவின் தியாகத்தை ஆதரித்து பலகைகளில் அவரின் பெயரை எழுதி அவரைப் பலவாறு பெருமைப்படுத்தி ஊர்வலங்கள் பல சென்றன.

இதே நேரத்தில் ஜவஹர்லால் நேரு லண்டனில் மாணவனாகப் படித்துக் கொண்டு இருந்தார். திங்கரா தூக்கிலிடப்பட்ட நிகழ்ச்சி நேருவைக் கவரவில்லை. அவருடைய சுயசரிதையில் ஆங்கிலேயன் ஒருவனை முதன் முதலாக லண்டனிலேயே இந்திய தேசபக்தன் பழிவாங்கிய நிகழ்ச்சி இடம்பெறவில்லை.

நேருவின் தந்தை மோதிலால் லண்டனில் தன் மகன் படிக்கும்போது அரசியல் பேசும் மாணவர்களின் பக்கம் தலை நீட்டவே வேண்டாம் என்று கூறிவிட்டார்.

இதே நேரத்தில் சில உரிமைகள் பெறுவதற்காக மகாத்மா தென் ஆப்பிரிக்காவில் இருந்து லண்டன் வந்திருந்தார். அவர் திங்கராவின் செயலை ஒரு மூளையற்றவன் செயல் என்று கூறினார்.

இந்தியா ஹவுஸ் மூடப்பட்டது. ஷியாமாஜி பாரிசுக்குத் தப்பி ஓடினார். பிறகு ஜெனீவாவை அடைந்தார். சவர்க்கார் பாரிசுக்கு ஓடி மீண்டும் லண்டன் வந்தார். அவரை ஆங்கிலேயர்கள் கைது செய்து இந்தியாவிற்கு அனுப்பினர். 11 ஆண்டுகள் அந்தமான் சிறையில் வாடினார். ''போராடாமல் சுதந்திரம் வாங்க முடியுமா?'' என்ற கவிதை எழுதியதற்காக அவரின் சகோதரரும் ஆயுள் தண்டனை பெற்று அந்தமானில் தன் தம்பியுடன் வாடினார்.

M.P.T. ஆச்சாரியார் பிரான்சுக்குத் தப்பி ஓடினார். 'மொராக்கோ' சென்று அங்குள்ள போராளிகளுடன் சேர்ந்து கொரில்லாப் போர்முறை பயிற்சி பெற முயன்றார். சவர்க்காரின் '1857' என்ற நூலை 'பிரெஞ்சு' மொழியில் மொழிபெயர்த்தார். வீரம் மிகுந்த M.P.T. ஆச்சாரியார் 1954-ஆம் ஆண்டு பம்பாயில் வறுமையில் வாடி இறந்தார்.

இந்தியப் போராளிகளின் எண்ணிக்கை இங்கிலாந்தில் குறைய ஆரம்பித்தது. 'இந்தியா ஹவுஸ்' விற்கப்பட்டது.

இச்சூழ்நிலையில், முதல் உலகப்போர் முடிந்து ஆங்கிலேயர்கள் வெற்றிக்களிப்பில் இருந்த ஆண்டு 1920. இந்த ஆண்டில்தான் சுபாஷ் லண்டன் போய்ச் சேர்ந்தார். நேரு படித்த கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அதே நேரத்தில் ICS தேர்விற்கும் தயார் ஆனார். எட்டு மாதக் காலம்தான் இடைவெளி.

சுபாஷ் ஒரு கடமை உணர்வு கொண்ட மாணவர் ஆவார். வீணான பேச்சு, பெண்களைப் பற்றிய அரட்டை அறவே இல்லை. அவரது உடை மிகத்தூய்மையாக இருக்கும். அறையை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருப்பார்.

சுபாஷ் ஆங்கிலேயர்களை உற்று நோக்கினார். காலத்திற்கு வெள்ளையர்கள் தரும் மதிப்பைக் கண்டார். தங்கள் சுதந்திரத்திற்கு அவர்கள் எப்போதும் போராடத் தயார் நிலையில் இருப்பதைப் பார்த்தார்.

அதே நேரத்தில் அவர்கள் இந்திய விடுதலையைப் பற்றி கவலைக் கொள்வதில்லை என்பதையும் கண்டார்.

'ஒரு மாணவனின் முதல் கடமை படிப்பது, இரண்டாவது கடமை படிப்பது, மூன்றாவது கடமையும் படிப்பதே' என்ற ரஷ்ய மாவீரன் லெனின் கூற்றுப்படி சுபாஷ் ஆழ்ந்து படித்தார். ICS தேர்வில் நான்காவதாக வெற்றி பெற்றார்.

இந்திய சிவில் சர்வீஸ்! அதுவே ஆங்கிலத்தில் சுருக்கமாக ICS என்று அழைக்கப்பட்டது.

தேவலோகத்தில் பிறந்தவர்கள் மட்டும் இங்கே பதவி வகிப்பார்கள். நிறைய சம்பளம்!

அதிகாரம், புகழ், பெருமை இவர்களுக்கு உண்டு. ஆங்கிலேயப் பிரதமர் லாயிட்ஜார்ஜ், ''இந்தியாவில் உள்ள ICS அதிகார வர்க்கம் இந்திய அரசின் இரும்பைப் போன்ற அஸ்திவாரம் ஆகும். இது ஆங்கிலேயர்கட்கு மிகவும் உதவுவதால் ICS -ஐ மாற்ற மாட்டோம். அவர்களுக்குத் தரும் சலுகைகளைக் குறைக்கவும் மாட்டோம்'' என்று கூறினார்.

ICS அதிகாரிகள் சிலர் கவர்னர் ஜெனரலாக ஆனார்கள். சிலர் உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆனார்கள். பலர் மிகப்பெரிய அதிகாரத்தில் இருந்தனர். இவர்கள் இந்தியாவில் உள்ள அமைச்சர்களை ஒரு சிறிதும் மதித்தது இல்லை.

இந்தியர்கள் ICS பதவி பெறுவதைத் தடுக்கும் பொருட்டு உச்சவரம்பு வயது 22-லிருந்து 19-ஆக மாற்றப்பட்டது. ஆங்கிலேயர்கள் லத்தீன், கிரீக் என்ற இரு மொழிகளில் எளிதில் 700க்கு அதிகமாக மார்க்குகள் வாங்கினார்கள். இந்தியர்களோ சமஸ்கிருதத்தில் 500 மார்க்குகளுக்கு மேல் வாங்க முடியவில்லை.

ICS தேர்வில் இந்தியர்கள் வெற்றி பெற்றாலும் பல தடைகள் போடப்பட்டன. பாண்டிச்சேரியில் அரவிந்த ஆசிரமத்தை உண்டாக்கிய அரவிந்த கோஷ், குதிரை ஏற்றத்தில் தோற்றதால் ICS பதவி பெற முடியவில்லை.

பொதுவாக ICS அதிகாரிகள் திறமையாகச் செயல்பட்டாலும், தாங்கள் ஆளப்பிறந்தவர்கள் என்ற ஆணவ உணர்வு மிகுதியாக இருந்தது. ICS அதிகாரிகளை முழுமையாக நேரு எதிர்த்தார். இவர்கள் இந்தியாவிற்காகப் பாடுபடவில்லை. இங்கிலாந்திற்காகத்தான் திறமையாகச் செயல்படுகிறார்கள் என்று கூறினர். சுதந்திர இந்தியாவில் ICS போன்ற ஆளும் வர்க்கம் இருக்காது என்றார்.

ஆனால் சுதந்திர இந்தியாவில் 'C' என்ற எழுத்து 'A' வாக மாறி IAS என்ற புது ஆதிக்க வர்க்கம் தோன்றியது!

ICS -ல் தேர்வு பெற்ற சுபாஷின் மனம் போராட ஆரம்பித்தது. தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தாகிவிட்டது. ஆனால், அவரது உள்மனம் பேசியது, ''என் வாழ்க்கைக் கப்பல் இப்பொழுது அதிகாரம், பணம், அந்தஸ்து, புகழ் என்ற ICS சுகபோகத் தீவில் நிற்கிறது. ஆனால் என் இதயத்தின் உள்ளிருந்து இங்கே நீ மகிழ்ச்சியை அடையவே மாட்டாய்! மன திருப்தி வேறு இடத்தில் இருக்கிறது.''

''நாம் இந்தப் பிறவியில் எதையும் அடையாவிட்டால் ஏன் வாழவேண்டும்'' என்று நண்பர்களுக்குக் கடிதம் எழுதினார். ஒரே நேரத்தில் ஆங்கிலேய அரசிற்கு அடிவணங்கி ஆட்சிபுரிவதும், இதயசுத்தியோடு நியாயமான முறையில் இந்தியாவில் சேவை செய்வதும் முடியாது என்றும் அவர் உணர்ந்தார். குடும்ப மகிழ்ச்சியைவிட நாட்டின் நலமே தனக்கு முக்கியம் என்று உணர்ந்த சுபாஷ் ICS பதவியை ராஜினாமா செய்தார்.

ICS பதவியைத் தூக்கி எறிந்த முதல் இந்தியர் சுபாஷ்தான்!

பகுதி - 4

1921 - அடிமை இந்தியா!

இங்கிலாந்திலிருந்து கப்பல் ஏறி ஜூலை 16-ஆம் தேதி பம்பாய் வந்தடைந்தார் சுபாஷ்! இவருடன் நோபல் பரிசு பெற்ற வங்கக் கவிஞர் ரவீந்தரநாத் தாகூரும் அதே கப்பலில் வந்தார்.

1921-ஆம் வருடம், இந்திய சுதந்திரப் போரில் குறிப்பிடத் தக்க வருடம் ஆகும். நேருவின் கூற்றுப்படி, இந்த ஆண்டில் தான் தேசபக்தி, அரசியல், சமயம், மதவெறி, ஆன்மீக நுண்ணுணர்வு ஒன்றாகக் கலந்தது. கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாடு முடிவுப்படி 'கிலாஃபத்துக்காகவும்', 'ஜாலியன்

வாலாபாக்' அநீதிக்கும் நியாயம் கேட்கவும், சுயராஜ்யத்திற்குப் போராடவும் அகிம்ஸா வழியில் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்திக் கொண்டு இருந்தார்.

துருக்கியில் முஸ்லீம்களுக்குத் தலைவராக இருந்தவர் கலிபா. இவரைத் தலைமைப் பதவியிலிருந்து ஆங்கிலேயர்கள் நீக்கியதை ஆட்சேபித்து முஸ்லீம்கள் போராட ஆரம்பித்த இயக்கம் கிலாபத் இயக்கமாகும். நூறு ஆண்டுகளாகக் கிடைக்காத வாய்ப்பை காந்தியடிகள் பயன்படுத்த கிலாபத் இயக்கத்தை தன்னுடன் சேர்த்துக் கொண்டார். கிலாபத் போராளிகள் காங்கிரஸ் கட்சியில் கலக்காமல் தனிக் குழுவாகச் செயல்பட்டனர். இவர்களின் தலைவர்களான அலி சகோதரர்கள் காந்தியுடன் பல இடங்களுக்குச் சென்றனர். இந்து - முஸ்லீம் ஒற்றுமை ஓங்குக! என்ற முழக்கம் எங்கும் ஒலித்தது.

காங்கிரஸ் கட்சிக்காக காந்தியடிகள் திலகர் நிதி ஆரம்பித்து, இந்திய மக்களை ஒரு கோடி ரூபாய் கேட்டார். ஓர் ஆண்டிலேயே சுவராஜ்யம் வாங்கித் தருவதாகக் கூறினார். மேலும் காங்கிரஸ் கட்சியில் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்றார். இருபது லட்சம் கை ராட்டினங்களை மக்கள் உபயோகிக்க வேண்டும் என்றும் கூறினார்.

திலகர் நிதிக்கு 16-நாட்களில் எண்பது லட்சம் ரூபாய் சேர்ந்தது. ஏழை பணக்காரர்கள் வேறுபாடு இன்றி மகாத்மாவிற்குவாரி வழங்கினர். வெளிநாட்டுத் துணிகளை பகிஷ்கரிக்கும் போராட்டமும் இவ்வாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது.

'சுவராஜ்யம்' என்றால் என்ன? இக்கேள்விக்கு காந்தியடிகள் பல நேரங்களில், பல வகைகளில் பதில் கூறினார். அவரது தொண்டர்கள் அவரவர் இஷ்டப்படி சுவராஜ்யம் என்றால் என்ன? என்று கூறினார்கள். சிறையில் உள்ள கைதிகள் சுவராஜ்யம் வந்தால் தங்களை வெளியே விட்டுவிடுவார்கள் என நம்பினர்.

மகாகவி பாரதியார் இறந்த இந்த ஆண்டில் காந்தியடிகள் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்தார். அவரைக் கடவுளா

கவே மக்கள் நினைத்தார்கள். மதுரையில்தான் அவர் தாம் அணிந்திருந்த குஜராத்தி முறை உடைகளை அகற்றினார். அன்றிலிருந்து தமிழக விவசாயிகள் போல இடுப்பில் ஒரு துணியோடு வாழ ஆரம்பித்தார். தமிழ்மொழியை மிகச்சிறந்த மொழியாகக் கருதிய காந்தியடிகள் தமிழர் உடையையே அணிய ஆரம்பித்ததில் விந்தை இல்லை. தென் ஆப்பிரிக்காவில் இருந்த அவரது ஆசிரமத்தில், குழந்தைகளுக்கு அவர் தமிழ் சொல்லிக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் கைராட்டையில் நூல் நூற்றல், தீண்டாமையை ஒழித்தல், இந்து - முஸ்லீம் ஒற்றுமை, மதுவிலக்கு, ஆங்கில முறையில் உள்ள சட்டசபை, நீதிமன்றம், கல்வி நிலையங்கள் இவற்றைப் புறக்கணித்தல் ஆகும்.

காந்தியடிகள் வெளிநாட்டுத் துணிகளைப் பகிஷ்கரிக்கின்ற நேரத்தில்தான் சுபாஷ் பம்பாய் வந்தடைந்தார். அன்றே காந்தியடிகளைச் சென்று பார்த்தார்.

காந்தியடிகள் மணிபவனத்தில் அப்பொழுது தங்கியிருந்தார். தரையின் மேல் ஜமக்காளம் விரித்து உட்கார்ந்திருந்தார். சுபாஷ் வெளிநாட்டு உடைகளை அணிந்து உள்ளே நுழைந்தார். இவர்களுக்கு இடையே ஆரம்பத்திலேயே ஏற்பட்ட இந்த மாறுபாடு கடைசிவரை எல்லா வழிகளிலும் இருக்கப் போகிறது.

''எந்த ஒரு திட்டமிட்ட போராட்டமும் நியாயமான போராட்டம் அல்ல. நியாயமான போராட்டங்களை கடவுளே வந்து வழிகாட்டி நடத்திச்செல்வார்'' என்ற நம்பிக்கையுடைய மகாத்மா, இளைஞரான சுபாஷைப் பார்த்தார்.

'சுபாஷோ' திட்டங்கள் தீட்டி அடிமைத்தளையை அறுத்து எறிய வேண்டும்' என்ற எண்ணத்துடன் வந்தவர். அதன் முதல் கட்டமாக ICS பதவியைத் தூக்கி எறிந்தவர். அவர் மகாத்மாவைப் பல கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். முதல் உலகப்போரில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்ற நேரம் அது.

அவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறும் எண்ணமே இல்லை என்பதை ஐரோப்பாவிலிருந்து வந்த சுபாஷ் நன்கு அறிவார். ஆனால் காந்தியடிகளோ ஒரே வருடத்தில் சுவராஜ்யம் வாங்கித் தருவதாகக் கூறுவது அவருக்கு வியப்பாக இருந்தது. சுபாஷ் கேட்ட கேள்விகளுக்குக் காந்தியடிகளால் சரியாகப் பதில் அளிக்க இயலவில்லை. ஒருவேளை தன்னிடம் உள்ள ராஜதந்திரங்களை மகாத்மா கூற மறுக்கிறாரோ என எண்ணினார்.

முதல் சந்திப்பிலேயே சுபாஷ், காந்தியடிகளால் கவரப்படவில்லை. காந்தியடிகள் சுபாஷை, கல்கத்தாவிலிருந்த தேசபந்து சித்தரஞ்சன் தாசை சந்திக்கக் கூறினார்.

தாஸ் கல்கத்தாவில் ஒரு தலைசிறந்த வக்கீல். ஒரு மணி நேரத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பாதித்தார். அதை உடனே செலவும் செய்தார். அவரைச் சுற்றி ஏராளமான தேசபக்தர்கள் இருப்பார்கள். ராஜபோக வாழ்க்கை வாழ்ந்தவர். காந்தியடிகள் சொல் கேட்டு வக்கீல் தொழிலை விட்டு லட்சக் கணக்கான ரூபாய்களை இழந்து தேசத்தொண்டு புரியலானார்.

லண்டனில் இருந்தபோதே தாசுக்குச் சுபாஷ் கடிதம் எழுதியிருந்தார். அதில் தேசியக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டால், அதில்தான் ஆசிரியராகப் பணிபுரிவதாகக் கூறினார். மேலும் காங்கிரஸ் கட்சிக்கு நிலையான அலுவலகம் வேண்டும்; அக்கட்சி உளவுத்துறை ஒன்றினைக் கொண்டிருக்க வேண்டும். சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகள் சரியாக இல்லாததால் பிராமணர் அல்லாதார் காங்கிரசுக்கு எதிராகச் செயல்படுவதை மாற்ற வேண்டும், தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று எழுதியிருந்தார்.

கல்கத்தா சென்ற சுபாஷ், தாசைச் சந்தித்தார். "இளமை என்பது அனுபவக் குறைவல்ல. அது ஒரு சக்தி" என்ற கொள்கை உடைய தாஸ், சுபாஷைக் கவர்ந்தார்.

சுபாஷ் கல்கத்தாவில் தாசால் ஆரம்பிக்கப்பட்ட தேசியக்

கல்லூரி முதல்வரானார். தொண்டர் படைத்தலைவரானார். பார்வார்ட் என்ற பத்திரிக்கை ஆசிரியரானார். சுபாஷின் சுறு சுறுப்பைப் பார்த்து ஆங்கிலேயப் பத்திரிக்கைகள் பாராட்டின.

காங்கிரஸ், ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக அன்னியத் துணிகளை ஜூலை 31-ஆம் தேதி எரிக்க ஆரம்பித் தது. ஒரு மைல் விட்டமும் 3 அடி உயரமும் உள்ள மாபெரும் துணிக் குவியலை எரித்தார் மகாத்மா! பட்டுப்புடவைகள், கோட்டுகள், டைகள் போன்ற உடைகள் எரிந்து சாம்பலாயின! வங்கக் கவிஞர் தாகூர், மக்கள் துணியில்லாமல் இருக்கையில் இவ்வாறு எரிப்பது தவறல்லவா என வினவினார். காந்தியோ அழித்தல்தான் சிறந்த வழி எனக் கூறினார்.

16 வருடங்களுக்கு முன்பு வீர சவர்க்கார் இதே முறையில் தான் அன்னியத் துணிகளை எரித்தார். அதன் காரணமாக கல் லூரி விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரவாதிகளை இணைக் கும் பணியில் காந்தியடிகளை, தாஸ் கல்கத்தாவிற்கு வரவ ழைத்துப் பேசினார். இந்தக் கூட்டத்தில் காந்தி, மோதிலால் நேரு, லாலா லஜ்பத்ராய், அப்துல்கலாம் ஆசாத் பங்கு ஏற்ற னர். சுபாஷ் இவர்களுடன் நேரில் பழகும் வாய்ப்பு பெற்றார்.

நவம்பர் மாதத்தில் அப்போதைய வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வர இருந்தார். அவரை வரவேற்கக் கூடாது என காங்கிரஸ் கட்சி ஆணையிட்டது. பம்பாய்க்கு வேல்ஸ் இளவ ரசர் வந்தபோது பெருங்கலகம் ஏற்பட்டது. 53-பேர் மரணம் அடைந்தனர். மகாத்மா, அமைதியை நிலை நிறுத்துவதற்காக ஐந்து நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் ராஜாஜி, சிறைபுகுந்தார். திரு. வி.கலியா ணசுந்தர முதலியார், வ.வே.சு. ஐயர் ஊர்வலத்தில் பங்கேற்ற னர்.

கல்கத்தாவில் அர்த்தால் முழு அளவில் நடைபெற பெரும்பாடுபட்டார் சுபாஷ். வங்காளத் தொண்டர் படையை அரசு தடை செய்தது. பலர் கைது செய்யப்பட்டார்கள். தாஸ்

கூறினார்: ''என் கைகளில் விலங்குகளின் சுமையை உணர்கிறேன். இந்தியாவே ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரிய சிறைதான்''. சிறைக்குச் செல்லும் அச்சம் இந்தியர்களை விட்டுப் போயிற்று.

தாஸூம், சுபாஷூம் கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். போஸ் சிரித்துக் கொண்டே கூறினார்: ''நான் என்ன கோழியா திருடினேன். ஆறு மாதம் தண்டனை பெறுவதற்கு?''

சிறையில் தாசுக்கு சுபாஷ் சமையல் செய்தார். தாசுக்கு ஒரு ICS (Indian Cooking Service) சமையல்காரர் கிடைத்தார் என மற்றவர்கள் நகைச்சுவையாகக் கூறினர். சுபாஷ் இனிப்பு வகைகளை மிகச்சிறந்த வகையில் செய்தார். சுபாஷ், தாசின் தலைசிறந்த பண்புகளை அவருடன் இருந்து உற்று நோக்கினார்.

1921-ஆம் வருடம் முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. மகாத்மா சொன்ன சுவராஜ்யம் வரவே இல்லை. இந்திய விடுதலைக்குப் பெரும்பாடுபட்ட அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த அன்னிபெசன்ட் அம்மையார், ''செப்டம்பர் போய்விட்டது. சுவராஜ்யம் எப்பொழுது வரப்போகிறது'' என்று கேட்க ஆரம்பித்தார்.

அகமதாபாத்தில் காங்கிரஸ் கட்சி கூடியது. இங்கேதான் முதன் முதலாக நாற்காலி, மேசைகளுக்குப் பதிலாக ஜமக்காளத்தில் உட்காரும் பழக்கம் ஏற்பட்டது. எங்கும் கதர், எதிலும் கதர் என ஆயிற்று. காந்தியடிகள் போராட்ட சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டார். அப்பொழுது அன்னிபெசன்ட் கேள்விக்கு, காந்தியடிகள் ''சுவராஜ்யம் மக்கள் மனதில் வந்துவிட்டது'' என்றார்.

காந்தியடிகள் வன்முறையால் ஏற்படும் போராட்டத்தை விட பண்பாடு கொண்ட போராட்ட முறையாக சத்யாகிரகத்தை உபயோகிக்க ஆரம்பித்தார். வரிகொடா இயக்கம் பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டது. சென்னை மாகாணத்தில் குண்டூரில் வரிகொடா இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் செளரிசெளரா என்ற இடத்தில் விவசாயிகள் 20 போலீஸ்காரர்களை உயிருடன் எரித்து விட்டனர்.

போராட்டத்தில் வன்முறை நுழைந்ததால், மகாத்மா உடனே போராட்டத்தை நிறுத்திவிட்டார்.

சிறையிலிருந்த தாஸ், லாலாலஜ்பத் ராய், மோதிலால் நேரு, சுபாஷ் மற்றும் பல தலைவர்கள் இதனைக் கேட்டு மிகவும் கோபம் அடைந்தனர். லாலா லஜ்பத்ராய் மனம் வெறுத்து காந்தியடிகளுக்கு 70 பக்கக் கடிதம் ஒன்று எழுதி னார். தொண்டர்கள் தங்கள் நம்பிக்கையை இழந்தனர்.

''மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்து அதில் மக்களைப் பங்குகொள்ள வைக்க பல ஆண்டுகள் ஆகுமே'' என ஜவஹர் லால் நேரு வருத்தப்பட்டார்.

'ஒத்துழையாமை இயக்கம் தோல்வியடைந்தது' என காங்கிரஸ் கட்சியே ஒப்புக்கொண்டது. சென்னை மாகாணத் தில் ஒரு லட்சத்து எழுபத்தோராயிரம் மாணவர்கள் படித்தார் கள். அதில் 750 பேர்தான் காந்தியடிகள் சொல்படி கல்வியிடங் களை விட்டு வெளியே வந்தனர். மீண்டும் பலர் திரும்பப் படிக்க ஆரம்பித்தனர். குஜராத்தில் காந்தியடிகள் சொற்படி கதர் அணியும் வழக்கம் ஏற்படவில்லை. பல வியாபாரிகள் அநியாயமாக ஜப்பான் துணிகளை, கதர் ஆடை என விற்றனர்.

ஆனால் இந்தப் போராட்டத்தினால் காந்தியடிகள் மக்கள் மனதை உறுதிபெற வைத்தார். சிறைக்குச் செல்ல மக்கள் பயப்படவில்லை. முதன் முதலாகக் கிராமங்களிலும், விடுத லைப் போராட்ட உணர்வை மகாத்மா ஏற்படுத்தினார்.

பகுதி - 5

புதிய பாதை

ஒத்துழையாமைப் போராட்டம் தோல்வியடைந்தது. காங்கிரஸ் கட்சி அடுத்து என்ன செய்வது என்ற கேள்வி ஏற்பட்டது. தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு ராட்டையில் நூல் நூற்றல் போன்ற ஆக்கப்பணிகளில் இறங்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

விடுதலைப் போராட்டம் வலுவிழந்த நேரத்தில் வெள்ளையர்கள் மகாத்மாவைக் கைது செய்தார்கள். லண்டனில் 'மார்னிங் நியூஸ்' என்ற நாளிதழ் காந்தியடிகளைத் தூக்கிலிடும்படிக் கூறியது. இந்தியாவில் வைசிராயாக இருந்த மாண்டேகு

தன் பதவியை ராஜினாமா செய்தார். அந்த நேரத்தில் பம்பாய் கவர்னர் லாய்ட், காந்தியடிகள் கைது செய்யப்படாவிட்டால் தனது பதவியை ராஜினாமா செய்வேன் என்று பயமுறுத்தினார்.

காந்தியடிகள் கோர்ட்டுக்கு வந்தபொழுது நீதிபதி வணக்கம் தெரிவித்தது ஒரு புதுமை. காந்தியடிகட்கு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை தரப்பட்டது. திலகர் பெருமானுக்குத் தரப்பட்ட அதே தண்டனைக் காலம்தான் என்று கூறிய நீதிபதி இத்தண்டனை குறைக்கப்பட்டால் முதலில் மகிழ்வது தாம் தான் என்று கூறினார். காந்தியடிகள் எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார்.

இதனிடையில் சட்டசபை, பாராளுமன்றம் ஆகியவற்றைக் கைப்பற்றி ஆங்கிலேயர்களுக்கு உள்ளேயும் வெளியேயும் தொல்லையும் தரலாம், ஆக்கபூர்வமாகச் செயலும் படலாம் என தாஸ், மோதிலால் நேரு போன்றவர்கள் விரும்பினார்கள். இவர்களுக்கு மாறுதல் வேண்டுவோர் எனப்பெயர். ராஜாஜி, அன்சாரி, கஸ்தூரிரங்க ஐயங்கார் மாறுதலை விரும்பவில்லை. இவர்களுக்கு ஆதரவாக ராஜேந்திரபிரசாத் இருந்தார்.

1922-ம் வருடம் கயாவில் காங்கிரஸ் கூடியது. மாறுதல் வேண்டும் என்ற தாஸ் தீர்மானம் தோற்றது. எனவே தாஸ் தன் தலைமைப் பதவியை ராஜினாமா செய்தார். காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே மாறுதல் வேண்டுவோர் 'சுவராஜ்' கட்சி அமைத்தனர். தாஸ் தலைவராகவும் மோதிலால் நேரு செயலாளராகவும் ஆனார்கள்.

கல்கத்தாவில் சுபாஷ் இக்கட்சி வளருவதற்குப் பெரும் பாடுபட்டார். கட்சிக்காக அவர் ஃபார்வார்ட் என்ற நாளிதழை நடத்த ஆரம்பித்தார். டெல்லியில் நடந்த காரியக் கமிட்டியில் காங்கிரஸ் கட்சி தன் உறுப்பினர்களை வாக்களிக்கவும் தேர்தலில் பங்கெடுக்கவும் அனுமதியளித்தது. சுவராஜ் கட்சியின் செயல்பாடுகளைக் கண்ட காந்தியடிகள், "ஒரு குழந்தை அம்மாவின் சேலைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு நிற்பது

போல் நான் சுவராஜ் கட்சியுடன் தொடர்பு கொண்டுள்ளேன்'' என்றார்.

1922 - செப்டம்பரில் ஒரு பெரும் வெள்ளம் வங்காளத்தில் வந்தது. மக்கள் பெரிதும் அல்லல் பட்டனர். சுபாஷ் தன் தொண்டர்களுடன் சென்று மக்களுக்குப் பேருதவி செய்தார். வங்க கவர்னர் லிட்டனே சுபாஷைப் பாராட்டினார்.

1923-ல் நடந்த தேர்தலில் சுவராஜ் கட்சி சில மாநிலங்களில் பெரும் வெற்றி கண்டது. டெல்லியில் உள்ள மத்திய அசெம்பிளிக்கு *45* பேர் உறுப்பினர் ஆனார்கள். மோதிலால் நேரு இக்குழுவின் தலைவரானார்.

கல்கத்தா மாநகரத் தேர்தலில் சுவராஜ்கட்சி பெரும் வெற்றியைப் பெற்றது. தாஸ் நகரத்தின் மேயரானார். சுபாஷ் தன் *23*-வது வயதில் நகரசபையின் கமிஷனர் ஆனார். இவருக்குச் சம்பளம் *3000* ரூபாய் ஆகும். ஆனால், இதில் பாதிதான் பெற்றுக் கொண்டார்.

இந்தப் பதவி அரசாங்க வேலையில் ICS ஆக இருந்தால் கூடப் பல வருடங்கள் கழித்துதான் கிடைத்திருக்கும். திறமையான சுபாஷ், நகரசபையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். கதர் சீருடை ஆயிற்று. கல்வித்துறை முதன் முதலாக ஏற்படுத்தப்பட்டு எளியவர்களுக்குக் கல்வி தரப்பட்டது. இலவச மருத்துவ உதவி முதன் முதலாக மக்களுக்குத் தரப்பட்டது. இளம் குழந்தைகளுக்குப் பால் இலவசமாகத் தரப்பட்டது. வெள்ளைக்காரர்களுக்குத் தரப்பட்டு வந்த வரவேற்பு விழாக்கள் நிறுத்தப்பட்டு இந்திய தேசியத் தலைவர்களுக்குத் தரப்பட்டது. நகரசபையில் சில ஆணவம் மிக்க வெள்ளை அதிகாரிகள் இருந்தனர். அவர்களைத் தன் வழிக்கு எளிதில் கொண்டு வந்தார் சுபாஷ்.

சுபாஷ் நாள் முழுவதும் ஒரு நல்ல அதிகாரி போல் செயல் பட்டார். கோப்புகளை வீட்டிற்குக் கொண்டுவந்து இரவில் படித்தார். நகரின் பல பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்த்தார். ஆனால் அரசியல் சூழ்நிலை மாறத்

தொடங்கியது. தாசுக்கும் காந்திக்கும் பிளவுகள் இருந்தன. மேலும் மிகச்சிறந்த ஆட்சியை இந்தியர்களே தர ஆரம்பித் தால் வெள்ளையர்களுக்கு மதிப்பு ஏது? சுவராஜ் கட்சி மெள்ள வளரத் தொடங்கியது. வெற்றிமேல் வெற்றி கண்டது. எனவே ஆங்கில அரசு செயல்பட ஆரம்பித்தது.

சுபாஷ் அதிகாரியாக இருந்தபோது பலதரப்பட்ட மக்க ளைச் சந்தித்தார். அவர்களில் தீவிரவாதிகளும் அடங்குவர். காந்தியடிகளின் போராட்டம் தோற்றுவிட்டது. அவரும் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார். காங்கிரஸ் இயக்கமோ ஆக்கபூர்வ பணியில் இறங்கிவிட்டது. இந்திய விடுதலை யைத்தவிர வேறு எதையும் நினைக்காத தீவிரவாதிகள் மீண் டும் உதயம் ஆனார்கள்.

இத்தீவிரவாதிகளை அடக்க வங்காள அரசு டெக்கார்ட் என்ற ஆங்கிலேய போலீஸ் கமிஷனரை நியமித்தது. இவன் முன்பே 1910-15 ஆண்டுகளில் வங்காளத்தில் பல தீவிரவாதிக ளைக் கண்டுபிடித்து சித்ரவதை செய்து தூக்குமேடைக்கு அனுப்பியவன். இவன் திறமையைக் கண்ட பிரிட்டிஷ் அரசு இவனை அயர்லாந்தில் உள்ள தீவிரவாதிகளைப் பிடிக்க அங்கே அனுப்பியது. மீண்டும் இவனை வங்காளத்திற்கு ஆங் கிலேய அரசு அனுப்பியது. தீவிரவாதிகளை வேட்டையாட இவன் ஆரம்பித்தான்.

இவனைக் கொல்வதற்காகக் கோபிநாத் சாகா என்ற தேச பக்தர் முயன்றார். அவர் தவறாக வேறு ஒரு ஆங்கிலேயனைச் சுட்டுக் கொன்றுவிட்டார். கோபிநாத் சாகாவிற்கு மரண தண் டனை தரப்பட்டது. மரண தண்டனை பற்றிக் கொஞ்சமும் சாகா கவலைப்படவில்லை. அவர் தன் அன்னைக்கு ஒரு கடி தம் எழுதினார். ''என்னைப் போன்ற பிள்ளையைப் பெற்ற உங்களைப் போன்ற அன்னையர்கள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டும். என்னுடைய ரத்தத்தின் ஒவ்வொரு துளி யும் இந்திய விடுதலைக்காக ஒவ்வொரு வீட்டிலும் விதையாக மாறட்டும்.''

தாசும், சுபாஷும் தனிமனித பயங்கரவாதத்தை எதிர்ப்ப வர்கள் தான். இருந்தாலும் சாகாவினுடைய தேசபக்தியை ஆத ரித்து சுவராஜ் கட்சிக் கூட்டத்தில் தீர்மானங்கள் இயற்றினர்.

காந்தியடிகளோ எர்வாடா சிறையில் இருந்தார். அவரின் உணவு உண்ணும் தட்டை, வெள்ளைக்கார சிறை அதிகாரி தன் பூட்ஸ் காலால் எட்டி உதைத்தான். மகாத்மாவிடம் முரட்டுத்த னமாக நடந்து கொண்டான். லண்டனில் மகாத்மாவின் பெயர் பாரிஸ்டர்கள் வரிசையிலிருந்து எடுக்கப்பட்டு விட்டது. ஆனால் உலகம் முழுவதும் மகாத்மாவை இயேசுவின் அவதா ரமாகவே நினைத்தனர்.

வெள்ளைக்காரர்கள் தாஸ் நடத்திய சுவராஜ் கட்சியின் வெற்றியைக் கண்டு பயந்தனர். சுவராஜ் கட்சி தேர்தல்களில் போட்டியிட்டது. எனவே மக்களைப் பல முனைகளில் சந்தித் தது. வெள்ளையருக்கு எதிராக மக்களைத் தட்டி எழுப்பியது. கட்டுக்கோப்பான இந்தக் கட்சியைக் கண்டு இந்தியாவின் வைசிராய் பயந்து ஆங்கிலேய மகாராஜாவிற்குக் கடிதம் எழு தினார். ஆங்கிலேயருக்கு இப்போது டெல்லி சட்டசபையில் சுவராஜ் கட்சி மிகுந்த தொல்லையைக் கொடுத்தது. மோதி லால் நேருவின் தாக்குதலை ஆங்கிலேயர்களால் தாங்க முடிய வில்லை. இதைத் தவிர தீவிரவாதமும் வளர ஆரம்பித்தது. இந்த இரு முனைத் தாக்குதலை தவிர்ப்பதற்கு என்ன வழி என்று யோசித்தனர். எனவே காந்தியடிகளை அவர் உடல் நலம் குறைவினைக் காட்டி சிறையில் இருந்து வெளியே விட் டார்கள். இரண்டு ஆண்டுகள் சிறையில் இருந்துவிட்டுக் காந்தி யடிகள் வெளியே வந்தார்.

1924-மே மாதத்தில் கோபிநாத் சாகாவின் தியாகத்தைப் பாராட்டி வங்காளத்தில் தீர்மானம் இயற்றப்பட்டது. காந்திய டிகள் தன் வழக்கப்படி சாகாவைத் தவறான வழியில் சென்ற தேசபக்தர் என்றார்.

1924-ஜூன் மாதத்தில் அகமதாபாத்தில் காங்கிரஸ் கட்சி யின் செயற்குழு சந்தித்தது. தாஸ், கோபிநாத் சாகாவைப் புகழ்ந்து தீர்மானம் கொண்டுவந்தார். காந்தியடிகள் இக்கூட்

டத்தில்தான் அழ ஆரம்பித்தார். அவரின் பக்தர்கள் கண்ணீர்க் கடலில் மூழ்கினர். முகமது அலி தன் தொப்பியை காந்தியடிக ளின் பாதத்தில் வைத்தார். காங்கிரஸிலிருந்து விலகலாமா என்று கூட அவர் நினைத்தார்.

நேரம் பார்த்துக் கொண்டு இருந்த வெள்ளையர்கள் 1924-ஆம் வருடம், அக்டோபர் 24-ம் தேதியன்று சுபாஷ் சந்திர போஸை எந்தவிதக் காரணமும் காட்டாமல் கைது செய்தனர். இவருடன் மேலும் 7 பேர் கைது செய்யப்பட்டனர். இச்செய்தி யைக் கேட்ட தாஸ், சிம்லாவிலிருந்து கல்கத்தாவிற்கு விரைந்து வந்தார்.

தாஸ் கேட்டார்: ''போஸ் தீவிரவாதி என்றால், நானும் தீவிரவாதிதான், நானும் குற்றவாளிதான், சட்டமில்லாச் சட் டங்கள்தான் இந்த நாட்டில் இருக்கின்றன''.

கல்கத்தாவில் சில ஆங்கில நாளிதழ்கள் சுபாஷ் லண்ட னில் இருந்தபோது தீவிரவாதியாக இருந்தார் என நிரூபிக்க முயன்று தோற்றன.

சுபாஷ் முதலில் அலிப்பூர் சிறையில் இருந்தார். பின்பு பெர்ஹாம்பூர் சிறை. கடுமையான குளிர்காலத்தில் அவருக்குச் சரியான துணிகள் தரப்படவில்லை. எதற்காகக் கைது செய்தார் கள் என்ற காரணமும் அவருக்குத் தரப்படவில்லை. நீதிமன் றம் முன்பு அவரைக் கொண்டு செல்லவே இல்லை!

1925-ம் வருடம் ஜனவரி 25-ஆம் தேதி பெர்ஹாம்பூர் சிறையில் இருந்து போலீஸ்காரர்கள் சுபாஷை அழைத்துச் சென்றார்கள் - பர்மாவில் உள்ள மாண்டலே சிறைக்கு!

பகுதி - 6

மாண்டலே சிறை

இந்திய நாட்டிலிருந்து விடுதலை வீரர்களை நாடுகடத்துவது என்பது ஆங்கிலேயருக்கு எப்பொழுதும் பழக்கம்தான். 1801-ஆம் ஆண்டு இறுதியில் தென்னாட்டில் வெள்ளையரை எதிர்த்துப் புரட்சி ஏற்பட்டது. ஊமைத்துரை, மருதுபாண்டியர், திண்டுக்கல் கோபாலநாயக்கர் போன்ற பலரை வெள்ளையர் தூக்கிலிட்டனர். தமிழர்கள் 73 பேர் நாடு கடத்தப்பட்டனர். மருதுபாண்டியர் மகனான 15 வயது துரைசாமி, பாஞ்சாலங்குறிச்சி தளவாய், குமாரசாமி நாயக்கர் என்ற பலர் 'அட்மிரல் நெல்சன்' என்ற கப்பல் மூலம் பினாங்கிற்கு நாடுகடத்தப்பட்டனர். வழியில் பலர் இறந்தனர். மீதிபேர் மலேயாவை

அடைந்தனர். இவர்கள் உடலைச் சுற்றி கனத்த இரும்பு விலங்குகள் போடப்பட்டன. இவர்கள் நடக்கும்பொழுது 'கிளிங்' 'கிளிங்' என்ற ஒலி ஏற்பட்டதால் தமிழர்கள் 'கிளிங்கர்கள்' என்றே அங்கு அழைக்கப்பட்டனர்.

நெல்சன் கப்பலில் மாலுமி ஒருவன் மீண்டும் 1818-ல் பினாங்கு சென்றபோது துரைசாமியை மீண்டும் சந்தித்தான். இளைஞனான துரைசாமியோ வயோதிகனைப் போல் மாறி விட்டான். தன் குடும்பத்தாருக்கு ஒரு கடிதம் கொண்டு தருமாறு மாலுமியை வேண்டினான். வெள்ளைக்காரத் துரையோ மனிதாபிமானம் இல்லாமல் மறுத்துவிட்டான்.

இதற்குப் பிறகு 1857-ஆம் வருடம் வட இந்தியாவில் வெள்ளையரை எதிர்த்து மாபெரும் புரட்சி ஏற்பட்டது. தோற்ற இந்திய வீரர்களை அந்தமான் தீவுக்கு நாடுகடத்தினர்.

அந்தமான் தீவு!

வெள்ளையனின் அரக்கத்தனத்தின் எல்லை! இந்த தீவில் தான் அணிந்திருந்த பூணூலை எடுக்க மாட்டேன் என்று உண்ணாவிரதம் இருந்து உயிரை விட்டார், ராம் என்ற அரசியல் கைதி. விடுதலை வீரர்களின் ரத்த வெள்ளம் ஓடியது அந்தச் சிறை அறைகளில்! 1911-ல் சவர்க்காரும் அவரது சகோதரரும் ஒரே சிறையில் இருந்தாலும், முதல் 5 ஆண்டுகளில் ஒருவரை ஒருவர் சந்திக்க அனுமதி தரப்படவில்லை!

1933-ல் மீண்டும் அந்தமான் சிறைக்கதவுகள் திறக்கப்பட்டன. பல விடுதலைப் போராளிகள் அனுப்பப்பட்டனர். பகத் சிங்கின் நண்பர் உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்டார். அவரது உடலைக் கடலில் தூக்கி எறிந்தனர் வெள்ளையர்கள். அந்தமான் சிறைக்குச் சென்ற பெருமை, பெருமாள் என்ற தமிழருக்கு உண்டு.

இவ்விதம் இந்திய விடுதலை வீரர்கள் பலர் நாடுகடத்தப்பட்ட மாதிரியில் சுபாஷ் 'மாண்டலே' சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அந்நாளில் பர்மா இந்தியாவில் இருந்தாலும் 'மாண்டலே' செல்லுவது நாடுகடத்தப்படும் செயலா

கவே கருதப்பட்டது. இந்தியாவை இறுதியாக ஆண்ட முகலாய மன்னர் பகதூர்ஷா, திலகர், பகத்சிங்கின் பெரியப்பா அஜித்சிங், லாலா லஜ்பத்ராய் ஆகியோர் மாண்டலே சிறையில் வாடியவர்கள்தான். நகைச்சுவை உணர்வு உடைய வெள்ளையர்கள் பர்மாவின் மன்னரை இந்தியாவில் உள்ள ரத்தின கிரிக்கு நாடுகடத்தினர்.

மாண்டலே சிறை - இந்தச் சிறை மற்ற சிறைகள் எல்லாவற்றையும்விட முற்றிலும் மாறுபட்டது. எல்லாச் சிறைகளும் கருங்கல், செங்கல் போன்ற கற்களால் கட்டப்பட்டவை. ஆனால், இந்தச் சிறை மரச்சட்டங்களை வைத்துக் கட்டப்பட்டது. எனவே, மழை, குளிர், வெப்பம், கைதிகளை எளிதில் தாக்கின. இரவில் பார்க்கும்போது மிருகங்கள் தங்கள் கூண்டுகளில் இருப்பதைப் போன்ற உணர்வு ஏற்படும். அங்குள்ள வெப்பத்தைப் பொறுக்க முடியாத திலகர் தன்னை அந்தமான் சிறைக்கு மாற்றும்படி வேண்டினார். ஆங்கிலேயர்கள் மறுத்து விட்டனர். 6 ஆண்டுகள் அங்கிருந்து 'கீதா இரகசியம்' என்ற புத்தகத்தை எழுதினார்.

ஆரம்பத்தில் இச்சிறையில் எப்படி இருக்கப் போகிறோம் என சுபாஷும் மற்ற கைதிகளும் அஞ்சினர். அவர்களைத் திலகரால் வைக்கப்பட்ட எலுமிச்சை மரங்களின் தழைகள் நல்ல மணம் வீசி வரவேற்றன. மாண்டலே ஜெயிலில் இருந்த சுபாஷையும் அவரது நண்பர்களையும் இந்தியாவிலேயே மிக ஆபத்தானவர்கள் என வெள்ளையர்கள் கருதினர்.

சிறையில் இருந்தபோது சுபாஷ் பல இலக்கியங்களைப் பயின்றார். தனக்குப் பிற்காலத்தில் உதவப் போவதை அறியாமலேயே பர்மிய வாழ்க்கையை ஆராய்ந்தார். பர்மிய மொழியைப் பயின்றார். தத்துவப் புத்தகங்களில் மூழ்கினார். தன் மனதைப் பக்குவப்படுத்தினார். ஆத்ம பலத்தைப் பெற்றார். 29-வயது இளைஞரான சுபாஷ், சிறையில் இருந்து இந்திய விடுதலையைக் கனவு கண்டார். காங்கிரஸ் கட்சி எப்படி செயல்பட வேண்டும் என்றும் யோசித்தார்.

இந்தியாவிற்கு முழு சுதந்திரம்தான் வேண்டும்; சுதந்திர இந்தியாவில் பயங்கரவாத சட்டங்கள் இருக்கக் கூடாது. பெண்களுக்குச் சம உரிமை வேண்டும். இந்து - முஸ்லீம் ஒற்றுமை இருக்க வேண்டும் என்றெல்லாம் மனமாற விரும்பி னார்.

சிறையில் கிருத்துமஸ் கொண்டாட அனுமதி உண்டு. ஆனால் துர்கா பூஜை கொண்டாட அனுமதி கிடையாது. அதற் காக 15 நாட்கள் உண்ணா விரதம் இருந்து வெற்றி பெற்றார் சுபாஷ் சந்திரபோஸ்.

1925-ஆம் வருடம் ஜுன் மாதத்தில் தாஸ், டார்ஜிலிங்கில் இருக்கும்பொழுது மாரடைப்பால் 'வழிவிடு' என்ற தன் வீட் டில் காலமானார். அவரது இறுதி ஊர்வலத்தில் லட்சக்கணக் கான மக்கள் பங்கெடுத்தனர். காந்தியடிகளும் நேரே வந்து தன் வருத்தத்தைத் தெரிவித்தார்.

தாஸின் மரணச் செய்தி கேட்டு சுபாஷ் மிகவும் வருந்தி னார். வயதில் இளையவராக இருந்தாலும் அறிவில் சிறந்து விளங்கியதால் தாஸ், சுபாஷை இளைய கிழவனே! (young oldman) என்று அன்புடன் அழைப்பார். அத்தகைய அன்புள்ளம் இனிமேல் இல்லை. தனக்கு வழிகாட்ட 'தாஸ்' இனிமேல் இல்லை. எனவே தான்தான் தன்னை நடத்திச் செல்ல வேண் டும் என்பதனை சுபாஷ் உணர்ந்தார்.

மாண்டலே சிறைவாசம் சுபாஷின் உடல்நலத்தைக் கெடுத்தது. சிறை அதிகாரி ஒரு ஆணவம் படைத்தவர். அவர் சுபாஷிற்கு ''நீங்கள் மிகவும் அதிகமாகச் சாப்பிடுவதால் உங் கள் எடை குறைகிறது. எனவே உண்ணாவிரதம் இருப்பது நல்லது'' என்று கிண்டலாகக் கடிதம் எழுதினார்.

சிறையில் இருப்பவர்களை வெளியே கொண்டுவர அந்த நாட்களில் ஒரு வழி அவர்களைச் சட்டசபையில் அங்கத்தினர் ஆக்குவது. அந்த வழிப்படி சுபாஷ் வங்காள சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அயர்லாந்தில் இவ்வாறு தேர்ந்தெ டுக்கப்பட்டால் ஆங்கிலேயர்கள் அயர்லாந்து நாட்டினரை

சிறையிலிருந்து வெளியே விடுவார்கள். ஆனால் சுபாஷ் ஒரு இந்தியர். எனவே, அவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்யவில்லை.

சுபாஷின் உடல்நலம் மிகவும் மோசமாயிற்று. உடல் எடை 80 பவுண்டு குறைந்துவிட்டது. வங்காளத்தில் மக்கள் கவலைப்பட ஆரம்பித்தனர். ஆங்கிலேய அரசு, சுபாஷ் ரங்கூனிலிருந்து நேராக ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுவிட்டால் விடுதலை தருவதாக கூறியது. ஆனால் சுபாஷ், ''பேரம்பேசுவதற்கு நான் என்ன கடைக்காரனா?'' என்று மறுத்துவிட்டார். அவர் உடல்நலம் குறையக்குறைய அரசு பயந்து அவரை விடுதலை செய்தது.

1000 நாட்களுக்குப் பிறகு 1927-மே மாதம் 16-ஆம் தேதி கல்கத்தா துறைமுகத்தை அடைந்த சுபாஷை லட்சக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் வரவேற்றனர்.

மாண்டலே சிறையை 1995 ஆம் வருடம் பர்மீய அரசு முழுமையாக அழித்துவிட்டது.

பகுதி - 7

1924-1927 இந்தியா

சுபாஷ் மாண்டலே சிறையில் இருந்தபோது இந்தியா வில் போராட்ட அலைகள் மிகவும் குறைந்தன.

மகாத்மா அரசியல் வாழ்விலிருந்து தற்காலிகமாக ஓய்வு பெற்றுக் கொண்டார். கதர் இயக்க வளர்ப்பில் அக்கறை கொண்டார். தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.

இந்து - முஸ்லீம் ஒற்றுமை குறைந்து பல இடங்களில் கலவரங்கள் ஏற்பட்டன. இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக மகாத்மா 21 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். 1924-ல்

காந்தியடிகளும், தாஸும் மோதிலால் நேருவும் கட்சியின் கொள்கைகள் பற்றிப் பெரிதும் பேசினர். மகாத்மா, வன்முறையை எதிர்த்து எழுதலானார். அவருடைய பார்வையில் சிவாஜி, லெனின், கரிபால்டி, குரு கோவிந்த் சிங், கமால் பாஷா போன்றவர்கள் தவறான வழியில் சென்ற நாட்டுப்பற்றுள்ளவர்கள் ஆவர். சத்தியசோதனை புத்தகத்தை எழுத ஆரம்பித்தார்.

தாஸின் மறைவிற்குப் பின்பு சுவராஜ் கட்சிக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. அக்கட்சியின் சிறந்த தலைவராக இருந்த தாஸ் காலமானதால் துணைத்தலைவராக இருந்த மோதிலால் நேரு அக்கட்சியின் தலைவரானார்.

மோதிலால் நேரு ஒரு வளைந்து கொடுக்காத, தன் மனம் போல் செயல்படும் தலைவராவார். அவர் காந்தியை விட வயதில் மூத்தவர். 1924-ல் மீண்டும் அவர் மது அருந்த ஆரம்பித்தார். மகாத்மாவோ மது அருந்தாமைக் கொள்கையை வெறியாகக் கொண்டவர். அவர் மோதிலாலுக்குக் கடிதம் எழுதினார்; ஆனால் மோதிலால் நேரு, ''தண்ணீர் புனிதமானது. அதனைப் பலமுறை சுத்தம் செய்த பிறகுதான் மதுவாகிறது. அதனை அருந்துவதில் என்ன தவறு?'' என்று கேட்டார். காந்தியோ ''குடிப்பதை யாருக்கும் தெரியாமல் தனியாகக் குடிக்கலாமே'' என்று கூறினார். ஆனால் மோதிலால் நேரு மறுத்துவிட்டார். காந்தியடிகள் ஆணைப்படி கதர் உடை அணிந்து ரோமாபுரி வீரனைப்போல் காட்சி அளித்தார்.

மோதிலால் நேரு ஒரு சிறந்த தலைவராவார். அவர் மதப் பற்றே இல்லாதவர். ஒரு சிறந்த போராளியாக இருந்து மற்றவர்களைத் தாக்குவார். தாக்குதலுக்கும் தயாராக இருந்தவர்.

தாஸ் ஒரு நல்ல கவிஞர். இனிமையானவர். வக்கீலாக இருந்து பணம் சேர்த்து ராஜபோக வாழ்க்கை நடத்தியவர். மோதிலால் போலவே தன் வீட்டை நாட்டுக்குத் தந்தவர். காந்தியடிகளுக்கு அடுத்த தலைவராகக் கருதப்பட்டவர். இவரின் மறைவு கட்சியைக் கலக்கியது.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியைத் தன் பொருள் செல வில் வளர்த்தவர் சீனிவாச ஐயங்கார். இவர் கணித மேதை ராமானுஜத்தைப் பாராட்டி விழா நடத்தியவர். இந்திய விடுத லைக்காக ரஷ்யாவில் ஸ்டாலினைச் சந்தித்து உதவி கேட்டவர். காந்தியின் சொற்படி இவர் அட்வகேட் ஜெனரல் பதவியை ராஜினாமா செய்தவர். இவரை ஒரு போலி சுதந்திரப் போராட்ட வீரர் என்று மோதிலால் அழைத்தார். மோதிலால் நேருவின் ஆணவத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் சுவராஜ் கட்சியை விட்டுப் பலர் வெளியேறினர். லாலாலஜ்பத் ராய், பண்டித மாளவியா ஆகியோர் இந்திய தேசியக் கட்சியை ஆரம்பித்தனர். இவர்கள் பிர்லாவின் பணத்தின் உதவியைக் கொண்டு காங்கிரஸ் கட்சியைப் பிடிக்க முயலுகிறார்கள் என மோதிலால் எழுதினார்.

மகாராஷ்டிர அரசியல் அறிஞர்கள் ஜெயகரும் கெல்கரும் ஒரு புதிய கட்சியை ஏற்படுத்தினர். அவர்கள் 1927 - காங்கிரஸ் கூட்டத்தில் மோதிலால் நேரு அதிகாரம், பதவி, உயர்ந்த நிலை, செல்வம் இவைகளுக்காக வெறிகொண்டு அலைகி றார் என்று கூறினார்கள்.

சுவராஜ் கட்சி மெள்ள மெள்ள மறைய ஆரம்பித்தது. தேர்தலில் நிற்பதற்காக சுவராஜ் கட்சியினர் மக்களை அணுகி னர். கொள்கைகளைக் கூறினர். ஒரு கட்டுக்கோப்பாகச் செயல் படும் கட்சியாக ஆரம்பத்தில் இருந்தது. இக்கட்சியைக் கண்டு வெள்ளையர்கள் பயந்தனர். இக்கட்சியின் சீரழிவைக் கண்டு வெள்ளையர்கள் மகிழ்ந்தனர்.

பகுதி - 8

1927 - கல்கத்தா

இந்தியாவிற்கு வந்த சுபாஷ் சில மாதங்கள் மருத்துவ உதவி பெற்று பின்னர் சுகமடைந்தார். நாட்டு நடப்பில் பங்கு கொள்ள ஆரம்பித்தார். சுபாஷ் மாண்டலே சிறையில் இருந்த போது மகாத்மா தனக்கு மிகவும் வேண்டிய சென்குப்தாவை வங்காள காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுத்தார். அங்கு காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளந்தது. ஒன்றின் தலைவர் சென்குப்தா, மற்றதின் தலைவர் சுபாஷ். கட்சியில் குழப்பங் கள் ஏற்பட்டன. குழப்பத்தைத் தீர்ப்பதற்கு காங்கிரஸ் மேலிடம் பட்டாபி சீதாராமய்யாவை கல்கத்தாவிற்கு அனுப்பியது. இவரின் தலைமையீட்டை சுபாஷ் கட்சியினர் ஏற்றுக் கொள்ளவே இல்லை.

இந்தத் தகராறில் சுபாஷ், கல்கத்தா மேயர் பதவித் தேர்த லில் தோற்றுப் போனார்!

இதே நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் நாற்பத்தி இரண்டா வது ஆண்டு காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் சென்னையில் நடைபெற வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

சுவராஜ் கட்சி உடைய ஆரம்பித்தவுடன் மோதிலால் நேரு காந்தியடிகளுடன் சேர்ந்துவிட்டார். தன் மகனை எப்படி யாவது காங்கிரஸ் கட்சித் தலைவனாக்க முயன்றார். இளைஞ னான தன் மகன்தான் இக்காலத்திற்கு ஏற்றவர் எனக் காந்தியடி களுக்குக் கடிதம் எழுதினார்.

ஆனால் இந்து - முஸ்லீம் ஒற்றுமை கருதி சீனிவாச ஐயங் கார் பெங்களூரில் நந்தி மலையில் தங்கியிருந்த காந்தியடிகளி டம் அன்சாரி என்ற டாக்டரைத் தலைவராக்கக் கூறினார். காந்தி யடிகளும் ஒப்புக் கொண்டார். மோதிலால் நேரு ஐரோப்பா வில் உடல்நலம் குறைவாக இருந்த தம் மருமகளைப் பார்க்கச் சென்றுவிட்டார்.

இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளையும் ஒன்று சேர்க்கும் வகையில் ஆங்கில அரசு சைமன் கமிஷனை அமைத்தது. அதிலிருந்த ஏழு உறுப்பினர்களும் வெள்ளையர் கள். இந்தியர்கள் மாறுபட்ட கருத்துடையவர்கள். அவர்களால் எந்த முடிவுக்கும் வர முடியாது. எனவே வெள்ளையர்க ளையே ஆங்கில அரசு நியமித்தது. இவர்களின் கடமை இந்தி யாவிற்கு அரசியல் சட்டமைப்பு உண்டாக்குவதுதான். இந்தி யாவிற்கு இந்தியர்கள் அல்லாதோர் சட்ட அமைப்பு உண்டாக் குவதை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஜின்னாகூட ''ஜாலி யன் வாலாபாக்கில் இந்திய மக்களின் உடல்கள் அழிக்கப்பட் டன. சைமன் கமிஷன் அமைப்பினால் இந்திய மக்களின் ஆன்மா அழிக்கப்பட்டது'' என்றார்.

லண்டனில் இந்திய விவகார அமைச்சர் லார்ட் பர்கனெட் என்பவர் இந்தியர்கள் நூறு வருடம் ஆனால் கூட எந்தப் பதவி யையும் நிர்வகிக்க முடியாது என்று கூறி ''அவர்களால் ஒரு

சட்ட அமைப்பை உண்டாக்க முடியுமா?'' எனக் கேள்வி கேட்டார்.

மங்களூரில் இருந்த காந்தியடிகளை டெல்லிக்கு வருமாறு வைசிராய் இர்வின் வேண்டினார். காந்தியடிகள் தன்னுடைய மற்ற நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டு டெல்லிக்குச் சென்றார். இருவரும் சந்திக்கும்பொழுது நட்புணர்வு மிகவும் குறைவாக இருந்தது. சைமன் கமிஷன் வருகின்ற செய்தியைக் காந்தியடிகளிடம் தெரிவிக்க இர்வின் இந்தத் தகவலை ஒரு போஸ்ட் கவரில் வைத்து அனுப்பியிருக்கலாம் என்று மகாத்மா நினைத்தார்.

இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி வெள்ளையர்கள் இந்தியாவை நன்கு கொள்ளையடிக்க ஆரம்பித்தனர். இங்கிலாந்தின் இரும்புக்கு முதலிடம் தந்தனர். அவர்களுக்கு லாபம் தரும் வகையில் ரூபாயின் மதிப்பை ஆங்கில நாணயம் ஆன பௌவுண்டுக்குச் சமப்படுத்தினர். பணத்தைப் பற்றி எப்போதும் கவலைப்படாத மகாத்மா இந்த விகிதம் தனக்குப் புரியவே இல்லை என்றார்!

பகுதி - 9

1927 - டிசம்பர் - சென்னை

காங்கிரஸ் கட்சியின் 42-ஆவது வருட ஆண்டு மாநாடு 1927-டிசம்பரில் சென்னையில் நடந்தது. இதற்கு முன்பு 1887-ஆம் வருடம் சென்னையில் முதல் முறையாக நடந்த மாநாட்டின் தலைவர் பத்ருதீன் தயாப்ஜி என்ற முகமதியர். அந்த மாநாட்டில்தான் காங்கிரஸ் கட்சிக்கே சட்டதிட்டங்கள் இயற்றத் தீர்மானம் போடப்பட்டது. இதற்குப் பிறகு ஐந்து முறை மாநாடுகள் சென்னையில் நடந்தன. ஏழாவது முறை யாக சென்னை எழும்பூர் பகுதியில் மாநாடு ஆரம்பித்தது. இந்த மாநாட்டிற்கு ஜவஹர்லால் நேரு ஐரோப்பாவிலிருந்து நேராக வந்தார். வரும் வழியில் ரஷ்யாவைப் பார்த்துவிட்டு வந்தார். தன்னை ஒரு 'சோஷலிஸ்ட்' என்று கூறிக் கொண்டார். காந்தியடிகளும் அவ்வமயம் சென்னையில்தான் இருந்தார்.

இந்த மாநாடு வரலாற்றுப் புகழ் பெற்றதாகும். முதன் முதலாக, ஆங்கிலேயரிடம் இருந்து பெறவேண்டியது முழு சுதந்திரம் தான் என்ற தீர்மானம் இயற்றப்பட்டது. இதுவரை குடியேற்ற நாடுகளுக்கு உரிய சுதந்திரம் போதும் என்று கூறிய காங்கிரஸ், முழுமையான சுதந்திரத்தை ஆதரித்தது. ஜவஹர் லால் நேருவின் இந்தத் தீர்மானத்தை மனதார வரவேற்றார் அன்னிபெசன்ட் அம்மையார்.

இரண்டாவதாக சைமன் கமிஷனை எந்த உருவத்திலும் எல்லா வகைகளிலும் பகிஷ்கரிப்பது எனத் தீர்மானம் இயற் றப்பட்டது.

மூன்றாவதாக இந்தியாவிற்கு ஓர் அரசியல் சட்ட அமைப்பு உண்டாக்க மற்ற அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து மோதிலால் நேரு தலைமையில் செயல்படுவது என்ற தீர்மா னம் இயற்றப்பட்டது.

இந்த மாநாட்டில்தான் முப்பதே வயதான சுபாஷ் சந்திர போஸ், ஜவஹர்லால் நேரு, குரைஷி, ஆகிய மூவர்களும் கட்சியின் செயலாளர் ஆனார்கள். சுபாஷின் தியாகத்திற்குத் தலைமைப் பீடத்திலேயே இடம் கிடைத்துவிட்டது.

காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் வசூலான பணத்தில் மீதி 75,000 ரூபாய் இருந்தது. அதனைக் கொண்டு காங்கிரஸ் கட்சி சென்னை ராயப்பேட்டை ஜெனரல் பேட்டர்ஸ் சாலை யில் ஒரு மாளிகையை வாங்கினர்.

காந்தியடிகள் இந்த மாநாட்டில் அதிக ஆர்வம் காட்டவே இல்லை. அவர் முழுச்சுதந்திர தீர்மானத்தை 1921-ல் இருந்தே எதிர்த்தவர். இத்தீர்மானத்தைப் பொறுத்துக் கொள்ள முடியா மல் மகாத்மா, ''இத்தீர்மானம் அவசரம், அவசரமாக உண்டாக் கப்பட்டு சிந்திக்காமலேயே அனுமதிக்கப்பட்டு விட்டது. இந்த மாதிரியான தீர்மானங்களை நிறைவேற்றியது பள்ளிக்கூ டத்தில் நிறைவேற்றுவது போல் உள்ளது'' என்றார். ஜவஹர் லால் நேரு மிக வேகமாகப் போவதாகவும் அவர் கூறினார்.

இந்தியக் காங்கிரஸ் கட்சியின் செயலர் ஆனார் சுபாஷ் சந்திரபோஸ். இந்திய இளைஞர்களின் பெருந்தலைவரானார். அவர் பேச்சைக் கேட்க இளைஞர்கள் பெரும் அளவில் கூடினர். அவர், ''இளைஞர்களே போராடத் தயாராகுங்கள். அடிமை நாட்டிற்கு அரசியல் தவிர வேறு பேச்சே இல்லை'' என்றார்.

சைமன் கமிஷன் 1928-ஆம் வருடம் பிப்ரவரி 3-ஆம் தேதி பம்பாயில் வந்து இறங்கியது. அன்னிபெசன்ட் அம்மையார், ''இந்திய மக்களே எழுமின்! உங்கள் பாரதத் தாய் உங்கள் கடமையை எதிர்பார்க்கிறாள். அவளை ஏமாற்றாதீர்கள்!'' என்றார்.

அவர் விருப்பப்படியே இந்தியா முழுவதும் கடையடைப்பும், ஹர்த்தாலும் நடந்தன. இப்போராட்டத்தில் சேர்ந்து கல்லூரிகளும் நீதிமன்றங்களும் தங்கள் வேலையைச் செய்யவில்லை.

சென்னை தனக்கென்று இப்போராட்டத்தில் ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டது. மக்கள் முழுமையாகப் பங்கேற்றனர். ஜார்ஜ் டவுனில் போலீசார் சுட்டதில் மூவர் மரணம் அடைந்தனர். மாலையில் ராணுவம் வந்து அமைதியை நிலை நாட்டியது.

இந்திய மக்கள் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடத் தயாரானார்கள். ஆனால் தலைவர்கள் தயங்கினர். மே மாதத்தில் சபர்மதி ஆசிரமத்தில் காந்தியடிகளை சுபாஷ் சந்தித்து மக்களின் போராட்ட உணர்வுகளை விளக்கினார். காந்தியடிகளை ஓய்விலிருந்து வெளிவந்து தலைமை ஏற்க வேண்டினார்.

காந்தியடிகளோ தனக்கு இன்னமும் ஒளி கிடைக்கவில்லை என்றார். எனவே போராட்டத்தில் பங்கு எடுக்க மறுத்து விட்டார். அக்டோபர் மாதம் 27-ஆம் தேதி மீண்டும் சைமன் கமிஷன் இந்தியாவிற்கு வந்தது. படிப்படியாக ஹர்த்தால் நடந்தது. பம்பாய் முழுமையாகப் பங்கேற்றது. சர் பட்

டம் பெற்றவர் 20 பேரில் ஒருவர்கூட வரவேற்பிற்கு செல்ல வில்லை.

லட்சுமணபுரியில் சைமன் கமிஷனை எதிர்த்து 'திரும்பிப் போ' என்று எழுதப்பட்ட பட்டங்களையும், பலூன்களையும் மக்கள் காற்றில் விட்டனர். அங்கு நடந்த ஊர்வலத்தில் நேரு, பந்த் முதலியவர்கள் குதிரைப் படையால் தாக்கப்பட்டனர். போலீசாரின் ஆணவத்தைப் பார்த்து கோபத்தோடு இருந்த நேருவிடம், ஓர் இளைஞர் அணுகி தன்னிடம் இரு துப்பாக்கி கள் இருப்பதாகவும், அவற்றைத் தருவதற்குத் தயார் என்றும் கூறினார். நேரு, ''முட்டாள்தனமாகப் பேசாதே'' என்று அந்த இளைஞரைத் துரத்தினார். பிறகுதான் அந்த இளைஞர் ரகசிய போலீஸ்காரர் என்று தெரிய வந்தது.

லாகூரில் அக்டோபர் முப்பது அன்று சைமன் கமிஷன் வந்தது. ஊர்வலத்துக்குப் பாஞ்சாலசிங்கம் லாலாலஜபத்ராய் தலைமை ஏற்றார். அமைதியான அந்த ஊர்வலத்தில் யாரோ ஒருவர் தந்த குடையுடன் நடந்து வந்த லாலாவை போலீசார் பயங்கரமாகத் தாக்கினர். ஸ்காட் என்ற போலீஸ் தலைமை அதிகாரியும் சேண்டர்சன் என்ற துணைப் போலீஸ் அதிகாரி யும் லாலாவைத் தடியால் அடித்தனர். இதனால் லாலாவிற்கு மார்பிலும் உடலிலும் கடுமையான அடிகள் விழுந்தன. லாலா என்று அடையாளம் தெரிய வேண்டும் என்பதற்காகவே போலீசார் அவரிடம் தந்திரமாக குடை தந்தார்கள் என்ற உண்மை பின்பு தெரிய வந்தது.

லாலாவின் உடல் தளர்ந்தது. மனமும் வருத்தப்படலா யிற்று. ''என்மேல் விழுந்த ஒவ்வொரு அடியும் ஆங்கிலேய ஏகாதிபத்யம் என்ற சவப்பெட்டியின் மேல் அடிக்கப்பட்ட ஆணிகள் ஆகும்'' என்றார்.

நவம்பர் 17-ஆம் தேதி லாலா அவர்கள் தன் தாய்நாட்டிற் காக இன்னுயிர் நீத்தார்.

கல்கத்தாவில் சி.ஆர்.தாஸின் மனைவி ''இந்தியப் பெண் களின் சார்பாக நான் கேட்கிறேன்! இந்த அநீதிக்கு இளைஞர் கள் என்ன பதில் கூறப் போகிறார்கள்?'' என்றார்.

சரியான பதில் கிடைத்தது, பகத்சிங் உருவத்தில்!

சைமன் கமிஷன் வந்ததால் ஆங்கில மொழி அறிவே இல்லாத இந்தியர்கள்கூட 'கோ-பேக்' என்ற இரு ஆங்கில வார்த்தைகளை கற்றுக் கொண்டதாக நேரு நகைச்சுவையுடன் கூறினார்.

மோதிலால் நேரு தலைமையில் அமைக்கப்பட்ட சட்ட அமைப்புக்குழுவில் சுபாஷ் ஒரு உறுப்பினர். அந்தக்குழு இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து போதும் எனத் தீர்மானித்தது. முழுச் சுதந்திரம் வேண்டி நின்ற சுபாஷ், கட்சியின் ஒற்றுமை கருதி இதை ஒப்புக் கொண்டார்.

ஜவஹர்லால் நேருவும், சுபாஷும் இந்திய நாட்டிற்கு வெள்ளையரிடமிருந்து முழு விடுதலையை விரும்பினர். எனவே அவர்கள் இந்திய சுதந்திர கூட்டுக் கழகத்தை உண்டாக்கினர். அவர்கள் இருவரும் இக்கழகத்தின் செயலர்கள். சீனிவாச ஐயங்கார் இதன் தலைவர். பல ஊர்களுக்குச் சென்று இளைஞர்களைச் சேர்த்து அவர்களைப் போராட அழைத்தனர்.

காந்தியடிகள் இந்த நிகழ்ச்சிகளை உற்று நோக்கிக் கொண்டு இருந்தார். காங்கிரஸ் முழுமையாக இளைஞர்கள் கையில் சேர்த்துவிடுமோ? அதனால் வன்முறை வளருமோ? எனக்கவலைப்பட்டார்.

இதே காலகட்டத்தில் தொழிலாளர்கள் தங்கள் நியாயமான உரிமைக்காகப் போராட ஆரம்பித்தனர். பம்பாயில் ஆலைத் தொழிலாளர்கள், கல்கத்தாவில் சணல் மற்றும் ரயில்வே தொழிலாளர்கள் போராடினர். ஜம்ஷெட்பூரில் டாடா இரும்புத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் ஆரம்பித்தது. சுபாஷ் தொழிலாளர்களின் தலைவரானார். போராடி வெற்றி கண்டார்.

மெள்ள மெள்ள 'இன்குலாப் ஜிந்தாபாத்!' (புரட்சி ஓங்குக!') என்ற குரல் ஒலிக்க ஆரம்பித்தது.

தமிழகத்தில்தான் முதன் முதலில் தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. திரு.வி.கலியாண சுந்தர முதலியார், சிதம்பரனார், சிங்காரவேலர், சக்கரைச் செட்டியார் முதலியோர் பெரும்பங்கெடுத்தனர். மேலும் அருண்டேல், வாடியா, முகுந்தலால் சர்க்கார் போன்றோர் தொழிலாளர்களின் தலைவர் ஆனார்கள். தொழிலாளர்களுக்காகச் சத்யமூர்த்தி நீதிமன்றங்களில் போராடினார்.

1928-ல் நாகப்பட்டினத்தில் தென்னிந்திய ரயில்வே தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் நடந்தது. இவர்களுக்கு ஆதரவாக 29.7.28-ல் மாபெரும் பொது வேலை நிறுத்தம் நடந்தது. இந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று அழைக்கப்பட்ட சிங்காரவேலர் தலைவரானார். முகுந்தலால் சர்க்கார் அவருக்கு உதவினார்.

ரயில்வே கம்பெனி வெள்ளையர்கள் நிர்வாகத்தில் இருந்தது. போராட்டத்திற்கு எதிராகப் போலீஸ் பல இடங்களில் சுட்டது. சிங்காரவேலரும், முகுந்தலால் சர்க்காரும் கைது செய்யப்பட்டு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை தரப்பட்டது. பிறகு அத்தண்டனை குறைக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் கலந்துகொண்ட பெருமாள் என்ற தொழிலாளிக்கு ஆயுள் தண்டனை தரப்பட்டு அந்தமான் சிறைக்கு நாடுகடத்தப்பட்டார். அந்தமான் சென்ற முதல் தமிழர் பெருமாள்தான்!

1937-ஆம் வருடம் ராஜாஜி சென்னை பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றார். அந்த நாட்களில் மாநில முதல்வர் பதவியானது பிரதம மந்திரி என்றே குறிப்பிடப்பட்டது. அவர் அந்தமான் சிறையில் வாடிய பெருமாளை விடுதலை செய்தார்.

டிசம்பர் 28-ஆம் தேதி கல்கத்தாவில் காங்கிரஸ் மகாசபை நடந்தது. சுபாஷ் தொண்டர் படைத் தலைவராகப் பொறுப்பேற்றார். ராணுவ உடையில் அவர் நின்ற கோலம் மக்களை மயக்கியது. பிற்காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு இது ஒரு முன்னோடியாக இருந்தது.

இம்மாநாட்டில் மோதிலால் நேரு தலைவராகப் பதவி ஏற்றார். 36 குதிரைகள் பூட்டிய சேரட்டில் அவருக்கு வரவேற்பு தரப்பட்டது. அப்பொழுது காந்தியடிகள் கல்கத்தாவில் இல்லை. மோதிலால் தந்தியடித்து காந்தியடிகளை வரவழைத் தார்.

இந்த மாநாட்டில் காந்தியடிகள் இந்தியாவிற்கு டொமி னியன் அந்தஸ்து போதும் என்றும், 29-வது வருடம் டிசம்பர் 31-க்குள் அந்நிலை வராவிட்டால் அதற்கு ஏற்ப வன்முறை யற்ற போராட்டம் நடத்தலாம் என்றும் தீர்மானம் கொண்டு வந்தார். நேருவும் சுபாஷும் முழுமையான சுதந்திரம் வேண் டும் என்ற ஒரு ஓட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர்.

காந்தியடிகளின் தீர்மானம் நிறைவேற்றப் படாவிட்டால் அவர் காங்கிரஸ் கட்சியை விட்டே போய்விடுவார், அவர் இல்லாமல் விடுதலை பெற முடியாது எனக் காந்தியவாதிகள் கூறி மற்றவர்களின் வாக்குகளைக் கேட்டனர்.

மோதிலால் நேரு, கதர் உடையில் இல்லாதவர்கள் வாக் குப் போட முடியாது என அறிவித்தார். பல இளைஞர்கள் கதர் உடையணிந்து வரவில்லை. ஒருவர் தன் தலையில் இருந்த கதர் தலைப்பாகையை எடுத்தார். இடுப்பில் இருந்த மில் வேட்டியைத் தூக்கி எறிந்துவிட்டு தலைப்பாகையை எடுத்து ஒரே நிமிடத்தில் வேட்டியாகக் கட்டினார். பின்பு மிடுக்காகச் சென்று ஓட்டுப் போட்டார்.

973-1350 என்ற விகிதத்தில் காந்தியடிகளின் தீர்மானம் வெற்றி பெற்றது.

சுபாஷ் ஒரு நிமிடம் கூட சுதந்திரக் கொடியினைக் கீழே இறக்கக் கூடாது என்று கூறினார். ஆனால், தலைவர்கள் போரா டத் தயாராக இல்லை. காந்தியடிகள் ''சுதந்திரம் என்பது கடின உழைப்பால் வருவது, வார்த்தைகளால் வராது'' என்றார். டிசம் பர் 31-க்குள் வெள்ளையர் டொமினியன் அந்தஸ்து தராவிட் டால் தானும் முழுச் சுதந்திரம் கேட்பவனாக மாறுவேன் என் றார்.

பகுதி - 10

1929 - தூரத்து இடிமுழக்கம்

இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வான்வழி தபால் ஆரம்பித்த ஆண்டு 1929. மோதிலால் நேருவும் காந்தியடிகளும் ஒன்றாக இணைந்துவிட்டனர். சுவராஜ் கட்சி மெள்ள மறைந்துவிட்டது. மக்களை அணுகி அவர்களுடன் கலந்த சுவராஜ் கட்சி மறைந்தது பற்றி வெள்ளையர்கள் பெருமூச்சு விட்டனர்.

1926-ல் இர்வின் இந்தியாவின் வைசிராய் ஆனார். இவர் வைசிராயாக வருவார் என்பதை 1868 ஆம் ஆண்டிலேயே ஒரு இந்து ஜோசியர் கூறினார். அந்த ஜோசியர் மேலும் இந்த வைசிராய் மற்ற வைசிராய்கள் இங்கிலாந்திலிருந்து வந்ததை விடக் குறைந்த நேரத்தில் வந்து விடுவார் எனக் கூறினார்.

உண்மையில் சூயஸ் கால்வாய் கட்டப்பட்டதால் இங்கிலாந்து - இந்தியப் பயண நேரம் குறைந்துவிட்டது. இர்வின் ஜோசியர் களை நம்பினார்.

1929-ஆம் ஆண்டில் மூன்று வகைப்பட்ட இயக்கங்கள் உண்டாயின. ஒன்று கம்யூனிஸ்ட் இயக்கம். இன்குலாப் ஜிந்தா பாத் என்று குரல் எழுப்பிய இவர்களை அடக்குவதற்கு அரசு செயல்பட்டது. 31 கம்யூனிஸ்டுகளைக் கைது செய்தது. இதில் மூவர் ஆங்கிலேயர்கள். இவர்கள் வழக்கு மீரட்டில் நடந்தது. பெரும் பொருட்செலவு அரசுக்கு ஏற்பட்டது. நாடு கடத்தல், முதல் 3 ஆண்டு வரை சிறைத் தண்டனைகள் இவர்களுக்கு 1933-ல் தான் தரப்பட்டது.

இரண்டாவதாக இளைஞர்கள் எழுச்சி! நேரு, சுபாஷ், மாளவியா, சரோஜினி நாயுடு போன்ற தலைவர்களின் பேச்சி னைக் கேட்டு விடுதலை வேட்கை உடைய இளைஞர்கள் உருவானார்கள்.

மூன்றாவது இயக்கம் தீவிரவாத இயக்கம் ஆகும். அகிம்சா மூர்த்தியான காந்தி, இளைஞர்கள் இதில் சேர்ந்து அழிவதை விரும்பவில்லை. அதே நேரத்தில் இந்த இயக்கங்க ளைக் கண்டு ஆங்கிலேயர் பயந்தனர். இதற்குக் காரணம் உண்டு.

ஒரு நாடு எப்படியிருக்க . வேண்டும்? அமைதி நிலவ வேண்டும்; சாந்தம் தவழ வேண்டும்; ஆளுவோருக்கு எவ்வித ஆபத்தும் வரக்கூடாது. இந்த நிலையை ஆளும் வெள்ளையர் கள் விரும்பினர். மகாத்மாவும் அமைதியைத் தான் விரும்பி னார். வெள்ளையருக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது. வெள் ளையப் பெண்களுக்கோ குழந்தைகளுக்கோ ஒரு சிறு காயம் கூட வரக்கூடாது. நமக்கு வேண்டியது ஆன்ம பலம்தான். உடல் பலம் அல்ல என்றார். எனவே, எலன் வில்கின்சன் என்ற அம்மையார் காந்தியடிகளை ''வெள்ளைக்காரரின் தலை சிறந்த போலீஸ்காரர்'' என்று கூறினார்.

உலகு எங்கும் விடுதலைப் போராட்டங்கள் வன்முறையில் நடைபெறும்பொழுது அகிம்சை வழியில் இந்திய விடுதலைப் போரை நடத்தி வருகின்ற காந்தியடிகளை வெள்ளையர் மதிப்புடன் நடத்தினர். ஆங்கிலேயச் சக்ரவர்த்திக்கு வைசிராய் இர்வின், ''இந்தியத் தலைவர்களில் காந்தியை நான் பெரிதும் விரும்புகிறேன். ஏன் எனில் அவர் வழிமுறைகள் எனக்கு நன்றாகத் தெரியும்'' என்று கடிதம் எழுதினார்.

அகிம்ஸை வழியில் சென்ற காந்தியடிகள் காங்கிரஸ் கட்சி தன் கையில் இருப்பதைப் பெரிதும் விரும்பினார். அரசியல் ஓய்விலிருந்து திரும்பி வந்த அவரிடம் கல்கத்தா மாநாட்டில் காங்கிரஸ் கட்சி வந்து அடைந்தது.

ஏப்ரல் 8-ஆம் தேதி டில்லியில் மத்திய சட்டசபைக் கூடியது. பார்வையாளர் பகுதியில் சைமன் கமிஷன் உறுப்பினர்கள் இருந்தனர். திடீரென்று இரு இளைஞர்கள் இரு குண்டுகளைத் தூக்கி வீசினர். வெள்ளையர்கள் ஓடிவிட்டனர். மோதிலால் நேருவும், வித்தல்பாய் பட்டேலும் புகைமண்டலம் நடுவே பயப்படாமல் அமைதியாக நின்றனர். யாரும் காயம் அடையவில்லை.

இவ்விரு இளைஞர்களையும் போலீசார் பிடித்தனர். இந்துஸ்தான் சோஷலிஸ்டு குடியரசு சங்கம் சார்பாக வெளியிடப்பட்ட பிரசுரங்களை அவர்கள் வைத்திருந்தனர். வெடிகுண்டு வீசிய பகத்சிங்கும், தத்தும் நினைத்திருந்தால் தப்பி ஓடியிருக்கலாம். ஆனால், அவர்கள் அவ்வாறு ஓடவில்லை. அவர்கள், ''நாங்கள் வெடிகுண்டுகளை ஆங்கிலேயர்களைக் கொல்ல எறியவில்லை. அவர்களின் செவிட்டுக் காதுகளைக் கேட்க வைப்பதற்காகத்தான் எறிந்தோம்'' என்றனர். ஆயிரம் அரசியல் பேச்சுக்கள் செய்யாத மாற்றத்தை இக்குண்டுகள் செய்துவிட்டன.

காந்தியடிகள் இச்செய்கைகளை 'பைத்தியக்காரர்களின் செய்கை' என்றார். ஆனால், சுபாஷ் பகத்சிங் ஆரம்பித்த சங்கத்தில் முதலில் தொடர்பு கொண்டிருந்தார்.

நாளாக நாளாக இந்திய இளைஞர்கள் பகத்சிங் பெயரை அன்புடன் உச்சரித்தனர். ஒருகாலக்கட்டத்தில் காந்தியடிக ளுக்கு இணையாகப் பகத்சிங் இந்தியா முழுவதிலும் புகழ்ந்து பாராட்டப் பெற்றார்.

பகத்சிங்கும் அவரது தோழர்கள் 30 பேரும் கைது செய்யப் பட்டனர். இந்த வழக்கு 'லாகூர் சதி வழக்கு' என அழைக்கப் பட்டது.

லாகூர் சதி வழக்கில் வங்காளத்தைச் சேர்ந்த ஜாதின்தாஸ் ஒரு குற்றவாளியாகக் கைது செய்யப்பட்டார். இவர் சுபா ஷுக்கு மிகவும் வேண்டியவர். கல்கத்தா காங்கிரஸ் மாநாட் டில் தொண்டர் படையில் மேஜராகப் பணியாற்றியவர்.

லாகூர் சிறையில் குற்றவாளிகள் மிகவும் சித்திரவதைக்கு ஆளானார்கள். ஜாதின்தாஸ், தீவிர குற்றவாளிகளை, அரசியல் குற்றவாளிகள்போல் நடத்தவேண்டும் என்று உண்ணாவிரதம் ஆரம்பித்தார். ஜவஹர்லால் நேரு அவரைச் சிறையில் சந்தித்து உண்ணாவிரதத்தை நிறுத்த முயன்றார்; முடியவில்லை.

63 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து 1929-வது வருடம் செப்டம்பர் 13-ஆம் தேதி ஜாதின்தாஸ் ஒளியோடு கலந்தார். அவர் உடலை நல்லடக்கம் செய்ய மராட்டம், பஞ்சாப், வங் காள மாநிலங்கள் போட்டியிட்டன. இறுதியில் சுபாஷ் விருப் பப்படி தாஸ் உடல் லாகூரில் இருந்து கல்கத்தாவிற்குத் தனி ரயிலில் கொண்டுவரப்பட்டது. வழிநெடுக லட்சக்கணக்கான இந்தியர்கள் மரியாதை செலுத்தினர்.

கல்கத்தாவில் சுபாஷ் தாசின் உடலைப் பெற்று மாபெ ரும் 'அரச மரியாதையை' அளித்தார். தாசின் சாம்பலை எடுத்து ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் நெற்றியிலிட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை ஒழிப்போம் என வீரசபதம் எடுத்த னர்.

ஆங்கில அரசு சிறையில் கைதிகளுக்கு, ஏ, பி, சி என மூன்று வகுப்புகளை உருவாக்கியது. ஒருமுறை கூட சிறைக்கே செல்லாத ஜின்னா இதனைப் பாராட்டினார்.

ஆனால், உண்மையில் ஒரு சதவிகிதம் அரசியல் கைதிகள் கூட 'ஏ' வகுப்புப் பெற முடியவில்லை.

இருபத்தைந்து வயதே ஆன தாசின் மரணம் கல்லையும் உருக்கியது. அயர்லாந்திலிருந்து விடுதலைப் போராளி டெரின் மெக்ஸிலாயின் குடும்பம், தங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தது.

காந்தி ஜாத்தின் தாசின் உண்ணாவிரதத்தால் உண்டான மரணத்தைக் கண்டு கொள்ளவேயில்லை. ஒரு வார்த்தைகூட வருத்தம் தெரிவிக்கவில்லை. அவர் ஆசிரியராக இருந்த 'யங் இந்தியாவில்' பொதுவாக எல்லாச் செய்திகளும் வரும். இளைஞர் தாசின் மரணத்தைப் பற்றி ஒரு வரி கூட வரவே இல்லை.

மகாத்மா ''நான் எழுதியிருந்தாலும் தாசின் மரணத்தைப் பற்றிக் குறைவாக மதிப்பிட்டுத்தான் எழுதியிருப்பேன். எனவே, 'யங் இந்தியாவில்' இதைப் பற்றி எழுதவே இல்லை'' என்றார்.

காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை காந்தியடிகள் ஏற்கும்படி 10 மாநிலங்கள் வேண்டின. சர்தார் பட்டேலை 5 மாநிலங்கள் வேண்டின. ஜவஹர்லால் நேருவிற்கு 3 மாநிலங்கள் ஆதரவு தந்தன. தலைமை ஏற்க மகாத்மா மறுத்து விட்டார். 'ஜெனரலே பதவி ஏற்காதபோது சாதாரணப் போர் வீரரான நான் எப்படிப் பதவி ஏற்பது?' என்று பட்டேல் மறுத்து விட்டார்.

மோதிலால் நேரு தனக்குப் பின் தன் மகன் தலைவனாக வருவதிலேயே குறிக்கோளாக இருந்தார். இதே நேரத்தில் ஜவஹர்லால் நேருவும், சுபாஷும் இணைந்து இருப்பது மகாத்மாவிற்குக் கவலையை உண்டாக்கியது. இவர்களைப் பிரித்து இடதுசாரிகள் தாக்கத்தைக் குறைக்க விரும்பினார். எனவே, ஜவஹர்லால் நேருவைத் தலைவராக்கினார். நேருவே தன் சுயசரிதையில், ''நான் காங்கிரஸ் தலைமைப் பதவியை முன்புற வழியாகவோ, பின்புற வழியாகவோ சென்று அடையவில்லை. ஒரு மர்மக் கதவின் மூலம் அடைந்தேன்'' என்றார்.

காந்தியடிகள் 1915-ல் தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு வந்தபோதே அவரைக் கவனித்த திலகர், ''இந்த மனிதரைக் குறைவாக எண்ணாதீர்கள். எல்லோரையும் இவர் சாப்பிட்டு விடுவார்'' என்றார். அவர் கூறியபடியே ஜவஹர்லால் நேரு மகாத்மாவிடம் ஐக்கியம் ஆனார். காந்தியடிகள் கடவுளை நம்புகிறவர்; நேருவோ ஒரு நாத்திகர்! காந்தியடிகள் ஒரு பழமைவாதி; நேருவோ புதுமை விரும்பி! இருப்பினும் மகாத்மாவின் காந்த வலையிலிருந்து நேருவால் தப்ப முடியவில்லை. அவர் மூளை சோஷலிசம் பேசியது. ஆனால் உள்ளமோ மகாத்மாவிடம் சரணடைந்தது.

சுபாஷ் ஒருவர்தான் இப்போது தனிமைப்பட்டு இடது சாரிகள், மற்றும் இளைஞர்கள் தலைவராகக் காங்கிரஸில் விளங்க ஆரம்பித்தார்.

காந்தியடிகளும், மோதிலால் நேருவும் டிசம்பரில் இர்வினைச் சந்தித்து டொமினியன் அந்தஸ்து தரவேண்டினர். இர்வின் மறுத்துவிட்டார். எனவே, லாகூர் காங்கிரஸ் மாநாட்டிற்கு வெறுங்கையுடன் காந்தி வந்தார்.

பகுதி - 11

1930 - போராட்டப் பேரலைகள்

நேரம்: நள்ளிரவு 12 மணி
தேதி: 1.1.30
இடம்: லாகூர் - ரவி நதிக்கரையில்

இன்குலாப் ஜிந்தாபாத்! என்று லட்சக்கணக்கான மக்கள் கோஷமிட நடு இரவில் சுதந்திரக் கொடியினைப் பறக்கவிட்டார் நேரு. லாகூரில் கூடாரங்களில் இருந்த தென்னிந்தியர்கள் இமயமலையிலிருந்து வரும் கடுங்குளிரை விடுதலை உணர்ச்சிப் பெருக்கால் உணரவே இல்லை.

சுபாஷின் உயிர்மூச்சான ''வெள்ளையனிடம் இருந்து முழு விடுதலை'' என்ற கொள்கையைக் காந்தியடிகளே தீர்மானமாக முன்மொழிந்தார். நேரு ஆனந்தக் கூத்தாடினார். மோதிலால் நேருவும் அவர் மனைவி சொரூபராணியும் தொண்டர் படையிடையே தங்கள் மகன் வெள்ளைக் குதிரையில் வருவதைக் கண்டு மகிழ்ந்தனர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியை ஜவஹர்லால் நேரு ஏற்றார்.

1930-ம் வருடம் ஆரம்பித்த நேரு சகாப்தம் ஜவஹர்லால் நேரு, இந்திரா, ராஜீவ் எனத் தொடரப் போகிறது. அன்று மோதிலால் விதைத்த விதை பெரிய ஆலமரமாகி இந்திய நாட்டின் வரலாற்றையே சுழற்றப் போகிறது.

இந்த மாநாடுதான் ஒலி பெருக்கி இல்லாத இறுதி மாநாடு ஆகும். இம்மாநாட்டிற்கு வெளிநாட்டு நாளிதழ் நிருபர்கள் பலர் வந்திருந்தனர்.

சுபாஷ் முழு விடுதலை பெற ஆங்கில அரசுக்குப் போட்டியாக ஒரு இணையான அரசாங்கம் நடத்தப்பட வேண்டும் என்றும் முழுமையான மறியல் இருக்க வேண்டும் என்றும் தீர்மானங்களைக் கொண்டு வந்தார். இவை தோற்றன. சுபாஷ் கூறினார், ''நான் ஒரு தீவிரவாதி! நாம் முழுமையாகப் போராட வேண்டும். இல்லையேல் சும்மா இருக்க வேண்டும்''.

காங்கிரஸ் கட்சியை முழுமையாகத் தன் பிடியில் கொண்டு வர காந்தியடிகள் காங்கிரஸ் செயற்குழுவிலிருந்து சுபாஷ், சீனிவாச ஐயங்கார் இவர்களை நீக்கி விட்டார். தனக்கு வேண்டிய இராஜாஜி போன்றோரைச் சேர்த்துக் கொண்டார். எனவே, மகாத்மாவிற்கு ''குணப் பொருத்தம்'' இல்லாத சுபாஷ் செயற்குழுவில் இல்லாததால் மகாத்மா எண்ணப்படி செயல்படும் செயற்குழு உண்டாயிற்று.

கோபம் அடைந்த சுபாஷ், சீனிவாச ஐயங்காரிடம் சேர்ந்து காங்கிரஸ் - ஜனநாயகக் கட்சி ஆரம்பித்தார்.

சென்னையிலிருந்துவரும் இந்து நாளிதழ் முழுச் சுதந்தி ரம் கேட்பதைக் கடுமையாக எதிர்த்தது. இது என்ன மாற்றம்? என வினவியது.

காங்கிரஸ் கட்சி ஜனவரி 26-ஆம் தேதியைச் சுதந்திர நாளாகக் கொண்டாடும்படி மக்களுக்கு ஆணையிட்டது.

மகாத்மா ஆங்கிலேயரை எதிர்த்து சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பித்தார். அகிம்ஸை வழியில் அவர் நடத்திய போராட் டம் உலகமே காணாதது. கத்தியின்றி ரத்தமின்றி ஆங்கிலேயரு டன் யுத்தத்தை ஆரம்பித்தார்.

ஒரு விடுதலை வீரனுக்குக் கிடைக்க வேண்டிய பிறந்த நாள் பரிசு சுபாஷுக்குக் கிடைத்தது. அவர் பிறந்த நாளான ஜனவரி 23 அன்று கைது செய்யப்பட்டு ஒரு வருடம் கடுங்கா வல் தரப்பட்டது. அலிப்பூர் சிறையில் தள்ளப்பட்டார்.

மிகச்சிறந்த நாடகத்தில் கதாநாயகனாக நடிக்க வேண்டிய ஒருவர் நடிக்க முடியாமல் நாடகத்தை வெளியே நின்று பார்ப் பதுபோல மகாத்மாவின் உன்னதப் போராட்டத்தை சுபாஷ் சிறையில் இருந்து பார்த்தார். நேரம் வந்தால் விடுதலை இயக் கத்தை மிகச்சிறந்த முறையில் மகாத்மா நடத்துவதாகப் புகழ்ந் தார்.

மகாத்மா விடுதலைப் போராட்டத்தை நடத்த புதிய முறை உண்டாக்கினார். டொமினியன் அந்தஸ்து, முழு சுதந்தி ரம் என்பதெல்லாம் ஏழை மக்களுக்கு எப்படி தெரியும்? எனவே, அவர்கட்குப் புரியும்படி உப்புசத்யாகிரகத்தை ஆரம் பித்தார். இளைஞர்கள் வன்முறையில் போய்விடாமல் அவர் களை அகிம்ஸை வழியில் கொண்டுவர அப்போராட்டம் பயன்படும் என எண்ணினார்.

இந்திய விடுதலை வரலாற்றில் விடுதலைப் போரை முழுமையாக நடத்திய பெருமை மகாத்மாவிற்கும் தீவிரவாதி களுக்குமே உண்டு. வேகங்களிலே வித்தியாசம் இருக்கலாம். வழிகள் மாறுபட்டு இருக்கலாம். ஆனால், இலக்குதனை அவர்கள் மறக்கவே இல்லை.

கிலாபத் இயக்கம் போது மகாத்மாவோடு சகோதரர்க ளாக இருந்த 'அலி சகோதரர்கள்' உப்புப் போரில் பங்கெடுத் துக் கொள்ளவில்லை. சுதந்திர நாள் விழாவிலும் பங்கெடுக்க வேண்டாம் எனக் கூறினார்கள்.

பொதுவாக ஜாதி, மத, மொழி, இன, பொருளாதார அமைப்பில் இருந்த இந்தியக் கட்சிகள் சுதந்திரப் போரில் அவ்வளவாகப் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

கம்யூனிஸ்டு கட்சிக்கு உயிர்நாடி அப்போது ரஷ்யாவில் இருந்தது. கம்யூனிஸ்ட் அகிலம் சொல்வதை அது கேட்டது. தொழிலாளர்கள் போராட்டத்தில் சுபாஷ் பங்கெடுத்தார். நல்ல தீர்வுகளைக் கொண்டு வந்தார். இருப்பினும் சுபாஷ், நேரு, காந்தியடிகள் இவர்களை ஏகாதிபத்யவாதிகளாகக் கருதி உப்புப் போராட்டத்தில் கலந்துக் கொள்ள வேண்டாம் என கம்யூனிஸ்டு கட்சி ஆணையிட்டது. இப்போராட்டத்தில் எண் ணிக்கை இருக்காது, தரமும் இருக்காது என நினைத்தது. இதே கட்சி 1942-ல் 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தி லும் பங்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக் கது.

உப்பு!

தண்ணீருக்கும் காற்றிற்கும் பிறகு மனித வாழ்வில் மிகத் தேவையானது உப்பு என்றார் மகாத்மா. ஆனால், வெள்ளையர் கள் இந்தியா வந்தவுடன் இந்திய உப்பளங்களை அழித்து, அவர்கள் நாட்டின் உப்பினை விற்றனர். இங்கு தயாரிக்கப் படும் உப்பிற்கும் வரியிட்டனர். 1905-லியே காந்தியடிகள் இத னைக் கண்டித்தார். பிரான்சு நாட்டில் 'பிரெஞ்சுப் புரட்சியே' உப்பின் மேல் வரிபோட்டதால்தான் ஏற்பட்டது. மார்ச் 12, 1930 அன்று மகாத்மா 78 தொண்டர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலி ருந்து தன் நடைப்பயணத்தை ஆரம்பித்தார். இக்குழுவில் ஒரு தமிழரும் இருந்தார். நாளிதழ் நிருபர்கள் பின் தொடர்ந்தனர். கண்களில் ஒளி, நடையில் மிடுக்கு, இதயத்தில் அஹிம்சை உணர்வு! அவர் நடந்தபோது மக்கள் அவரைத் தெய்வமாகக்

கும்பிட்டனர். மாலைகள் மலைகளாகக் குவிந்தன. ஏப்ரல் 5-ஆம் தேதி 241 மைல்களை 24 நாட்களில் கடந்து தண்டியை அடைந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர். அருகில் இருந்த சரோஜினி நாயுடு, 'எங்களை வாழ்விக்க வந்தவரே வாழ்க!' என முழங்கினார். இப்பயணம் ''தண்டி யாத்திரை'' என அழைக்கப்பட்டது.

காந்தியடிகளின் நடைப் பயணத்தை சுபாஷ் மாவீரன் நெப்போலியன் எல்பாவிலிருந்து சென்ற வெற்றிப் பயணத் தோடு இணைத்துப் பெருமிதம் அடைந்தார்.

காந்தியடிகளை, ஆங்கிலேய அரசு ஏன் ஆரம்பத்தி லேயே கைது செய்யவில்லை? அவரை ஏன் நடக்கவிட்டது? இதற்கு ஒரு சுவையான காரணம் உள்ளது.

வைசிராய் இர்வின் ஜோசியத்தை நம்புபவர். அவரிடம் இந்திய ஜோசியர்கள் மகாத்மாவின் இருதயம் பலமிழந்து காணப்படுவதாகவும், அவர் வேகமாக நடந்தால் இறக்க நேரி டும் எனவும் கூறினர்.

சக்ரவர்த்திக்கு இர்வின், ''தண்டிக்கு பல மைல்கள் காந்தி யடிகள் நடந்தால் இதயத் தாக்குதலால் இறந்து விடுவார். அவ்வாறு அவர் இறப்பது ஒரு மகிழ்ச்சியான முடிவுதான்'' என்று கடிதம் எழுதினார்.

ஆனால் இந்தியாவிற்கு விடுதலை வாங்கித்தர அவதரித்த காந்தியடிகளின் உயிர் அவ்வளவு எளிதில் போய்விடுமா?

இந்தியா முழுமையும் விடுதலை அலை பொங்கி எழுந் தது. தடியடிகள், தூக்குத் தண்டனைகள் சாதாரணமாயிற்று. 60,000 பேர் சிறைப்பட்டனர். ஷோலாப்பூரில் ஆங்கில அரசு செயல்படவில்லை. பெஷாவரில் கான் அப்துல் கஃபார்கான் போராட்டத்தில் இறங்கினார். இந்திய சத்யாகிரகிகளைச் சுடு வதற்கு ஆங்கிலேயர் இந்திய ராணுவத்தில் உள்ள காரிவாலி வீரர்களை ஆணையிட்டனர். காரிவாலி வீரர்கள் மறுத்தனர். இவ்வீரர்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர். சிலர் தூக்கிலிடப்பட் டனர். பலர் சிறையில் தள்ளப்பட்டனர்.

சிட்டகாங் என்ற இடத்தில் சூரியா சென் என்பவர் இந் துஸ்தான் குடியரசு ராணுவத்தை அமைத்தார். அவர் தன் 125 தோழர்களுடன் ஆங்கிலேய ஆயுதசாலையைக் கொள்ளைய டித்தார். இதில் பிரீதிலதா என்பவரும், கல்பனாதத் என்பவ ரும் பங்கெடுத்துக் கொண்டனர். பிரீதிலதா, ஐரோப்பியரின் கிளப்பைத் தாக்க முயன்றார். போலீசார் அவரைப் பிடிக்கும் போது அவர் பொட்டாசியம் சயனைடு உட்கொண்டு இறந் தார். கல்பனா தத்துக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு அந்தமானுக்கு அனுப்பப்பட்டார். சூரியா சென்னுக்கு தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டது.

ஆனால், அதே நேரத்தில் காந்தியவாதிகள் அகிம்சையை முழுமையாகக் கடைப்பிடித்தார். தாராசானா என்ற இடத்தில் உப்பு எடுக்கச் சென்ற தொண்டர்களைப் போலீசார் தடியால் அடித்தனர். 320 பேரின் மண்டைகள் உடைந்தன. ரத்த வெள் ளத்தில் இவர்கள் இருந்தாலும் வன்முறையில் இறங்கவே இல்லை. அமெரிக்க நாளிதழ் நிருபர் வெப்மில்லர் உலகெங் கும் இச்செய்தியை அனுப்பினார்.

ஆயிரக்கணக்கான பெண்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து போராடினர்.

சென்னை மாகாணத்தில் போலீஸ் மிருகத்தனமாகக் காங் கிரஸ்காரர்களைத் தாக்கினர். சென்னையில் துப்பாக்கி பிரயோ கம் நடந்தது. சென்னையில் உப்புச் சத்யாகிரகத்தை ஆந்திர வீரர் பிரகாசமும், நாகேஸ்வரராவ் பந்துலுவும் நடத்தினர். மைலாப்பூர் லஸ் முனையில் உள்ள தன் வீட்டில் நாகேஸ்வர ராவ் தொண்டர்களை வைத்திருந்தார்.

இந்தப் போராட்டத்தில் தமிழகத்தில் பிற்காலத்தில் மிகச் சிறந்த ஆட்சியைத் தந்த காமராஜ் இரண்டு ஆண்டுகள் சிறை வாசம் சென்றார். ராஜாஜியோ வேதாரண்யத்திற்குச் சென்று உப்பு சத்யாகிரகத்தை நடத்தினார்.

சிறையில் கைதிகளுக்குச் சாட்டையடி தரப்பட்டது. அலிப்பூர் சிறையில் தீவிரவாதிகளைப் போலீசார் பயங்கரமா

கத் தாக்கினர். சுபாஷும், சென்குப்தாவும் தங்கள் சிறை அறைகளில் இருந்து வெளிவந்து கைதிகளைக் காக்க முயலும்போது பயங்கரமாகத் தாக்கப்பட்டனர். சுபாஷுக்கு மார்பில் அடி. மயக்கம் அடைந்த பின்னரும் தொடர்ந்து அவரைத் தடியால் அடித்து 17 படிகளில் இருந்து கீழே உருட்டிவிட்டனர். மயக்கமான நிலையில் சுபாஷ் இருந்தார். 70 நிமிடங்கள் பொருத்துதான் மயக்கம் தெளிந்தது.

மக்கள் இதைக் கேட்டவுடன் அலிப்பூர் சிறையை முற்றுகையிட்டனர். பிறகுதான் சுபாஷுக்கு முதல் உதவி தரப்பட்டது. ஜெயிலர் மாற்றப்பட்டான்.

செப்டம்பர் 25-ல் சிறையை விட்டு வெளியே வந்த சுபாஷ் கல்கத்தா மேயர் ஆனார். மக்களுக்கு உதவி செய்ய ஆரம்பித்தார்.

1930 ஆகஸ்டில் லண்டனில் முதல் வட்ட மேஜை மாநாடு நடந்தது. காங்கிரஸ் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. எந்த முடிவும் கிடைக்கவில்லை. அக்டோபர் மாதத்தில் வைசிராய் இர்வின், இந்தியா டொமினியன் அந்தஸ்து பெற லண்டனில் ஒரு வட்டமேஜை மாநாடு நடைபெறும் என்று கூறினார்.

ஆங்கிலேயருடன் ஒத்துழைக்கவும், இந்தியா டொமினியன் அந்தஸ்து பெறவும் காந்தியடிகள், பட்டேல், வி.எஸ். சாஸ்திரி போன்றவர்கள் கையொப்பம் இட்டனர். ஜவஹர்லால் நேரு முதலில் கையொப்பம் இட மறுத்தார். பிறகு அவர் வழக்கப்படி கையொப்பம் இட்டார். ஆனால், சுபாஷ் கையொப்பம் இட மறுத்துவிட்டார். வட்ட மேஜை மாநாட்டால் எந்த ஒரு பயனும் இல்லை என்றார்.

இங்கிலாந்திலிருந்து வரும் 'டைம்ஸ்' பத்திரிகை 'முழுச் சுதந்திரம் கோரும் காங்கிரசின் லாகூர் தீர்மானத்தை ஒரு வகையாக ஒழித்து விட்டோம்' என மகிழ்ந்தது.

பகுதி - 12

1931 - அலைகள் குறைந்தன

ஜனவரி மாதத்தில் கிளர்ச்சி நடந்த மால்டா என்ற இடத்திற்குச் சுபாஷ் சென்றார். தடை உத்தரவை மீறியதற்காக ஒரு வாரம் கடுங்காவல் தரப்பட்டது. ஜனவரி 26-ஆம் தேதி யன்று சுதந்திர தின விழா ஊர்வலத்தை ஆரம்பித்தார். வெள் ளையர் கொண்ட குதிரைப்படைப் போலீசார் கல்கத்தாவின் மேயரான சுபாஷைத் தடியால் அடித்துத் தள்ளினர். மயக்கமாக இருந்த இவரை உணவு தராமல், மருத்துவ உதவியளிக்காமல் லால்பசார் போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்பில் வைத்தனர். மறு நாள் ரத்தம் தோய்ந்த துணிகளுடனும், உடைந்த கையுடனும் நீதிபதி முன் நிறுத்தப்பட்டார். 6 மாதங்கள் சிறைத் தண்டனை.

பிப்ரவரி 17-ஆம் தேதி முதல் காந்தியடிகளும் லார்டு இர்வினும் பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்தனர். மகாத்மா இர் வினிடம் சுபாஷ் தன்னை எதிர்ப்பவர் என்றும் எந்த ஒரு முடி வுக்கும் வரமாட்டார் என்றும் கூறினார்.

மார்ச் 3-ஆம் தேதி காந்தி - இர்வின் ஒப்பந்தம் வெளியா னது. அதன்படி 1. சட்ட மறுப்பு இயக்கம் உடனே நிறுத்தப்ப டும். 2. வட்ட மேஜை மாநாட்டில் காங்கிரஸ் பங்கெடுத்துக் கொள்ளும். 3. போலீசாரின் அத்துமீறல் செயல்கள் ஆராயப்ப டும்.

வைசிராய் கீழ்க்கண்ட நிபந்தனைகளை ஒத்துக் கொண் டார். 1. வன்முறையில் ஈடுபடாத அரசியல் கைதிகள் வெளிவி டப்படுவர், 2. அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்ட விடுதலை வீரர்களின் சொத்துக்கள் திருப்பித் தரப்படும், 3. நெருக்கடி நிலைமை நீக்கப்படும், 4. வரியின்றி உப்பு எடுக்கலாம், 5. மதுபானம் வெளிநாட்டுத் துணிகள் விற்கும் கடைகளைக் காங் கிரஸ்காரர் பகிஷ்கரிக்கலாம்.

எளிய மக்கள் இந்த ஒப்பந்தத்தைப் பாராட்டினார்கள். சென்னையில் எழும்பூரில் ஒரு வீதிக்குக் காந்தி - இர்வின் ரோடு என்றே பெயர் வைக்கப்பட்டது.

ஆனால், இந்த ஒப்பந்தத்தை அரசியல் விற்பன்னர்கள் இந்திய மக்களுக்கு ஒரு பெருந்தோல்வியாகக் கருதினர். இந்த ஒப்பந்தத்தில் சிறையில் இருக்கும் தீவிரவாதிகளைப் பற்றிப் பேசப்படவில்லை. காரிவாலி ராணுவ வீரர்களைப் பற்றியும் பேசப்படவில்லை. மனம் பொறுக்க முடியாமல் நேரு கூறி னார், ''ஒரு வருடமாக நம் மக்கள் வீரமாகப் போரிட்டது இதற்காகவா? நம் வீர வார்த்தைகள் செயல்கள் எல்லாம் இப்ப டியா முடிய வேண்டும்?''

சுபாஷ் இந்த ஒப்பந்தத்தைக் கண்டு மனம் கொதிப்ப டைந்தார். எனவே, சுபாஷ் காந்தியடிகளுடன் பேச பம்பாய் சென்றார். அவரும் காந்தியடிகளும் ரயிலில் டெல்லிக்கு ஒன் றாகச் சென்றார்கள். வழிநெடுக மக்கள் மகாத்மாவைக் கடவு ளாக வழிபடுவதை சுபாஷ் கண்டார்.

டெல்லியில் சுபாஷ், பகத்சிங்கையும் அவர் நண்பர்களை யும் தூக்கு மேடையில் இருந்து காப்பாற்ற வேண்டினார். அயர்லாந்தில் சைன் பின் கட்சி தீவிரவாதியை சிறையிலிருந்து விடுவித்தால்தான் ஆங்கிலேயருடன் பேச்சு வார்த்தையில் பங்கு கொள்ளும் எனக் கூறி தீவிரவாதியைத் தப்ப வைத்த தைக் கூறினார். இர்வின் ஒப்பந்தத்தை மீறிப் பகத்சிங்கைக் காப்பாற்ற முயலுமாறு கூறினார். ஆனால், காந்தியடிகள் இர் வின் ஒப்பந்தத்தை மீறத் தயாராக இல்லை.

இதே நேரத்தில் முன்பு நடந்த நிகழ்ச்சி ஒன்று நமக்கு மனதில் வரும். ஆங்கிலேயர்கள் இந்தியாவில் இரட்டை ஆட்சி முறையை வைத்திருந்தனர். முக்கியமான துறைகளை ஆங்கிலேயர்கட்கும், சாதாரணத் துறைகளை தேர்ந்தெடுக்கப் பட்ட இந்திய அமைச்சர்கட்கும் தந்தனர்.

நீதிக்கட்சி அமைச்சர் கே.வி. ரெட்டி, ''நான் வேளாண்மை அமைச்சர். ஆனால், என்னிடம் சிறுபாசனத் துறை கிடையாது! நான் தொழில் அமைச்சர். ஆனால், என்னி டம் தொழிற்சாலைகள், மின்சாரம் போன்ற துறைகள் கிடை யாது'' என்று கூறி வருத்தப்பட்டார். லார்டு ரீடிங், வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வரும்போது மாபெரும் வரவேற்புத் தர விரும்பினார். காந்தியடிகளை அழைத்து காங்கிரஸ் கட்சி வேல்ஸ் இளவரசரை வரவேற்றால் ஆங்கிலேயர்களிடம் இருக்கும் துறைகளை தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களி டமே தருவதாகக் கூறினார்.

மோதிலால் நேருவும், சி.ஆர். தாசும், இதற்கு ஆமோதித் தனர். ஆனால், இந்து - முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட மகாத்மா சிறையில் உள்ள அலி சகோதரர்களை விடுவித்தால் தான், வேல்ஸ் இளவரசரை வரவேற்க முடியும் என்றார். ராஜ துவேஷத்திற்காகக் கைது செய்யப்பட்ட அலி சகோதரர்களை விடுதலை செய்வதற்கு வைசிராய் ஒப்புக் கொள்ளவில்லை. எனவே, இந்திய சட்ட அமைப்பில் ஒரு பெரிய மாறுதலைக் காந்தியடிகள் விட்டு விட்டார் என சத்யமூர்த்தி மிகவும் வருத் தப்பட்டார். இச்செய்தி உண்மைதான் என்று 1958-ம் வருடம் இந்து நாளிதழ் ஊர்ஜிதப்படுத்தியது. அலி சகோதரர்களுக்காக

மாபெரும் மாற்றத்தையே வேண்டாம் என்ற காந்தியடிகள், பகத்சிங்குக்காக இர்வினுடன் போராடத் தயாராக இல்லை.

கராச்சியில் காங்கிரஸ் மாநாடு நடைபெற இருந்தது. எனவே, பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் இவர்களை ஆங்கில அரசு தூக்கிலிட மாட்டார்கள் என மக்கள் நம்பினர். ஆனால், மார்ச் 23-ம் தேதி இம்மாபெரும் வீரர்கள் தூக்கிலிடப்பட்டனர்! அவர்களின் பூத உடல்கள் சட்லெட்ஜ் நதிக்கரையில் எரிக்கப்பட்டன.

கராச்சியில் காந்தியடிகள் ரயிலில் இருந்து இறங்கிய போது கருப்பு மாலைகள் தரப்பட்டன. 'இங்கிலாந்திற்கும் நமக்கும் இடையே பகத்சிங் உடல் நிற்கிறது' என நேரு கண்ணீருடன் கூறினார்.

திறமைசாலியான காந்தியவாதிகள் பகத்சிங்கின் தந்தையையே மாநாட்டிற்குக் கூட்டி வந்துவிட்டனர். எப்பொழுதும் போல இரங்கல் தீர்மானம் நிறைவேற்றினர். சுபாஷ் பகத்சிங்கைப் புகழ்ந்து பேசினார். அவர், ''காங்கிரஸ் கட்சிக்குத் தகுந்த திட்டங்கள் கிடையாது. திட்டங்கள் போராட்ட அடிப்படையிலும் இல்லை. மாறாகக் காலத்திற்கு ஏற்றாற்போல் மாற்றி அமைக்கப்படுகின்றன'' என்றார்.

ஏப்ரல் மாதத்தில் லார்ட் வெல்லிங்டன் வைசிராயாகப் பதவி ஏற்றார். இவர் இர்வின் ஒப்பந்தத்தைப் பற்றி கவலைப் படவில்லை. அராஜக ஆட்சியை ஆரம்பித்தார். மக்கள் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டுப் போராடிக் களைத்திருந்தனர். அரசு மக்களின் பலவீனத்தைப் பயன்படுத்தியது.

ஆகஸ்ட் 29-ஆம் தேதி மகாத்மா வட்ட மேஜை மாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ள லண்டன் சென்றார். எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. மாறுபட்ட கருத்துக்களை உடைய 100 பேர்களுக்கு இடையே காந்தி என்ன செய்ய முடியும் என சுபாஷ் வினவினார்.

டிசம்பர் 29-ல் காந்தியடிகள் கப்பலை விட்டு இறங்கிய போது அவர் கையில் சுவராஜ்யம் கொண்டு வருவதாக மக்கள் நம்பினர். மாபெரும் வரவேற்பைத் தந்தனர்.

பகுதி - 13

1932 - மீண்டும் ரத்த அலைகள்!

காங்கிரஸ் கட்சி சட்டபூர்வமாகத் தடை செய்யப்படுகிறது.

காந்திக் குல்லாய் போடக் கூடாது!
நாளிதழ்கள் தடை செய்யப்படுகின்றன!
29 இடங்களில் துப்பாக்கிச் சூடு!
ஆயிரக்கணக்கானோர் மரணம்!
80 ஆயிரம் பேர் கைது!
சிறையில் கைதிகளுக்குச் சாட்டையடி!
திருப்பூரில் கையில் கொடி வைத்திருந்த குமரன் அடித்துக் கொல்லப்பட்டார்!
நேரு, பட்டேல் சிறையில்!

ஆங்கிலப் போலீஸ் அதிகாரி கூறினார், ''விடுதலைப் போரில் ஈடுபடும் மக்களுடைய கிராமத்திற்கு நாங்கள் சென் றால் அங்கு 24 மணி நேரத்தில் ஒரு இளம் பெண்கூட கற்புடன் இருக்க முடியாது; ஒரு வீட்டில் காலணாக்கூட வைக்கவிட மாட்டோம்''

சென்னை மாகாணத்தில் தலைச்சேரியில் பெண்களின் தாலி பறிமுதல்!

சென்னை மாகாணத்தில் போலீசாரால் போராட்ட வீரர்க ளுக்கு நடந்த எந்தக் கொடுமைகளைப் பற்றியும் அரசாங்கத் திற்கு செய்தி கிடைக்கவில்லை என்று உள்துறை அமைச்சர் முகமது உஸ்மான் சட்டசபையில் கூறினார். சட்ட அமைச்சர் கிருஷ்ணன் நாயர் கூறினார்: ''சத்யாகிரகிகளுக்கு சிறையில் மோர் தரப்பட மாட்டாது - ஏன் என்றால் அவர்களுக்கு மோர் குடித்து வழக்கமில்லை!'' ஆனால் கொலை புரிந்த ஆங்கிலே யக் கைதிகளுக்கு சிறையில் மாமிசம் கூடிய உணவு தரப்பட் டது!

நவம்பர் 11 - சுபாஷ் கைது!

பிறகு விடுதலை!

சுபாஷ் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினராக இல்லை. இருப்பினும் காந்தியடிகள் இவரை அழைத்தார். சுபாஷ் திரும்பி வருகின்றபோது ஜனவரி 3-ஆம் தேதி கல் யாண் ரயில் நிலையத்தில் கைது செய்யப்பட்டார். எந்தக் கார ணமும் தரப்படவில்லை. எந்த வழக்கும் போடப்பட வில்லை. அவரை முதலில் சியோன் சிறையில் வைத்தனர். இது மத்தியப் பிரதேசத்தில் உள்ள மிகச் சிறிய ஊராகும். அங்கிருந்து ஜபல்பூர் சிறை. பிறகு சென்னை சிறை!

சென்னைச் சிறை: ஜூலை 13 - 1932

தன் எடையில் 80 பவுண்ட் இழந்து சென்னைக்கு வந்து சேர்ந்தார் சுபாஷ். அன்று சென்னை சிறையில் நூற்றுக்கணக் கில் அரசியல் கைதிகள் இருந்தனர். பலர் பரிதாபமாக உட் சிறையில் இருந்தனர்.

அப்பொழுது சிறையில் முகுந்தலால் சர்க்கார், தெய்வநாயகம், ஏகாம்பரம், சபாபதி, கண்ணாயிரம், சங்கர் போன்ற அரசியல் கைதிகள் இருந்தனர். இதில் சங்கர் என்ற பெயருடைய வடநாட்டுக்காரரான அமீர் ஹைதர்கான் ரஷ்யாவிலிருந்து தென் நாட்டில் கம்யூனிசத்தை வளர்க்க கம்யூனிஸ்டு அகிலத்தால் அனுப்பப்பட்டவர். பல ஆண்டுகள் பல சிறைகளில் வாடியவர்.

சிறையிலிருந்து அரசினர் பொது மருத்துவமனைக்குச் செல்ல போலீஸ் வேனை ஏற்பாடு செய்திருந்தனர். நாயேறுகின்ற இந்த வண்டியில் நான் ஏற மாட்டேன் என்றார் சுபாஷ். எனவே தினமும் ஜெயில் அதிகாரி தன்னுடைய காரிலேயே அழைத்துச் சென்றார். அவர் சிறைச் சட்டங்களை மீறி சுபாஷைச் சந்திக்க, அரசியல் கைதிகளை அனுமதித்தார்.

சுபாஷ் தன்னிடமிருந்த குறைந்த பணத்தைக் கொண்டு அவர்களுக்குச் சர்க்கரைப் பொங்கல், அல்வா, ஜிலேபி போன்றவைகளைத் தன் கையாலேயே செய்து தருவார். சுபாஷ் தலைசிறந்த சமையல்காரர் அல்லவா?

சிறையில் இவர்கள் ஒன்றுகூடி அரசியல் பேசினர். சுபாஷ் கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பற்றிதெரிந்து கொண்டார். சுபாஷின் வீர உரைக் கேட்டு பல இளைஞர்களின் உள்ளம் கொதித்தது.

பிற்காலத்தில் இந்த இளைஞர்களில் சிலர், ஊட்டி பேங்கைக் கொள்ளையடித்தனர். கவர்னரையே கொலை செய்ய முயன்றனர். இதன் காரணமாக ஜெயிலருக்கு பதவி உயர்வு மறுக்கப்பட்டது. ராஜாஜி முதல்வராக வந்த பின்தான் ஜெயிலருக்குப் பதவி உயர்வு தரப்பட்டது.

சுபாஷின் உடல் நிலை மிகவும் மோசமாயிற்று. சென்னையிலிருந்து பலராம்பூர் சிறைக்குச் சென்றார். பிறகு போலாலி சிறை.

பண்டிதர் மாளவியா ''சுபாஷ் ஒரு எலும்புக்கூடாகி விட்டார்! அவரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்'' என்று அறைகூவல் விட்டார்.

வெள்ளையர்கள் சுபாஷை ஐரோப்பா செல்ல அனுமதித்தனர். 1933-ம் வருடம் பிப்ரவரி 13-ம் தேதி பம்பாயை விட்டு கங்கை என்ற கப்பலில் ஐரோப்பாவை நோக்கிப் புறப்பட்டார் உடல் நலம் குறைந்து இருந்த சுபாஷ்!

சென்னை சிறையிலிருந்து பயங்கரவாதத்தை சுபாஷ் வளர்த்தார். எனவே, அவரை வங்காளம் செல்ல அரசு அனுமதிக்கவில்லை. மேலும் சுபாஷ் உடல் நலம் பெற டென்மார்க் செல்ல விழைந்தார். டென்மார்க்கிற்கும் இந்தியாவிற்கும் நடுவே கப்பல் தொடர்பு இருந்தது. கப்பல்கள் மூலம் இந்தியாவிற்கு சுபாஷ் ஆயுதங்கள் அனுப்பலாம் எனப் பயந்து துறைமுகமே இல்லாத ஆஸ்திரியாவிற்கு வெள்ளையர்கள் அனுப்பினர் என ரகசியக் குறிப்புக்கள் கூறுகின்றன.

பகுதி - 14

அக்கரைச் சீமையிலே 5 ஆண்டுகள்!

ஆஸ்திரிய தலைநகரான வியன்னாவை அடைந்தார் சுபாஷ். அங்கு டாக்டர் பர்த் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றார். மெள்ள உடல் நலம் சீராயிற்று.

சர்தார் வல்லபாய் பட்டேலின் சகோதரர் வித்தல்பாய் பட்டேலும் உடல்நலம் பெற அங்கு வந்திருந்தார். இளைஞ ரும் முதியவரும் ஒன்றாக அரசியலைப் பற்றி ஆராய்ந்தனர். காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தியதைக் கண்ட னர். அவர்கள் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டனர்;

''சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தியதின் மூலம் காங்கிரசின் இப்போது உள்ள முறைகள் தோல்வியானவை என நன்கு தெரிகிறது. அரசியல் தலைவர் என்ற முறையில் மகாத்மா தோற்றுப் போய்விட்டார். எனவே, காங்கிரஸ், புதுக் கொள்கைகளின் அடிப்படையில் புரட்சிகர வழியில் செல்ல வேண்டும். தீவிரமான ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு, எல்லா முனைகளிலும் விடுதலைப் போர் தொடுக்கப்பட வேண்டும்.''

வியன்னாவிலிருந்து இந்து நாளிதழுக்கு தொடர்ந்து கடிதம் எழுதினார் சுபாஷ். வியன்னாவில் ஆஸ்திரிய - இந்திய நட்புணர்வுக் கழகத்தை உண்டாக்கினார். செக்கஸ்லோவேக்யாவிற்குச் சென்றார். அங்கு இளைஞர்கள் இயக்கம் செயல்படும் முறையை ஆராய்ந்தார். பிறகு போலந்து சென்றார். ஆனால், லண்டன் செல்வதற்கு இவர் தடை செய்யப்பட்டார். பிறகு ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் சென்றார். அங்கு செண்பகராம் பிள்ளையினுடைய விடுதலை இயக்கத்தை அறிந்தார். ஆங்கிலேயர்கள்தான் இந்தியாவிற்குச் சிறந்த ஆட்சியினைத் தந்தனர் என்று ஹிட்லர் கூறியதைக் கேட்டு, ஹிட்லரை வன்மையாகக் கண்டித்தார். ஹிட்லர் தான் கூறியதை மாற்றிக் கொள்கிறேன் என்று கூறிவிட்டார். இந்த ஆண்டில் தன் தந்தை உடல் நலம் குறைவாக இருப்பதை அறிந்து இந்தியா வந்தார். அவர் வருவதற்கு ஒருநாள் முன்பே தந்தை இறந்துவிட்டார். இந்தியாவில் 6 வாரங்கள் இருந்து பிறகு மீண்டும் வியன்னா வந்து சேர்ந்தார். பல்கேரியா நாட்டிற்குச் சென்று, அங்கு 5000 பேரை சேர்த்து ராணுவம் அமைத்து விடுதலைக்குப் போரிட முயன்றார்.

சென்னைச் சிறையில் எழுத ஆரம்பித்த 'இந்தியப் போராட்டம்' வியன்னாவில் முற்றுப் பெற்றது. இதை எழுதுவதற்கு எமிலி ஷெங்கல் அம்மையார் சுபாஷுக்குப் பெரிதும் உதவினார். அவர் செயலராக இருந்தார். 'இந்தியப் போராட்டம்' என்ற புத்தகம் வெளிவந்தபோது அறிஞர்கள் அதனைப் பாராட்டினர். அயர்லாந்து ஜனாதிபதி பாராட்டிக் கடிதம் எழுதினார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகள் தலைமைப் பதவியிலிருந்தார். அவரைக் கேள்வி கேட்பவர்கள் யாரும் இல்லை. ஆனால், இந்த நூலில் சுபாஷ் காந்தியடிகளின் போராட்ட முறையை விமர்சித்தார்; பிளவுபட்ட இந்திய மக்களை ஒன்று சேர்த்தவர் மகாத்மா தான். ஆனால், அவரின் விடுதலைப் போராட்டம் தோல்வியடைய ஐந்து காரணங்கள் உண்டு என்று சுபாஷ் கருதினார்.

1. காந்தியடிகள் நற்பண்பு கொண்டவர்; ஆனால், பகைவர்களிடம் அவ்வாறு இல்லை.

2. மகாத்மா விடுதலைப் போராட்டத்திற்காக நீண்ட காலத் திட்டங்கள் தீட்டவில்லை.

3. மகாத்மா மற்ற நாடுகளின் உதவியை வேண்டவில்லை.

4. அவர் ஆங்கிலேயரை மனதார நம்பினார். ஆனால், அவர்களோ காந்தியடிகளை ஏமாற்றினர்.

5. 'உலகத்திற்கு அஹிம்சையைப் போதிக்கும் உத்தமர்' என்ற பதவி, 'இந்திய விடுதலைப் போர்த் தலைவர்' என்ற பதவி ஆகியவற்றிற்கிடையே காந்தியடிகள் தள்ளாடினார்.

கொள்கையில் மாறுபட்டு இருந்தாலும் சுபாஷ் மகாத்மாவின்மீது பேரன்பு கொண்டிருந்தார். அப்பொழுது ஜெர்மனியில் மகாத்மா ஒரு இளம் ஆங்கிலேயப் பெண்ணுடன் நடனம் ஆடுவதாக ஒரு சினிமா வந்திருந்தது. காந்தீயவாதிகள் பலர் ஐரோப்பாவில் இருந்தாலும் இப்படத்தைத் தடை செய்ய முயலவில்லை. ஆனால், சுபாஷ் அதிகாரிகளுடன் பேசி ஜெர்மனி முழுவதும் இப்படத்தைத் தடை செய்ய வைத்தார்.

1935-ல் சுபாஷின் பித்தநீர்ப்பை அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. அறுவை சிகிச்சைக்குமுன், "என்னுடைய பொருள்கள் யாவும் நாட்டிற்கே சொந்தம்! என் கடன்கள் முழுமையும் என் சகோதரர் தந்துவிடுவார்" என்று கூறினார். சுவிட்சர்லாந்துக்குச் சென்று உலக நாடுகளின் கழகத்தில் இந்திய விடுதலைக்குப் போராடினார்.

1936-ம் வருடம் சுபாஷ் இந்தியா திரும்பிவர விழைந்தார். அவர் திரும்பி வந்தால் அவரைக் கைது செய்து விடுவோம் என ஆங்கில அரசு அச்சுறுத்தியது. இதற்குப் பயப்படாமல் சுபாஷ் ஏப்ரல் 8-ஆம் தேதி பம்பாய் வந்தடைந்தார். உடனேயே ஆங்கிலேய அரசு அவரைக் கைது செய்தது. காந்தியடிகள் எப்பொழுதும் இருந்த எர்வாடா சிறையில் வைக்கப்பட்டார். பின்பு வங்காளத்தில் டார்ஜிலிங் மாவட்டத்தில் குர்சியாங் என்ற இடத்தில் அவர் சகோதரர் வீட்டில் கைதியாக வைக்கப்பட்டார்.

இதனிடையே ஜவஹர்லால் நேரு சுபாஷைக் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினராக்கினார். சுபாஷ் லட்சுமண புரியில் நடந்த காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்கு விடுதலைக் கொடியினை உயர்த்துங்கள் என்ற செய்தியை அனுப்பினார்.

தொடர்ந்து சுபாஷ் சிறையில் இருப்பதைக் கண்ட மக்கள் வெகுண்டு மே 20-ஆம் தேதி இந்தியா முழுமையும் ஹர்தால் நடத்தினார்கள். உடல்நலம் குறைந்த அவரைப் போலீசார் டிசம்பர் மாதத்தில் கல்கத்தாவிற்கு அழைத்து வந்தனர்.

1937 ஆம் வருடம் மார்ச் 17 ஆம் தேதி நிபந்தனை இல்லாமல் ஆங்கிலேயர் சுபாஷை விடுதலை செய்தனர். இருப்பினும் சுபாஷ் உடல்நலம் தேறவில்லை. சிம்லாவின் அருகாமையில் உள்ளது டல்ஹவுசி என்ற ஊர். அவ்வூரில் உள்ள தன் நண்பரான டாக்டர் தர்மவீரிடம் சிகிச்சைப் பெற்றார் சுபாஷ். நன்கு உடல் நலம் தேறியது. இவ்வாண்டில்தான் இந்திய மாநிலங்களில் தேர்தல் நடந்தது. சென்னை உட்பட 6 மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி அமைந்தது. வங்காளத்தில் க்ரிஷக் பிரஜா கட்சியுடன் கூட்டு சேர்ந்து காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்க வேண்டும் என்று சுபாஷ் விரும்பினார். இதைச் சந்தர்ப்பவாதம் என நேரு கூறி மறுத்துவிட்டார். இக்கட்சியுடன் முஸ்லிம் லீக் இணைந்து பத்து ஆண்டுகள் வங்காளத்தை ஆண்டனர். இந்தியப் பிரிவினைக்கு அடிகோலினர்.

சுபாஷ் மீண்டும் மே மாதத்தில் ஐரோப்பா சென்றார். முதலாவதாக லண்டனை அடைந்தவருக்கு மாபெரும் வர

வேற்பு தரப்பட்டது. அங்கு ஒரு கூட்டத்தில் அவர், ''1500 முதல் 2500 அரசியல் கைதிகள் சிறையில் துன்பப்படுகின்றனர். அந்தமான் சிறையில் பலர் வாடுகின்றனர். தண்டனை முடிந்தும்கூட கான் அப்துல் கஃபார்கான் சிறையில்தான் உள்ளார்'' என்று கூறினார். பிறகு லண்டனில் காக்ஸ்டன் ஹாலில் இந்திய விடுதலை பற்றி பேசினார். ஆங்கில மக்கள் அவரைப் பாசிசத்திற்கு எதிராகப் பேசும்படி கேட்டனர். சுபாஷ் மறுத்துவிட்டார். கூட்டம் கட்டுக்கடங்காமல் போகின்றபொழுது சுபாஷ் காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற செய்தியைக் கூட்டத் தலைவர் கூறினார். மக்கள் மகிழ்ச்சியுடன் பாராட்டு தெரிவித்தனர்.

சுபாஷ் ஆஸ்த்ரியாவிற்குச் சென்றார். ''ஓர் இந்தியனின் புனித யாத்திரை'' என்ற தன் சுய வரலாற்றை எழுதி முடித்தார். மீண்டும் லண்டன் வந்து பிரிட்டிஷ் தலைவர்களைச் சந்தித்தார். அயர்லாந்திற்குச் சென்று அந்நாட்டின் தலைவர் டி.வெலராவை இருமுறை சந்தித்தார்.

ஐரோப்பாவிலிருந்தபோது சுபாஷ் ரஷ்யாவிற்குச் செல்ல முடியவில்லை. ஸ்டாலினையும் சந்திக்க முடியவில்லை. ஆனால், ரோமாபுரியில் முசோலினியைப் பலமுறை சந்தித்தார்.

பகுதி - 15

1938 - இந்திய அரசியல் வானில் ஒரு சூரியன்

ஜனவரி 23 - 1938.

கராச்சி.

கே.எல்.எம். விமானம் மூலம் சுபாஷ் ஐரோப்பாவிலி ருந்து வந்து இறங்கினார். மகத்தான வரவேற்பு தரப்பட்டது. 500 கார்கள் விமான நிலையத்தை முற்றுகையிட்டன. சுபாஷ் தன் மனமார்ந்த நன்றியை மக்களுக்குத் தெரிவித்தார். பிப்ரவரி 19 முதல் 23 வரை காங்கிரஸ் கட்சியின் 51-வது மாநாடு தபதி

நதிக் கரையில் உள்ள ஹரிபுராவில் நடந்தது. இந்த ஊர் குஜராத்தில் உள்ளது. தலைசிறந்த ஓவியரான நந்தலால் போஸ் அழகான ஓவியங்களை இம்மாநாட்டில் வைத்திருந்தார்.

51 ஆடம்பர வளைவுகளைத் தாண்டி 51 ஜோடி வெள்ளை எருதுகள் பூட்டப்பட்ட ரதத்தில் ஊர்வலமாக வந்தார் சுபாஷ். இதோ தினமணியில் வந்த செய்தியை நாம் பார்ப்போம். ''இந்திய தேசீயக் காங்கிரஸ் ஆரம்பமாவதற்கு முந்தி நடைபெறும் இந்த தேசீயக் கொடிவணக்கக் காட்சி இதுவரை காங்கிரஸ் சரித்திரத்திலேயே காணாததொன்று. நாட்டின் ஜீவநாடியான குடியானவர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள், தொழிலாளர்கள், தலைவர்கள் முதலிய யாவரும் திரண்ட ஒரு கூட்டம் 'ஜனசமுத்திரமோ' எனக் கண்டோரைத் திகைக்கச் செய்தது. சுமார் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட ஜனங்கள். மைதானம் அரை மைல் சதுரம் கொண்டது. இந்தச் சமயம் நீலவானத்தில் சூரியன் தகதகவென்று பிரகாசித்துக் கொண்டிருக்க, திடீரென்று எழுந்த புழுதிப்புயல் வானத்துக்கும் பூமிக்கும், மெல்லிய செவ்வொளியை அள்ளிவீச எண்ணற்ற மனிதக் கால்களின் அசைவால் எழுந்த செம்புழுதி வர்ஷிக்க அப்போது மிளிர்ந்த காட்சி கற்பனையை அள்ளியது.

ஒரே நிசப்தம். லட்சம் பேர்களுக்கு மேற்பட்ட அந்தக் கூட்டத்தில் ஒரு குண்டூசி விழுந்தால்கூட கேட்கும்படியான அவ்வளவு அமைதி. 'வந்தே மாதரம்' கீதம் நிசப்தத்தின் மீது மிதந்து ஒலித்தது. பிறகு தலைவர் ஸ்ரீ பாபு சுபாஷ் சந்திரபோஸ் மூவர்ணக் கொடியைப் பறக்கவிட்டார். அந்த அமைதி கலைந்தது. 'ஜண்டா ஊஞ்ச்சா ரஹே ஹமாரா' ('நமது கொடி என்றும் தலைதூக்கிப் பறக்கட்டும்') என்ற கீதத்தை அனைவரும் பாடியபோது உலகத்தின் கடல் அலைகள் ஒன்று சேர்ந்து ஒலிப்பது போலிருந்தது.''

1922-ம் வருடம் கயாவில் நடந்த காங்கிரசில் தலைவராக தாஸ் இருந்தார். அதற்குப் பிறகு வங்காளத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் தலைவர் சுபாஷ்தான். 41 வயதிலேயே காங்கிரஸ் கட்சியின் தலைவரானார் சுபாஷ்.

இவர் தலைமையில்தான் காங்கிரஸ் கட்சி கல்வியைப் பற்றி 1938-ல் ஒரு முக்கிய தீர்மானத்தை ஏற்படுத்தியது. பயிற்று மொழி தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டும்; கல்வி வாழ்க்கைக்குப் பயன் உடையதாக இருக்க வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குடும்பக் கட்டுப்பாடு என்ன என்று தெரியாத அந்த காலத்தில் குடும்பக் கட்டுப்பாட்டினைச் சுபாஷ் வலியுறுத்தி யது நமக்கு வியப்பாக உள்ளது. காங்கிரஸ் அமைச்சர்களைக் கல்வி, சுகாதாரம், பாசன வளர்ச்சி முதலியவற்றில் கவனம் செலுத்த வேண்டினார்.

ஐரோப்பிய நாடுகளில் தொழில் முன்னேற்றத்தைச் சுபாஷ் கண்டார். எனவே, இந்தியாவையும் தொழில்மய மாக்க விரும்பினார். நாடு முன்னேற திட்டக் கமிஷன் ஒன்றை உருவாக்கினார். ஜவஹர்லால் நேருவை அதன் தலைவராக்கி னார். பிற்காலத்தில் ரஷ்யப் பிரதமர் குருஷேவ் இந்தியா வந்த போது நேருதான் திட்டக் கமிஷனை உருவாக்கினார் என உண் மைக்கு மாறாக வானளாவப் புகழ்ந்தார் வெங்கட்ராமன்.

இந்திய அரசியல்வாதிகளிலேயே தன் காலத்திற்கு முன்பே எதிர்காலத்திற்குத் திட்டம் இடுபவர் சுபாஷ் ஒருவர் தான் என வரலாற்று அறிஞர் ஜெரார்டு கார் கூறினார்.

பகுதி - 16

1939 - காங்கிரஸ் கட்சியில் காந்தியின் ஒத்துழையாமை

ஐரோப்பாவில் போர் முரசு ஒலிக்க ஆரம்பித்தது. இந்த நேரத்தைப் பயன்படுத்தி இந்தியா விடுதலை பெற சுபாஷ் விரும்பினார். எனவே, மீண்டும் காங்கிரஸ் கட்சியின் தலைவ ராக அவர் விரும்பினார். பல மாநிலங்கள் அதற்குத் துணை யாக நின்றன. ஜவஹர்லால் தலைமைப் பதவிக்கு நிற்க மறுத் துவிட்டார். அபுல்கலாம் ஆசாத் உடல் நலம் குறைவு காரண மாக மறுத்தார். எனவே, காந்தியடிகள் காங்கிரஸ் கட்சியின் வரலாறு எழுதிய பட்டாபி சீதாராமய்யாவைக் களத்தில் இறக் கினார். 1934 முதல் காந்தியடிகள் காங்கிரஸ் கட்சியின் அடிப்

படை உறுப்பினர்கூட இல்லை. ஆனால், அவர்தான் தலைவர்களை உருவாக்கினார். நேரு, காந்திதான் காங்கிரஸ் என்றே கூறினார்.

கவியரசர் தாகூர் காந்தியடிகளுக்கு ஒரு கடிதத்தின் மூலம் சுபாஷுக்கு மீண்டும் ஒரு முறை தலைவர் பதவி தரவேண்டினார். காந்தியடிகள் சுபாஷ் நாட்டைத் தொழில்மயமாக்குவாரோ எனப் பயந்தார். கிராமக் கைத்தொழில்கள் நாசமாகலாம் என அஞ்சினார்.

சுபாஷ் தாம் நியாயமான பிரச்சனைகளுக்காகத் தேர்தலில் நிற்பதாகக் கூறினார். தான் தோற்றால் அதன் முடிவை மகிழ்வுடன் ஏற்று நாட்டிற்கு உழைப்பதாகக் கூறினார்.

காந்தியடிகளின் நண்பர்கள் பட்டேல், பிரசாத், ராஜாஜி முதலானோர் சுபாஷை எதிர்த்தனர். சுபாஷ் மீண்டும் வெற்றி பெற்றால் அது நாட்டிற்கே தீமை என பட்டேல் அறிவித்தார். காந்தியடிகள் ''காங்கிரஸ் கட்சியில் லஞ்சமும் ஒழுங்கின்மையும் வந்துவிட்டன. எதிர்காலத்தில் ரத்தக் களரியுடன் கொண்ட அழிவும் சட்டமின்மையும்தான் மிஞ்சும்'' என அறிவித்தார்.

சுபாஷுக்கு எதிராக நேரு ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

காந்தியின் நண்பர்கள் வாக்குகள் சேர்க்க ஆரம்பித்தனர். காந்தி சேவா சங்கம், கிராமியத் தொழில் மன்றங்கள், பல அமைச்சர்கள் யாவரும் முழு மூச்சாகச் செயல்பட்டனர்.

தேர்தலுக்கு முன்பு பத்திரிகையாளர்களிடம் ''நான் கணக்குப் போட்டு பார்த்ததில் நான் கட்டாயமாகப் பட்டாபியைத் தோற்கடிப்பேன்'' என்று சுபாஷ் கூறினார்.

தேர்தலில் சுபாஷுக்கு 1580 வாக்குகளும் பட்டாபிக்கு 1375 வாக்குகளும் கிடைத்தன.

205 ஓட்டுகள் அதிகமாக வாங்கி வெற்றி வாகை சூடினார் சுபாஷ்.

போஸ்: இது மகிழ்ச்சியான நேரமல்ல. இந்த முடிவை ஏற்று ஒற்றுமையாகச் செயல்படுவோம். இந்திய விடுத் லைக்கு நாம் மேலும் உழைக்க வேண்டும். இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெற்ற நான் இந்தியாவின் தலைசிறந்த தலை வராகிய காந்தியடிகளின் நம்பிக்கையைப் பெறாமல் இருந் தால் அது எனக்கு மிகவும் துயரத்தைத் தரும்.

மகாத்மா: பட்டாபியின் தோல்வி என் தோல்விதான். அந் தத் தோல்வியில் நான் மகிழ்கின்றேன். சுபாஷ் இந்த நாட்டின் எதிரி அல்லவே!

காங்கிரஸ் கட்சியில் இருப்பது கடினமாக இருந்தால், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் காங்கிரசைவிட்டு வெளியேறி சிறந்த முறையில் உழைக்கலாம்.

சுபாஷ்: காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு வந்தால் இடதுசாரிக ளால் அல்ல. அவர்களையும் மீறி வரலாம்.

காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்கள் 12 பேர் ராஜினாமா! பிறகு ஜவஹர்லால் நேருவும் ராஜினாமா!

8, மார்ச்சு 1939

திரிபுராவில் காங்கிரஸ் மகாநாடு. சுபாஷுக்கு 105 டிகிரி ஜுரம். அவரைப் படுக்கையில் வைத்துத் தூக்கி வந்தார்கள்.

ராஜாஜி: சுபாஷ் ஒரு ஓட்டைப் படகு! அவரை நம்பாதீர் கள்.

ஜி.பி. பந்த்: இந்த நெருக்கடியான நேரத்தில் மகாத்மா காந்தி ஒருவரால்தான் காங்கிரசைத் தலைமை தாங்கி நாட் டிற்கு விடுதலை வாங்கித் தரமுடியும். எனவே, காந்தியின் விருப்பப்படித்தான் செயற்குழுவைக் காங்கிரஸ் தலைவர் நிய மிக்க வேண்டும்.

இந்த தீர்மானம் வெற்றி பெறுகிறது. சுபாஷின் படத்தை ஒரு ரதத்தில் வைத்து 52 அலங்கார யானைகள் இழுத்துச் செல் கின்றன.

சுபாஷ்: வேறு ஒரு செயற்குழுவுடன் என்னைத் தவிர யாராவது நன்கு போராட முடியும் என்று மகாத்மா நினைத் தால் நான் பதவியை விட்டு இறங்குகிறேன். மகாத்மாவும் காங்கிரசும் ஒன்று சேர்ந்து விடுதலைப் போராட்டத்தை ஆரம் பிக்க வேண்டும். நான் இந்த நாட்டை நேசிக்கிறேன்; பத வியை அல்ல.

மகாத்மா: வன்முறை எங்கும் இருப்பதை நான் உணர்கி றேன். அகிம்சை முறையில் போராட இப்பொழுது நிலைமை சரியில்லை. அரசியல் தளத்தில் நாம் எப்படி சந்திக்க முடியும். நம்மிடம் வித்தியாசங்கள் உண்டு என்பதில்தான் நமக்கு ஒற் றுமை உண்டு.

சுபாஷ்: நமக்குள் ஒற்றுமை இல்லையேல் எதிர்காலம் சூனியம்தான்.

இந்திய விடுதலைக்குப் போராடும் காங்கிரசில் பிளவு உண்டாக்க விரும்பாத சுபாஷ் ஏப்ரல் 29-ஆம் தேதி அன்று தன் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். அன்றே ராஜேந்திரப் பிரசாத் தலைவராக ஆக்கப்பட்டார்.

காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பார்வர்டு பிளாக் என்ற கட் சியினை சுபாஷ் உருவாக்கினார். இடதுசாரிகள் ஒன்று சேர்ந்த னர். முழுச்சுதந்திரத்திற்குப் போராடுவது என்பது தவிர, வேறு எந்த எண்ணமும் இருக்கக் கூடாது என்றார்.

பார்வார்டு பிளாக் மிகப் பெரிய அளவில் வளர்ந்தது. காங்கிரசை விட்டுச் சென்றபின் சுபாஷின் பெருமை மிக அதிக மாகி விட்டதாகக் காந்தியடிகளே ஒப்புக் கொண்டார்.

காங்கிரசில் இரண்டு தீர்மானங்கள் கொண்டு வந்தனர். 1. மாநிலக் கமிட்டியிடம் கேட்டுத்தான் சத்யாகிரகம் ஆரம்பிக்க லாம். 2. காங்கிரஸ் அமைச்சரவைக்கும் மாநிலக் கமிட்டிக்கும் உள்ள வேறுபாடுகளை பார்லிமெண்ட் துணைக் கமிட்டிதான் தீர்க்க வேண்டும். சுபாஷ் இந்த இரண்டு தீர்மானங்களை எதிர்த்தார். எதிர்ப்பு நாளையும் நடத்தினார். சுபாஷிடம் பிர சாத் விளக்கம் கேட்டார். சுபாஷின் விளக்கங்களை அவர் ஏற்

றுக் கொள்ளவில்லை. 1939 ஆம் வருடம் ஆகஸ்ட் 19 ஆம் தேதி அன்று மகாத்மாவினாலேயே எழுதப்பட்ட தீர்மானத்தை காங் கிரஸ் செயற்குழு இயற்றியது. அதன்படி சுபாஷ் கட்சி ஒழுக் கத்தை மீறியதால் 3 ஆண்டுகளுக்கு அவர் எந்தப் பதவியிலும் இருக்கக் கூடாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

"அவ்வளவுதானா!" என்றார் சுபாஷ். கருமமே கண்ணாக ஆயிரக்கணக்கான இடங்களில் பேசினார். "ஆறே மாதங்க ளில் உலகப் போர் வரும். அதனைப் பயன்படுத்தி இந்திய விடுதலையைப் பெறலாம்" என்றார்.

இந்திய விடுதலைப் போரில் சுபாஷ் ஒரு தனிப்பெருந்த லைவராக இருந்தார்; காந்தியடிகளின் பாதிப்பு எதுவும் அவரி டம் இல்லை. எனவே, இந்து நாளிதழ் அவரைக் கடுமையான சொற்களால் சம்மட்டிபோல் அடித்து, தன் வார்த்தை ஜாலங் கள் என்ற கிடுக்கியினால் சுபாஷை அரசியல் களத்தில் இருந்து தூக்கி எறியப் பார்த்தது! "Hindu went hammer and tongs at Subash". அவர் தேர்தலில் நிற்பதைக் கடுமையாக எதிர்த்தது; பட்டா பியை ஆதரித்தது.

சுபாஷ் தேர்தலில் வெற்றி பெற்ற பின், இந்து அவரது வாக்குறுதிகள் நாட்டிற்கு நன்மை பயக்காது என்றது. சுபாஷ் சுயமாக காங்கிரஸ் கட்சியை வளப்படுத்த மாட்டார் என்றும் கூறியது. இந்து நாளிதழ், இந்தியாவிற்குத் தேவை இதுவரை இருந்த தலைவர்களின் சேவைதான் என்றது.

சுபாஷ் தன் தலைமைப் பதவியை ராஜினாமா செய்த பொழுது, இந்து நாளிதழ் அதனை மகிழ்வுடன் வரவேற்றது!

சுபாஷ் காங்கிரஸ் கட்சிக்குள் பார்வார்ட் பிளாக் கட்சி ஆரம்பித்ததை இந்து வன்மையாக கண்டித்தது!. பட்டாபி தோற்றபொழுது, காந்தியடிகள், காங்கிரஸ்காரர்கள் கட்சியை விட்டு வெளியே வந்துவிடலாம் என்று கூறியதை இந்து நாளி தழ் கண்டிக்கவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுபாஷ் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பொழுது, அதனை இந்து மகிழ்வுடன் வரவேற்றது!

செப்டம்பர் 3, 1939

உலகம் மாபெரும் பிரளயத்தில் நுழைந்த நாள். அன்று தான் இரண்டாம் உலகப் போர் மூண்டது. சுபாஷ் சென்னைக்கு வந்தார். அவர் நிகழ்ச்சிகளுக்குக் காங்கிரஸ்காரர்கள் யாரும் போகக் கூடாது என்று சத்யமூர்த்தி அறிக்கை விட்டிருந்தார். சுபாஷுக்கு இடம் தர காங்கிரஸ்காரர்கள் தயாராக இல்லை. மகாத்மாவின் நண்பரான சங்கு கணேசன் வீடு ராயப்பேட்டை நெடுஞ்சாலையும், பைக்ராப்ட்ஸ் சாலையும் சந்திக்கின்ற இடத்தில் இருந்தது. சுபாஷ் அங்குதான் தங்கினார்.

அன்று மாலை சென்னைக் கடற்கரையில் சீனிவாச ஐயங்கார் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கு கொண்டனர். தன் வாழ்நாளிலேயே இவ்வளவு பெரிய கூட்டத்தில் பேசியதில்லை என சுபாஷ் வியந்தார். அவர் பேசுகின்றபோது கண்ணாடி நாயுடு என்ற தொண்டர் நாளிதழைச் சுபாஷிடம் கொடுத்தார். அதில் பிரிட்டன் ஜெர்மனி மீது போர் தொடுத்த செய்தி இருந்தது. சுபாஷ் மகிழ்வுடன் கூறினார்; ''பிரிட்டனின் துயரமான காலம் நமக்கு அதிர்ஷ்டமான நேரம். இந்த நேரம் தான் நாம் விடுதலை பெறுவதற்கு உகந்த நேரம்.''

பிறகு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடன் மதுரை சென்றார். மாபெரும் கூட்டத்தில் பேசினார்.

வைசிராய் கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தார். காந்தியவாதிகள் அவற்றை எதிர்க்கவே இல்லை.

சீனாவிலிருந்து திரும்பி வந்த நேரு 8-ஆம் தேதி கூறினார்: ''இது பேரம் பேசும் நேரம் அல்ல. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகளின் ஏகாதிபத்தியத்திற்கு நாம் எதிரிகள்''. காந்தியடிகள் கூறினார்; ''மனித நேயத்தின் அடிப்படையில் நான் இங்கிலாந்தையும், பிரான்சையும் ஆதரிப்பேன். இந்த நேரத்தில் இந்தியாவின் விடுதலை பற்றி நான் நினைக்க மாட்டேன். இங்கிலாந்து தோற்று நமக்கு விடுதலை கொடுத்தால் அது மதிப்பாக இராது.''

ஆங்கிலேயர்களுக்கு உதவக் கூடாது என்பதற்காகப் பல மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் கட்சி தன் அமைச்சரவைக ளைக் கலைத்தது. இச்செய்கையால் ஆங்கிலேயர்கள் யதேச்சா திகார ஆட்சி செய்ய ஆரம்பித்தனர். 1940 - ஜனவரி 20-ல் காந்தியடிகள் கூறினார்; ''ஆங்கிலேயருடன் சமரசமாகப் போக நான் ஆவலாக உள்ளேன் என்ற சுபாஷின் குற்றச் சாட்டை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். பிரிட்டனிடம் நான் நம்பிக்கையை இழக்கவில்லை.''

1940 மார்ச் 19 ஆம் தேதி அன்று ராம்கர் நகரில் சுபாஷ் ஆங்கிலேயருடன் எந்தவிதச் சமாதானமும் வைத்துக் கொள் ளக் கூடாது என்ற அடிப்படையில் ஒரு மாபெரும் கூட்டத்தை நடத்தினார். இங்கு வந்த கூட்டம் அதே நேரத்தில் அங்கு வேறொரு இடத்தில் நடந்து கொண்டிருந்த 53-வது காங்கிரஸ் மாநாட்டிற்கு வந்த கூட்டத்தைவிட அதிகம். ராஜாஜி ஒருவர் தான் ''காங்கிரஸ் என்பது உலக அமைதியை உண்டாக்குவதற் கான நிறுவனம் அல்ல. இந்தியாவின் விடுதலைக்காகப் போராடும் ஒரு அரசியல் கட்சிதான்'' என்றார்.

இந்தியாவின் விதி 'காந்தி' என்பதை நன்கு உணர்ந்த சுபாஷ் வார்தா ஆசிரமத்திற்குச் சென்றார். இங்கு எப்பொழு தும் பால்தான் அருந்தத் தரப்படும். சுபாஷ் வருகிறார் என்பதற் காக அன்னை கஸ்தூரிபாய் 'டீ' தயார் செய்தார்கள். காந்தியடி கள் போராடத் தயாராகவில்லை. எனவே, தன் போராட்டத் திற்கு மகாத்மாவின் ஆசிகளை சுபாஷ் வேண்டினார். சுபாஷ் வெற்றி பெற்றால் அவரை ''நானே முன் வந்து முதலில் வாழ்த் துவேன்'' என்று காந்தியடிகள் கூறினார். இந்தச் சந்திப்பு தான் இவர்கட்கிடையே ஏற்பட்ட இறுதிச் சந்திப்பு.

கல்கத்தாவில் ஹால்வெல் நினைவுச் சின்னம் இருந்தது. இது அடிமையின் சின்னமாகக் கருதி, அதை நீக்க சுபாஷ் போராட்டம் ஆரம்பித்தார். இந்த நினைவுச் சின்னம் சிராஜ் உத் தௌலா என்ற முகமதிய மன்னருக்கு எதிராக ஆங்கிலேயரால் எழுப்பப்பட்டது. அப்போது வங்கத்தில் இருந்த பசலுல்ஹக் அரசாங்கம் இந்தச் சின்னத்தை எடுத்து முஸ்லீம்களைத் திருப் திப்படுத்தியது. இச்சின்னத்தை எடுக்கப் போராடிய சுபாஷை சிறையில் தள்ளி வெள்ளையரையும் திருப்திப்படுத்தியது.

சுபாஷின் வாழ்க்கையில் ஒரு வேதனையான நிகழ்ச்சி நடந்தது. அவர் வியன்னாவில் இருந்தபோது வல்லபாய் பட்டேலின் சகோதரர் ஒரு லட்சத்திற்கும் மேலான தொகையைச் சுபாஷிடம் தர ஒரு உயில் எழுதினார். இப்பணத்தை அயல் நாடுகளில் இந்தியாவின் விடுதலைக்கான பிரச்சாரத்திற்குச் செலவிடுமாறு அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆங்கில வழக்கு மன்றங்களுக்குப் போகவே கூடாது என்ற காந்தியடிகளும், பட்டேலும், பம்பாய் உயர்நீதி மன்றத்தில் பணம் தங்களிடம் தருமாறு வேண்டினர். நீதிமன்றம் பட்டேலிடம் தான் பணம் செல்ல வேண்டும் என்று தீர்ப்பு அளித்தது. படேலோ, இப்பணத்தைக் காங்கிரஸ் தலைவர் ஆசாத்திடம் தந்துவிட்டார்.

சுபாஷ் கூறினார், ''காங்கிரசின் அரசியலை நோக்கும் போது, அதன் தலைமையை நாம் இன்னும் அதிகமான சக்தியுடன் போராட வேண்டும். கொள்கையற்ற பழிவாங்கும் மனமுடைய கீழ்த்தரமான இந்த மக்களிடம் அதிகாரம் சென்றால் விடுதலை பெற்றபின் இந்த நாடு என்ன ஆவது?''

சுபாஷ் கல்கத்தா சிறையிலிருந்தபோது, டாக்காவிலிருந்து மத்திய சட்டசபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். வழக்கம்போல ஆங்கிலேயர்கள் அவரைச் சிறையிலிருந்து விடுவிக்கவில்லை. நட்ட நடு இரவில் அவரது சகோதரர் சரத் போஸ் அவரைச் சந்தித்தபின் எந்த காரணத்தை முன்னிட்டும் சுபாஷ் விடுவிக்கப்பட மாட்டார் என்று கூறினார்.

சுபாஷின் கைது இந்திய மக்களின் கோபத்திற்கு உள்ளானது; காந்தியவாதிகள் கவலையே படவில்லை. காந்தியடிகள் ஹரிஜன் பத்திரிக்கையில் கூறினார்; ''சுபாஷ் கைதானதை எதிர்த்து ஏன் நான் போராடவில்லை என்ற கேள்வியை ஆயிரம் முறை கேட்டுள்ளார்கள். காங்கிரஸ் கட்சிக்குச் சுபாஷ் இரு முறை தலைவராக இருந்தவர்தான்; தியாகங்கள் பல புரிந்தவர் தான்; பிறவித் தலைவர்தான்; ஆனால், இதன் அடிப்படையில் அவர் கைதானதை எதிர்த்துப் போராட முடியாது.''

காந்தீயவாதிகள் இந்த நேரத்தில் போராடத் தயாராக இல்லை. பாகிஸ்தானைப் பெறுவதைப் பற்றி ஜின்னா கனவு கண்டு கொண்டிருந்தார். வீரசவர்க்காரரோ இந்து இளைஞர்கள் ராணுவத்தில் சேர்ந்து பயிற்சி பெற வேண்டும் என விரும்பினார். இந்திய விவசாயிகளோ வாழ்வுடன் போராடிக் கொண்டு இருந்தனர். படித்த இளைஞர்கள் அரசாங்க வேலையிலிருந்து கொண்டு காலத்தைக் கடத்தினர். வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து தப்பிக்க பல இளைஞர்கள் பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்ந்தனர். இந்திய தொழிற்சாலைகள் போருக்காக அதிக நேரம் வேலை செய்தன. தொழிலாளர்கள் சம்பள உயர்வு பெற்றனர். கருப்புச் சந்தையில் முதலாளிகள் கொழுக்கலாயினர். நீதிக்கட்சி தன் பத்திரிக்கைகளை ஆங்கிலேயரின் சார்பாகப் போர்ப் பிரச்சாரம் செய்யக் கொடுத்து உதவியது.

இந்தியத் தலைவர்களிலேயே உலகப் போரைப் பயன்படுத்தி இந்தியா விடுதலை பெற சுபாஷ் என்ற ஒரே ஒரு தலைவர்தான் தீர்க்கமாக யோசித்துச் செயல்பட்டார் என வரலாற்று அறிஞர் மைக்கல் எட்வர்ட்டிஸ் எழுதுகிறார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தில் இதுவரை பதினோரு முறை சிறையிலிருந்தாகி விட்டது. உலக சரித்திரமோ வேறு இடத்தில் எழுதப்படுகின்ற போது தன் கடமையைச் செய்யாமல் சிறையிலே அடங்கியிருப்பது ஒரு மாபெரும் அரசியல் தவறாகும் என உணர்ந்த சுபாஷ் சிறையிலிருந்து தப்பி வெளிநாடுகளுக்குப் போக ரகசியமாகத் திட்டமிட்டார்.

இந்திய விடுதலைக்காகத் தன் 41-வது வயதில் ஆப்ரிக்காவிலிருந்து வந்த காந்தியடிகள் ஏறக்குறைய 25 ஆண்டுகள் போராடியும் விடுதலை கிடைக்கும்படியாக இல்லை. காந்தியடிகளின் போராட்டம் விடுதலை கீதத்தை பின்னணியாக்கியது. போர்ப் பரணி ஆக்கவில்லை. யுத்த சங்கை ஒலிக்க சுபாஷ் ஆயத்தம் ஆனார்.

இந்திய நாட்டை விட்டு சுபாஷ் வெளியேற வீரமிகு வங்க மகளிர் தங்கள் தங்க நகைகளைத் தந்தனர். கம்யூனிஸ்டுகள், அகாலிகள் போன்ற எல்லா கட்சிகளும், முஸ்லீம், சீக்கி

யர், இந்து, கிருத்துவர் என்ற வேறுபாடு இல்லாமல் உதவ முன் வந்தனர்.

சுபாஷ் செல்லும் வழியை ஆராய்வதற்காக காபூலில், சீனா என்ற தொண்டர் ராம்கிஷனையும், பகத்ராம் தல்வாரையும் சந்தித்தார். பகத்ராமின் சகோதரர், ஹரிகிஷன் ஒரு மாபெரும் தியாகி. இவர் பஞ்சாப் கவர்னரைக் கொல்ல முயன்றதற்காகத் தூக்கிலிடப்பட்டார். ராம்கிஷனும், சீனாவும் ஆப்கானிஸ்தானத்திலிருந்து ரஷ்யா போகும் வழியில் ஆக்ஸஸ் நதியில் ராம்கிஷன் மூழ்கிவிட்டார். சீனா கைது செய்யப்பட்டு மாஸ்கோ அழைத்து செல்லப்பட்டார். அவரை நன்கு விசாரித்த பின் சுபாஷ் ரஷ்யாவிற்குள் நுழைந்தால் அவரைத் தடையின்றி அனுமதிக்கும்படி ரஷ்ய அரசு ஆணை இட்டது.

சிறையில் இருந்த சுபாஷ் அதிகாரிகளுக்கு எழுதிய கடிதம் வரலாற்றுப் புகழ் பெற்றது. எக்காலத்திற்கும் பொருந்தும் கருத்துகளைக் கொண்டது.

''உடனடியாக எந்தப் பயனையும் தராவிட்டாலும் கூட தியாகங்கள் வீணாகப் போவதில்லை. கஷ்டப்படுவதின் மூலமும் தியாகத்தின் வழியாகவும்தான் எந்த ஒரு லட்சியமும் வளரும். அழிகின்ற இவ்வுலகில் எல்லாப் பொருள்களும் அழிவதுதான். ஆனால், லட்சியங்களும் கனவுகளும் அழியாது. லட்சியத்திற்காக ஒருவன் இறந்தாலும் அதே லட்சியத்திற்காக மீண்டும் ஆயிரக்கணக்கில் தோன்றுவர். ஒரு தலைமுறையின் கனவுகள் அடுத்த தலைமுறையில் நினைவாகும்.''

''என் நாட்டு மக்கட்குக் கூறுவேன் - அடிமையாக வாழ்வது என்பது மிகப் பெரிய சாபக்கேடு. அநீதிகட்கும் தவறான செயல்கட்கும், மனம் ஒப்ப இடம் தருதல் மிகப் பெரிய குற்றமாகும். நீங்கள் நல்வாழ்வைப் பெற விரும்பினால் உங்கள் வாழ்வைத் தந்தே ஆகவேண்டும் என்பதுதான் காலத்தால் மறையாத சட்டமாகும். எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்குப் போராடுவதே மிகச் சிறந்த நற்குணமாகும்''.

சிறையில் 6 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தபின் அவர் வீட்டில் சிறை வைக்கப்பட்டார். தன் அன்னையைக்கூட பார்க்க மறுத்துவிட்டுத் தியானத்தில் இருப்பதாகத் தனி அறைக்குச் சென்றார்.

ஜனவரி 17 ஆம் தேதி நள்ளிரவில் இந்திய விடுதலைக்காக யாருக்கும் தெரியாமல் மேற்கு நோக்கி தன் பயணத்தைத் தொடங்கினார். போஸ் ஆங்கில அரசின் ரகசிய போலீசை ஏமாற்றினார்.

போராடிப் பெற்ற சுதந்திரம் தான் நிற்கும்.

இல்லையேல் வந்த வழியிலேயே

திரும்பிப் போய்விடும்.

அப்பொழுது நிலைமை இன்னமும்

மோசமாகி விடும்...!

அடிமை வாழ்வைவிட விடுதலைக்காகப்

போராடும் மரணமே சிறந்தது!

பாகம் - இரண்டு

நேதாஜி

முகமது ஜியாவுதீன்

கண்காணிப்பாளர்
எம்பையர் ஆஃப் இந்தியா அஷ்ஷுரன்ஸ் கம்பெனி,
சிவில் லைன்ஸ், ஜபல்பூர்.

1941 ஜனவரி 11 ஆம் தேதி அன்று இரவில் இந்தச் சிறிய விசிட்டிங் கார்டுகளைப் பாக்கெட்டில் வைத்து நீண்ட அங்கி உடைய தாடி வைத்த உயரமான முகமதியர் ஒருவர், கல்கத்தா எல்கின் தெருவில் உள்ள வீட்டிலிருந்து வந்தார். கருப்புநிற ஜெர்மன் கார் வாண்டரர் நின்று கொண்டு இருந்தது. அதில் அவர் ஏற, மருத்துவக் கல்லூரி மாணவர் சுசிர்குமார் ஓட்டிச் சென்றார்; 200 மைல்கள் சென்ற உடன் கோமோ என்ற ரயில் நிலையத்தில் வந்த மெயில் ரெயிலில் மூன்று பெட்டிகளுடன் ஏறினார் ஜியாவுதீன். பெஷாவரில்

வந்து இறங்கிய ஜியாவுதீனை காபூலுக்கு அழைத்துச் செல்ல அங்கே பகத்ராம் ஏற்பாடு செய்ய ஆரம்பித்தார். பகத்ராம் ரகமத்கானாக மாறினார். ஜியாவுதீன் காது கேட்காத, பேச முடியாத ஊமையாக வேஷம் போட்டார்.

இதே நேரத்தில் கல்கத்தாவில் போஸ் இல்லாததைப் போலீசார் கண்டுபிடித்தனர். சுசிர்குமாரை லாகூரில் தனிமைச் சிறையில் அடைத்தனர். அவர் தந்தை சரத் சந்திரபோஸை குன்னூரில் வீட்டுக் காவலில் வைத்தனர்.

ரகமத்கானும், ஊமையான ஜியாவுதீனும் பெஷாவரிலிருந்து காபூலை நோக்கிப் புறப்பட்டனர். ஆனால், அவர்கள் சென்ற கார் கைபர் கணவாய் ஆரம்பத்தில் உள்ள கோட்டை அருகே நின்று விட்டது. போலீஸ் தேடுவார்கள் என பயந்து நடக்கத் தொடங்கி அட்டா ஷெரிஃப் என்ற மசூதியில் 4 நாட்கள் தங்கினர். மறுநாள் லால்புராவை அடைந்தனர். காபூல் நதியைத் துணிவுடன் கடந்தனர்.

நடந்து நடந்து கால்கள் வலிக்க ஆரம்பித்தன. கடுங்குளிர் கவ்வியது. பனி பெய்யத் தொடங்கியது. இறுதியாக ஒரு திறந்த லாரியின் மேல் அவ்விருவரும் ஏறினர். வெண்ணிறப் பனிக்கட்டியினைக் கருப்புக் கண்ணாடி இல்லாமல் பார்த்தால் கண்கள் குருடாக வாய்ப்பு உண்டு. இருப்பினும் பாவம் ஜியாவுதீன் தன் தலையில் மரக்கிளைகள் இடிக்காமல் இருக்க குனிந்து குனிந்து சென்றார். வழியில் இருவரும் ஒரு சிறிய வீட்டினைப் பார்த்தனர். அங்கு கணவன், மனைவி இருவர் இருந்தனர். ரகமத் கானுக்கும், ஜியாவுதீனுக்கும் உணவினை அந்தப் பெண் தந்தாள்; இரவில் இவர்களை வீட்டில் இருக்க வைத்துவிட்டு, வீட்டிற்கு வெளியே குளிரில் அந்தத் தம்பதிகள் தங்கினர்!

மறுநாள்தான் ஜியாவுதீனுக்கு அந்தத் தம்பதிகளின் முதல் இரவே அந்த இரவுதான் என்று தெரிந்தது.

இறுதியாக காபூல் சேர்ந்தவுடன் டீயில் ரொட்டியைத் தோய்த்துச் சாப்பிட்டார் ஜியாவுதீன். லாரி டிரைவர் தங்கும்

விடுதியில்தான் தங்கினார்கள். இங்கு ரகமத்கானுக்கோ பெர்ஷிய மொழி தெரியாது. குளிருக்கு ஏற்ற உடை இல்லாததால் ஜியாவுக்கு உடல்நலம் குறைந்தது. இதனிடையே போலீஸ்கார ஒற்றனின் தொல்லை ஆரம்பித்தது. அவன் ஜியாவுதீன் அணிந்திருந்த கைக்கடிகாரத்தை எடுத்துக் கொண்டான்.

இந்திய வியாபாரி உத்தம்சந்தை அவர்கள் இருவரும் அணுகினர். அவர் பெரிதும் உதவினார்; ஜெர்மானிய தூதரகம் 'பாஸ்போர்ட்' தர மறுத்துவிட்டது. ஆனால், இத்தாலியத் தூதரகம் நட்புறவுடன் செயல்பட்டது. ஆறு வாரம் கழித்து ஜியாவுதீன், ஓர்லேண்டோ மசோட்டாவாக பாஸ்போர்ட்டில் உருமாறினார். ஐரோப்பாவிலிருந்து வந்த வழிக்காட்டு பவர்கள் உதவியால் ரஷ்ய எல்லை நோக்கிப் புறப்பட்டார். முதலில் காபூலில் இருந்து பொக்காரோ வரை அழகான காடுகள்; உயரமான இந்துக் குஷ் மலைகள்; வரலாற்றில் இடம் பெற்ற அந்தக்கால மாகர் ஷரிஃப் நகரம்; நீண்ட நாணல்கள் வளர்ந்த ஓக்ஸைக் காடுகள்; ஓடங்கள் நிறைந்த படாசேகர்; இறுதியாக காலத்தால் அழிக்கப்படாத சமார்கண்ட் நகரம் ஆகியவைகளின் வழியே இயற்கை அழகைக்கூட மசோட்டா ரசிக்காமல் சென்றார்.

சமார்கண்டில் ரயில் ஏறி மாஸ்கோவை அடைந்து அங்கிருந்து விமானம் மூலம் மார்ச் 18 ஆம் தேதி பெர்லினை அடைந்தார் 'மசோட்டா' என்ற சுபாஷ்.

ஜெர்மனியில் எகிப்து போரில் தோற்ற இந்தியக் கைதிகள் நிறைய இருந்தனர். இக்கைதிகளைக் கொண்டு இந்திய லெஜியன் (I.N.A. ஈடானது) ஆரம்பிக்க நினைத்தார். 20,000 கைதிகளில் நாலாயிரம் தான் சேர்ந்தனர். இவர்கள் பயமுறுத்தி சேர்க்கப்படவில்லை. விடுதலை உணர்வு உடையவர்களே சேர்ந்தனர். பேரம் பேச முயன்ற வீரர்களைப் போஸ் சேர்த்துக் கொள்ளவில்லை. அன்னா பர்க் என்ற இடத்தில் இவர்கள் பயிற்சி பெற்றனர்.

போஸ் ஒரு மந்திரவாதிபோல் செயல்பட்டார். அவர் பேச்சில் யாவரும் மயங்கினர். அவர் தங்களுக்கு வேண்டுமென ஜப்பானியரும், இத்தாலியரும் விரும்ப ஆரம்பித்தனர். புலிக்குட்டியைக் காப்பதுபோல அவரை ஜெர்மானியர் காத்தனர். பெர்லினில் ஒரு இந்தியப் படைவீரர் கூறினார்: ''நான் பிரிட்டிஷ் படையில் இருந்தபோது பல இனங்கள், மொழிகள், ஜாதிகள் இருந்தன. ஆனால், இப்போது 'ஜெய்ஹிந்த்' ஒன்றுதான்.''

சுபாஷ் இப்படையினருக்குத் திப்புசுல்தானின் சின்னமான பாயும் புலியைச் சின்னமாகத் தந்தார். அவர்கள் ஹிட்லர், சுபாஷ் சந்திரபோஸ் ஆகிய இருவர் பெயரில் விடுதலைக்குப் போராடுவதாகப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள். இப்படையினரின் திறமையை பாலைவன நரியான ஜெர்மானிய ஜெனரல் ரோமல் புகழ்ந்தார்.

1942 ஜனவரி முதல், சுபாஷை மரியாதைக்குரிய தலைவர் 'நேதாஜி' என அழைக்க ஆரம்பித்தனர். நேதாஜி, படைவீரர்களுக்குக் கூறிய அறிவுரைகள் வரலாற்றுப் புகழ் பெற்றவை.

''பிரிட்டிஷார் நம்மைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் வைத்திருந்தனர். இன்று நாம் விடுதலைக்காக போராட வேண்டிய நாள் வந்துவிட்டது. நாட்டு விடுதலையைப் போராடித்தான் பெறவேண்டுமே தவிர, தர்மத்தின் மூலம் பெறக்கூடாது. விடுதலைக்காக விலை தரப்பட வேண்டும். அந்த விலை இந்திய இளைஞர்களின் ரத்தம்தான். மற்றவர்களிடமிருந்து விடுதலையைத் தருமத்திற்குப் பெற்றால் அந்த விடுதலையை வைத்திருக்க முடியாது. போராடிப் பெற்ற சுதந்திரம்தான் நிற்கும். இல்லையேல் வந்த வழியிலேயே போய்விடும். அப்பொழுது நிலைமை இன்னமும் மோசமாகிவிடும்''.

ஜெர்மனியில் அவருக்கு சுவாமி, அபிடுஹாசன், நம்பியார் உதவினர். ரேடியோ மூலம் நேதாஜி இந்திய மக்களிடம் உரையாற்றினார். ஆங்கிலம், தமிழ், இந்தி,

வங்காள மொழிகளில் நிகழ்ச்சிகள் இருந்தன. அந்த நிகழ்ச்சிகளில் இன்றைய இந்தியாவின் நாட்டுப்பண் 'ஜன கன மன' பாடப்பட்டது. வீரர்கள் தங்களுக்குள் 'ஜெய் ஹிந்த்' எனக் கூவினர்.

இந்தப் படை உலகப் போரின் இறுதியில் அமெரிக்கப் படையினரிடம் தோற்று, இங்கிலாந்தில் உள்ள கிரான்விச் நகரத்தில் சிறை வைக்கப்பட்டனர்.

நாட்டுக்காகவே உழைத்து வந்த நேதாஜியின் நெஞ்சில் காதல் உணர்வு மெல்ல ஆரம்பித்தது. 1933-ஆம் வருடம் செயலராக இருந்து இப்பொழுதும் மீண்டும் தன்னிடம் வந்த எமிலி ஷெங்கல் என்ற பெண்ணை அவர் திருமணம் செய்தார். அனிதா பிறந்தாள். இத்திருமணம் இந்து முறையில் நடந்ததாகவும் நம்பியார் பங்கு ஏற்றதாகவும் நேதாஜியின் நம்பிக்கைக்குரிய செயலர் மேஜர் பாஸ்கரன் நம்மிடம் தெரிவிக்கிறார்.

இதே நேரத்தில் இந்தியாவில் விடுதலைப் போரின் சூடு குறைய ஆரம்பித்தது. மகாத்மாவின் 'உள் குரல்' பேச ஆரம்பித்தது. அதன் கருத்தினை இரண்டே வார்த்தைகளில் சொல்லலாம். 'வெள்ளையனே வெளியேறு' என்பதுதான் அவை. 1942-ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 8-ஆம் தேதி பம்பாயில் நள்ளிரவில் மகாத்மா கூறினார். ''இந்தியாவை கடவுளிடமோ, அல்லது குழப்பத்திலோ விட்டு, ஆங்கிலேயனே இந்தியாவை விட்டுச் செல்'' ''அது அவர் எப்பொழுதும் பேசும் குரலாக இல்லை. எனக்கு இப்பொழுதே சுதந்திரம் வேண்டும். இந்த இரவிலே கிடைத்தாலும் சரி. நான் ஒரு மந்திரத்தைத் தருகிறேன். 'செய் அல்லது செத்து மடி' இந்தியா விடுதலை அடைய வேண்டும். அல்லது நாம் இறக்க வேண்டும். இந்த அடிமைத்தனையில் எத்தனை நாட்கள் வாழ்வது?'' இப்பொழுது இரு துருவங்களின் குரல்களும் ஒன்றாக ஒலிக்க ஆரம்பித்தன!

பெர்லின் - ஜெர்மனி - பிப்ரவரி 8, 1943

மலேயாவில் இந்திய தேசிய ராணுவத்திற்குத் தலைவனாக வரும்படி நேதாஜி அன்புடன் அழைக்கப்பட்டார். அங்கு இந்திய ராணுவ வீரர்களும், பொது மக்களும் அவரைத் தங்கள் கடவுளாகவே எண்ணினர். நேதாஜியின் வருகையை வற்புறுத்தினர். ஜப்பானிய அரசு, ஜெர்மன் அரசினை நேதாஜியை மலேயா அனுப்பக் கோரியது. ஜெர்மனி ஒப்புக் கொண்டது.

நேதாஜி விமானம் மூலம் சென்றால் அந்த விமானத்தை நேச நாடுகள் தாக்கலாம்; கப்பலில் சென்றால் மேலிருந்து குண்டுகள் போடலாம். எனவே, நீர்மூழ்கிக் கப்பலில் நேதாஜியை அனுப்ப ஜெர்மனி திட்டம் போட்டது!

ஜெர்மானியர் ஸ்டாலின்கிராட் பகுதியில் 17 மாதம் முற்றுகையிட்டு தோல்வியைத் தழுவிய நேரம். பகல் நேரத்தில் முதன் முதலாக ஆங்கிலேயர்கள் பெர்லின் மேல் விமானத்திலிருந்து குண்டு போட ஆரம்பித்து எட்டு நாட்கள் ஆயின.

எமிலிஷெங்கலிடமிருந்து விடை பெற்றார் நேதாஜி. கைக்குழந்தை அனிதா அவரைப் பார்த்துச் சிரித்தது. இவர்கள் இருவரையும் மீண்டும் நேதாஜி பார்க்கப் போவதே இல்லை.

அவர் தன் நீண்ட பயணத்தை ஆரம்பித்தார். மழையிலும், பனியிலும் உலகத்தின் உயரமான பகுதியான காபூலிலும் சமார்கண்டிலும் நடந்தே சென்றவர்தான் அவர். ஆனால், இப்பொழுது அவர் பயண முறை முற்றிலும் மாறுபட்டது. கீல் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட 'யூ' நீர்மூழ்கிக் கப்பலில் அவரும் அபிட்ஹாசனும் உள் இறங்கினர்.

அட்லாண்டிக் கடலின் வழியாக மேற்கு ஆப்ரிக்காவைக் கடந்து நன்னம்பிக்கை முனையைத் தாண்டினர். நீர்மூழ்கிக் கப்பலில் சிறிய இடத்தில் உட்கார்ந்து நேதாஜி பல புத்தகங்களைப் படித்தார். கப்பல் மடகாஸ்கர் தீவு அருகே சென்றது.

ஜப்பானிலிருந்து புறப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் ஐ-29 மடகாஸ்கர் அருகே சில நாட்களாகக் காத்துக் கிடந்தது. பருவநிலை மிக மோசமாக இருந்தது. கடல் கொந்தளிப்புக் காரணத்தால் இரு நீர்மூழ்கிக் கப்பல்களும் அருகில் நெருங்க முடியவில்லை. இருப்பினும் பெரிய அலைகட்கு இடையே ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து நேதாஜியும் அபிட்ஹாசனும் ஒரு சிறிய ரப்பர் படகின் மூலம் கயிற்றைப் பிடித்துக் கொண்டே ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பலை அடைந்தனர். நீர்மூழ்கிக் கப்பல்கள் இரண்டும் எதிர் எதிரான திசையில் மூழ்கித் தங்கள் பயணத்தை ஆரம்பித்தன. ஒரு கப்பல் தலைவனுக்கோ விலை மதிப்பிட முடியாத இந்திய ரத்தினத்தை ஆபத்தில்லாமல் சேர்த்த மகிழ்ச்சி. மற்ற கப்பலின் காப்டனுக்கோ ஜாக்கிரதையாக அந்த ரத்தினத்தை ஆபத்தில்லாமல் கொண்டு செல்ல வேண்டுமே என்ற கவலை.

இக்கப்பல் மே மாதம் 6-ஆம் தேதியன்று சுமத்திரா தீவுக்கு அருகே சபால் என்ற ஊரை அடைந்தது. அங்கிருந்து விமானம் மூலம் டோக்கியோ சென்று அடைந்தார் நேதாஜி!

நாட்டுச் சுதந்திரத்திற்காகத் தொண்ணூறு நாட்கள் நீர்மூழ்கிக் கப்பலிலேயே இருந்த பெருமை உலகச் சுதந்திரப் போராட்ட வீரர்களிடையே நேதாஜிக்குத்தான் உண்டு.

"அக்கினிக் குஞ்சொன்றுகண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்"

— மகாகவி பாரதியார்

பாகம் - மூன்று

இந்திய தேசிய ராணுவம்

INA

பகுதி - 1
சிங்கப்பூர்

இந்தியச் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பு முனை நாள். இந்தியாவிற்கு ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் வேண்டும் என்று பல ஆண்டுகளாக இந்தியர்கள் கண்ட கனவை நினைவாக்கிய நாள். சூரியனே மறையாத ஆங்கிலேயப் பேரரசிடமிருந்து, தமிழர், மலையாளி, பஞ்சாபி, வங்காளி, சீக்கியர், இந்து, முகமதியர் என்ற மாறுபட்ட உணர்வு மாறி "இந்திய தேசிய இராணுவம்" என்ற ஒரே உணர்வுடன் முதன் முதலாகப் பர்மாவிலிருந்து இந்தியாவிற்குள் நுழைந்து போரிட்டு, மணிப்பூருக்கு இருபத்தேழு மைல்கள் தெற்கில் லோக்டாக் ஏரிக்கரையில் உள்ள மொய்ராங் என்ற ஊரில் கர்னல் மாலிக் கொடி ஏற்றிய நாள் - 18 மார்ச் 1944.

மவுண்ட்பேட்டன் தன் துருப்புக்களுடன் பின் வாங்க நேதாஜியின் துருப்புக்கள் வெற்றி பெற்ற நாள். போர்க்குணம் மிக்க இனங்களாக (Martial Races) ஆங்கிலேயரால் சில இந்திய இனங்கள் அழைக்கப்பட்டன. அவைகளில் சில ராஜபுத்திரர் கள், காரிவாலிகள், ஜாட்டுகள், மராட்டியர்கள், கூர்காக்கள், பலூச்சிகள் மற்றும் பஞ்சாபிகள் ஆகும். இவர்கள் தலைமுறை தலைமுறையாக ராணுவத்தில் பணியாற்றி அரசியல் உணர்வு அற்றவர்களாக இருந்தார்கள். தாங்கள் வாங்கும் சம்பளம் வெள்ளையர்களால் தரப்படுகிறது. அவர்கள் உப்பை நாம் சாப்பிடுகிறோம் என்ற உணர்வு கொண்டு போராடுவார்கள். வீரத்திற்கு பேர் பெற்ற இந்தப் படையினரை, மலேயா விலோ, பர்மாவிலோ, இந்தியாவிலோ பிறந்து ரப்பர் மரத் தோட்டத்தில் உழைத்தோ சிறிய கடைகள் வைத்தோ வாழ்ந்து வந்த எளிய இந்திய மக்கள் போரிட்டு வெற்றி பெற்ற நாள். ஆப்ரிக்காவிலிருந்து வந்த உடல் பெருத்த படை வீரர்களையும் வெற்றி கொண்ட நாள்.

இ.தே.ரா. வீரர்கள் 6,000 பேர்களில் 2,600 பேர்தான் மீண்ட னர். அவர்களில் 2,000 பேர் நேராக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் தமி ழர்களே! இந்திய விடுதலைக்காக ரத்தம் சிந்திய இந்தப் பெயர் தெரியாத வீரர்களை இந்த ஐம்பதாம் ஆண்டு நாளில் நன்றியு டன் நினைவு கூர்வோம்.

மலேயா 1942

ஜிப்ரால்டர் தீவிற்குப் பிறகு தகர்க்க முடியாத கோட்டை என ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்ட சிங்கப்பூர் நகரை யும், மலேயாவையும் போர் மேகங்கள் சூழ்ந்தன. எப்பொ ழுது ஜப்பான் வந்து தாக்கும் என்ற அச்ச உணர்வுடன் அங்கி ருந்த ஆங்கிலேயர்கள் வாழ்ந்து வந்தனர். அங்கு ஏராளமான இந்திய, ஆஸ்திரேலிய, பிரிட்டிஷ், டச்சுத் துருப்புக்கள் குவிக் கப்பட்டிருந்தன. இவர்களில் பலர் ஜப்பானியருக்கு எதிராகப் போராட முடியாது என்ற எண்ணத்துடன்தான் இருந்தனர். ஜப்பானியர்கள் வந்தால் ஓடுவதற்குத் தட்டையான செருப்பு தங்களுக்கு இருக்கிறதா என்று பார்த்தனர். பல இராணுவ

வீரர்கள் இரவில் 'டாக்சி கேள்ஸ்' (பொது மகளிர்) உடன் சென்று மகிழ்ந்தனர். ஒரு பிரிட்டிஷ் பிரிகேடியர் பல மைல்கள் சென்று 'கேபரே' பார்த்து ரசித்து வந்தார். மது மயக்கத்தில் பலர் காலத்தைப் போக்கினர். ''எதிரியுடன் இறுதிவரை போரிட்டுச் சரணடையாமல் உயிரை விடவேண்டும்'' என்ற ஜெனரல் பெர்சீவலின் ஆணையைப் பல உயர் அதிகாரிகள் தூள் தூளாகக் கிழித்து எறிந்தனர்.

ஆனால், அவர்களுக்கு எதிரான ஜப்பானியர்களோ அவமரியாதையைவிட மரணமே மேல் என்ற 'சாமுராய்' உணர்வு கொண்டவர்கள். சரணடையாமல் இறுதிவரைப் போராடத் தயாரானார்கள். நம் நாட்டில் வீரர்களுக்குப் பரம்வீர சக்கரம், வீரசக்கரம் என பல பதக்கங்களைத் தருகிறார்கள். ஆனால், ஜப்பானியர்களின் ராணுவத்தில் அவ்வாறு இல்லை. இங்கு எல்லோரும் வீரமானவர்கள் என்ற உணர்வு உண்டு. எனவே, பல போர்களில் பங்கெடுத்துக் கொண்டாலோ அல்லது நீண்ட காலம் ராணுவத்தில் இருந்தாலோ தான் பதக்கம் வழங்கப்பட்டது.

சில சமயங்களில் தன் கணவன் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்பதற்காக, சில ராணுவ வீரர்களின் மனைவிகள் தங்கள் குழந்தைகளைக் கொன்று, தாங்களும் தற்கொலை செய்து கொள்வார்கள். மற்றும் சில ராணுவ வீரர்கள் முன்கூட்டியே தனக்கு இறுதிச் சடங்கு செய்து கொள்வதும் உண்டு. ''தண்ணீரில் பிணமாக மிதந்தாலும், மலையோரம் புல் வெளியில் பாடித் திரிந்தாலும், நான் நாட்டுக்காக உயிர் விடுவேன்'' எனச் சில வீரர்கள் பாடுவர். யாசுக்குனி என்ற கோவிலில் வருடத்திற்கு இருமுறை விழா நடைபெறும். நாட்டுக்காக இறந்த வீரர்கள் பெயர்கள் ஒரு பெட்டியில் இடப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோவிலில் வைக்கப்படும். இவர்கள் பின்பு ஆவியாக மாறி நாட்டுக்குப் போராடுவார்கள் என்பது நம்பிக்கை. நாட்டுக்காக இறப்பதை ஒரு மதக்கொள்கையாகவே கொண்டது 'புஷீடோ - சின்டோ' மதம். எனவே இந்த மதத்தைச் சேர்ந்த ஜப்பானியர் மரணத்துக்கு அஞ்சவில்லை. இருப்பினும் ஆயிரம் பெண்களின்

தலைமுடி கொண்ட துணிப்பட்டையை மணிக்கட்டில் கட்டிக் கொண்டால் மரணம் நெருங்காது என்ற நம்பிக்கையும் உண்டு.

ஜப்பானியர்கள் மணிக்கணக்கில் ஆடாமல் அசையாமல் தண்ணீரில் நிற்பார்கள். மரக்கிளைகளில் இருந்து சுடுவதில் வல்லுனர்கள். ஒரு சிறு பை அளவில் சோற்றை வைத்துக் கொண்டு காடுகளில் பல நாட்களைக் கழிப்பார்கள். உடல் வருத்தம் பார்க்கமாட்டார்கள். உடல் நலம் இல்லாதவர்களை யும் போரில் அடிபட்டவர்களையும் உடன் தூக்கிச் செல்ல மாட்டார்கள். பட்டாசுகளை வெடித்து நிறைய ராணுவம் இருப்பதுபோல் காட்டுவார்கள். இருட்டில் ஆங்கிலேயப் பெயர்களைச் சொல்லி அழைத்து அதற்குப் பதில் கூறும் நேச நாட்டு வீரர்களைச் சுட்டுக் கொல்லுவார்கள். வெல்வெட் என்ற வார்த்தையை ஜப்பானியர்கள் பெர்பெட் என உச்சரிப் பார்கள். இத்தகைய ஜப்பானியர்கள் வாயில் நுழையாத வார்த் தைகளை நேசநாட்டுப் படையினர் பின்னர் சங்கேத வார்த்தை களாக வைத்தனர்.

இத்தன்மை வாய்ந்த ஜப்பானியப் படைகளும் நேசநாட் டுப் படைகளும் போரிட ஆரம்பித்தார்கள். பிப்ரவரி 15, 1942 ஆம் வருடத்தில் நேசநாடுகள் சார்பில் ஜெனரல் பெர்சிவல் ஜப்பான் படைத் தலைவர் ஜெனரல் யாமாஷித்தாவிடம் சரண டைந்தார். சில நாட்களுக்குப் பிறகு பர்மா பணிந்தது.

பர்மா – சயாம் மரண ரயில் பாதை:

நேசநாடுகள் சரணடைந்தபின் இந்தியப் படையினரும் மற்ற வெள்ளையர் படையினரும் தனித்தனியே பிரிக்கப்பட் டனர். இந்தியர்கள் மலேயா கேம்புகளில் வைக்கப்பட்டனர். வெள்ளையத் துருப்புக்கள் 80,000 பேர் இருந்தனர். பலர் சிறு படகுகளில் தப்ப முயன்று மூழ்கி இறந்தனர். சிலர் சிறிய தீவுகளுக்குச் சென்று உணவு கிடைக்காமல் இறந்தனர்.

இத்தகையப் பெரும் படையை வைத்துத் தான்பியூசாயட் என்ற பர்மா நகரிலிருந்து பாங்காங் என்ற தாய்லாந்து தலைந கர் வரை ரயில் பாதை அமைக்க ஜப்பானியர் முற்பட்டனர்.

அப்பாதை 260 மைல்கள் மலைவழியாகவும், அடர்ந்த காடுகள் வழியாகவும் செல்லும். உலகில் பலவிதமான கொடிய நோய்கள் ஏற்படும் வாய்ப்பு உடைய இடங்களில் இதுவும் ஒன்று. தங்களிடம் போர்க் கைதிகளாக இருந்த 61,000 பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய, டச்சு, அமெரிக்கப் படை வீரர்களை ஜப்பானியர் அங்கே அனுப்பினர். மலேயாவில் ஏற்கனவே போடப்பட்ட ரயில் தண்டவாளங்கள் உடைக்கப்பட்டு அங்கு அனுப்பப்பட்டன. இந்த ரயில் பாதையை ஏற்படுத்த ஏராளமான தமிழர்களைப் பிடித்தனர். (நல்ல சம்பளம், நல்ல வசதி, குறைந்த நேர வேலை என ஏமாற்றி அழைத்தனர்).

அத்தமிழர்கள் தங்கள் குடும்பங்களுடன் சென்றனர். சில சமயம் கண்ணில் பட்ட தமிழர்களைப் பிடித்துச் சரக்கு வண்டிகளில் ஏற்றி அனுப்பினர். மலேரியா, டைபாயிடு, பெரிபெரி போன்ற நோய்களும், உணவுப் பற்றாக்குறையும் உண்டு. ஒரு நாளைக்கு 14 மணி நேரம், ஏன் மழையில் கூட வேலை! பாம்புக் கடியினாலும், காலராவினாலும், ஏராளமானவர்கள் இறந்தனர். காலரா வந்த தமிழர்களை உயிருடன் புதைத்தனர். இந்த ரயில் பாதை அமைக்க 26 முழத்திற்கு ஒரு மனிதர் வீதம் இறந்தனர். மொத்தம் 16,000 வெள்ளையரும் எண்ணற்ற தமிழர்களும் நரக வேதனை அனுபவித்த பின் இறந்தனர். குவாய் நதிமீது மேல் பாலங்கள் கட்டப்பட்டன. மலேயாவிற்கு நேதாஜி வந்தபின் பிரம்மச்சாரி கைலாசத்தை அங்கு அனுப்பினார். அக்கொடுமைகளைக் கேட்டபின் ஜப்பானியர்களை உடனே தமிழர்களைத் திரும்ப அனுப்பக் கூறினார்.

ஜப்பானியர்கள் மலேயாவில் நுழைந்தபின் போர்க்களத்திற்கே உரிய பல நிகழ்ச்சிகள் நடந்தன. காலியான வீடுகளில் நுழைந்து பலர் கொள்ளை அடித்தனர். திருடியதாகக் கூறிப் பல சீனர்களைக் கொன்று அவர்களின் தலைகளை ஜப்பானியர்கள் சாலைகளின் ஓரத்தில் பலகைகளில் ஆணி அடித்து வைத்தனர். போரிலும், காதலிலும் நியாயங்கள் ஏது? சட்டங்கள் ஏது? அரசாங்கத்திலிருந்து ஓய்வு பெற்ற முத்தய்யா என்பவர் பலர் பொருட்களைத் திருடி வந்ததைப் பார்த்தார். அவர் ஒரு பக்திமான். இவரும் புத்தி கெட்டு ஒரு வீட்டில் நுழைந்

தார். அங்கு முன்பேயே எல்லாப் பொருட்களும் எடுக்கப்பட்டுவிட்டன. ஒரே ஒரு அழகான இரும்புப் பெட்டிதான் இருந்தது. அதை அவர் எடுத்து வரும்போது ஜப்பானிய வீரனால் பிடிபட்டார். பெட்டிக்குள் என்ன என்று கேட்க, முத்தய்யாவினால் பதில் கூற முடியவில்லை. ஜப்பான்காரன் பெட்டியைத் துப்பாக்கியினால் உடைத்தான். உள்ளே நாவிதனுக்குரிய கத்திகள் இருந்தன. உடனே ஜப்பானியன் டை கட்டி, கோட்டு போட்டிருந்த முத்தய்யாவைச் சிறந்த நாவிதன் என நினைத்து, தனக்குச் சவரம் செய்யச் சொன்னான். பாவம் முத்தய்யா! பயந்துபோய் சவரம் செய்யும்போது மேலும் பல ஜப்பானிய வீரர்கள் வந்தனர். அவர்களுக்கும் கட்டாயமாகச் சவரம் செய்யும் நிலை ஏற்பட்டது. பிறகு ஜப்பானியர் ஒவ்வொருவரும் 25 சதம் தந்தார்கள். முத்தய்யா ஜம்பமாக வேண்டாம் என, அவர்களோ அதிக பணம் கேட்கிறான் என கருதி, ''நீ பண்ணிய சவரத்திற்கு இதுபோதும்'' என கத்தினார்கள். பணத்துடன் வந்த முத்தய்யா சில காதம் நடந்து வந்து பெட்டியைத் தூக்கி எறிந்தார்.

பகுதி - 2

மேஜர் பியூஜிவாராவும், மேஜர் மோகன் சிங்கும்

ஏந்த ஒரு நாடும் வேறு நாட்டின் மேல் படையெடுக்கும் முன்பு அந்த நாட்டைப் பற்றி நன்கு ஆராயும். அந்த நாட்டின் பொருளாதாரம், மக்களின் பண்பு, கலை, அரசியல் உணர்வு பற்றி ஒற்றர் மூலம் நன்கு தெரிந்துக் கொள்ளும். மலேயாவைக் கைப்பற்றுவதற்கு முன்பு 1941, செப்டம்பர் 18 ஆம் தேதி ராணுவ அதிகாரி ஜெனரல் சுகியாமா அறிவுக் கூர்மை உடைய மேஜர் பியூஜிவாராவை அழைத்து மலேயாவிலும் தாய்லாந்திலும் லட்சக்கணக்கான இந்தியர் உள்ளனர். அவர்களை இணைத்து ஆங்கிலேயர்கட்கு எதிராக இயக்கம்

ஆரம்பிக்க உதவ வேண்டும் எனக் கூறினார். பாங்காக் சென்ற மேஜர் பியூஜிவாரா அங்கு பிரித்திம்சிங் என்ற சீக்கிய இளைஞனைச் சந்தித்தார். இந்தியச் சுதந்திரத்திற்காக கண்களில் ஒளியுடன் இருந்த இந்த இளைஞரை மேஜர் வியப்புடன் பார்த்தார். பிரித்திம் சிங், அமர்சிங் என்ற வயதான போராளியை அறிமுகம் செய்தார். அமர்சிங் பல ஆண்டுகள் அந்தமான் மற்றும் ரங்கூன் சிறைகளில் வாடியவர்! பியூஜிவாரா இயக்கம் நடத்த தன் அலுவலகத்திற்கு எஃப் - கிக்கான் எனப் பெயர் இட்டார். பிரித்திம்சிங் பல இடங்களில் இந்தியச் சுதந்திரச் சங்கங்களை அமைத்தவர்.

இதே நேரத்தில் பல இந்திய ராணுவ அதிகாரிகள் பிரிட்டிஷ் அதிகாரிகளின் சுயநலத்தைக் கண்டு வெறுப்படைந்தனர். இந்தியர்களுக்கு சீக்கிரத்தில் பதவி உயர்வு கிடையாது. வெள்ளையர்கள் போகும் கிளப்பிற்கு அவர்கள் போக முடியாது. 1939-ன் ஆரம்பத்தில் மேஜர் பதவிதான் இந்தியர்களுக்குக் கிடைக்கிற மிகவும் பெரிய பதவியாக இருந்தது. முதல் உலகப் போரில் ஆங்கிலேயருக்கு மிகவும் நன்றியுடன் உழைத்த இந்திய ராணுவ வீரர்களுக்குச் சுபேதார் மற்றும் சுபேதார் மேஜர் என்ற பதவி உயர்வு - அதுவும் பல ஆண்டுகள் கழித்துத் தான் கிடைக்கும். ஆனால், வெள்ளைய அதிகாரிகள் 20 வயதிலேயே கமிஷன் அதிகாரிகள் ஆனார்கள். மலேயாவில் இந்தியப் படை வீரர்களை முன்னால் போரிட வைத்து வெள்ளையர்கள் பின்னால் இருந்து அடிபடாமல் தப்ப முயன்றனர்! மலேயாவிற்குத் தப்பிச் செல்லும்பொழுது ரயில்களிலும், கப்பல்களிலும், விமானங்களிலும் பிரிட்டிஷ் அதிகாரிகள், இந்திய அதிகாரிகளுக்கு இடம் தராமல் ஓடினர். போர் ஆரம்பித்த உடன் தலைவர்கள் இல்லாத இந்தியப் படையினர் காட்டிற்கு ஓடினர். தாங்கள் கூலிப்படை என்பதை உணர்ந்த பின்பு இந்திய சுதந்திரத்திற்காகப் போராட வேண்டும் என்ற உணர்வு பெற்றனர்.

இப்படிப்பட்டவர்களில் 33 வயது உள்ளவர் கேப்டன் மோகன்சிங். மேஜர் பியூஜிவாரா, மோகன் சிங்கைச் சந்தித்து இந்தியப் படையில் உள்ள வீரர்களைக் கொண்டு, இந்திய

சுதந்திரத்திற்குப் போராட வேண்டும் எனக் கூறினார். 1942 ஜனவரி 1-ஆம் தேதி இருவரும் சேர்ந்து அந்தச் சுதந்திரப் படைக்கு இந்திய தேசிய ராணுவம் -INA எனப் பெயரிட்டனர். மோகன் சிங் பியூஜிவாராவிடம் மலேயாவிற்கு நேதாஜி வந்தால் கிழக்கு ஆசியாவில் உள்ள எல்லா இந்தியரும் போராடுவார்கள் எனக் கூறினார். கிழக்கு ஆசியாவில் உள்ள ஒவ்வொரு இந்தியனும் நேதாஜியைத் தெய்வமாக வழிபடுவது கண்டு பியூஜிவாரா வியந்தார். ஜப்பானிய உயர் அதிகாரிகளுக்கு நேதாஜியை பெர்லினிலிருந்து சிங்கப்பூர் கொண்டு வர முயலுமாறு வேண்டினார்.

மோகன் சிங்கும் பிரித்திம்சிங்கும் சேர்ந்து இந்திய ராணுவ வீரர்களை ஆங்கிலேயர்க்கு எதிராகச் செயல்படுமாறு பல பிரசுரங்களை எழுதி விமானம் மூலம் தூவினர். 1942 ஜனவரி மாதத்திற்குள் மோகன் சிங், மேஜர் அக்ரம் என்ற முகமதிய அதிகாரி உட்பட பல படைவீரர்களை ஒன்று சேர்த்தார். பலருக்குப் பதவி உயர்வு தரப்பட்டது. ஆங்கிலேயர்கள் இருந்த வரை வெவ்வேறு சமையலறையும், சாப்பிடும் இடமும் பதவி நிலைக்கு ஏற்ப இருந்தன. இந்தப் பாகுபாடு மாற்றப்பட்டு எல்லாப் படையினருக்கும் ஒரே வகையான உணவு தரப்பட்டது.

1942 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் நாள் சிங்கப்பூர் - மாலை 2 மணி

சிங்கப்பூரில் நேசநாடுகள் ஜப்பானியரிடம் சரணடைந்த பின்னர் இந்திய ராணுவத்தினர் அனைவரும் பாரர் பார்க் ரேஸ் கோர்சுக்குக் கொண்டு வரப்பட்டனர். ஏறக்குறைய 45,000 படை வீரர்கள் கூடினர். லெப்டினன்ட் கர்னல் ஹண்ட் ஆங்கிலேயப் படை சார்பாக நின்று, தங்கட்கு நன்றியுடன் இந்தியர் பணிபுரிந்தனர். அவ்வாறே ஜப்பானியருடன் ஒத்துழைக்க வேண்டும் எனக் கூறி அவர்களை ஜப்பானியரிடம் ஒப்படைத்தார். பலஅதிகாரிகள் இச் செயலைக் கண்டு வெறுப்படைந்தனர். ஆடு மாடுகள் போல ஒரு வியாபாரியிடமிருந்து வேறு ஒரு வியாபாரிக்கு மாற்றப்பட்டது போல உணர்ந்தனர்.

ஜப்பானியரிடம் இந்திய ராணுவ வீரர்களைத் தான் ஆங்

கிலேயர்கள் சரணடைய வைத்தனர். ஆனால், அதே நேரத்தில் மலேயாவில் இருந்த பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய ராணுவ வீரர் களை ஜப்பானியரிடம் சரணடையச் செய்யவில்லை; இச்செ யல் இந்திய ராணுவ வீரர்களை மேலும் கோபப்படுத்தியது.

அடுத்து பியூஜிவாரா பேசினார்: ''அன்பிற்குரிய இந்திய வீரர்களே! ஜப்பான் ராணுவத்தின் சார்பாக உங்களின் சரணாக தியை ஏற்கிறேன். ஜப்பான் மக்கள், இந்திய தேசிய ராணுவம், இந்திய படையினர் ஆகியவர்கட்கு இடையே நட்புறவை ஏற்படுத்துவேன். சுதந்திரம், சமத்துவம், நட்புரிமை அடிப்ப டையில் வளமையுடன் வாழ்வதற்குச் செயல்படுவேன். இந் திய சுதந்திரத்திற்கு ஜப்பான் தன்னால் ஆன உதவிகளைச் செய்யும்'' இதனைக் கேட்ட படை வீரர்கள் மகிழ்ந்து தொப்பி களை வானில் தூக்கிப் போட்டுக் கொண்டாடினர். பிறகு பிரித் திம் சிங்கும், மோகன் சிங்கும் பேசினர்.

பல படை வீரர்கள் இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்த னர். சிலர் சேரவில்லை. சேராதவர்களை ஜப்பானியர்கள் பசி பிக் கடலில் உள்ள தீவுகட்கும், மற்றும் சோலமன் தீவிற்கும் அனுப்பினர். அவர்கள் உணவுப் பஞ்சத்தால் போரின் இறுதிக் காலத்தில் இறந்தனர்.

பொது மக்கள் சுதந்திர சங்கமாக IIL வளர கே.பி.கே.மே னன், கோஹோ, ராகவன் போன்றவர்கள் முயன்றனர். இந்த இயக்கம் வலுப்பெற ஜப்பானியர் ராஷ் பிஹாரி போஸ் என்ப வரை டோக்கியோவிலிருந்து அழைத்து வந்தனர். தீவிரவாதி ராஷ் பிஹாரி போஸ் இந்திய சுதந்திர வரலாற்றில் பெரும் பங்கு கொண்டவர்.

''பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலாமென்று பெரிய பல தீர்மானக் கோவை செய்து காசு பணம் பெருமையினால் தலை வராகிக் காங்கிரசை நடத்தியதைக் கண்டு நொந்து தேசநலம் தியாகமின்றி வருமோ என்று திலகர் பிரான் செய்த பெருங்கி ளர்ச்சி சேர்ந்து ஓசைபடாதுழைத்த பல பெரியோர் தம்முள் உண்மைமிக்க சிதம்பரமும் ஒருவனாவான்'' என்ற நாமக்கல் கவிஞரின் பாட்டுக்கு ஏற்ற போராளி ராஷ் பிஹாரி போஸ் ஆவார். அவர் ஒரு தீவிரவாதி.

ஆங்கிலேயர் 1912 ஆம் ஆண்டு கல்கத்தாவிலிருந்து சாம் ராஜ்யங்களின் கல்லறையான டெல்லிக்குத் தலைநகரை மாற்றினர். புதிய தலைநகரில் லார்ட் கிம்பர் லே ஹார்டிஞ் என்ற வைசிராய் யானை மேல் தன் மனைவியுடன் ஊர்வலம் வந்தார். அந்த ஊர்வலத்தில் வெடிகுண்டைப் போட்ட புரட்சிக் குழுவில் தலைமை வகித்தார் ராஷ் பிஹாரி போஸ். வைசிராய் உயிர் தப்பினார். அவர் உதவியாளர் இறந்தார். இந்த வழக்கில் ஆங்கிலேயர்கள் அமிர்சந்த், பாய், பாலமுகுந்த், பிஹாரி ஆகியவர்களை 1915-ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் நாள் அன்று தூக்கிலிட்டனர்; ராஷ் பிஹாரி போஸ் தப்பி ஓடினார்.

இந்த வழக்கில் ஒரு மாதரசியைப் பார்ப்போம். பாலமுகுந்த் லண்டனில் பயின்றவர். அவர் மனைவி ராம் ரக்கி, கணவர் மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறையின் அறையைப் போலவே தன்வீட்டின் அறையின் கதவுகளை மூடி இருண்ட அறை ஆக்கினார். கணவர் சாப்பிடும் சப்பாத்தி போல் கல், மண் நிறைந்த சப்பாத்தி செய்து சாப்பிட்டார். கணவர் தூக்கிலிடும் நாள் அன்று குளித்து தன் இருண்ட அறையில் படுத்தார். தன் இன்னுயிரை இழந்தார்.

தப்பி ஓடிய ராஷ் பிஹாரி போஸ் சீனா வழியாக டோக்கியோ சென்று அடைந்தார். அங்கு இவரைப் பிடிக்க ஆங்கிலேயப் போலீஸ் எவ்வளவு முயன்றும் முடியவில்லை. காரணம் அங்குக் கருப்பு டிரேகான் கழகத் தலைவர் டோயாமா மிட்சுரு உதவியளித்தார். ராஷ் பிஹாரி இருக்கும் இடம் நன்கு தெரிந்தும் கூட போலீஸ் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் அக்கருப்பு டிரேகான் உறுப்பினர்களைக் கண்டு பயந்தனர்.

1919-ல் ஜப்பானியர் வெளிநாட்டினரை மணப்பது அபூர்வம். இருப்பினும் டோஷிக்கா என்ற ஜப்பானியப் பெண் ராஷ் பிஹாரியை மணந்தார். 1925-ல் அந்த அம்மையார் மறைந்தார். அவர் மகன் ஜப்பானியப் படையில் சேர்ந்து உலகப் போரில் உயிர் துறந்தார். ராஷ் பிஹாரி போஸ் IIL தலைமை ஏற்று கிழக்கு ஆசியாவில் இந்தியச் சுதந்திரத்திற்காகப் போராட ஆரம்பித்தார்.

பகுதி - 3

சுவராஜ் நிறுவனம், பினாங் சிறைச்சாலை - சென்னை

INA வளர ஆரம்பித்தது. படைப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டன. ராணுவத் தலைமை அலுவலகம், வருவாய்ச்சட்டம், மருத்துவம், போக்குவரத்துத் துறைகள் ஏற்படுத்தப்பட்டன. காந்தி, ஆசாத், நேரு ஆகியோர் பெயரில் கொரில்லாப் படைகள் ஏற்படுத்தப்பட்டன. வீரர்களுக்குச் சம்பளம் தரப்பட்டது. கியானி, மாலிக், போன்ஸ்லே, ஷாநவாஸ்கான், ஷேகல், திம்மைய்யா, லோகநாதன், அழகப்பா போன்ற படைவீரர்கள் தலைமைப் பதவி ஏற்றனர்.

ஒவ்வொரு ராணுவத்திற்கும் 'ரகசியப் பிரிவு' உண்டு. அந்த வகையில் இந்திய தேசிய ராணுவத்தின் 'ஒற்றர் படை' 'இந்திய சுவராஜ்' நிறுவனத்தில் பயிற்சி பெற்றது. இது பினாங்கில் இருந்தது. இந்திய சுதந்திரத்திற்காக தங்கள் உயிரைப் பற்றிக் கவலைப்படாத இளைஞர்கள் சேர்ந்தனர்.

இந்த நிறுவனத்தின் தலைவர் இராகவன். துணைத் தலைவர் கர்னல் அழகப்பா. இங்கு ஒயர்லெஸ், போர் முறைகள் உடற்பயிற்சி நடைபெற்றன. சுமத்தரா தீவில் பாராசூட்டில் குதிக்கின்ற பயிற்சி தரப்பட்டது. இந்தியாவிற்கு நீர்மூழ்கிக் கப்பலிலோ பாராசூட்டிலோ வந்து, மக்களை வெள்ளையனுக்கு எதிராகத் தூண்டிவிடுதல், ஒயர்லெஸ் மூலம் ராணுவத்தின் நிலையை அறிவித்தல் போன்றவைகள் இவர்கள் கடமையாகும். ''நாட்டிற்கு உழைப்பதினால் எந்தச் சொந்த லாபத்தையும் நான் பெறமாட்டேன். இந்தியர்கள் யாவரும் என் சகோதரர்கள்'' என்ற உறுதிமொழியும் எடுத்தனர். இதன்படி முதல் கட்டமாக ஐந்து பேர் கோழிக்கோடு அருகில் உள்ள தண்ணூர் கடற்கரையில் 27.12.42-இல் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் இறங்கினர். மேலும் ஐவர் குஜராத் மாநிலத்தில் 'ஒக்காகா' கடற்கரையில் இறங்கினர். கேரளாவில் அன்று 'ரம்சான்' மாதம். கடற்கரையில் கோலாகலம். படகில் வந்து இறங்கிய சுதந்திர வீரர்களை நாட்டுப் பற்றே இல்லாத மக்கள் போலீசாரிடம் பிடித்து ஒப்படைத்துத் 'தங்கப் பதக்கம்' பெற்றனர்.

முதல் குழுவில் வந்த ஆனந்தன் காட்டிக் கொடுத்துவிட்டார். தரைவழியாக இந்தியாவிற்குப் பர்மாவிலிருந்து 'அரக்கான்' வழியாக வந்த ஏனைய பத்துப் பேர்களும் மேலும் கைது ஆனார்கள். இவர்கள் அத்தனை பேர்களும் சென்னைக் கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டு விசாரிக்கப்பட்டுச் சென்னை சிறையில் தள்ளப்பட்டனர். வெள்ளைய அரசு 'எதிரியின் ஒற்றர்கள்' என்ற சட்டம் இயற்றினர். இந்தச் சுதந்திர வீரர்கள் மன்னருக்கு எதிராகப் போரிட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டனர். கே.பி.பாலன் அப்ரூவராக மாறிவிட்டார். இவர்களை விசாரித்த மாக் என்ற நீதிபதி வைக்கம் அப்துல்காதர், பொஜா சிங் எஸ்.சி. பரதன், பெரேரா, ஆனந்தன் என்ற ஐவருக்கும்

மரண தண்டனை விதித்தார். சில சட்ட நுணுக்கங்கள் காரண மாக பெரேரா, மரணத் தண்டனையிலிருந்து மயிரிழையில் தப்பித்தார். மீதி தமிழ்நாட்டைச் சேர்ந்த கீராம்பூர் முகம்மது கனி, காரைக்காலைச் சேர்ந்த ஜி. சாந்தப்பிள்ளை, கேரளா வைச் சார்ந்த கே.ஏ.ஜார்ஜ், சி.பி.ஈப்பன், கே.எம். மம்மன், கே.கே. கோவிந்த், கே.எம். செரியன், எம். கங்காதரன், ஆந்தி ரத்தைச் சேர்ந்த சி.ஜி.கே. ரெட்டி, திரிபுராவைச் சார்ந்த ரஞ்சன் பால், ராய், டெல்லியைச் சேர்ந்த ஜே.எம்.கெளரா, மலேயா வைச் சார்ந்த ஆந்துரூ, டி.குரூஸ் என்ற 14 பேரும் 5 வருடங்கள் சிறையில் வாடினர்!

இவர்கட்கு அரசாங்க வக்கீலாக இருந்து மரண தண் டனை வாங்கிக் கொடுத்தவர், வி.எல். எத்திராஜ். இவர்தான் பிற்காலத்தில் எம்.கே.தியாகராச பாகவதர், என்.எஸ். கிருஷ் ணன் சார்பாக லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் வாதாடிய வர்.

தூக்கிலிடுவதற்குமுன் இரவில் அப்துல்காதர் எழுதுகி றார்: ''அமைதியையும் நிர்மலமான மனதையும் அல்லா எனக்கு இப்போது தந்துள்ளார். நாட்டுக்காக நான் என் வாழ்வை இழக்கிறேன். நீங்கள் உங்கள் மகனான என்னை இழக்கிறீர்கள். நாளை காலை 6 மணிக்கு இந்த உயிர் நின்று விடும். இந்தக் கரங்கள் எழுதாது. இதயம் துடிக்கவும் துடிக் காது. உணரவும் உணராது. நாட்டிற்காக உயிரைவிட்ட முழு நிலவினைப் போன்றவர்கள் முன்பு நான் மிகச்சிறிய மெழுகு வர்த்தி. ரம்சான் 7 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கும் 6 மணிக்கும் இடையே நான் மரணம் அடைவேன். இதோ கடிகாரம் 12 அடிக்கிறது. என் மரணத்தின் முதல் கட்டம் ஆரம்பித்துவிட்டது. என்றேனும் ஒரு நாள் உங்கள் மகன் தைரி யத்துடன் மரணத்தைச் சந்தித்தான் என்பதை அறிவீர்கள்'' - ''மணி அடிக்கிறது, மரணம் எதிர்கொள்கிறது''.

1943-ஆம் வருடம் செப்டம்பர், 10 அதிகாலையில் கைதி கள் அனைவரும் சென்னைச் சிறையில் 'வந்தே மாதரம்' பாடி னர். தூக்கு மேடைக்குச் சென்றவர்கள் ''பாரத மாதா வாழ்க! காந்தி வாழ்க!'' என கூறிக் கொண்டே சென்றனர்.

தூக்குமேடையில் இந்துக்கள், கிருத்துவர்கள், முகமதியர் கள், சீக்கியர்கள் என இவர்களைத் தனியாகத் தூக்கிலிட ஆயத் தங்கள் செய்யப்பட்டன. அப்துல்காதர் இறுதி விருப்பமாக இந்து மதத்தைச் சேர்ந்த ஆனந்தனையும் தன்னையும் ஒரே நேரத்தில் தூக்கிலிட வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

இவர்களுடைய சடலங்கள் ஓட்டேரி மயானத்தில் புதைக் கப்பட்டன. இதே நேரத்தில் 'சிட்டகாங்' காக்ஸ்பசார் அருகில் மூன்று இளைஞர்கள் பிடிபட்டனர். டி.பி.குமரன் நாயர், ராமுத் தேவர், சேதுமாதவன் என்ற சங்கரன் நாயர் ஆகிய மூவரும் இந்திய சுவராஜ் நிறுவனத்தில் பயிற்சி பெற்றவர்கள். இவர்களை பர்மா எல்லைக்குள் இந்திய ராணுவத்தினர் சுட்ட போது குமரன் நாயருக்குக் காலில் அடிப்பட்டது. சேதுமாத வன் வங்கச் சிறையில் சித்ரவதைத் தாளாமல் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது. 19 வயது உள்ள ராமுத் தேவரும், 38 வயது உள்ள குமரன் நாயரும் சென்னைச் சிறைக் குக் கொண்டு வரப்பட்டனர். ராமுத் தேவர் முகவரி:

ராமுத் தேவர் என்ற அப்பாரு
ராமலிங்கத் தேவரின் மகன்
இனம் - மறவர்
தூம்படக்கைக்கோட்டை
ராஜசிங்கமங்கலம்
பரமக்குடி தாலுக்கா
ராமநாதபுரம் மாவட்டம்

இவர்கள் மீதான வழக்கில் நீதிபதி என்.டி.கிருஷ்ணராவ் ஐ.சி.எஸ்., இப்பொழுதும் அரசாங்க வக்கீல் வி.எல். எத்திராஜ் தான். சென்னை வக்கீல் டி.எம். கஸ்தூரி ராமுத் தேவருக்காக வாதிட்டார். இந்த வழக்கில் பல விந்தையான செய்திகள்! ராமுத் தேவர் பர்மா எல்லையில்தான் கைது செய்யப்பட்டார். இருப்பினும் இந்தியர்கள் எங்கே தவறு செய்தாலும் அவர்க ளுக்குத் தண்டனை தரும் அதிகாரம் நீதிபதிக்கு உண்டு எனக் கூறி இருவருக்கும் மரண தண்டனை அளித்தார்; தவறு செய் யும்போது ராமுத் தேவருக்கு 18 வயது. எனவே, கருணையுடன் கவனிக்கலாம் என்று கூறி மரண தண்டனை அளித்தார்;

சென்னை உயர்நீதிமன்றத்தில் 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 வெள்ளிக்கிழமை அன்று நீதிபதி ஹேப்பல் ''ஐயோ 18 வயது'' என்று முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டே தூக்குத் தண்டனையை ஊர்ஜிதம் செய்தார்.

டி.பி.குமரன் நாயர் என்று அழைக்கப்பட்டாலும், அவர் எல்லாக் கடிதங்களிலும் டி.பி.குமார் என்றே எழுதினார். அவர், தம் மனைவிக்கு எழுதிய கடிதம்: ''நீயும் நானும் ஆண்டுகள் சிலதான் ஒன்றாக வாழ்ந்தோம். உனக்கோ வயது குறைவு தான். நான் இறந்துபோனால் மீண்டும் திருமணம் செய்து கொண்டு வாழ்க. வீணாக என்னை நினைத்து வாழ்நாளை வீணாக்காதே.'' ஆனால், அந்த அம்மையார் திருமணம் புரியாமல் 50 வருடங்களாக குமரன் நாயர் நினைவிலேயே இன்றும் கோழிக்கோட்டில் வாழ்ந்து வருகிறார்.

தன் உறவினர்களுக்கு எழுதும் கடிதத்தில் ''7.7.44 அதிகாலையில் நான் அடுத்த உலகை நோக்கிப் பயணம் செய்வேன்'' என எழுதினார். அதே முறையில் ராமுத் தேவரும் 19 வயதில் தூக்கிலிடப்பட்டார். இவர்கள் உடலும் சென்னை ஓட்டேரியில் புதைக்கப்பட்டன.

மூன்றாவதாக ஒரு குழுவும் வந்தது. இவர்கள் தேசபக்தி உடையவர்கள். 1. என்.கே.ஞானராம் அல்லது உன்னிராம், 2. மூர்த்தி அல்லது இரத்தினம், 3. ராமசாமி அல்லது முத்துமணி, 4. சேது அல்லது கிருஷ்ணன். இத்தமிழர் கூட்டத்தை 1945-ல் மார்ச் மாதத்தில் தூக்கிலிட்டு வெள்ளையர்கள் மகிழ்ந்தனர்.

இந்த வழக்குகள் அத்தனையுமே, ராஜீவ் காந்தி வழக்கினைப்போல சிறைச்சாலையில் பொதுமக்களுக்குத் தெரியாமல் இன்கேமராவில் நடந்தது. பின்பு ஒருமுறை டெல்லி மேல்சபையில் பேராசிரியர் என்.ஜி.ரங்கா கேள்விக்கு சர் ஜான் த்ரோன் என்ற அமைச்சர் பதிலளிக்கையில் தேசத் தியாகிகளின் வழக்கு விவரங்களைப் பொது மக்களுக்குத் தெரிவிக்க முடியாது எனக் கூறினார்.

வைக்கம் அப்துல் காதரின் நினைவுச் சின்னம் 1988-இல் கேரள ஆளுநரால் திறக்கப்பட்டது. சென்ற ஆண்டு செப்டம்பர் 10-ல் ஐம்பதாம் ஆண்டு விழா இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. எல்லாக் கட்சியினர், எழுத்தாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் நீதிபதிகள் பங்கெடுத்து சிறப்பித்தனர். குமரன் நாயர், நினைவாகக் கோழிக் கோட்டில் ஒரு தெருவுக்குப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் சென்ற ஆண்டு செப்டம்பர், 10 அன்று ஓட்டேரியில் உள்ள மயானத்தில் திரு. லெப்டினண்ட் சந்திரன், நேதாஜியால் டோக்கியோவிற்கு விமானப் பயிற்சிப் பெற அனுப்பப்பட்ட கேப்டன் தாசன், விஜயலட்சுமி மற்றும் பலர், மலர் வளையம் வைத்தனர். இந்திய சுவராஜ் நிறுவனத்தில் பயிற்சி பெற்று ஒற்று வேலைக்காக இந்தியா வரமுடியாது போன கே.ஏ.கே.மேனன் சென்னையில் தான் உள்ளார்.

7.7.44-ல் ராமுத் தேவர் தூக்கிலிடப்பட்டார். ராமுத் தேவர், ராமசாமி மற்றும் ஏனைய தமிழர்கள் நினைவாகத் தமிழ் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

பகுதி - 4

இருள்

ஒரு சுதந்திர முகத்தின் இரு கண்கள் போல ராணுவப் பிரிவாகINA-வும், பொது மக்கள் பிரிவாகIIL-ம் செயல்பட்டன. எந்த ஒரு சுதந்திரப் போராட்ட இயக்கமும் வளர, வளர அதற்குப் பல பிரச்சனைகள் எழும். மக்கள் அதிகம் சேர, சேர பல கோணங்களில் குழப்பங்களும் ஏற்படும். 1942 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் காங்கிரஸ் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை ஆரம்பித்தபோது இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் மேலும் வலுப்பட்டது.

மலேயாவில் INA-வில் ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் வேலைகளை ராஜினாமா செய்துவிட்டுப் படையில் சேர வந்த னர். படையில் இடம் தராவிட்டால் கோபப்பட்டு அதிகாரிக ளைத் திட்டினர். மக்கள் உற்சாகம் எல்லைக் கடந்தது!

ஆனால், ஜப்பானியர்கள் அங்குள்ள சில இந்தியப் படை யினரை மோகன்சிங்கிற்குத் தெரியாமல் கடின வேலை செய்ய வேறு இடங்கட்கு மாற்ற முயன்றனர். INA-விற்கும் IIL-க்கும் கூட கொள்கைகள், அலுவலக முறை, போர்க்காலத் தந்திரங்க ளிலும் முரண்பாடுகள் மெல்ல ஏற்பட்டன. தவிர, திறமை யான பியூஜிவாரா மாற்றப்பட்டு கர்னல் இவாக்குரோ ஜப்பா னியர்கள் சார்பில் பதவி ஏற்றார்.

பியூஜிவாரா INA-வைத் தன் குழந்தை போல் வளர்த்தார். அவருக்கும் இந்தியப் படையினருக்கும் தனிப்பட்ட நட்புறவு இருந்தது. இவாக்குரோ ஒரு கை தேர்ந்த அரசியல்வாதி. அவர் கூறினார்: (''Open diplomacy can not be succeed. Everything must be done in secrecy''.) ''அரசியலில் ரகசிய வழிகள்தான் தேவை''. இவருக்கும் IIL-க்கும் உறவு மெள்ள சீர் குலைந்தது.

INA ரேடியோ நிகழ்ச்சிகளில் ஜப்பானியர் குறுக்கிட்டனர். அதன் தலைவர் கே.பி.கே. மேனன் எரிச்சலடைந்தார். பாங் காக் தீர்மானப்படி மலேயாவை விட்டு ஓடிய இந்தியர்களின் பொருள்கள் IIL-க்குத் தரவேண்டும் என்ற தீர்மானம் புறக்க ணிக்கப்பட்டது. ஜப்பானியர்கள் இந்தியர்களின் பொருள்க ளைச் சொந்தம் கொண்டாடினர். இந்திய - ஜப்பானியப் படை வீரர்களுக்கு இடையே மோதல்கள் ஏற்பட்டன. சல்யூட் அடிப் பதில்கூடத் தகராறு. இதனிடையே ராஷ் பிஹாரி போஸ் ஜப் பானியரின் கைப்பாவை என IIL எண்ண ஆரம்பித்தது. மேலும் ஒரு பெரிய குழப்பம் கர்னல் கில் என்பவரால் ஏற்பட்டது. இவர் மோகன் சிங்கின் அணியைச் சேர்ந்தவர். இவர் ஒற்று வேலைக்காக இரண்டு குழுக்களை இந்தியாவிற்கு அனுப்பி னார். ஒரு குழு இந்தியாவில் உள்ள தலைவர்கள் INA பற்றி என்ன நினைக்கிறார்கள் என அறிந்து செய்தி தெரிவிக்க அனுப் பப்பட்டது. அப்படை யானை மேல் ஏறி இந்தியாவிற்குள் நுழைந்து வெள்ளையரிடம் சரண் அடைந்தது. பாவம்!

INA-வுக்கு ஒரு யானை நஷ்டம். மற்ற குழு நடந்து இந்தியாவிற்கு வந்தபோது இந்திய போலீசால் கைது செய்யப்பட்டது.

ஜப்பானியர்கள், கில்லை ஒரு பிரிட்டிஷ் ஒற்றன் எனக் கருதினர். அவரை கைது செய்தனர். பிறகு போர் முடியும் வரைக் கில் சிறையில் இருந்தார். இன்றும் பல INA-வினர் கில்லை ஒற்றன் என்றே நம்புகின்றனர். இக்கூற்றைக் காப்டன் லட்சுமி ஆதரிப்பதாக திரு.கே.ஏ.கே. மேனன் கூறுகிறார். பின்பு நேரு, சுதந்திர இந்தியாவில் கில்லிற்குத் தூதர் பதவி தந்தார்.

இந்த நேரத்தில் IIL உறுப்பினர்கள் இவாகுரோவை பார்க்கச் செல்லும்பொழுது அவர், ''நீங்கள் ஜப்பானியரின் கைப்பாவையாக இருப்பதில் பெருமை கொள்ளுங்கள்'' எனக் கூற அவர்கள் கோபம் கொண்டு தங்கள் பதவியை ராஜினாமா செய்தனர். மோகன் சிங் ஆத்திரத்தின் உச்ச எல்லையை அடைந்தார். அவர் கூறினார்: ''மஞ்சூரியா போன்று எங்களுக்குப் போலி சுதந்திரம் வேண்டாம். நாங்கள் எங்கள் நாட்டின் மேல் படையெடுத்த பல மன்னர்களைப் பார்த்திருக்கிறோம். எனவே, நீங்கள் இந்தியாவைக் கைப்பற்ற எண்ணினால் உங்களை முழுமையாக எதிர்ப்போம். ஜப்பானுக்குத் தேவையானது சுதந்திரமான பலம் பொருந்திய நட்புறவு கொண்ட இந்தியாதான். அதுதான் உலக அமைதிக்கும், வளர்ச்சிக்கும் மனித இன மேம்பாட்டிற்கும் உதவும்.''

சில நிபந்தனைகளை ஏற்க மறுத்ததால் மோகன் சிங்கை ராஷ் பிஹாரி போஸ் டிஸ்மிஸ் செய்தார். 1942 டிசம்பர் 29 முதல் போர் முடியும் வரை முதலில் சிங்கப்பூரிலும் பின்பு சுமத்தரா தீவிலும் அவரைச் சிறை வைத்தனர். கிழக்கு ஆசியாவில் இந்திய சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்த மோகன்சிங் போராட்டம் இப்படி முடிந்தது. ஆனால், மோகன் சிங் INA-விற்குத் தான்தான் தனித் தலைவன், என்னைக் கைது செய்தால் INA வைக் கலைக்க வேண்டும் என்று ஆணையிட்டதால் படையினர் பலர் விலக ஆரம்பித்தனர். இந்த நேரம் பார்த்து ஜப்பானியர் போர்க் கைதிகள் சிலரை மேற்கு கினிக்கு அனுப்பினர்.

சுதந்திரப் போராட்டத்தில் இருள் சூழ ஆரம்பித்தது. மலேயாவில் இருந்த தமிழ் மக்கள் மீண்டும் INA செயல்பட வேண்டும் என ஊர்வலம் நடத்தினர். அவர்களின் விடுதலை வெறி அடங்கவில்லை.

வயதான ராஷ் பிஹாரி முழுமையாகச் செயல்பட ஆரம்பித்தார். பல அதிகாரிகளைத் தினமும் சந்தித்தார். INA மீண்டும் புத்துணர்வு பெற மேஜர் போன்சிலே, ஷா நவாஸ்கான், கியானி, ஷேகல், ஹபிபூர் ரஹ்மான், சேட்டர்ஜி, லோகநாதன் போன்றோர் பெரும்பங்கு வகித்தனர்.

மலேயாவைச் சேர்ந்த மக்கள் சார்பாக இராகவன் தலைமையில் ஒரு குழு ராஷ் பிஹாரி போஸைச் சந்தித்தப் பொழுது பெர்லினிலிருந்து நேதாஜி வந்து கொண்டு இருக்கின்றார் என்ற செய்தியைக் கூறினார். மக்கள் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர்.

பகுதி - 5

ஒளி பிறந்தது

குகையிலிருந்து புலி புறப்படுவதைப்போல் பெர்லினிலிருந்து புறப்பட்ட நேதாஜி, அபிட்ஹாசனுடன் அட்லாண்டிக் கடல், இந்தியக் கடல், பசிபிக் பெருங்கடல் வழியே 120 நாட்களுக்குப் பிறகு டோக்கியோ வந்தடைந்தார். இந்திய நாட்டின் விடுதலை ரத்தம் சிந்தும் இந்தியர்களின் தியாகத்தால் தான் முழுமையாகப் பெற முடியும். ஜப்பானியரால் தரப்படும் விடுதலை அடிமைத்தனத்தைவிடக் கேவலமானது என்பதை நன்கு உணர்ந்தவர் நேதாஜி. இருப்பினும் ''எதிரியின் எதிரி எம் நண்பர்'' என்ற அடிப்படையில் ஜப்பானியரிடம் உதவி கோரினார்.

மோகன் சிங் காலத்தில் ஏற்பட்ட குழப்பத்தால் டோக்கியோவில் ஜப்பானியப் பிரதமர் டோஜோ INA வைப் பற்றி சரியான எண்ணம் கொள்ளவில்லை. ஆனால், ஜப்பான் படைத் தலைவர் ஜெனரல் சுகியாமா நேதாஜியைக் கண்டவுடன் மனம் மாறினார். நேதாஜியின் நாட்டுப்பற்று அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. சுகியாமாவின் முயற்சியால் நேதாஜி டோக்கியோ வந்தபின் இருபது நாட்களுக்குப் பிறகு ஜூன் 10 அன்று டோஜோவைச் சந்தித்தார்.

நேதாஜியின் உறுதியான வார்த்தைகளும், நாட்டுப்பற்றும் மட்டுமல்லாமல் அவரின் ஒளி படைத்தக் கண்களும் உரம் வாய்ந்த குரலும் டோஜோவை முழுமையாக மாற்றியது. டோஜோ இந்திய மக்கட்கு உதவத் தயாரானார். இதனை அங்குள்ள பாராளுமன்றமான டயட்டில் அறிவித்தார். நேதாஜி அங்கு ராஷ் பிஹாரி போஸ், கருப்பு டிரேகான் தலைவர் டோயோமா ஆகியோரைச் சந்தித்தார். வானொலி மூலம் இந்திய மக்களிடம் பேசினார்.

1943 ஜூலை 2 சிங்கப்பூர்

இந்திய மக்கள் வெள்ளத்தின் இடையே நேதாஜி சிங்கப்பூரில் விமானத்தில் வந்து இறங்கினார்.

''இளையபாரதத்தினாய் வா வா வா
எதிரிலா வலத்தினாய் வா வா வா
ஒளியிழந்த நாட்டிலே நின்றேறும்
உதய ஞாயிறொப்பவே வா வா வா''

என்று மக்கள் ஆர்ப்பரித்து வரவேற்றனர்.

இங்குள்ள தமிழர்களில் சிலர் டோக்கியோவிலிருந்து வந்தது உண்மையான நேதாஜி தானா என்று ஆராய்ந்தனர். ஏன் என்றால் போர்க்காலத்தில் ஒவ்வொரு தலைவருக்கும் டூப் உண்டு. பின்பு, வந்தவர் நேதாஜி தான் என உறுதிப்படுத்திக் கொண்டனர்.

ஜூலை நான்காம் தேதி ராஷ் பிஹாரி போஸ் பேசினார்: ''என் வாழ்விலே இது மிகவும் மகிழ்ச்சியான நாள். நம் தாய் நாட்டிலிருந்து வந்த ஒப்பற்ற ஒரு பொக்கிஷத்தை உங்களுக் குத் தருகிறேன். இந்திய இளைஞர்களிடையே நேதாஜி வீரம் மிக்கவர்; நன்கு செயல்படுபவர். விடுதலைக்காக இறுதிவரை போராடுபவர். இன்று நான் என் தலைமைப் பதவியை ராஜி னாமா செய்து நேதாஜியைத் தலைவராக நியமிக்கிறேன்'' நேதாஜி நன்றி கூறிப் பேசினார்: ''விடுதலைக்காக நீங்கள் தாகம், பசி, நீண்ட தூரக் கால்நடைப் பயணங்கள், ஏன் மரணத் தைக் கூட ஏற்க வேண்டி இருக்கும். இவைகளைக் கடந்தால் தான் விடுதலை உங்கள் கைவசம் ஆகும்''. மறுநாள் நேதாஜி அவர் வாழ்வில் மிகப் பெருமையான நாளை அடைந்தார். INA வின் ராணுவ அணி வகுப்பைப் பார்த்தார். ஆனந்தக் கண்ணீர் சிந்தினார். அப்படையினரை வைத்த கண் வாங்காமல் பார்த் தார். 'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' எனப் போர் முழக்கம் செய்தார். அடுத்த நாள் ஜப்பான் பிரதமர் டோஜோ வந்து வாழ்த்தினார்.

மறுநாள் நேதாஜி INA தலைமைப் பதவி ஏற்றார்.

1943, ஜூலை 9

இந்த நாளை கிழக்கு ஆசியாவில் உள்ள இந்திய மக்கள் மறக்கவே முடியாது. விடுதலை வேட்கை கொண்ட 60,000 இந்திய மக்கள் கொட்டும் மழையிலே நேதாஜியின் கம்பீர மான குரலைக் கேட்டனர். உணர்ச்சி வசப்பட்டு நின்றனர். மலேய மக்கள், சீனர்கள்கூட வியந்தனர். இந்தியப் படைக் கைதிகளில் மேலும் 2000 பேர் INA-வில் சேர்ந்தனர். நேதாஜி முழுமையாகச் செயல்பட ஆரம்பித்தார்.

இரண்டாம் உலகப்போரின் துவக்கத்தில் பிரிட்டிஷ் அர சும் ஜெர்மானிய அரசும் ஒன்றுக்கொன்று போரிட ஆரம்பித்த பொழுது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இது ஏகாதிபத்தியப் போர் என்று கூறியது. ஆனால், பிறகு ரஷ்யாவை ஜெர்மானி யப் படைகள் தாக்கியதைத் தொடர்ந்து, பிரிட்டிஷ் அரசும் ரஷ்ய அரசும் போரில் ஒன்றாக இணைந்தவுடன் அப்போ

ரினை 'மக்கள் போர்' என அழைத்து ஆங்கிலேயருக்கு மிகவும் உதவ ஆரம்பித்தது.

கம்யூனிஸ்ட்கள் ஆங்கிலேயருக்கு உதவுவதற்காகக் கூட் டங்கள் போட்டு ஆதரவு தெரிவித்தனர். நேதாஜியை, ''சர்வா திகாரி, பாசிச அயோக்கியன், ஜப்பானியருக்குப் பின் ஓடும் நாய்'' என இதழ்களில் எழுதினர்.

ராமுத் தேவர் போன்றவர்கள் இந்தியாவிற்கு வந்தபொ ழுது அவர்களைப் பிடித்துக் கொடுக்கச் சொன்ன பெருமை இவர்கட்கு உண்டு. ''இந்திய உடையில் வரும் தேசத் துரோகி கள் ஐந்தாம் படையினர்'' என ராமுத் தேவர் போன்றவர்களை இக்கட்சி அழைத்தது.

இந்நிலையில் மலேயாவில் கம்யூனிஸ்டுகள் பலர் இருந் தனர். தமிழர்களும் அக்கட்சியில் இருந்தனர். அவர்களை நேதாஜி அன்புடன் அழைத்தார். தமிழர்கள் சார்பாக வந்தவர், மலேயா கணபதி. அவருடன் செல்வநாதன், குருதேவன் வந்த னர். கணபதி நேதாஜியால் பெரிதும் கவரப்பட்டார். அவர் கூறினார், ''எந்த நாட்டிற்கும் விடுதலை வேண்டும். இந்தியா விடுதலை அடைந்தால் மற்ற ஆசிய நாடுகள் விடுதலை அடை யும். எனவே, நாங்கள் இப்போரில் பங்கெடுப்போம்''. இவரு டன் சேர்ந்து 180 ஆண்களும், பெண்களும், INA வில் பங்கெடுத் தனர். இடையில் INA-வில் நடந்த சில தவறுகளையும் சுட்டிக் காண்பித்தார். இவர் மீது குற்றம் சாட்டப்பட்டாலும், நேதா ஜியே நேரில் வந்து விசாரணையைக் கவனித்து, இவர் மீது எந்த விசாரணையும் வேண்டாம் என்றார். மலேயா கணபதி பின்னர் தன் நாட்டின் விடுதலைக்காகப் போராடினார். இறுதி யில் பிரிட்டிஷ் அரசினால் தூக்கிலிடப்பட்டார். மலேயா கண பதியைப் பற்றி முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி ''கயிற்றில் தொங்கிய கணபதி'' என்ற ஒரு சிறு நூலை உணர்ச்சிக் காவியமாகப் படைத்துள்ளார்.

நேதாஜி ராணுவத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந் தார். கேப்டன் லட்சுமி என்ற பெண் டாக்டர் தலைமையில் பெண்களுக்காக ஜான்சி ராணிப் படையை ஆரம்பித்தார். இப்

படையில் இருந்தவர்கள் பெரும்பாலும் தமிழ்ப் பெண்களே. இந்தத் திட்டம் ஜப்பானியருக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை! நேதாஜி மற்ற படை வீரர்கள் உண்ணும் உணவைச் சமமாக உண்டார். காட்சிக்கு எளியனாக இருந்தார். இந்திய மக்களிடம் ரேடியோவில் பல முறை பேசினார்.

1944 ஆம் வருடம் வங்காளத்திலே மிகக் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. ஏறக்குறைய 15 லட்சம் பேர் மாண்டனர். இப்பஞ்சத்தைத் தடுக்க மாநில அரசோ, அல்லது டில்லியில் உள்ள ஆங்கில அரசோ முயலவில்லை.

அமெரிக்காவில் உள்ள மருத்துவ மாணவர்கட்கு எலும் புக் கூடுகள் நிறைய கிடைக்காமல் இருந்தன. ஆனால், இப் பொழுது ஏராளமான எலும்புக் கூடுகள் அமெரிக்க மருத்துவ மாணவர்களுக்குக் கிடைத்தன. இந்திய எலும்புக் கூடுகளை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்து பிரிட்டிஷ் அரசு பணம் சம்பாதித்தது என அமெரிக்க இதழ் லைஃப் கூறியது. வங்கத் தின் பஞ்சத்தை நீக்க நேதாஜி 1 லட்சம் டன் அரிசியைக் கப்பலில் அனுப்புவதாகக் கூறினார். பிரிட்டிஷார் மௌனம் சாதித்தனர்! INAவை ஆரம்பித்த பியூஜிவாரா, நேதாஜியிடம் இயக்கத் தலைமை சென்றதைக் கண்டு மகிழ்ந்தார்.

அக்டோபர் 21-ஆம் தேதி அன்று நேதாஜி தற்காலிக இந் திய அரசு அமைத்தார். தாகூரின் பாடல் தேசிய கீதமானது. மூவண்ணக் கொடி தேசியக் கொடியாயிற்று. அவரும் ஏனைய அமைச்சர்களும் இந்திய விடுதலைக்குக் கடைசி மூச்சு இருக் கும் வரை போராடுவதாக உறுதி எடுத்தனர். இந்த அரசாங் கத்தை 8 நாடுகள் அங்கீகரித்தன. அயர்லாந்து தலைவர் 'டி வெலெரா' வாழ்த்து அனுப்பினார். நேதாஜி, ஜப்பானியருக்கு 10 விமானங்கள் அன்பளிப்பாகத் தந்தார்!

நேதாஜி நடத்திய விடுதலைப் போருக்குப் பெரும் அளவு பண உதவி செய்தவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள். இவர்கள் உதவி இல்லாமல் இருந்தால்INA-வினால் தளவாடங் களை வாங்கியே இருக்க முடியாது. தசராவிற்குச் சில நாட்க ளுக்கு முன்பு அவர்கள் நேதாஜியைச் சந்தித்து தங்கள் கோயி

லுக்கு வருமாறு வேண்டினர். நேதாஜி உடனே கூறினார் ''தாழ்ந்த சாதியினரை நீங்கள் உங்கள் கோயிலில் அனுமதி செய்வதில்லை. எனவே, நான் வரமாட்டேன்'' செட்டியார்கள் திரும்பிச் சென்றுவிட்டனர். இவர்களிடமிருந்து பணம் வரா விட்டால் போர்க் கருவிகள் எப்படி வாங்குவது என்று நிதி அமைச்சர் சட்டர்ஜி கவலைப்பட ஆரம்பித்தார். ஏனைய வீரர் களோ நேதாஜி போன்ற தலைவர் கிடைத்தது பற்றி மகிழ்ந்த னர். ஆனால், மறுநாள் செட்டியார்கள் மீண்டும் கம்பீரமாக வந்து நேதாஜியை வற்புறுத்தினர். நேதாஜி அந்தக் கோவிலுக் குச் சென்றபோது எல்லா இனத்தவரும், ஏன் முஸ்லீம்கள்கூட கோவிலுக்குள் இருந்தனர். காந்தி வேண்டிய தீண்டாமை ஒழிப்பை நேதாஜி செயல்படுத்தினார்!

நேதாஜிக்குக் கோயிலில் திலகமிட்டனர் பூஜாரிகள்!

பகுதி - 6

டோக்கியோ கேடட்டுகள்
1944 - டோக்கியோ

"அண்ணாமலை..."

"எஸ் சார்..."

ஒரு சல்யூட்.

தாசன், துரைசாமி, கணபதி V., கணபதி G.... காந்திநாதன், காந்திதாஸ், கிருஷ்ணன், கருப்பையா... மெய்யப்பன் R., மெய்யப்பன் P.L., நடராஜன், நாச்சியப்பன், நவரத்தினம், ... சேகர், தேவர்...

வரிசையாக நின்று இவர்கள் சல்யூட் அடித்தனர்.

இது என்ன, தமிழகத்தில் உள்ள ஒரு ராணுவப் பயிற்சிக் கல்லூரியில் எடுக்கப்படும் பெயர்ப் பட்டியலா? இல்லை. ஜப்பானில் டோக்கியோவில் உள்ள மிக உயர்ந்த ராணுவப் பயிற்சி நிறுவனமான கோடோ காக்குயினில் எடுக்கப்பட்ட வருகைப் பட்டியல். இவர்கள் எப்படி இங்கு வந்தனர்?

இந்தியாவில் 1857-ல் நடந்த சுதந்திரப் போரில் ஆங்கிலேயர்கள் கசப்பான பாடத்தைப் பெற்றனர். இந்தியப் படையினர் தங்களுக்கு எப்பொழுதும் அடிமையாக இருந்தால்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் நிலைக்கும் என்று ஆங்கிலேயர் முடிவு கட்டினர். எனவே, அவர்கள், சீக்கியர்கள், கூர்காக்கள், மராட்டியர்கள், ராஜபுத்திரர்கள், காரிவாலிகள் இனத்தைச் சேர்ந்தவர்களை வீரமிகு இனங்களாகத் தேர்ந்தெடுத்து படையில் பெரும் அளவு பங்கு தந்தனர். தலைமுறை தலைமுறையாக இந்த இனத்தினர் ராணுவத்தில் வேலை செய்தனர். தாங்கள் வாங்கும் சம்பளம் வெள்ளையர்கள் தருவது. என்வே அவர்கள் தந்த உப்பைச் சாப்பிட்ட நாம் சாகும்வரை நன்றியுடன் ஆங்கிலேயருக்காகப் போராட வேண்டும் என உறுதி கொண்டனர். இவர்களுக்கு அரசியல் அறிவு கிடையாது. முதல் உலகப்போரில் இந்திய ராணுவம், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்திற்குப் பெரிதும் உதவியது. இந்தப் படையினரைப் பற்றி, ''இந்திய மக்களைச் சாராதபடை'' எனக் காந்தியடிகளே கூறினார். ஆங்கிலேய அரசு இந்திய ராணுவத்தை ஒரு கூலிப்படை என்று தான் நினைத்ததாக ஆங்கில அரசின் ரகசியக் குறிப்புகள் கூறுகின்றன. ஆனால், இந்தியர்களோ உலகப் போர்களில் ஆங்கிலேயருக்கு ஆதரவாகப் போரிட்டு வீர மரணம் அடைந்தனர்!

இந்திய தேசிய ராணுவத்தை முன்னேற்ற நேதாஜி பரந்த இந்தியாவின் எல்லாப் பகுதிகளில் இருந்தும், எல்லா இனங்களில் இருந்தும் இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து சிறந்த படைப் பயிற்சி கொடுத்து, தலைசிறந்த வீரர்களாக்க விரும்பினார். எனவே வீரமுள்ள இனங்கள் என்ற பழைய கொள்கை மாற்றப்பட்டது. ஜெனரல் சுகியாமாவை ஜப்பானில் நேதாஜி

சந்திக்கும்பொழுது தன் நாட்டு இளைஞர்களுக்குப் படைப் பயிற்சி தர வேண்டினார். அவரும் உதவ ஒப்புக் கொண்டார்.

இப்பயிற்சி பெற சீனியர் கேம்பிரிட்ஜ் படித்திருக்க வேண்டும்; ஜப்பானிய மொழி தெரிந்திருக்க வேண்டும். உறுதியான உடல் வேண்டும். நாட்டிற்காக உயிரை விடத் தயாராக இருக்க வேண்டும். ஆயிரக் கணக்கான இளைஞர்கள் சேரத் துடித்தனர். கடுமையான போட்டி. நேதாஜியே நேரில் 46 பேர்களைத் தேர்ந்தெடுத்தார். இவ்வாறு தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் எல்லா இனங்களில் இருந்தும் வந்தவர்கள். பாரதி, வ.உ.சி., காந்தி போன்ற தலைவர்களின் வரலாறு கேட்டு இந்தியாவில் பிறக்காத பலர் இந்திய விடுதலைக்குப் போராடத் தயாரானார்கள். பலர் மலேயத் தமிழர்கள். ஒருவர் இலங்கைத் தமிழர். இவர்கட்கு 'டோக்கியோ கேடட்டுகள்' என்று பெயர்.

ஆரம்பத்தில் இவர்கள் சிங்கப்பூரில் படைப்பயிற்சி பெற்றனர். முதல் கட்டமாக 35 பேர்கள் டோக்கியோ புறப்பட்டனர். அவர்களை வழியனுப்ப நேதாஜியால் வர முடியவில்லை. ஆனால் கேப்டன் லட்சுமி வழி அனுப்பினார். பசுபிக் பெருங்கடலில் அமெரிக்க விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், எதிரிக்கப்பல்களை வேட்டையாடிக் கொண்டிருந்தன. இந்த ஆபத்தான நேரத்தில் அந்த 35 பேரும் ஜப்பான் சென்று அடைந்தனர். பிறகு கோடோகக்கூயின் பயிற்சி நிலையத்தை அடைந்தனர்.

ஆனால் அடுத்து சென்ற 10 பேருக்கு அதிர்ஷ்டம் கை கொடுக்கவில்லை. இவர்கள் 'உரல்மாரு' என்ற கப்பலில் 2500 ஜப்பானியப்படை வீரர்கள் மற்றும் அமெரிக்கப் போர் கைதிகளுடன் சென்றனர். இக்கப்பலை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் தாக்கியது. கப்பல் முழுக ஆரம்பித்தது. 200 பேர்களே தப்பினர். பீஷன்சிங் என்ற டோக்கியோ கேடட் பிஸ்கட் டப்பா கொண்டு வருவதற்காகக் கப்பலின் கீழ்த்தளத்திற்குச் சென்றார். மூழ்கி இறந்தார். மீதி ஒன்பதுபேர் மூன்றரை மணி நேரம் கடலில் நீந்தினர். இவ்வாறு நீந்தியவர்களை அமெரிக்கப் போர் விமானங்கள் மேலிருந்து சுட்டன.

ஜப்பானின் வேறு கப்பல் ஒன்று இந்த 9 பேர்களைக் காப்பாற்றி பிலிப்பைன்ஸ் தீவில் விட்டுவிட்டுச் சென்றது. இவர்கள் பல நாட்கள் உணவின்றி நடந்தனர். சிங்கப்பூருக்குச் செய்தி அனுப்பினர். பிறகு ஒரு விமானம் மூலம் டோக்கியோ சென்றடைந்தனர்.

மரணத்திற்குப் பயந்தவர்களா இந்திய வீரர்கள்! பீஷன் சிங் இறந்ததனால் காலியான இடத்திற்குச் சிங்கப்பூரில் இருந்து மெய்யப்பன் என்ற தமிழர் விமானம் மூலம் டோக்கியோ சென்றடைந்து பயிற்சி நிலையத்தில் சேர்ந்தார். இவருக்கு என்னே விடுதலை வேட்கை!

பயிற்சி நிலையத்தில் ஜப்பான் பயிற்சியாளர் கேப்டன் ஒமைடா இவர்களைப் பார்த்து மனம் நெகிழ்ந்தார். உணவின்மை, கப்பல் பயணம், நீண்டகால நடைப் பயணம், இக்கேடட்டுகளின் உடல் வலிமையைக் குறைத்து இருந்தது. ஆனால், விடுதலை வேட்கை உடைய இவர்கள் மிகக் கடினமாக உழைத்தனர். பத்துப் பேர் விமானப் பயிற்சி பெற்றனர். இவர்கள் காலையில், ''நான் எப்பொழுதும் இந்தியனாக இருப்பேன். என் நாட்டின் கண்ணியத்தைக் காப்பாற்றுவேன். நேதாஜியின் வழி நடக்க சக்தியும், தியாகம் செய்யும் தைரியத்தையும் இறைவா எங்களுக்குக் கொடு'' என வேண்டுவர். ஒவ்வொருவரும் நேதாஜிக்குத் தனியாக கடிதம் எழுதிப் பதிலும் பெற்றனர்.

நேதாஜி எழுதுவார்: ''என் அன்பான இளைஞர்களே! எனக்குச் சொந்தமாக மகன்கள் இல்லை. நீங்கள் நாட்டுக்குத் தியாகம் செய்யத் தயாராக இருப்பதால் என் சொந்த மகனை விட மேலானவர்கள்''. ஜப்பான் சென்றபோதெல்லாம் இவர்களைச் சந்தித்தார். 'நீங்கள் எதிர்கால இந்திய ராணுவத்தின் தலை சிறந்த அதிகாரிகள்' என வாழ்த்தினார். நேதாஜி எழுதிய கடிதத்தை 'EPISTLE' எனக் கூறி இன்றும் இவர்கள் தங்கள் கையிலேயே வைத்துள்ளனர். அதில் அவர் கூறினார்: 'அன்பார்ந்த இளைஞர்களே! நீங்கள் எப்பொழுதும் என் இதயத்தில் இருக்கிறீர்கள். உங்களைக் கண்டு நான் பெருமை அடைகிறேன். உங்களிடம் நான் நம்பிக்கை வைத்துள்ளேன்.''

கேடட்டுகள் ராஷ்பிஹாரி போசின் இறுதிச் சடங்குகளில் பங்கெடுத்தனர். மிகச்சிறந்தப் பயிற்சியை இவர்கள் பெற்றனர். ஜப்பானியர், பர்மியர், சீனர்கள், பிலிப்பினர்கள் அங்குப் பயிற்சி பெற்றனர். அவர்களிடையே டோக்கியோ கேடட்டுகள் தலை சிறந்து விளங்கினர். ஜப்பானிய அதிகாரிகளிடம் இருந்து கௌரவம் மிக்க வாள் ஒன்றினைப் பரிசாகப் பெற்றனர்.

ஆனால் விதி விளையாட ஆரம்பித்தது. ஆகஸ்ட் 6-ஆம் தேதி ஹிரோஷிமாவின் மேல் அமெரிக்கர்கள் அணுகுண்டு வீசினர். 9-ஆம் தேதி நாகசாகி, நாசமாயிற்று. ஜப்பான் சரணடைந்தது. பல ஜப்பானிய அதிகாரிகள் தங்களைச் சுட்டுக் கொண்டும், கத்தியினால் குத்தி ஹராகிரி செய்து கொண்டும் இறந்தனர்.

இந்தக் கேடட்டுகள் பிறகு நேதாஜியின் 'அஸ்தி' உடைய கலசத்தைப் 'புத்தர்' கோயிலில் வைத்து மரியாதை செய்தனர்.

டோக்கியோ கேடட்டுகள் பயிற்சி நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். திருமதி சிக்கிக்கோ இம்மூரி என்ற அம்மையார் இவர்கள்மேல் பரிதாபப்பட்டு உணவும் உறைவிடமும் தந்தார். போர்க்காலத்தில் உணவுப் பஞ்சத்தில் 46 இந்தியர்களுக்கு உதவி செய்த இந்த அம்மையார் என்றும் பாராட்டத் தக்கவர்.

அமெரிக்கத் துருப்புக்கள், ஜப்பானில் நுழைந்தவுடன் இவர்களைப் பிடித்து பிரிட்டிஷ் படையினரிடம் ஒப்படைத்தனர். அமெரிக்கர்கள் இவர்களுக்குத் தொல்லை தரவில்லை. ஆனால், பிரிட்டிஷ் துருப்புக்கள் இவர்களை ஹாங்காங்கிற்குக் கொண்டு சென்றனர். மிகவும் கேவலமாக நடத்தினர். ஹாங்காங்கில் ஸ்டான்லி சிறையில் வைத்தனர். இவர்களுக்குத் தனிமைச் சிறைத் தரப்பட்டது. கப்பலில் வருகின்ற பொழுது சிகரெட் முனை நெருப்புக்களால் சுடப்பட்டனர். குதிரை ரேஸ் போல இவர்களை ஓடவிட்டு ஆங்கிலேயர்கள் 'பெட்' கட்டினர். தோற்ற இந்தியர்களை உதைத்தனர். பிறகு ஹாங்காங்கிலிருந்து புறப்பட்டு ஷாங்காய், ஜகார்த்தா, சிங்கப்

பூர் வழியாகச் சென்னை அடைந்தனர். இவர்களில் பலர் மலேயாவில் பிறந்தவர்கள். இந்தியாவில் யாரையும் தெரியாது. விடுதலைப் பெற்ற இந்தியத் திருநாட்டின் உயர் ராணுவ அதிகாரிகளாக வெற்றிநடை போட்டு வரவேண்டியவர்கள் அடிமை இந்தியாவில் போர்க்கைதிகளாக வந்து இறங்கினர். மேலும் 3 வாரங்கள் இவர்கள் பெரம்பூரில் கைதிகளாக இருந்தனர்.

இவர்களை வரவேற்கச் சென்னையில் ஒரு பத்திரிக்கையாளர் குழு செயல்பட்டது. இதில் 'தினமணி' ஆசிரியர் திரு.சிவராமன், 'தினசரி' ஆசிரியர் திரு. சொக்கலிங்கம், 'பாரததேவி' ராமரத்தினம் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவர். 'தினத்தந்தி' ஆசிரியர் திரு. ஆதித்தன் செயலர் ஆவார்.

இவர்கள் டோக்கியோ கேடட்டுகளுக்கு உட்லண்ட்ஸ் ஹோட்டலில் வரவேற்பு தந்தனர். இவ்விழா நடைபெறும் போது, திரு. சிவராமன் டெல்லியில் இந்திய தேசிய ராணுவப் படைத்தலைவர்கள் ஷா நவாஸ்கான், தில்லான், ஷெகல் இவர்கட்குத் தரப்பட்ட நாடுகடத்தப்படும் தண்டனையை இந்திய ராணுவத் தலைமைத் தளபதி ரத்து செய்கிறார் என்ற மகிழ்ச்சியான செய்தியைக் கூறினார்.

ஆனால், நேதாஜியின் கனவை இவர்கள் விடுதலை பெற்ற இந்தியாவில் சிறந்த சேவைகள் செய்து நினைவாக்கினர். இவர்களில் ஒருவரானபெனகால் இந்திய விமானப் படையில் சேர்ந்து நாட்டிற்காகப் போரிட்டு ஏர் கமோடார் ஆகி 'மகாவீர்சக்ரா' பதக்கம் பெற்றார். டோக்கியோவில் வீரவாளைப் பரிசாக பெற்ற காப்டன் டி.தாசன் காந்தியடிகளுடன் நவகாளிக்குச் சென்றார். 1946-ல் பீஹாரில் நடந்த இனக்கலவரங்களில் துயரப்பட்டவர்களுக்கு உதவினார். 1949-ல் அஸ்ஸாமில் பூமி நடுக்கம் கண்டபொழுது அங்கு விமானம் ஓட்டி சென்று உதவினார். 1950 அஸ்ஸாமில் வெள்ளம் வந்தபொழுது, கடமை வீரனாகச் செயல்பட்டார். நிஜாம் காட் என்ற இடத்தில் தவித்த 70 ஆதிவாசிகளைக் காப்பாற்றினார். 1961-ல் இந்திய அரசு கோவாவைப் போர்ச்சுகல் அரசிடமிருந்து விடுவித்தபொழுது, இந்தியருக்கு ஆதரவாக விமானங்கள் ஓட்டி

னார். 1963-ஆம் ஆண்டு சீனா - இந்திய போரில், வடகிழக்கு எல்லையில் மிக அதிகமான நேரம் விமானம் ஓட்டி, நாட்டிற்கு உழைத்தார். போபால் விஷ வாயு நிகழ்ச்சி நடந்த பொழுது மக்களுக்கு உதவினார். நேதாஜி நினைவை நெஞ்சில் என்றும் கொண்டவர். நேதாஜி கைது செய்யப்பட்டால் அவரை ஷெசெல்ஸ் தீவில் தனிமை சிறை வைக்க வேண்டும் என ஆங்கில அரசு விரும்பியது; அதே ஷெசெல்ஸ் நாட்டின் தூதராகச் சென்னையில் உள்ளார், நேதாஜியின் புகழ் பாடும் வீரர் காப்டன் தாசன்! இவர் மருமகன் ராம்தாஸ் அவர்களும் நேதாஜியை என்றும் நெஞ்சில் நிறுத்திய ஒரு டாக்டர்! மேலும் மெய்த்திரா என்பவர் இந்திய ராணுவத்தில் பிரிகேடியர் ஆனார்!

பகுதி - 7

சிங்கப்பூர்

நேதாஜியின் தலைமையில் I.N.A. வில் பல பிரிவுகள் புனரமைப்பு செய்யப்பட்டன. கமிஷன் அதிகாரிகள் பயிற்சி பெற பள்ளிகள், மற்ற வீரர்களுக்குப் பள்ளிகள் பினாங்கு, கோலாலம்பூர், சிங்கப்பூர் என்ற இடங்களில் ஏற்படுத்தப்பட்டன. ஜப்பானிய மொழி பெயர்ப்புப் பள்ளி ஏற்படுத்தப்பட்டது. நிதித்துறை, வருவாய்த்துறை, விநியோகத்துறை, மருத்துவத்துறை, கல்வி, கலாச்சாரத்துறை ஏற்படுத்தப்பட்டன. சிறுவர் சிறுமியருக்குப் பால சேனா ஏற்படுத்தப்பட்டது. பின்னர் போர்க் காலத்தில் பொருள்களைத் தூக்கிச் செல்ல இது உதவியது. சிலோன் துறை ஒன்றை நேதாஜி உருவாக்கினார். ஆயிரக்

கணக்கான இலங்கை தமிழ் மக்கள் I.N.A. வில் சேர்ந்தனர். கேப்டன் லட்சுமியின் தலைமையிலான ராணி ஜான்சி படையில் பெண்கள் படைப்பயிற்சி பெற்றனர். முதன் முறையாக, சீருடை அணிந்த இந்திய பெண்கள் துப்பாக்கி ஏந்தினர். ஜானகி தேவர் என்ற இளம் பெண் நன்கு உழைத்தார்.

இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலகவா ணுதலார் தங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்''

என்ற பாரதியின் புதுமைப்பெண் கனவை இப்பெண்கள் நினைவாக்கினார்.

இக்காரியங்கள் நடைபெற பணம் மிகவும் தேவைப்பட்டது. பொதுமக்கள் வாரி வழங்கினர். பெண்கள் தங்கள் நகைகளை அளித்தனர். ஒருவர் தன்னிடமிருந்த 200 பசுக்களைத் தந்துவிட்டார். ஒரு ஏழைக் கிழவி தன்னிடமிருந்த மூன்று டாலர்களை அளித்தபோது நேதாஜியின் கண்களில் கண்ணீர் ததும்பியது. சையாம், ஷாங்காய், சுமத்ரா போன்ற பல இடங்களில் இருந்து இந்திய மக்கள் பணத்தை வாரி வழங்கினர். இருப்பினும், நேதாஜி கூறினார்: ''நீங்கள் தருகின்ற அத்தனை செல்வங்களும் விடுதலைப்போரில் இழக்கப்படுகிற ஒரு உயிரைக்கூட மீண்டும் கொண்டுவராது''.

நேதாஜியின் குரலைக்கேட்டு ஒரு குடும்பத்தில் தந்தை அத்தனைச் செல்வங்களையும் அன்பளிப்பாகத் தந்துவிட்டு படை வீரராகச் சேர்ந்தார். மகன் பாலர் படையில் சேர்ந்தான். மனைவியும் மகளும் 'ஜான்சிராணி' படையில் சேர்ந்தனர். இவர்கள் யாருமே இந்தியாவைப் பார்க்காதவர்கள்!

ராமுத்தேவர், குமரன் நாயர், ராமசாமி போன்றவர்கள் சென்னைச் சிறையில் தூக்கிலிடப்பட்டவுடன் சுவராஜ் நிறுவனம் தற்காலிகமாக மூடப்பட்டது. நேதாஜியுடன் ஜெர்மனியில் இருந்து வந்த 'சுவாமி' ஒற்றறிவதில் திறமையானவர். அவர் பலருக்குப் பயிற்சி தந்தார்.

மெக்சிகோ புரட்சியில் பங்குபெற்று பினாங் வந்த உஸ்மான் என்ற சீக்கியர் பீமன் போன்ற பலம் உடையவர். கைகளினாலேயே மரங்களை வெட்டிச் சாய்ப்பார். ஆனால், இவர் குழந்தை உள்ளம் கொண்டவர். இவரிடம் பயிற்சி பெற்றவர்கள் இந்தியாவிற்குள் வந்தனர். காமிமோட்டோ என்ற ஜப்பானியர் சில கூர்காக்களையே மனம் மாறச் செய்து சிண்ட்வின் நதியைத் தாண்டி 6000 மைல்களுக்கு மேல் நடந்து, நேப்பாளம் வழிச் சென்று கோஹிமாவில் ஒற்று வேலை செய்வித்தார். வேறு ஒரு குழு நீர்மூழ்கிக் கப்பல் மூலம் இலங்கையை அடைந்தது. அப்பொழுது திரிகோணமலை நேசநாடுகளின் கப்பல்படைத் தலைமையகம் ஆகும். இக்குழுவினர் புத்தமத பிட்சுக்களுடன் தங்கி ஒற்றறிந்து ஒயர்லெஸ் மூலம் செய்தி அனுப்பினர்.

இந்த சுவராஜ் நிறுவனத்தைத் தவிர சாண்டிகிராஃப்ட் பள்ளி என்ற ஒற்றர் பள்ளியும் ஒன்று இருந்தது. இதனைக் கர்னல் துரானி, கிலானி இயக்கினார்கள். நேதாஜி இவர்களை முழுமையாக நம்பினார். இப்பள்ளியிலிருந்து வந்த 12 பேர்களை நீர்மூழ்கிக் கப்பல் மூலம் 1944-மார்ச் 20 தேதி குஜராத்தில் பஸ்னியில் இறக்கினார். ஆனால், இவர்கள் உடனே போலீசாரிடம் முழுமையாகச் சரணடைந்து காட்டிக் கொடுத்தனர். இதற்காகத் துரோகி துரானிக்கு ஜார்ஜ்கிராஸ் பதக்கம் டெல்லியில் வேவல் பிரபுவினால் தரப்பட்டது. இந்தத் துரோகச் செய்தியைக் கேட்ட சாண்டிகிராஃப்ட் பள்ளியின் ஜப்பானிய ஆசிரியர் தன்னை நீண்டக் கத்தியினால் குத்தி 'ஹராகிரி' செய்து மரணம் அடைந்தார்.

இருப்பினும் சுதந்திரப் பற்றுடைய வீர இளைஞர்கள் மனம் தளரவில்லை. இவர்கள் இந்தியாவிற்கு வரும்போது நேதாஜி ''எண்ணிக்கையிலே நீங்கள் குறைவுதான். இருப்பினும் பிரிட்டிஷ் ரகசியச் சேவையை நீங்கள் தகர்க்க வேண்டும்'' என்று சொல்லியனுப்பினார். இவர்கள் ஒரிசாவில் பூரி அருகே இறங்கினர். வெற்றிகரமாகச் செயல்பட்டனர்.

மலைகளில் ஏறிப் போராடுகின்றபொழுது ராணுவத் தளவாடங்களைத் தூக்கிச் செல்ல கோவேரிக் கழுதைகள் தேவை.

இவை பாரம் சுமப்பதால் படை வீரர்கள் நன்கு சண்டையிட லாம். வீணாக அவர்கள் பொருட்களைத் தூக்கிச் சென்று சக்தி யைச் செலவிட வேண்டாம். (1962 - இந்தியா - சீனா போரில் மலை மேலிருந்து சீனர்கள் கழுதைகளை உபயோகித்து எளி தில் ஓரிடம் விட்டு ஓரிடம் கடந்து சென்றனர்).

பூரியில் இறங்கிய ஒற்றர்கள், ''கோஹிமாவிற்கு 2500 கோவேறிக் கழுதைகளை விமானம் மூலம் கல்கத்தாவிலி ருந்து அனுப்புகிறார்கள். எனவே, போர் உடனே ஆரம்பிக்கும் '' என்ற செய்தியை ஒயர்லெஸ் மூலம் அனுப்பினர். இங்கே ஒரு சுவையான செய்தி. கோவேறிக் கழுதைகளை இந்தியாவி லிருந்து விமானம் மூலம் ஏற்றும்போது 'குஷி சார்லி' என்ற கோவேறிக் கழுதை விமானத்தில் ஏற மறுத்துவிட்டது. முப் பத்தைந்து வெள்ளையர்கள் இழுத்துப் பார்த்தனர். ஏன் அமெ ரிக்க ஜெனரல் வின்கேட் கூட 35 பேர்களுடன் சென்று இழுத் துப் பார்த்தார். நடக்கவில்லை. கோஹிமாவிற்குச் சென்ற கோவேறிக் கழுதைகள் அத்தனையும் போரில் உயிரை விட் டன. குஷி சார்லி மட்டும் குஷியாக இந்தியாவிலேயே இருந்து விட்டது! தற்பொழுது ராணுவத்தில் ஒரு கோவேறிக் கழுதை ஹார்ட் அட்டாக்கில் இறந்துபோனால் உடனே அதைப்பற்றி அறிய ஒரு விசாரணைக் குழுகூட போடுவார்களாம். அவ்வ ளவு முக்கியம் கழுதைகளின் சேவை!

இந்தியாவில் ஒற்று அறிய நேதாஜியால் அனுப்பப்பட்ட வர்களில் ஒருவர் நேதாஜியின் சகோதரரின் மருமகனான ஹரி தாஸ் மித்ரா ஆவார். இவருடைய மனைவிக்கு வயது 22 தான். இந்தியாவிற்கு வந்த ஒற்றர்களில் பதின்மூன்று பேர் தூக்கிலி டப்பட்டனர். இதில் 5 பேர் தமிழர்கள். மீதி இருப்போருக்கு மரண தண்டனை தரப்பட்டு பின்பு அது நாற்பது வருட சிறை தண்டனையாக மாற்றப்பட்டது. காந்தியடிகள், பட்டேல் முயற்சியால் தண்டனைகள் குறைக்கப்பட்டு 1946-ல் விடு தலை செய்யப்பட்டனர். சுதந்திர இந்தியாவில் கேகர் சிங் என்ற மரண தண்டனை பெற்ற INA ஒற்றர், பின்னர் இந்திய ராணுவத்தில் சேர்ந்தார். போர்ச்சுகல் வசம் இருந்த கோவாவில் ஒற்று அறிந்தார்! பின்பு கோவாவை இந்திய ராணுவம் போர்ச்சு கல் பிடியிலிருந்து வெற்றி கொண்டது.

1943 நவம்பர் மாதத்தில் நேதாஜி டோக்கியோவில் பெருங்கிழக்காசியா கூட்டத்தில் பார்வையாளராகப் பங்கெடுத்தார். ஜப்பான், அந்தமான் நிக்கோபார் தீவுகளைத் தற்காலிக அரசிடம் ஒப்படைப்பதாகக் கூறியது. நேதாஜி இத்தீவுகளுக்கு ஷாஹீத் (தியாகி) 'சுவராஜ்' (சுதந்திரம்) எனப் பெயரிட்டார். பின்பு பிப்ரவரியில் லோகநாதன் இத்தீவுகளின் தலைமைக் கமிஷனராகப் பதவி ஏற்றார்.

டிசம்பர் இறுதியில் INA தலைமைச் செயலகம் பர்மாவிற்கு மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. இங்குள்ள மக்கள் நேதாஜிக்குப் பணத்தை வாரித் தந்தனர். ஹபீப் என்ற முகமதியர் கோடிக்கணக்கான ரூபாய்களை அன்பளிப்பாகத் தந்தார். அவர் தானே நேதாஜியிடம் பணி செய்ய ஆரம்பித்தார்.

1943 ஆம் வருடம் நேதாஜிக்கு ஒரு திருப்தியான வருடம். ஆனால், அடுத்த ஆண்டு?

பகுதி - 8

டெல்லி நோக்கி

1944 - இந்திய விடுதலைக்காக டில்லி நோக்கிச் செல்ல முதல் படியாக நேதாஜி தன் அமைச்சர்களுடன் ஜனவரி 7 ஆம் தேதி அன்று ரங்கூன் வந்து சேர்ந்தார். தற்காலிக இந்திய அரசின் தலைமை அலுவலகம் சிங்கப்பூரிலிருந்து பர்மா தலைநகரமான ரங்கூனுக்கு மாற்றப்பட்டது.

நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் தங்கள் நீண்ட கருங் கூந்தலைக் கத்தரித்துவிட்டுத் துப்பாக்கி ஏந்தி ரங்கூன் வந்தடைந்தனர். இப்பெண்கள் தாங்கள் செவிலிகளாகப் பணிபுரிவதைவிட, போர்க்களத்தில் போரிடத்தான் விரும்பினர். ஷாந

வாஸ்கான் தலைமையில் மூவாயிரம் வீரர்கள் வந்து சேர்ந்த வுடன் போருக்குத் தயாரானார்கள். மேலும் இரு டிவிஷன் வீரர்கள் மலேயாவில் இருந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் பயிற்சிப் பெற்றுக் கொண்டு இருந்தனர்.

''நான் சிறையிலிருந்து சும்மா இளைப்பாறுவதைவிட வெளிநாட்டில் இருந்து இந்திய விடுதலைக்கு நன்கு போராட முடியும்'' என்று காந்தியடிகளுக்குக் கூறிய நேதாஜிக்குப் போர் புரியும் நேரம் நெருங்கிவிட்டது! ''இந்திய நடிப்பு சுதே சிகளை வாய்ச் சொல்லில் வீரரடி'' என்று கூறிய பாரதியின் மனக் குறையை நீக்க தமிழர் உதவியுடனேயே போராடுவ தற்கு நேதாஜி தயார் ஆனார். பாரதியின் அண்ணனின் பேரன் எட்டையபுரம் சுப்பய்யர் மகன் அப்பாதுரை ஐயர் நேதாஜி யின் விளம்பரத் துறை அமைச்சராகக் கூடவே இருந்தார்.

பர்மா - உலகத்தில் மறக்கப்பட்ட மக்களைக் கொண்ட மறக்கப்பட்ட நாடு என அழைக்கப்படுகிறது. பர்மாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் உள்ள காட்டுப் பகுதியில்தான் நேதாஜியும், ஜப்பானியரும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடும் போர்க்களம் இருந்தது. ஒரு கையின் மூன்று விரல்களை மூடி ஆட்காட்டி விரலை நீட்டினால் எப் படி இருக்குமோ அதுதான் பர்மா. நீண்ட ஆட்காட்டி விரல் மலேயாவை நோக்கிக் காட்டும். உள்ளே சிண்ட்வின், ஐரா வதி, சால்வின் என்ற பெரிய நதிகள் பர்மாவில் வடக்கிலிருந்து தெற்காகப் பாயும்.

போர்க்களத்தில் அடர்ந்த காடுகள் உண்டு. தேக்கு மரங் கள் நூற்றைம்பது அடி உயரத்திற்கு மேல் வளர்ந்திருக்கும். மூங்கில் புதர்கள் மண்டியிருக்கும். அங்கு உள்ள ஒரு பள்ளத் தாக்கிற்கு 'மரணப் பள்ளத்தாக்கு' என்றே பெயர். *1944*-ல் ஏராளமான வீரர்கள் அங்கு இறந்து அப்பெயரை ஊர்ஜிதம் செய்தனர்.

இந்தப் போர்க் களத்தில் ஏராளமான சிறு நதிகள், ஓடை கள் உண்டு. உலகத்திலேயே பெரும் அளவில் 200 அங்குல அளவு மழை பெய்யும். அப்பொழுது சிறு நதிகள் வெள்ளப்

பெருக்கெடுத்து ஓடும். மக்கள் நடந்து வந்த ஒற்றையடிப் பாதைகள் மறைந்துவிடும். மலைப் பள்ளத்தாக்குகள் சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கும். மார்பு அளவுச் சேற்றில் நடந்து தான் போக வேண்டும். பள்ளத்தாக்குகளில் வழுக்கி விழுந் தால் மரணம்தான்! அந்தப் பெரும் மழையில் புலிகள் கூட காட்டில் உணவிற்காக உலவாது என அங்குள்ள மக்கள் கூறு வர். இந்தியாவில் அதிக அளவில் யானைகள், புலிகள் இருக் கும் இடம் இங்குதான். பாம்புகளுக்கும் பஞ்சமில்லை. ஆனால், இங்குள்ள மிகப் பெரிய ஆபத்தினைக் கொசுக்கள் தந்தன. அவை வீரர்களைக் கடித்து மலேரியா ஜுரத்தைத் தந்து ஆயிரக்கணக்கில் கொன்றன. மலேரியாவிற்கு மருந்தான கொய்னா புதிதாக வந்த நேரத்தில் அம்மருந்து அவர்கள் ஆண் மையைக் குறைத்துவிடும் என்ற தவறான வதந்தியினால் சாப் பிட மறுத்தனர். பிறகு உண்மை அறிந்து மருந்தினைச் சாப்பிட ஆரம்பித்தனர். ஒருவர் போரில் இறந்தால் 120 பேர் மலேரியா வில் இறப்பர் என்ற நிலை மெதுவாக மாறத் தொடங்கியது.

இதைவிட ஆபத்தானது 'நாகா ரணம்' ஆகும். உடலில் அட்டைகள் ஒட்டினால் ரத்தத்தை உறிஞ்சும். அந்த அட்டைக ளைப் பிரிக்கும்பொழுது கவனமாக எடுக்க வேண்டும். இல் லையேல் அதன் தலை வீரர்கள் உடலில் இருந்து ரத்தத்தைக் கெடுக்கும். கடித்த இடத்தில் புழுக்கள் உண்டாகும். தசை, நரம்பு, எலும்பு அழுக ஆரம்பிக்கும். மெள்ள மரண தேவதை வந்துவிடுவாள். இந்த வகையில் ஏராளமான ஜப்பானிய வீரர் கள் மரணம் அடைந்தனர்.

கோடைக் காலத்தில் நூற்று இருபது டிகிரி வெப்பம் நடுப்பகலில் உண்டு. கடுமையான வெயில். தண்ணீருக்காக அலைய வேண்டும்.

இந்தக் காடுகளில் இருந்த வீரர்களின் மனநிலை விந்தை யானது. ஆங்கிலேயத் துருப்புக்கள் காடுகளில் போராடச் சிறந்த அனுபவம் பெற்று விட்டதால் தொடர்ந்து இங்கு 4 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிய வைக்கப்பட்டனர். இவர்கள் தங்களைத் தங்கள் உறவினர்கள் மறந்து விட்டனர் என எண்ணி னர். மேலும் பல ஆங்கிலப் போர் வீரர்களின் மனைவிகள்

இங்கிலாந்தில் வேறு இளைஞர்களைக் காதலித்துத் திரும ணம் புரிந்து தங்களை மன்னிக்குமாறு தங்கள் கணவர்களுக் குக் கடிதம் எழுதினர். இக்கடிதங்கட்கு 'டியர் ஜான் கடிதம்' என்று பெயர். இந்த மாதிரியான கடிதங்கள் இங்குக் குவிந்தன.

காட்டின் அமைதியான இரவு பலரின் மூளையை மங்கச் செய்தது. சிறிய சப்தத்தைக் கேட்டுப் பலர் பயந்து எல்லாத் திசைகளிலும் யந்திரத் துப்பாக்கிகளால் சுட்டுத் தள்ளினர். நாளாக, நாளாக அதிக வெளிச்சம் தரும் விளக்குகள், நகரில் மகிழும் மக்கள் கூட்டங்கள் இவற்றைத் தவிர்த்து தனிமையில் ஒரு குழுவாகக் காட்டில் வாழ ஆரம்பித்தனர். பயத்தால் இர வில் ஒரே படுக்கையில் உறங்கினர். எதிர்காலத்தை மறந்தனர்.

ஆங்கிலப் படையை உட்கொண்ட நேசநாட்டுப் படைக ளின் தனிப்பெருந் தலைவராக 43 வயதான மௌண்ட் பேட் டன் பதவி ஏற்றார். இவர் உடலில் ஜெர்மானிய மன்னர் கெய் சர், ரஷ்ய மன்னர் ஜார், ஸ்பெயின் மன்னர் அல்போன்சா, ருமேனிய மன்னர் பெர்டினாட், ஸ்வீடன் மன்னர் குஷ்டாவ், கிரேக்க மன்னர் கான்ஸ்டான்டின், நார்வே மன்னர் ஷாக் கோல், யுகோஸ்லாவியா மன்னர் அலெக்ஸாண்டர் என ஐரோப் பிய மன்னர்களின் ரத்தம் ஓடியது. முதல் உலகப் போரில் பேட்டன்பர்க் என்ற பெயரை மௌண்ட் பேட்டன் என மாற்றி முழு ஆங்கிலேயராக மாறினார்.

இவர் தலைமை ஏற்றவுடன் வீரர்களுக்கு உதவியாகப் பல மாற்றங்களைச் செய்தார். சர்ச்சில் இந்தியப் படையில் உள்ள ஆங்கில வீரர்களுக்கு வேண்டிய அளவு குடிப்பதற்கு 'பீர்' செய்து அனுப்ப ஆணையிட்டார். மேலும் இந்திய சிக ரெட் ஆங்கிலேயர் ருசிக்கு ஏற்ப செய்யப்பட்டுப் போர் முனைக்கு அனுப்பப்பட்டன. நல்ல எழுத்தாளர்களால் தயா ரான கதைகள் கொண்ட பத்திரிக்கைகள் பல போர்க்களத்திற்கு அனுப்பப்பட்டன.

ஜப்பானியத் தலைவராக டெட்டூச்சியும் அவருக்குக் கீழே முட்டா கூச்சியும் பதவி ஏற்றனர். பர்மா படைகளின் தலைவராகக் கபாவே பணிபுரிந்தார். INA-வின் தனிப்பெரும்

தலைவர் நேதாஜி. ராணுவத்தைப் பற்றி அவரது நுட்பமான அறிவும், போர்த்திறனும், ஜப்பானியரை வியப்பில் ஆழ்த்தின. 'சிபா சாலர்' என அவர் அழைக்கப்பட்டார். போருக்கு முன் நேதாஜி முட்டா கூச்சியுடனும், பியூஜிவாராவுடனும் சந்தித்துப் பேசினார். பர்மா படைத் தலைவர் கபாவே, நேதாஜியின் விசிறியாகவே மாறினார். திறமையுள்ள இவர் பிற்காலத்தில் ஃபீல்டு மார்ஷெல் சுஜியாமா போரில் தோற்று தற்கொலை செய்து கொண்டபொழுது, அந்தப் பதவியை ஏற்றார்.

INA வினரும் ஜப்பானியரும் சேர்ந்து போரிடலாம். ஆனால், இந்தியாவில் போரினால் விழும் முதல் சொட்டு ரத்தம் INA வீரரின் ரத்தமாகத்தான் இருக்க வேண்டும் என நேதாஜி முழங்கினார்.

1942-க்கும், 44-க்கும் இடையே உள்ள இரண்டு ஆண்டுகளில் ஆங்கிலேயர்கள் பல மாற்றங்களைப் போர் முறைகளில் உண்டாக்கினார். விமானங்கள் வானில் தாக்கப்பட்டு பெட்ரோல் டேங்குகளில் ஓட்டைகள் விழுந்தால் அந்த ஓட்டைகளைத் தானே மூடும் முறைகள் ஆங்கில விமானங்களில் வந்தன. காலாட்படையில் போர் முறையில் ஆங்கிலேயர்கள் மாற்றம் கண்டனர். அதன்படி விமானங்கள் வந்து முற்றுகை இடப்பட்ட வீரர்களைக் காப்பாற்றிப் பாதுகாப்பான இடங்களுக்குத் தூக்கிச் செல்லும். மேலும் விமானங்களைப் பூமிக்கு இழுக்கும், 'ஜி' விசையை எதிர்க்க விமானிகளுக்கு புதுமையான உடைகள் வந்தன. அதிகத் திறமைமிக்க லி, ஷெர்மன் டாங்கிகள் உண்டாக்கப்பட்டன.

இந்த மாறுதல்கள் எதுவுமே ஜப்பானியரிடம் இல்லை! 1944 ஆம் வருடம் நேசநாடுகள் வெற்றி முகத்தை நோக்கிச் சென்றன. ஜப்பானியர்கள் ஆஸ்திரேலியா அருகில் உள்ள கினி தீவிலிருந்து சைனாவில் உள்ள மஞ்சூரியா வரை பெரும் பரப்பைக் கைப்பற்றி இருந்தனர். அந்தப் பகுதியைக் காப்பாற்றப் பெரும் போர் நடத்த வேண்டி இருந்தது. பசிபிக் பெருங்கடலில் சிறிய சிறிய தீவுகளில் எல்லாம் ஜப்பானியர்கள் சண்டை போட்டனர். அத்தீவுகளில் உணவுப் பஞ்சம் வந்தது.

அமெரிக்க விமானங்களால் ஜப்பானிய விமானங்கள் மட்டுமே அழியவில்லை. அவற்றை ஓட்டிச் சென்ற தலைசிறந்த விமானிகளும் அழிந்தனர். அமெரிக்கக் கப்பல்களை அழிக்க ஜப்பானிய விமானிகள் நேராக அந்தக் கப்பல்களுக்குள் தங்கள் விமானங்களுடன் விழுந்து தற்கொலை செய்து கொண்டனர். அமெரிக்க ஜெனரல் மக்கார்த்தர் வீரமாகப் போரிட்டார். ஜப்பானிய விமானப் படை சுருங்கிவிட்டது! மேலும் ஜப்பானியக் கப்பற்படைகளின் ரகசிய சூசக வார்த்தைகளை அமெரிக்கர்கள் கண்டு பிடித்தனர். ஜப்பானியப் போர்க் கப்பல்கள் அவர்களால் அழிக்கப்பட்டன.

இந்த நிலையில் இந்திய எல்லையில் ஆங்கிலேயருடன் போராட *2,30,000* ஜப்பானியர் தயாரானார்கள். அவர்களுடன் 6,000INA வினர் சேர்ந்து சண்டையிட்டனர். கல்கத்தாவின் மேல் ஜப்பானியர்கள் குண்டு போட்டால் ஆங்கிலப் படையினர் கல்கத்தாவைக் காப்பற்ற முயல்வர். அந்த நேரத்தில் இம்பால் வழியாக இந்தியாவிற்குள் நுழையலாம் என்ற ஜப்பானியரின் போர்த் திட்டத்தை நேதாஜி வன்மையாகக் கண்டித்து, அத்திட்டத்தை மாற்றினார். பிப்ரவரி மூன்றாம் தேதி INA போர் வீரர்களை ரங்கூன் ரயில் நிலையத்திலிருந்து போர்க் களத்திற்கு நேதாஜி அனுப்பினார். அப்பொழுது அவர் கூறினார்; ''ரத்தம், ரத்தத்தை அழைக்கிறது. எதிரிகளை அழிப்போம். தியாக மரணம் இறைவன் விருப்பமானால் நாம் பெறுவோம். டில்லி செல்லும் வழி விடுதலைக்கான வழியாகும். டெல்லி நோக்கிச் செல்க!'' படை வீரர்களுடன் புறப்பட்ட ரயிலைக் கண்ணீர் வழிய பார்த்துக் கொண்டே நின்றார், நேதாஜி!

எப்பொழுதும் போரில் உண்மையாகத் தாக்க விரும்பும் இடத்தில் போரை முதலில் ஆரம்பிக்காமல் வேறு ஒரு இடத்தில் கவனத்தை மாற்றுவதற்காக ஒரு சிறு அளவிலான போரை ஆரம்பிப்பது வழக்கம். அந்த வகையில் இந்தியாவிற்குள் நுழைய அரக்கான் மலைகளில் காலதான் நதிப் பள்ளத்தாக்கில் போர் ஆரம்பித்தது.

1857 ஆம் வருடம், மே 10 அன்று மீரட்டில், வெள்ளையர்களை எதிர்த்து இந்தியப் படை வீரர்கள் துப்பாக்கி தூக்கினர்.

அதற்குப் பிறகு 1944 ஆம் வருடம் பிப்ரவரி 4 ஆம் தேதி அன்று தான் வெள்ளையர்களை நோக்கி இந்தியத் துப்பாக்கிகள் சுட்டன.

அரக்கானில் நடந்த போரில் மேஜர் ரத்தூரி வீரமாகப் போரிட்டார். மேற்கு ஆப்ரிக்காவிலிருந்து வந்த உயர்ந்த உடல் பருமன் வாய்ந்த, வலிமைமிக்க ஆப்பிரிக்கர்களைத் தோல்வி அடையச் செய்தார். இந்தியாவிற்குள் நுழைந்ததும் இந்திய மண்ணை INA படை வீரர்கள் முத்தமிட்டனர். மிகுந்த போர்களுக்கு இடையே செப்டம்பர் மாதம் வரை இடத்தைக் கைப்பற்றி வைத்திருந்தனர். இந்தப் போரில் 3500 ஆங்கிலேயர்கள் இறந்தனர்.

இதே நேரத்தில் இந்தியாவில் பூனாவில் காந்தியடிகள் அவர் வாழ்வில் கடைசி முறையாகச் சிறை வாசத்தில் இருந்தார். விடுதலைக்காக 2,338 நாட்களை அவர் தன் வாழ்வில் சிறைச் சுவர்கட்கு இடையே செலவிட்டார். அவர் 21 நாட்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்தவுடன் சர்ச்சில், ''காந்தி பசியால் சாக விரும்பினால் சாகட்டும்'' என்றார். பின்னர் தந்தி மூலம் ''இன்னும் கூடவா காந்தி இறக்கவில்லை'' என்று கேட்டு வருத்தப்பட்டார்.

ஆங்கிலேயர்களால் காந்தியடிகளை எரிக்க வைத்திருந்த சந்தனக் கட்டைகளில் அன்னை கஸ்தூரி பாவின் உடலை பிப்ரவரி மாதத்தில் எரித்தனர்.

நேதாஜி தன் ஆழ்ந்த வருத்தத்தைத் தேசத் தந்தைக்கு ரேடியோ மூலம் அறிவித்தார்.

பகுதி - 9

ரத்தக்களரி

டில்லி நோக்கி போர் ஆரம்பித்துவிட்டது. ஜப்பானியரின் ஒரு பிரிவு டிடிம் வழியாகவும் இரண்டாவது பிரிவு உக்கரல் வழியாகவும், மூன்றாவது பிரிவு பலேல் விமான நிலையம் வழியாகவும் இந்தியா நோக்கிச் செல்ல ஆரம்பித்தன. பலேல் விமான நிலையத்தை நோக்கிச் சென்ற யாமா மோட்டோ - படையில் INA வினரின் முதல் பிரிவு வீரர்கள் இருந்தனர். இதே நேரத்தில் ஷா நவாஸ்கான் பிரிவு சின்மலைகளில் போரிட்டனர். டிடிம் நகரில் வெள்ளையரோடு கைகலப்பில் ஈடுபட்டனர். கடுமையான போருக்குப்பின் இந்தியாவிற்குள் நுழைந்து மார்ச் 18-ஆம் தேதி அன்று 'மொய்ராங்' என்ற இடத்தை

I.N.A. படைகள் கைப்பற்றின. புனித மூவண்ணக் கொடியை ஏற்றினர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட பகுதிகட்கு சாட்டர் ஜியை ஆளுநராக நேதாஜி அறிவித்தார்.

பலேலில் உக்ரமான போர் நடந்தது. வெள்ளையரின் ராணுவச் செய்திப் பத்திரிக்கைகள் பலேல் விமான நிலையம் காணாமல் போய்விட்டது என அறிக்கைவிட்டு வருத்தப்பட்டன. இதனிடையில் ரங்கூனில் நேதாஜி 'ஆஸாத் ஹிந்த் பேங்க்'' ஏற்படுத்தினார். இந்தியர்கள் லட்சக்கணக்கில் பணம் பாங்கில் போட்டனர். 6.4.44 அன்று நேதாஜி தன் தலைமை அலுவலகத்தை ரங்கூனிலிருந்து இந்திய எல்லைக்கு அருகில் மேமைஓக்கு மாற்றினார். எந்த நேரத்திலும் இம்பால் கைப்பற்றப்படலாம் என்ற நிலை ஏற்பட்டது. ''என் தோட்டத்து ரோஜா பதியன்களை நான் கவனித்துக் கொள்வேன். என் வீரர்கள் போரிட்டு வெற்றிவாகை சூடுவர்'' என்று முட்டா கூச்சி கவலையின்றிக் கூறினார். இம்பாலைக் கைப்பற்றுவதில் முதலிடம் கொள்வதற்காக கியானி மலேயாவிலிருந்து அழைக்கப்பட்டார். அவர் அவசரத்தின் காரணமாகப் பெரிய பீரங்கிகள் கவச வண்டிகள், ராணுவ டாங்கிகள் இவற்றை விட்டுவிட்டுத் தன் படையினருடன் சிறிய துப்பாக்கிக்களை மட்டும் கையோடு கொண்டு வந்தார்.

வெள்ளையர்கள் போர்முறைகளை மாற்றினர். ஏராளமான கோவேறு கழுதைகள் விமானம் மூலம் கொண்டுவரப்பட்டன. அவை சுமைகளை எடுத்துச் சென்றதால் ஆங்கில வீரர்கள் பளுசுமக்க வேண்டிய தொல்லையில்லாமல் போராட ஆரம்பித்தனர்.

INA படையினரிடம் ஒருவருக்கு ஒருவர் பேச ஒயர்லெஸ் இல்லை. டெலிபோன்கள் இல்லை. செய்திளைக் கொண்டு செல்ல மோட்டார் சைக்கிள்கள் இல்லை. ஓரிடத்திலிருந்து வேறோர் இடம் செல்ல மாட்டு வண்டிகளைப் பயன்படுத்தினர். நாளாக நாளாகத் தொடர்ந்து சப்ளை இல்லாததால் உணவுப் பஞ்சம் வரலாயிற்று. ஜப்பானியரும் ஆங்கிலேயர்களும் கானகத்தில் இருப்பதற்கு ஏற்ப ஆழ்ந்த பச்சை வண்ணத்தில் முழுபேன்ட், ஷர்ட் அணிந்திருந்தனர். ஆனால்INA படையினர்

காக்கித் துணியால் ஆன அரைக்கால் நிக்கர், ஷர்ட் அணிந்திருந் தனர். எனவே காடுகளில் இவர்கள் எளிதில் பதுங்க முடிய வில்லை. வானிலிருந்து விமானங்கள் இவர்கள் மேல் எளிதில் குண்டுவீசின.

INA படையில் பெரும்பங்கு கொண்டவர்கள் தமிழர் களே. INA வின் இதயமும் ஆன்மாவும் தமிழினம் தான் என்று INA படையின் மேஜர் ஜெனரல் தில்லான் புகழ்வார். இவர்க ளைப் பற்றி INA படையின் தலைமைத் தளபதி கியானி கூறுகி றார். ''ஆரம்பத்தில் இவர்களைப் பற்றி மிக மோசமான எண் ணம் எங்களுக்கு இருந்தது. இவர்கள் எப்படிப் போரிடப் போகிறார்கள் என நாங்கள் வெறுத்தோம். ஆனால் இவர்கள் தான் இறுதிவரை துரோகம் செய்யாமல் போராடினார்கள். ஒருவர்கூட மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை.''

கோஹிமாவில் போர் உக்கிரமாக இருந்தது. இங்கு வசிக் கும் மக்கள் தலைகளை வெட்டும் நாகர்கள். பலர் கிருத்துவர் கள். எனவே ஆங்கிலேயர்கட்கு மிகவும் உதவி புரிந்தனர். காடுகளில் வழிகளைக் காட்டினர். இந்த நாகர்கள் சிகப்பு உடை அணிந்து INA படை இருக்கும் இடத்தை விமானிகட்குக் காட்டினர். அழகிய இளமையான நாகா பெண்கள் ஜப்பானி யர்கட்கு வேண்டும் என்றே தப்பான பாதைகளைக் காட்டினர். இங்கு போர்கள் 6000 - அடி உயரத்தில் நடந்தன.

குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்காமல் இரு தரப்பின ரும் கஷ்டப்பட்டனர். கோஹிமாவைக் காப்பாற்ற வெள்ளை யர்கள் பெரும்பாடுபட்டனர். தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வெட்டப்பட்ட 'டிரஞ்சுகள்', கழிப்பிடங்கள், பிணங் களைப் புதைக்கும் இடங்கள் அருகாமையிலேயே இருந்தன. பிணங்களைப் புதைக்கத் தோண்டினால் அதற்குக் கீழேயும் பழைய பிணங்கள் இருந்தன. தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வெள்ளையர்கள் ஜப்பானியப் பிணங்களைச் செங்கற் கள் போல அடுக்கி வைத்து பிணச்சுவர் கட்டி அதற்குப் பின்னி ருந்து எதிரிகளைச் சுட்டனர். மேலும் சைக்கிளில் சென்ற ஒரு ஜப்பானிய வீரனிடமிருந்து ஆங்கிலேயருக்கு ஜப்பானியப் போர்த் திட்டங்கள் கிடைத்து விட்டன. அழகிய பிணங்களிட

மிருந்து 'பிளேக் நோய்' வராமல் இருப்பதற்கு விமானம் மூலம் வெள்ளையர்கள் மருந்து தூவினர். துருப்புக்கள் இரண் டும் பல இடங்களில் மல்யுத்தம் நடத்தினர். 60 நாட்கள் உணவு, தண்ணீர் மற்றும் தளவாடங்கள் போதிய அளவில் இல்லாமல் இருந்தாலும் INA படைகள் கடைசிவரை போரிட் டனர்.

மழைக்காலம் முன்னதாகவே வந்துவிட்டது. கொட்டும் மழை தீராத துயரத்தைத் தந்தது. ஜப்பானியருக்கும் உணவு அரிசியே. சமையல் செய்ய நெருப்பு மூட்டினால் விமானத்தி லிருந்து தாக்கப்பட்டனர். உணவுப் பஞ்சமும் வர ஆரம்பித் தது. காட்டில் நீண்ட புல்லையும், காட்டரிசையையும் உண்ண ஆரம்பித்தனர். வெள்ளையர்களோ மூட்டைகள் தூக்கி வந்த மாடுகளைக் கொன்று தின்ன ஆரம்பித்தனர்.

லார்ட் மவுண்ட்பேட்டன் 16 போர் விமானங்கள் புடை சூழ ஒருவிமானத்தில் வந்து இறங்கியதைப் பார்த்து பர்மா எல்லையில் அமெரிக்கர்கள் சார்பாகப் போரிட்டுக் கொண்டி ருந்த தலைசிறந்த ஜெனரல் ஸ்டில்வெல் எரிச்சலடைந்தார். அமெரிக்காவைச் சேர்ந்த ஜெனரல் ஸ்டில்வெல் சிறந்த போர் வீரர். பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பர்மாவில் ஜப்பானிய ருக்கு எதிராகத் திறமையாக போர் புரிந்தவர். அவர் பர்மா போர்க் களத்தை ''மழை, மழை, மழை, சேறு, சேறு, சேறு, டைபாயிட், மலேரியா, உடல் சக்தி இழத்தல், உடலில் புண் கள்'' என்று வர்ணித்தார். மவுண்ட்பேட்டன் அரச பரம்பரை யைச் சேர்ந்தவர்; போரில் பல நேரங்களில் அவர் தோற்றிருந் தாலும், அவரைப் பற்றி புகழ்ந்து போர்க் காலத்திலேயே சினிமா வந்தது! மிகவும் கவர்ச்சியானவர். எனவே, ஸ்டில் வெல் மவுண்ட்பேட்டனை ஒரு ''கிளாமர் பாய்'' என்றார்! உயிர்க்காட்சி சாலைக்குச் சென்று குரங்குகளைப் பார்த்து மன நிலை ஏற்றம் பெற்றபின்தான் மவுண்ட்பேட்டனைப் பார்க்க போனதாக தன் மனைவிக்கு கடிதம் எழுதினார்!

பதவியை நன்கு செய்தும், மவுண்ட்பேட்டன் முயற்சி யால் அமெரிக்காவிற்குத் திருப்ப அனுப்பப்பட்ட ஸ்டில் வெல் சீக்கிரத்தில் மரணமடைந்தார்; அவர் படைகள் பிரிக்கப்

பட்டன. ஒரு பிரிவிற்கு மவுண்ட்பேட்டனே தலைவரானார்! அமெரிக்கத் தலைமையிடம் போர் விமானங்களை மவுண்ட் பேட்டன் கேட்டார். நூறு விமானங்கள் கேட்டதற்கு 107 விமா னங்கள் தரப்பட்டன.

அமெரிக்க விமானங்கள் ஜப்பானியரையும் INA வீரர்க ளையும் வானிலிருந்து சுட ஆரம்பித்தன. நன்கு தெரிந்ததும் INA மருத்துவ மனைகளைச் சுட்டுத் தள்ளின; அடிபட்ட ஆங் கில வீரர்களை மருத்துவமனைக்குக் கொண்டுச் சென்றன. பிப்ரவரி மாதம் முதல் ஜூன்மாதம் வரை 6000 டன் வெடிகுண் டுகள் அமெரிக்க விமானங்களால் வானிலிருந்து வீசப்பட்டன.

இந்த விமானத் தாக்குதலால் பாதைகள் முழுமையும் பிணங்கள் நிரம்பியிருந்தன. உணவு இல்லாமலும் மருத்துவ உதவியில்லாமலும் பலர் மாண்டனர். அவர்களது சடலங்கள் இந்து மத முறைப்படி நதிகளில் தூக்கி எறியப்பட்டன. பர்மா பகுதிப் படைத்தலைவர் கவாபே நேதாஜிக்கு உதவ வேண் டும் என்பதற்காகக் கடினமாகப் போர் புரிந்து கொண்டு இருந் தார். முட்டா கூச்சி தன் வீரர்களுக்குக் கூறினார்; ''ஜப்பானியப் படையினர் உணவு இல்லாவிட்டால் கூடப் போராட வேண் டும். குண்டுகள் தீர்ந்து போனால் கத்தியால் போராடுங்கள். கத்திகள் இல்லாவிட்டால் கைகளால் சமர் புரியுங்கள். கைகளை இழந்தால் காலால் எட்டி உதையுங்கள். கால்கள் இல்லாமல் போனால் பற்களால் எதிரிகளைக் கடியுங்கள். மறக்காதீர்! ஜப்பானிய ராணுவம் எந்தக் காலத்திலும் தோற்ற தில்லை. பிற்காலத்தில் வரலாறு எழுதுபவர்கள் இந்தப் போர் முறைகளை இவர்கள் செய்யவில்லையே என எழுதக் கூடாது.'' இவ்வாறு முட்டா கூச்சி முழக்கம் செய்துகொண்டு இருக்கும் பொழுதே பல ஜப்பானிய வீரர்கள் பசி தாங்காமல் மயங்கி வீழ்ந்தனர்.

கிழிந்த துணிகளுடனுடம் அழுகிய புண்களுடனும் பல வீரர்கள் நடந்தனர். சிலர் தற்கொலை செய்துகொண்டனர். சக்தியில்லாததால் சகதியில் விழுந்து இறந்தனர் பலர்! அடிபட்

டவர்களைத் தூக்கிச் செல்ல ஆட்களும் இல்லை. மாண்டவர்களைப் பார்த்து அழுவதற்கு அங்கு மனிதர்களும் இல்லை. 2,20,000 ஜப்பானிய வீரர்கள் இம்பால் போரில் பங்கு பெற்றனர். இவர்களில் 1,30,000 பேர் தான் உயிரோடு திரும்பி வந்தனர். INA வீரர்கள் ஆயிரக்கணக்கில் இறந்தனர்.

ஜூலை 8-ஆம் தேதி இம்பால் போரை நிறுத்த ஜப்பானியப் பிரதமர் டோஜோ ஆணையிட்டார். எல்லையிலிருந்து வீரர்கள் திருப்பி அழைக்கப்பட்டனர். கவாபே நேதாஜிக்கு உதவ தன் படையினரைச் சிறிது நாட்கள் கழித்துத் திரும்ப ஆணையிட்டார்.

இதனிடையே INA உயர் அதிகாரிகள் ஆங்கிலேயரிடம் சரணடைந்தார்கள். அவர்கள் கையெழுத்து இட்ட பாஸ்கள் விமானத்திலிருந்து கீழே வீசப்பட்டன. இந்த பாஸ்களை வைத்துக் கொண்டு மேலும் சிலINA வீரர்கள் வெள்ளையரிடம் சரணடைந்தார்கள். இச்செய்தி கேட்டு நேதாஜி கண்ணீர் சிந்தினார்.

கிழிந்த துணிகளுடன், எலும்பும் தோலுமாக, கோல்களை ஊன்றிக் கொண்டு சேற்றில் நடந்து, திரும்பிவந்த INA வீரர்களைக் கண்டு பியூஜிவாரா அழத் தொடங்கினார். அவர் ஆரம்பித்த புரட்சி இயக்கத்தின் முடிவு இப்படியா? என விம்ம ஆரம்பித்தார். ஜப்பானிய வீரர்கள் திரும்புவதற்கு இரண்டு நாட்கள் முன்பே இந்திய வீரர்களைத் திரும்பிவர ஆணையிட்டனர். இத்தோல்விக்குக் காரணம், ஆணைகளைச் சரியாகச் செயல்படுத்தாதது, போர் விமானங்கள் இல்லாதது மற்றும் மழைக்காலமும் ஆகும். ஆனால் பியூஜிவாரா சொல்லும் காரணம் - ''நேதாஜியை ஒரு வருடம் முன்பே சிங்கப்பூருக்கு அழைத்து வந்து பர்மாவில் போர் ஆரம்பித்திருந்தால் INA படையினர் வெற்றிவாகை சூடியிருப்பர்'' என்பதே.

படைகள் திரும்ப வேண்டும் என்ற ஆணையைக் கேட்டவுடன் நேதாஜி கற்சிலையானார். ஆனால் அவர் விவேகானந்தர் வழிவந்த கர்மயோகியாவார். மனம் தளராமல் மீண்டும்

செயல்பட ஆரம்பித்தார். இம்பால் தோல்வியின் காரணமாக ஜப்பானிய பிரதம மந்திரி டோஜோ ராஜினாமா செய்தார். பல படைத்தலைவர்கள் மாற்றப்பட்டனர்.

நேதாஜி தன் படைவீரர்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனிப்பார். சுவாமி என்ற தமிழருக்குப் பெரிய பாதங்கள் உண்டு. எனவே அவருக்கு ஏற்ற அளவில் பூட்சுகளைச் செய்து நேதாஜி தானே அவருக்கு அனுப்புவார். போர் நடக்கும் பொழுது சுவாமிக்கு ஒருமுறை இவ்வாறு அனுப்பினார். அவற்றைக் காலில் போட்ட உடனேயே சுவாமி எழுந்து நின்று எதிரிகளைச் சுட ஆரம்பித்தார். படைத்தலைவர், சுவாமியைக் கோபித்துக் கொண்டு மறைந்திருந்து படுத்துக் கொண்டு சுடச் சொன்னார். அப்பொழுது சுவாமி கூறினார். ''நேதாஜி அனுப்பிய செருப்புக்களைப் போட்டிருக்கிறேன். என்னை யாரும் கொல்ல முடியாது''.

பகுதி - 10

ரங்கூன் - பாங்காக்

ஆங்கிலேயரோடு போர் ஆரம்பித்தவுடன் ரங்கூனிலிருந்து இந்திய எல்லைக்கு அருகே உள்ள மைமையோவிற்குத் தன் தலைமை இருப்பிடத்தை மாற்றிய நேதாஜி போர்க்களத்தில் பல இடங்களில் சுற்றிவந்தார். ஆஸாத் இந்த் என்ற ஒரு சிறு விமானத்தை அவர் வைத்திருந்தார். அதன் மூலம் பறந்து போர் முறைகளை ஆராய்ந்தார். ஒரு நாளைக்கு 3 மணி நேரம் தான் தூங்கினார். வீரர்களை மருத்துவ மனையில் அடிக்கடி சந்திப்பார். அவர் போகும் பொழுது வயிற்றுப் போக்கால் அவதிப் படுபவர்களுக்கு ஜிலேபி எடுத்துச் செல்வார். எனவே அவரை 'ஜிலேபி டாக்டர்' என அழைத்து அவரது வரவை வீரர்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள்.

1944-ல் ஜுன் மாதத்தில் நேசநாடுகள் ரோம் நகரைக் கைப் பற்றின. உலக வரலாறு காணாத அளவில் கப்பல்கள் மூல மும், விமானங்கள் மூலமும் இங்கிலாந்திலிருந்து படைவீரர் கள் நார்மண்டியில் இறங்கி பிரான்சு நாட்டிற்குள் நுழைய ஆரம்பித்தனர். ஜெர்மனி தோல்வியைத் தழுவ ஆரம்பித்தது. ஐரோப்பிய வெற்றியை அடுத்து அமெரிக்க விமானங்கள் ஜப் பானியரை எதிர் கொள்ள ஆரம்பித்தன.

இறுதி முறையாக நேதாஜி அக்டோபர் 31-ஆம் தேதி டோக்கியோ சென்றடைந்தார். அப்போது அங்கு நூற்றுக்க ணக்கான அமெரிக்க ராட்சதப் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்து கொண்டிருந்தன. வானிலிருந்து பியூஜிமா மலை எளிதில் தெரிந்ததால் அமெரிக்கர்கட்கு குண்டுகள் போடுவதும் எளிதாயிற்று. இந்த ஆபத்துகளிடையே ஜப்பா னின் புதிய பிரதமரான கொய்சோவை நேதாஜி சந்தித்தார். மரணப்படுக்கையில் உள்ள ராஷ்பிஹாரி போசை அன்புடன் விசாரித்தார். டோக்கியோ பல்கலைக் கழகத்தில் பேசினார். ரஷ்ய தூதர் மாலிக்கைச் சந்திக்க முயன்றார், முடியவில்லை.

டோக்கியோவிலிருந்து திரும்பும் வழியில் ஷாங்காய், சைகோன், சிங்கப்பூர் ஆகியவற்றில் உள்ள இந்தியர்களைச் சந்தித்து வருட இறுதியில் ரங்கூன் திரும்பினார். நேதாஜி ஜெயந்தியை ஜனவரி மாதத்தில் ஒருவாரம் மக்கள் உற்சாகமா கக் கொண்டாடினர். நேதாஜியின் விருப்பத்திற்கு எதிராக, அவருடைய எடைக்கு இருமடங்கு தங்கம் தந்தனர். பெண்க ளில் பலர் தங்கள் ரத்தத்தினால் கையெழுத்து இட்டுத் தற்கொ லைப் படைக்குத் தயாரானார்கள்.

பர்மாவில் மீதி இருந்த INA படையினர் ஒன்றாக்கப்பட்ட னர். இப்பொழுது தலைவர்களாகத் தில்லான், ஷாகல், ஷாந வாஸ்கான் பதவி ஏற்றனர். ஆங்கிலேயர்கள் அமெரிக்கர்களின் உதவியுடன் பர்மாவில் நுழைய ஆரம்பித்தனர். வங்காளக் கடல்மூலம் பர்மாவைத் தாக்கினர். INA படையினர் பாப்போ மலையில் அமெரிக்கர்களுடன் போரிட்டனர். இப்பொழுதும் தொலைபேசி வசதிகள் இல்லை. போர் உக்கிரமாக நடந்தது. பக்ரி என்பவர் மிக வீரமாகப் போரிட்டுத் தன் உயிரை இழந்

தார். 1945 மே 13-ஆம் தேதி INA படையினர் பேகுவில் சரண டைந்தார்கள். போர் நடக்கும்போது அங்கு நேதாஜி போக வேண்டாம் என்று ஷாநவாஸ்கான் கூறிய பொழுது நேதாஜி பதில் அளித்தார். ''என்னைக் கொல்ல இங்கிலாந்து இன்ன மும் குண்டு செய்யவில்லை''. இதனிடையே ஜப்பானியர் உதவியுடன் படையை உண்டாக்கிய பர்மியர் தலைவர். அவுங் சான் திடீர் என்று ஜப்பானியரை எதிர்க்க ஆரம்பித்தார். ஆங்கி லேயருக்கு உதவவும் ஆரம்பித்தார். மார்ச் 20ஆம் தேதி மத்திய பர்மாவில் உள்ள மாண்டலே அமெரிக்கத் துருப்புக்களால் கைப்பற்றப்பட்டது. தன்னுடன் இருந்த ஜான்சி ராணிப் படைப் பெண்களை (இவர்களுக்கு ராணிகள் என்று பெயர்) காப்பாற்றும் பெரும் பொறுப்பு நேதாஜிக்கு ஏற்பட்டது.

பர்மாவில் வெள்ளையர்கள் வரும் வரை INA படைத் தலைவராக மேஜர் ஜெனரல் லோகநாதன் செயல்பட்டார். ரங்கூன் நகரில் எந்தவிதக் கொலைகளோ, கொள்ளைகளோ நடைபெறவில்லை. நேசநாடுகளின் துருப்புக்கள் மே மூன் றாம் தேதி ரங்கூனைக் கைப்பற்றிப் பர்மாவை வெற்றி கொண் டது. வெள்ளையர்கள் வந்த பிறகும் INAவினரைத் தொடர்ந்து போலீஸ் வேலை செய்யச் சொன்னார்கள். பின்னர் இவர்கள் கைது செய்யப்பட்டு இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார்கள்.

நேதாஜி ரங்கூனிலிருந்து பாங்காக்கிற்கு ராணிகளுடனும் தன் அமைச்சர்களுடனும், படைத்தலைவர்களுடனும் 300 மைல் தூரத்தை 23 நாட்களில் நடந்து சென்றார்.

இப் பயணத்தில் பங்குபெற்ற நேதாஜியின் நம்பிக்கைக் குரிய செயலர் மேஜர் பாஸ்கரன் இப்பொழுது சென்னை பெசண்ட் நகரில் உள்ளார். அவர் தன் அனுபவங்களைக் கூறுகி றார்: ''ரங்கூனிலிருந்து பல ராணிகள் ரயில் மூலம் சென்று விட்டார்கள். மீதி 100 பேர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. ஏப்ரல் 24-ஆம் தேதி நாங்கள் புறப்பட்டோம். 3 கார்கள், சில லாரிகள் எங்களுடன் வந்தன. நாங்கள் இரவில் தான் நடப் போம். அப்பொழுது அமெரிக்க விமானங்கள் எங்கள் மேல் குண்டு மழை பொழியும். சில லாரிகள் தகர்த்தெறியப்பட் டன. வழியில் ஆறுகள் வெள்ளப்பெருக்கெடுத்தன. ராணி

களை மறுகரைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அவர்கள் கொஞ்சம் கூட பயப்படவில்லை. எங்கள்மீது குண்டு விழுந்த தால் எங்களுடன் வந்த லெப்டினன்ட் நாசர் காலமானார். அவ ரது தந்தையை, பாரகூட்டில் இந்தியா வந்த குற்றத்திற்காக சில ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளையர்கள் தூக்கிலிட்டனர். நேதாஜி நடந்தே வந்தார். உடல் நலம் இல்லாதவர்களைக் காரில் வரச் சொன்னார். மரண ரயில் பாதையில் நடந்தோம். காஞ்சினபுரியை அடைந்தோம். அங்கு ஒரு பத்தான் தன் 14 மனைவிகளுடன் வாழ்ந்து வந்தார். அவருக்கு எத்தனை குழந் தைகள் என்பதையே அவர் மறந்துவிட்டார். அவர் எங்களுக்கு உணவு அளித்தார். இந்த நடைப்பயணத்தினால் நேதாஜியின் கால்களில் ஏற்பட்ட புண்களைக் கண்டு காப்டன் ஜானகி தேவர் கண்ணீர் சிந்தினார். பிறகு பாங்காக் அடைந்தோம். ஜெர்மானியர் நேச நாடுகளிடம் சரண் அடைந்ததை வழியில் ரேடியோ மூலம் கேட்டோம்.''

நேதாஜியையும் மற்றவர்களையும் வழியில் பார்த்த ஜப் பானிய அதிகாரி காப்டன் மயூராட்டா உணர்ச்சியோடு கூறு வார். ''பாங்காக் செல்லும் வழியில், கொட்டும் மழையில் கிழக்கு ஆசிய மக்களின் பேரன்பிற்கு உரியவரும், ஆயிரக்க ணக்கான விடுதலை வீரர்களின் தலைவருமான நேதாஜி ஒரு லாரியின் சக்கரத்தை மாற்றிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். இக்காட்சியை என் வாழ்நாள் முழுவதும் மறக்கவே முடிய வில்லை.'' பாங்காக் அடைந்தவுடன் ராணிகளுக்கு 2-மாதச் சம்பளம் அளிக்கப்பட்டு வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். பழை யபடி அவர்கள் புடவைகளைக் கட்டிக் கொண்டு மக்கள் வெள் ளத்தில் மறைந்து விட்டனர்.

பாங்காக்கிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்தார் நேதாஜி. நேதாஜி வாரத்தை மக்கள் குதூகலமாகக் கொண்டாடினர். பிரம்மாண்டமான ஊர்வலங்கள் நடைபெற்றன. INA-விற்குப் பண உதவி தந்தனர். சிங்கப்பூரில் வீரப்போரில் இறந்தவர்க ளுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்தப்பட்டது.

நாளாக நாளாக, ஜப்பான் நிறையத் தோல்விகளைப் பெற் றது. INAவில் சில குழப்பங்கள் ஏற்பட்டன. செராம்பானில்

உள்ள INA அதிகாரிகள் சொகுசாக வாழ்க்கை நடத்தினர். இதனைப் பல தமிழ் வீரர்கள் கண்டித்தனர். நேதாஜி இதனை விசாரிக்க நேரில் வந்தார். நடவடிக்கைகள் எடுத்தார்.

ஆகஸ்ட் 6-ஆம் தேதி அமெரிக்கர்கள் ஹிரோஷிமா மீது அணுகுண்டு போட்டனர், 2,000 ராட்சத விமானங்கள் ஒன்றாக வந்து 20,000 டன்கள் வெடிகுண்டு போடுவதால் உண்டாகும் அழிவை ஒரு சிறிய அணுகுண்டு ஏற்படுத்தியது. ஆயிரக்கணக்கான மக்களும், கட்டிடங்களும், பஸ்மமாகி காணாமல் போய் விட்டன. கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் அமெரிக்கர் இன்னும் ஒரு அணுகுண்டை நாகசாகி நகர் மீது போட்டனர்.

ஆகஸ்ட் 11-ஆம் தேதி ரஷ்யா, ஜப்பானுக்கு எதிராக போர் அறிவித்தது. ஜப்பான் வழியாகச் சென்று ரஷ்யாவிடம் உதவி வாங்கலாம் என்ற எண்ணம் கொண்ட நேதாஜி யோசிக்கலானார். சிங்கப்பூரில் கியானி தற்காலிக அரசின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். 15-ஆம் தேதி ஜப்பான் சரணடைந்த செய்தி வந்தது. ரேடியோவில் இறுதியாக நேதாஜி பேசினார்: ''இது ஒரு தற்காலிகத் தோல்வி. இந்தியாவின் விதியில் நம்பிக்கையை என்றுமே இழக்காதீர்கள். இந்தியாவை அடிமைத் தளையில் வைக்க உலகில் எந்தச் சக்தியாலும் முடியாது. இந்தியா விரைவிலேயே விடுதலை பெறும், ஜெய்ஹிந்த்!''

நேதாஜி என்ன செய்வது? ஆங்கிலேயரிடம் சரண் அடைந்து கைது ஆவதா? இல்லை ஜப்பான் வழியாக ரஷ்யா செல்வதா என்ற கேள்விகள் எழுந்தன. நேதாஜி இனம் தெரியாத பாதையில் சாகசம் செய்ய புறப்பட்டார். (Adventure into unknown)

நேதாஜி தன் அமைச்சர்களுடன் இரவெல்லாம் ஆலோசனை செய்தார். ஆகஸ்ட் 16-ஆம் தேதி காலை கியானி, அழகப்பன் போன்றவர்களுக்கு பிரியாவிடை தந்து ஒரு குண்டு வீச்சு விமானத்தில் ஹபிபூர் ரஹ்மான், பிரிதிம்சிங், ஐயர், ஜப்பானிய மொழி பெயர்பாளரான நிகேஷி புடைசூழ காலை 10 மணி அளவில் சிங்கப்பூரை விட்டுப் புறப்பட்டு மாலை 3 மணிக்கு பாங்காக் சென்றடைந்தார். அங்கு சிவாஜி வழிவந்த

INA படைத்தலைவர் ஜெனரல் பான்ஸ்லேவுடன் பேசினார். மறுநாள் காலை தன்னுடன் பணிபுரிந்த பாஸ்கரன் முதலான வர்களுக்குக் கண்ணீர் வழிய விடையளித்தார். காலை 8 மணிக்கு பாங்காக்கிலிருந்து புறப்பட்டு 10 மணிக்கு சைகோன் விமான நிலையத்தில் அவரும் அவரது நண்பர்களும் இரண்டு விமானத்தில் வந்து இறங்கினார்கள். அங்கு போக்குவரத்துத் துறையின் செயலர் சந்திரமால் வரவேற்றார். பின்பு நாராயண் தாஸ் வீட்டில் தங்கினார். சைகோனில் உள்ள இந்தியர்கள் மறுபடி பிரெஞ்சு ஆட்சி ஏற்படப் போவது பற்றி பயந்து கொண்டு இருந்தார்கள். சைகோன் வந்த அரைமணி நேரத்திற் குள் கியானோ என்ற ஜப்பானிய அதிகாரி விமானம் ஒன்று தயாராக இருப்பதாகவும் நேதாஜி உடனே புறப்படவேண்டும் என்றும் ஒரே ஒரு இடம் இருப்பதால் வேறு யாரும் உடன் வரமுடியாது என்றும் கூறினார். நேதாஜியின் வற்புறுத்தலால் இன்னும் ஒரு இடமும் கிடைத்தது. இரண்டு கார்களில் விமான நிலையத்தை நோக்கிச் சென்றனர். அங்கு விமானம் தயார் நிலையில் இருந்தது. இரண்டாவது கார் வர நேரமா யிற்று. சிறிது நேரத்தில் அது விமான நிலையத்திற்குள் பாய்ந்து வந்தது. அதில் உள்ள இரண்டு பெட்டிகள் விமானத்திற்குள் வீசப்பட்டன.

நேதாஜி ஹபிபூர் ரஹ்மானுடன் விமானத்திற்குள் சென்று மறைந்தார்.

ஆகஸ்ட் 23 : ''ஆல் இண்டியா ரேடியோ - புதுடெல்லி. சுபாஷ் சந்திரபோஸ் காலமானார் என்ற செய்தியை அறிவிக்கி றோம்''. இந்தச் செய்தியைக் கேட்டு உலகெங்கும் உள்ள இந்தியர்கள் கற்சிலையானார்கள். நேதாஜி என்ன ஆனார்? என்ற கேள்வி இன்றும் நீடிக்கிறது.

பகுதி - 11

நேதாஜி எங்கே?

1942-ஆம் வருடம் மார்ச் மாதம் நேதாஜி உயிருடன் இருக்கும் பொழுதே அவர் இறந்துவிட்டதாக லண்டன் B.B.C. வானொலி பொய்யான செய்தியைக் கூறியது. அதைப் போலவே இச்செய்தியும் பொய்யாக இருக்கலாம் எனப் பலர் நினைத்தனர்.

நேதாஜிக்கு என்ன நடந்தது? என்ற கேள்விக்கு பதில் காண நாம் எஸ்.ஏ. ஐயர் சொல்வதைக் கேட்போம். ''சைகோனிலிருந்து நேதாஜி விமானம் மூலம் கிளம்பிய பிறகுதான் 21-ஆம் தேதி டோக்கியோ சென்றேன். வழியிலேயே நேதாஜி

விமான விபத்தில் இறந்தார் என்ற செய்தி கேட்டு வருத்தப்பட்டேன். செப்டம்பர் 8-ஆம் தேதி காலை ஜப்பானின் ராணுவத் தலைமை இடத்தில் இருக்கும்போது ஒரு சிறிய கலசத்தை என்னிடம் தந்து அதில் நேதாஜியின் அஸ்தி இருப்பதாகக் கூறினார்கள். அதை எடுத்துக் கொண்டு ராமமூர்த்தி வீடு சென்றோம். அவர் ஜப்பானிலிருந்த ஒரு INA தொடர்பு அதிகாரி. அவர் வீட்டில் நாங்கள் துக்கத்தில் அமைதியாக நின்றோம். கையிலிருப்பது நேதாஜியின் அஸ்திதானா என்ற சந்தேகம் பலதடவை வந்தது. சிலமணி நேரம் கழித்து ஹபிபூர் ரஹ்மான் வந்தார்.அவர் எங்களிடம் கூற ஆரம்பித்தார். "சைகோனிலிருந்து புறப்பட்ட நாங்கள் இந்தோசைனாவில் உள்ள டுரைன் விமான நிலையத்தை மாலை சென்று அடைந்தோம். மறுநாள் ஆகஸ்ட் 18 காலை அந்த ஊரை விட்டு புறப்பட்டு மாலை 2 மணிக்கு ஃபார்மோஸா தீவில் உள்ள (தைவான் என்று இப்பொழுது அழைக்கப்படுகிறது) டைஹோக்கு அடைந்தோம். பிற்பகல் 2.35க்கு விமானம் மீண்டும் புறப்பட்டது. புறப்பட்ட சிறிது நேரத்தில் விமானத்தின் இடது பக்கத்தில் உள்ள சுழலும் விசிறி கீழே விழுந்தது. உடனே விமானம் தரையில் விழுந்தது. நேதாஜிக்குத் தலையில் பலமாக அடிபட்டது. விமானத்தின் பின் பக்க கதவு மூலம் வெளியே வரமுடியாது. அங்கு தீப்பற்றி இருந்தது. அவர் முன்பக்கக் கதவு வழியாக வெளியே செல்ல ஆரம்பித்தார். அவர் பருத்தியாலான ஷர்ட் போட்டிருந்தார். அதன் மேல் பெட்ரோல் முன்பே இருந்திருக்கிறது. உடனே தீப்பிடித்துக் கொண்டது. அவர் உடல் கருக ஆரம்பித்தது. முகத்தில் பயங்கரத் தீக்காயம் ஏற்பட்டது. விமானத்தை அக்கினித் தேவன் சூழ அவர் வெளியே வந்தார். நேதாஜியைக் காப்பாற்ற முயன்றதில் எனக்கு கைகளில் காயம் பட்டது. நாங்கள் உடனே மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டோம். நேதாஜி மருத்துவமனைக்கு வந்ததும் தன் நினைவை இழந்தார். பிறகு மீண்டும் நினைவு வந்தது. விமான விபத்திற்கு உள்ளான மற்ற ஜப்பானியர்கள் கடும் வலியினால் அலறினார்கள். தங்களைச் சுட்டு விடுமாறு வேண்டினர். ஆனால் நேதாஜி தன் வலியைப் பொறுத்துக் கொண்டார். என்னிடம் கூறினார்.

''ஹபீப் என் முடிவு சீக்கிரத்தில் வந்துவிடும். என் வாழ் நாள் முழுமையும் நம் நாட்டின் விடுதலைக்காகப் போராடி யுள்ளேன். நம் நாட்டின் விடுதலைக்காக நான் உயிரிழக்கி றேன். இந்திய விடுதலைக்காக நம் மக்களைப் போராடச் சொல். இந்தியா சீக்கிரத்தில் விடுதலை அடையும்.' பிறகு சிறிது தண்ணீர் குடித்தார். அவர் விருப்பப்படி சிறிதளவு காய்க றிக் கூட்டு தரப்பட்டது. அதன் சுவையை பாராட்டினார். ஜப் பானியத் தலைவர் டெரூச்சிக்குச் செய்தி அனுப்பினார். பிறகு தன் நினைவிழந்தார். 1945 ஆம் வருடம் ஆகஸ்ட் 18-ஆம் தேதி இரவு 11 மணிக்குத் தன் 48வது வயதில் மரணம் அடைந்தார்.

நேதாஜியின் உடலைப் போர்க்காலமாக இருப்பதால் கொண்டு செல்ல முடியவில்லை. எனவே அவர் உடலை எரித்து, அஸ்தியைத் தந்தார்கள். அதனை எடுத்து வந்துள் ளேன்.'' ஹபிபூர் ரஹ்மான் சொன்னதைக் கேட்டு ஐயரும் அவரது நண்பர்களும் பெருந்துன்பத்தில் ஆழ்ந்தனர்.

''எனக்கு மகன்கள் இல்லை. நீங்கள் தான் என் மகன்கள்'' என்று நேதாஜியால் பாசத்துடன் கூறப்பட்ட 46 டோக்கியோ கேடட்டுகள் தங்கள் தந்தைக்காக இறுதிக் கடன் செலுத்தினர். 3 நாட்கள் அஸ்திக்கு மரியாதையாக நின்றனர். பிறகு அந்த கலசத்தைப் போர்க்காலமாக இருப்பதினால் என்ன செய்வது என்ற கேள்வி ஏற்பட்டது. பிறகு ராமமூர்த்தி வீட்டிற்கு அரு கில் உள்ள ரங்கோஜி கோயிலில் வைக்கப்பட்டது. இக்கோ யில் புத்தமதத்தில் நாட்டு உணர்வு மிகுந்த, போர்க்குணம் உடைய நிச்சேயிரன் பிரிவைச் சேர்ந்தது ஆகும்.

நேதாஜி இறந்ததை ஐயர் முழுமையாக நம்புகிறார். உயி ருடன் இருந்தால் நேதாஜி தாயகம் வராமல் இருக்கமாட்டார். தன் குடும்பத்தைப் பார்க்காமல் இருக்கமாட்டார். இதே கருத் தினைச் சென்னையில் உள்ள டோக்கியோ கேடட்டான கேப் டன் தாசன் கூறுகிறார். ஆனால் இது சுத்தக் கட்டுக்கதை என்கி றார் நேதாஜியின் நம்பிக்கைக்குரிய செயலர் மேஜர் பாஸ்கரன். நேதாஜி ரஷ்யா சென்று அங்கு பிற்காலத்தில் இறந்திருக்கலாம் என முழுமையாக நம்புகிறார். தான் கல்கத்தா விமான நிலை யத்தில் ஹபிபூர்ரஹ்மானைப் பார்த்ததாகவும், விமான விபத்

தைப் பற்றிக் கேட்டதாகவும், அதற்கு ஹபீப் தான் ஒரு படை வீரர் என்று கூறியதாகவும் தெரிவிக்கிறார். முத்துராமலிங்கத் தேவர் இறுதிவரை நேதாஜி உயிருடன் இருப்பதாகவே கூறி வந்தார்.

நேதாஜியின் மறைவைப் பற்றிக் கேள்விப்பட்ட காந்திய டிகள் நேதாஜியின் குடும்பத்திற்கு ஒரு தந்தியடித்தார். ''நேதா ஜிக்கு இறுதிக்கடன் செய்ய வேண்டாம்'' என்று கூறினார்.

இந்தியா விடுதலை பெற்றபின், நேதாஜி என்ன ஆனார் என்ற கேள்வி பலமாக ஒலிக்க ஆரம்பித்து. நேரு இதனைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. துணை அமைச்சர் ஷா நவாஸ்கான் நேருவைப் பல முறை ஒரு விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டினார்; நேரு மறுத்துவிட்டார். பாராளுமன்றத் தில், நேதாஜியின் மறைவைப்பற்றி ஆராய வேண்டியது ஜப் பான் அரசுதான் எனக் கூறினார்.

கல்கத்தாவில் பொது மக்கள், தலைசிறந்த நீதிபதியான ராதா பினோத் பால் அவர்களை வைத்து கமிஷன் ஆரம்பிக்க முயன்றனர். உடனே நேதாஜியின் மரணத்தைப் பற்றி ஆராயப் பிரதமர் நேரு 1956-இல் ஒரு கமிட்டி அமைத்தார். அதில் ஷா நவாஸ்கான், மைத்திரா, நேதாஜியின் மூத்த சகோதரர் சுரேஷ் சந்திரபோஸ் உறுப்பினர்களாக இருந்தனர். அவர்கள் டோக் கியோ, சைகோன் போன்ற பல நகரங்களுக்குச் சென்று பலரை விசாரித்தனர். ஆனால் அந்த நேரத்தில் இந்தியாவிற்கும் தைவானுக்கும் அரசியல் தொடர்பு இல்லாததால் அவர்கள் விபத்து நடந்த இடத்திற்குப் போக முடியவில்லை. ஷாந வாஸ் கானும், மைத்திராவும் நேதாஜியின் மரணத்தை ஊர்ஜி தப்படுத்தினர். அவரது சகோதரர் மறுத்துவிட்டார்.

இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது 1970-ஆம் ஆண்டு மீண்டும் ஒரு நபர் கமிஷன் போடப்பட்டது. உயர் நீதிமன்ற நீதிபதி கோசலா இந்தப் பதவியில் அமர்த்தப்பட் டார். நேதாஜி இறந்ததாக நான்கு ஆண்டுகள் கழித்து இக்கமி ஷன் அறிவித்தது. கோசலா ஒரு விந்தையான மனிதர். தன் அறிக்கையில் 27 இடங்களில் நேதாஜியைத் துரோகி, கைப்

பாவை, நாட்டைக் காட்டிக் கொடுக்கும் மனிதர் எனக் குறிப்பிட்டார். பதவியில் இருக்கும் பொழுதே பார்மோஸா தீவில் இருந்து இந்திராகாந்திக்கு அன்பளிப்பு கொண்டுவந்தார். இந்திரா காந்தியின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதினார். 'நேதாஜியின் இறுதி நாட்கள்' என்ற நூலையும் வெளியிட்டார். இச்செயல்களுக்காக கல்கத்தா உயர்நீதி மன்றம் இவரை வன்மையாகக் கண்டித்தது.

ஆனால் ஒன்று உண்மை. ஜெய்ஹிந்த் என்ற முழக்கம் இந்தியாவில் உள்ளவரை அந்த முழக்கத்தில் நேதாஜி உயிர் வாழ்வார் என்பதில் எவருக்கும் சந்தேகம் இல்லை.

நேதாஜியின் பொக்கிஷம்

INA படையினருக்குச் சம்பளம் ஒழுங்காகத் தரப்பட்டது. படைகள் கலைக்கப்பட்டபொழுது வீரர்கட்கு 2 மாதச் சம்பளம் தரப்பட்டது. படையினருக்கு உணவு ஜப்பானியரிடம் இருந்து விலைக்கு வாங்கப்பட்டது. போர்கருவிகள் ஆங்கிலேயரிடமிருந்து பிடிக்கப்பட்டவை. எனவே INA ஜப்பானியரைச் சாராத ஒரு சுதந்திரப்படையாகும் என்பது உண்மை.

படையினரின் செலவுக்காக நேதாஜியிடம் மக்கள் பணம், நிலம், தங்க நகைகள், வெள்ளி நகைகள் ஆகியவற்றை வாரி வழங்கினர். நேதாஜி இறுதியாகச் சைகோனிலிருந்து புறப்படும்போது இரண்டு பெட்டிகள் நிறைய தங்க நகைகள் எடுத்துச் சென்றார். இதில் ஜெர்மானிய சர்வாதிகாரி ஹிட்லர் அன்பளிப்பாகத் தந்த கைகடிகாரமும் உண்டு. பார்மோசாவில் விமான விபத்து நடந்த மறுநாள் அங்குள்ள பள்ளிப் பெண்களைக் கொண்டு விமான நிலையத்தின் தரை ஆராயப்பட்டது. கிடைத்த நகைகள் ஒரு மரப்பெட்டியில் போடப்பட்டன. ஹபிபூர் ரஹமான் அதனை எடுத்து வந்து டோக்கியோவில் மூர்த்தி வீட்டில் வைத்தார். அதன் எடை 11 கிலோ. இதைத் தவிர எஸ்.ஏ. ஐயர் 300 கிராம் தங்கமும் 20,000 யென் பணமும் தந்துவிட்டு வந்தார்.

1951-ஆம் வருடம் நேருவின் வேண்டுகோளுக்கு இணங்க எஸ்.ஏ. ஐயர் டோக்கியோ சென்று நகைகளைப் பார்த்துவிட்டு வந்தார். பிறகு ஒரு ICS அதிகாரி அதனை டெல்லிக்குக் கொண்டு வந்தார். இந்தப் பெட்டி ராஷ்ட்டிரபதி பவனில் உள்ள கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

அப்பெட்டியில் என்ன உள்ளது என்று யாருக்கும் தெரியாது. 27-வருடங்கள் கழித்து 1978இல் பிரதமர் மொரார்ஜி தேசாய் இதனைப் பற்றிக் குறிப்பிட்டார். ஆனால் பெட்டியைத் திறந்து உள்ளே உள்ள தங்க நகைகளை மக்கள் பிரதிநிதிகள் பார்க்க அனுமதிதரவில்லை.

திரு. சுப்பிரமணிய சுவாமி 1978-ஆம் வருடம் செப்டம்பர் 8 ஆம் தேதி பம்பாயில் ஒரு குண்டைப் போட்டார். "டோக்கியோவிலிருந்து வந்த நகைகளை அலகாபாத்தில் உருக்கி நேரு எடுத்துக் கொண்டார்". ஆனால் இதனைப் பற்றி பிறகு வாயே திறக்கவில்லை. திரு. சுப்ரமணியசாமி வாக்குகள் சேகரிக்க சென்னை பெசன்ட் நகர் வந்த பொழுது இந்நூலாசிரியரிடம் நேருவைப் பற்றி அன்று கூறியதை இன்றும் தான் ஒப்புக் கொள்வதாகக் கூறினார். சான்றுகள் இருப்பதாகவும் கூறினார்.

இப்பொக்கிஷத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் நூலாசிரியர் H.N. பண்டிட், சி.பி.ஐ. போலீசால் அன்புடன் விசாரிக்கப்பட்டார். இதுவரை இந்தப் பெட்டியில் என்ன உள்ளது என்று யாருக்கும் தெரியவில்லை.

1995 ஆண்டு ஜப்பான் அரசு இந்திய அரசிடம் நேதாஜியின் பணத்தைத் திருப்பித் தந்தது எவ்வளவு வந்தது என்று இந்திய அரசு தெரிவிக்கவில்லை. கோடிக்கணக்கான மதிப்புடைய தங்கத்தை இந்திய அரசு எந்த வகையில் செலவு செய்யப் போகிறார்கள் என்றும் அறிவிக்கவில்லை.

பகுதி - 12

செங்கோட்டை, டில்லி

நேசநாடுகளின் வெற்றிக்குப்பின் இந்தியாவிலிருந்து சென்ற படையினர்INA படையினரைப் பர்மாவிலும் மலேயா விலும் சிறைப் பிடித்தனர். மவுண்ட்பேட்டன் ஆணைப்படி INA நினைவுச் சின்னம் சிங்கப்பூரில் தகர்த்து எறியப்பட்டது. இருப்பினும் இந்தியப் படை வீரர்கள் மெள்ள மெள்ள INA படையினரின் தேசபக்தியை உணர்ந்தனர். அவர்களின் வீரப் போர் பற்றிக் கேள்விப்பட்டனர். தெருக்களில் 'ஜெய் ஹிந்த்' என்று சொல்லி ஓடும் பாலசேனை சிறுவர்களைக் கண்டு வியந்தனர். இருபடைகளுக்கும் இடையே நட்புணர்வு மலர ஆரம்பித்தது.

பர்மாவிலும், மலேயாவிலும் INA வீரர்கள் சிறைப் பிடிக்கப்பட்டு இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டு, டெல்லி செங்கோட்டையில் போர்க் கூண்டுகளில் கைதிகளாக வைக்கப்பட்டனர். ஆரம்பத்தில் INA படைவீரர்கள் சிலர் செங்கோட்டையில் பூமிக்கு அடியில் உள்ள சிறைகளில் வைக்கப்பட்டு சித்திரவதைக்கு ஆளாக்கிக் கொல்லப்பட்டனர். பிறகு நிலைமை மாறியது.

காந்தியடிகள், நேரு, பட்டேல், சரோஜினி நாயுடு ஆகியோர் வந்து இக்கைதிகளைச் சிறையில் சந்தித்தனர். அகிம்ஸா மூர்த்தி காந்தி தன் பெயரில் கொரில்லாப் படை ஒன்று இருந்ததைக் கண்டு அதன் படைத்தலைவர் கியானியைச் செல்லமாகக் கோபித்தார். நீங்கள் நம் அதிகாரிகள் என்றார். அவர் முகத்தில் மகிழ்ச்சியின் ஒளி வீசியது என்பதை யாவரும் கண்டனர். நேதாஜியை காந்தியடிகளால் மறக்கவே முடியவில்லை. காந்தி இறப்பதற்கு 7 நாட்கள் முன்பு ஜனவரி 23-ஆம் தேதி கூறினார். "நான் எந்தப் பிறந்த நாளையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது இல்லை. ஆனால் நேதாஜியின் பிறந்தநாளை மட்டும் என்னால் மறக்கவே முடியாது. நேதாஜியின் நற்பண்புகளை இந்திய மக்கள் மனதில் கொள்ள வேண்டும்".

ராணுவ ரகசியமாக இதுவரை இருந்த INA படையைப் பற்றியும், நேதாஜியைப் பற்றியும் இந்திய மக்கள் தெரிந்து கொண்டனர். ஐரோப்பாவிலிருந்து ஜெர்மானிய உடை அணிந்துவந்த INA வீரர்களையும், காக்கி உடை அணிந்து கிழக்காசியாவிலிருந்து வந்த INA வீரர்களையும் இந்திய மக்கள் கண்டு வியந்தனர்.

இவ்வாறு வந்த வீரர்களைப் பல விசாரணைக்கு பிறகு ஆங்கில ராணுவ அதிகாரிகள் வெள்ளை, சாம்பல், கருப்பு என மூன்று குழுவாகப்பிரித்தனர். INAவில் சேராதவர்களும், சேர்ந்திருந்தாலும் பெரும் பங்கு கொள்ளாத வீரர்களும் வெள்ளைப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மீண்டும் ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படலாம். INAவில் சாதாரணமாகப் பங்கு பெற்றவர்கள் சாம்பல் பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்குச் சில மாதச் சம்பளம் தரப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்படுவார்

கள். INAவில் முழுப்பங்கு எடுத்த வீரர்கள் கருப்புப்பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் உடனே சம்பளம் இன்றி வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள்.

INA வீரர்களைப் படையில் நடத்திச் சென்ற தலைவர்களான ஷாநவாஸ்கான், தில்லான், ஷேகல் என்ற முஸ்லீம், சீக்கிய, இந்து மதத்தைச் சேர்ந்தவர்களின் மேல், பிரிட்டிஷ் மன்னருக்கு எதிராகப் போர் தொடுத்தார்கள் என வழக்கு தொடரப்பட்டது. மேலும் இவர்கள் கொலை செய்ய முயன்றதாகவும் கூறப்பட்டது.

எந்தச் செங்கோட்டைக்கு வெற்றி வீரர்களாக வந்து இந்தியாவிற்கு விடுதலை தரவேண்டும் என்று நேதாஜி நினைத்தாரோ, அந்தச் செங்கோட்டையில் நவம்பர் 5-ஆம் தேதி அவர்கள் மீது வழக்கு ஆரம்பித்தது. அது டிசம்பர் 31-வரை நடந்தது. இதில் INA சார்பில் வழக்காட புலாபாய் தேசாய் தலைமையில் ஒரு வழக்கறிஞர் குழு ஏற்படுத்தப்பட்டது. புலாபாய் தேசாயை வழக்கறிஞராக தனக்கு உதவி புரிய தன் தந்தை தான் நியமித்தார் என்று ஷெகல் கூறுகிறார்.

நேரு பல ஆண்டுகளுக்குப்பின் வக்கீல் உடை அணிந்து இந்த வழக்கில் பங்கேற்றார்.

இந்த வழக்கில் ஜப்பானியர்களான சாடிரோ, ஷநாசி, ரென்சோ, டெரோ, ஜெனரல் குட்டப் பூரா ஆகியோர் INA படையானது ஜப்பானியர் ஆணைப்படி செயல்படாத ஒரு முழுமையான சுதந்திரமாகச் செயல்பட்ட படை என்று சாட்சி கூறினார்.

INAவை ஆரம்பித்த ஃபியூஜிவாரா ஜப்பான் சரணடையும் பொழுது உடல்நலம் இல்லாமல் மருத்துவமனையில் இருந்தார். தன்னைக் கிழக்காசியாவில் INA ஆரம்பித்தற்காக அமெரிக்க ஆங்கிலப் படைகள் சித்ரவதை செய்யும் எனப்பயந்து நர்சிடம் இருந்து பொட்டாசியம் சையனைடு வாங்கி வைத்திருந்தார். இந்தியாவிற்கு வந்து அவர் சாட்சி கூற வேண்டும் என அழைக்கப்பட்டவுடன் என்ன நடந்தாலும் சரி எனத் தீர்மா

ளித்து சயனடைத் தூக்கி எறிந்துவிட்டு இந்தியா புறப்பட்டார். அமெரிக்க விமானத்தில் அவர் பறந்து வந்து கொண்டு இருக்கும்போது பர்மாவை மேலிருந்து பார்த்தார். கண்கள் குளமாயின. டெல்லியில் இறங்கிய பொழுது அவர் எண்ணம் நேதாஜியைப் பற்றிச் சுழன்றது. இந்தியாவில் INA வீரர்கள வைக்கப்பட்டிருந்த போர்க்கூண்டுகளில் ஜெய்ஹிந்த் என்ற முழக்கங்களைக் கேட்டு அவர் உணர்ச்சி வசப்பட்டார். கம்பிகளுக்கு இடையே மோகன்சிங்கைச் சந்தித்தார். INA வீரர்கள் ஒன்று சேர்ந்து இரவில் பாடும் குரலைக் கேட்டபொழுது அவர் தன் சொந்த வீட்டில் சகோதரர்களுடன் இருக்கின்ற உணர்வு பெற்றார்.

1942 - க்குப் பிறகு இந்திய விடுதலைப் போராட்ட உணர்வு மிகவும் குறைந்திருந்தது. காந்தியடிகள் சிறையில் இருந்ததால் அவரை மற்ற தலைவர்கள் சந்திக்க முடியவில்லை. கிழக்காசியாவில் விடுதலைப் போரானது குடும்பம் முழுவதும் பங்குகொள்ளும் போராக இருந்தது. மகன்INA வில் படை வீரனானான்! மகள் ராணி ஜான்சி பட்டாளத்தில் சேர்ந்தார்! சிறுவன் பாலசேனாவில் சேர்ந்தான்! தந்தையோ போருக்குத் தன் பணத்தைக் கொடுத்து பக்கிரியாக நின்றார்! ஆனால் இந்தியாவில் அந்தநிலை இல்லை. இந்திய விடுதலைக்கு எதிராகவே சில கட்சிகள் செயல்பட்டன. விடுதலை உணர்வு மங்கியிருந்த நேரத்தில் வாராது வந்த மாமணி போல் INA வழக்குகளைக் காங்கிரஸ் கட்சி நன்கு பயன்படுத்திக் கொண்டது.

INA வழக்குகளை எதிர்த்து கல்கத்தா, லீகூர், சென்னை போன்ற நகரங்களில் ஊர்வலம் நடந்தது. சென்னையில் நடந்த ஹர்த்தாலில் வன்முறை தலைதூக்கியது. கல்கத்தாவில் தொடர்ந்து ஒரு வாரம் போராட்டம் நடந்தது. செங்கோட்டையைச் சுற்றி லட்சக்கணக்கான இந்தியர்கள் முற்றுகையிட்டனர். வெள்ளையருக்கு எதிராகப் போராடினார்கள். நூற்றுக் கணக்கானவர்களைப் போலீஸார் சுட்டுத் தள்ளினர்.

வழக்கு முடிவில் ஷாநவாஸ்கான், தில்லான், ஷேகல் ஆகிய மூவருக்கும் ஆயுள் தண்டனை தரப்பட்டது. இருப்பி

னும் மக்கள் விருப்பப்படி ஃபீல்டு மார்ஷல் ஆக்கின்லெக் தண்டனையைத் தள்ளுபடி செய்தார்.

காங்கிரஸ்காரர்கள் INA வழக்குகளைப் பயன்படுத்திய தைப் போல முஸ்லீம் லீக் கட்சிக்காரர்கள் பர்ஹான் ஹுதின், ரஷுத் என்ற INA வீரர்கள் வழக்கை எடுத்து வாதாட ஆரம்பித்த னர்.

1944 - ஆம் வருடம் ஜுலை 12-ஆம் தேதி நேதாஜி கூறி னார்: - ''1946-ஆம் வருடம் பிப்ரவரி 4-ஆம் தேதி வரைக் காத்திருங்கள். அதற்குபின் என் விடுதலைக்கான கால அட்ட வணை தவறாக இருந்தால் குறை கூறுங்கள்.'' அவர் எண்ணப் படியே, INA படைவீரர்களுக்கு ஆதரவாக இந்தியக் கடற்படை யினர் வெள்ளையருக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கினர். உப்பினை அடிப்படையாக வைத்து காந்தியடிகள் விடுதலைப் போராட்ட உணர்வை ஊட்டியதைப் போல உணவு நன்றாக இல்லை எனக் கூறி விடுதலைப் போராட்டத்தில் இறங்கினர். பம்பாயிலிருந்த 'தல்வார்' என்ற தொலைத் தொடர்பு அடிப்ப டைக் கப்பலில் இருந்து ஆரம்பித்து இந்தியாவின் பல பகுதிக ளில் இருந்த கடற்படை வீரர்கள் பிப்ரவரி 18-ல் வேலை நிறுத் தம் செய்தனர். இதில் 30,000 கடற்படை வீரர்கள் பங்கெடுத்த னர். இந்தியப் படை வீரர்கள் பணிய மறுத்தால் ஆங்கிலேய வீரர்கள் கடற்படையினரைச் சுட்டனர். பலர் இறந்தனர்.

பம்பாயிலும் பூனாவிலும் விமானப் படை வீரர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர். குர்லாவில் தரைப் படையி னர்வேலை நிறுத்தம் செய்தனர். இவர்கட்கு ஆதரவாக பம்பா யில் நடந்த ஊர்வலத்தைக் கலைக்க வெள்ளையர்கள் டாங்கிக ளைக் கொண்டு வந்து 200க்கும் மேற்பட்ட பொதுமக்களைச் சுட்டு வீழ்த்தினர். இந்திய விடுதலைக்காகப் போராடிய இந் திய கடற்படை வீரர்களும் விமானப் படை வீரர்களும் பதவியி லிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இந்திய விடுத லைக்குப் பின்னரும் இவர்களுக்கு மீண்டும் பதவிகள் தரப்பட வில்லை. 476 பேர்களுக்கு மட்டுமே ஓய்வு ஊதியம் 1973-ஆம் வருடம் ஜூன் மாதத்தில்தான் தரப்பட்டது.

திருச்சி, மதுரை, சென்னையில் மாபெரும் ஊர்வலங்கள் நடந்தன. ஆனால் அரசியல் உணர்வு படையினருக்கு வருவது நல்லதல்ல என்ற நியாயமான உணர்வு கொண்ட காந்தியடிகள், நேரு, ஜின்னா, பட்டேல் ஆகியோர் இந்து - முஸ்லீம் வேற்றுமை இல்லாமல் போராட்டத்தைக் கைவிடும்படி வேண்டினர்.

இந்தியாவில் தாங்கள் தாக்கப்பட்டால் இந்தியப் படையினரிடமிருந்து எப்படித் தங்களைக் காப்பாற்றிக் கொள்வது என பல ரகசிய சுற்றறிக்கைகளை வெள்ளையர்கள் அனுப்பினர்.

இந்தியப் படையினரை இனி நம்ப முடியாது என்ற உணர்வு வெள்ளையர்களுக்கு வந்தது. நமக்காகப் போரிட்ட இந்தியப் படையினரிடையே தேசிய உணர்வு வந்துவிட்டது; இவர்களை நாம் ஆள முடியாது. எனவே இந்தியாவிற்கு விடுதலை தர வேண்டும் என பிரதமர் அட்லி இங்கிலாந்து சட்ட சபையில் கூறினார்.

மகாத்மா காந்தியடிகள் ஊட்டிய உணர்வாலும், நேதாஜியின் INA படையினரால் இந்தியப் படையினரிடம் ஏற்பட்ட விடுதலைப் போராட்ட உணர்வுகளாலும் 1947-இல் நாம் விடுதலை பெற்றோம்.

வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோளெங்கள் வெற்றித் தோள்கள்!
கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள்
ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்!
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய் கின்றதமிழ்
எங்கள் மூச்சாம்!

— புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

INA-வின் இருதயமும்
ஆத்மாவும் தமிழர்கள்தான்

— மேஜர் ஜெனரல் தில்லான்

பாகம் - நான்கு

இந்திய தேசிய ராணுவத்தில் தமிழர் பங்கு

இந்திய தேசிய ராணுவத்தில் தமிழர் பங்கு

இந்திய விடுதலைக்கான போராட்டத்தில் கிழக்கு ஆசியாவிலிருந்த தமிழர்கள் பங்கு மகத்தானது ஆகும். மலேயா, பர்மா, சயாம், சுமத்ரா போன்ற நாடுகளுக்குத் தமிழர்கள் பிழைப்பதற்காகச் சென்றனர். அங்கு அவர்கள் கூலிகளாகவோ, சிறு வியாபாரிகளாகவோ அலுவலகத்தில் பணிபுரிபவர்களாகவோ வாழ்ந்தனர். மலேசியாவில் ரப்பர் தோட்டத்தில் தமிழர்கள் கடினமான சூழ்நிலையில் வாழ்ந்தனர். மலேரியா சுரம் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றது. அங்கு வெள்ளையர் ஆதிக்கம் தலைவிரித்தாடியது. சிறு சிறு குற்றத்திற்கெல்லாம் தமிழர்கள் தண்டனைக்குள்ளானார்கள். அவர்

கட்கு அடி, உதை மிகச் சாதாரணம். தவிர, வழியில் வெள்ளை யரைப் பார்த்தால் சைக்கிளில் வரும் தமிழர்கள் இறங்கி வணங்க வேண்டும். வாழச்சென்ற அவர்கள் வதைக்கப்பட்ட னர்.

''இந்தியா விடுதலை பெற்றால். ஆசியாவின் மற்ற நாடு கள் உடனே விடுதலை பெறும்'', என்ற நேதாஜியின் அறைகூ வல் அவர்களைச் சிந்திக்கவும் வைத்தது; செயல்படவும் வைத் தது.

இந்தியாவில் விடுதலை என்பது ஒரு சில கட்சிகளின் குறிக்கோளாக இருந்தது. நீதிக்கட்சி சில காரணங்களைக் காட்டி முழுமையாக வெள்ளையருக்கு ஆதரவாகச் செயல்பட் டது. கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாம் உலகப்போர் நடக்கும் பொழுது ரஷ்யாவிற்கு ஆதரவு தெரிவித்து ஆங்கிலேயருக்கு உதவ ஆரம்பித்தது. அஹிம்சா மூர்த்தியான காந்தியடிகள், விடு தலை பெற தன் வழி சரியா என ஆராய்ந்தார். இந்தியப் போராளிகள் வெள்ளையரைத் தாக்கினால் தாக்கப்பட்ட வெள்ளையர் குடும்பத்திற்கு காந்தியடிகள் வருத்தம் தெரிவித் தார். சில சமயங்களில் போராட்டங்களை உச்சக்கட்டத்தில் நிறுத்தியும் விட்டார். எனவே எலின் வில்கின்சன் என்ற ஆங் கில அம்மையார், ''காந்தியடிகள் வெள்ளையரின் முதல் விரோதி. ஆனால் அவர்களின் சிறந்த போலீஸ்காரர்'' என்றார்.

1942-க்கு பிறகுதான் காந்தியடிகள் வெள்ளையர்களைப் பற்றி முழுமையாக உணர்ந்தார். அவரது எந்த சத்தியாகிரக மும், உண்ணாநோன்பும் ஆங்கிலேயரின் மனதை மாற்ற வில்லை. 30-ஆண்டுகள் அவர் போராடியும், வழி பிறக்க வில்லை. அவர் நேரடி நடவடிக்கையில் இறங்கினார்.

நேரடி நடவடிக்கையில் இறங்கிய காந்தியடிகளை உடனே ஆங்கில அரசு கைது செய்தது. காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். ''செய் அல்லது செத்துமடி'' என்ற காந்தியடிகளின் அறைகூவலை ஏற்க சாதாரண விவசாயிகளும் மாணவர்களும் தயார் ஆனார்கள். பின்பு நாளாக, நாளாக ''வெள்ள்ளயனே வெளியேறு'' என்ற போராட்டம் தன் வலுவை இழந்தது.

ஆனால் 'இந்திய விடுதலை' என்ற போராட்ட ஒளி விளக்கு மங்காமல் இருக்க நேதாஜி மலேயாவிலும், பர்மாவிலும் செயல்பட்டார். அவருக்கு உதவியாக அங்கிருந்த தமிழினம் முழுமையாகச் செயல்பட்டது.

I.N.A.வில் தமிழர்கள் பெரும்பங்கு எடுத்தனர். நேதாஜியின் 'மக்களின் முழுமையான ஈடுபாடு' என்ற வேண்டுகோளுக்கு இணங்க ஒவ்வொரு தமிழ் குடும்பத்தினரும் முழுமையாகப் பங்கு ஏற்றனர். இந்தியாவில் பெரும் பணக்காரக் குடும்பங்கள் பிரிட்டிஷார் அளித்த 'சர்', 'ராவ் பகதூர்' போன்ற பட்டங்களைப் பெறுவதற்கு ஆங்கிலேயருக்கு உதவியாக இருந்தனர். நடுத்தரக் குடும்பங்கள் வெள்ளையர் தந்த அரசுப் பணிகளில் சேர்ந்து அடிமைகளாக வாழ்ந்தனர். சாதாரண மக்களோ ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன? என்று வாழ்ந்து வந்தனர். ஆனால் மலேசியாவிலும், பர்மாவிலும் எல்லாத்தரப்பு மக்களும் முழுமையாகப் பங்கு ஏற்றது வியப்பிற்குரியது.

INAவின் தூண்களாக நால்வர் கருதப்பட்டனர். 1. மராட்டிய மன்னர் சிவாஜி இனத்தைச் சார்ந்த பான்ஸ்லே. 2. பத்தான் இனத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கியானி. 3. மேஜர் ஜெனரல் ஏ.சி.சட்டர்ஜி. இவர் நிதி அமைச்சராகவும் இருந்தார். 4. தமிழரான மேஜர் ஜெனரல் A.D.லோகநாதன். I.N.A.துவங்கிய நாள் முதல் இவர் போர் வீரராக இருந்து உழைத்தவர். இவரை அந்தமான், நிக்கோபார் தீவுகட்கு நேதாஜி ஆணையாளராக நியமித்தார். பர்மாவில் I.N.A.படையினர் சரணடைந்த போது தலைமை அதிகாரியாகச் செயல்பட்டார். இவரை அன்புடன் எல்லாரும் 'மாமா' என்று அழைப்பர். டெல்லி செங்கோட்டையில் பின்னர் கைதியாக இருந்தார்.

இவரைத் தவிர மேஜர் ஜெனரல் அழகப்பா, நாகரத்தினம், கர்னல் சோமசுந்தரம் போன்ற பல தமிழ் உயர் அதிகாரிகளும் இருந்தனர். டாக்டர் அழகப்பா ஒற்றர் பள்ளியின் துணை இயக்குநராக இருந்தார்.

I.N.A. வில் மொத்தம் நான்கு படைப் பிரிவுகள் இருந்தன. பாதி வீரர்கள் தமிழர்கள். நேரு பிரிகேடில் 600 தமிழர்கள்

இருந்தனர். இவர்களில் பலர் அரக்கான் போர்க்களத்தில் வீர மரணம் அடைந்தனர். தன் அருகில் இருந்தவரிடம் தான் உயிர் போகும் வரை போராடியதை நேதாஜியிடம் கூறும்படிச் சொல்லி இறந்தனர்.

ராணி ஜான்சி படையின் தலைவராக கேப்டன் லட்சுமி இருந்தார். இவர் சென்னையைச் சேர்ந்தவர். இந்தப் படையில் கேப்டன் ஜானகி தேவர் பெரும் பங்கு ஏற்றார். இவர் இந்தியா வில் பிறக்காதவர். இந்தியாவையே பார்க்காதவர். இவரைப் போன்ற பல பெண்கள் இந்திய விடுதலைக்காகப் போராடி னார்கள். விவசாயக் குடும்பங்களில் இருந்தும் நடுத்தரக் குடும் பங்களில் இருந்தும் வந்த அந்த இளம் பெண்கள் தங்கள் நீண்ட கார்க்குழலைக் கத்தரித்து விட்டு ராணுவப் பயிற்சிக்குப் பின் பர்மா போர் முனைக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் செவி லியர்களாகப் பணிபுரிய மறுத்து துப்பாக்கி ஏந்தி ஆங்கிலேய ருடன் போராட விரும்பினார்கள்.

பாலசேனா என்ற INA பிரிவில் சிறுவர்களும் சிறுமியர்க ளும் பங்கு ஏற்றனர். இவர்கள் போர்க்காலத்தில் ஓரிடத்திருலி ருந்து மற்றோரிடத்திற்குச் சென்று தகவல் தெரிவித்தனர். மலேயாவிலும் பர்மாவிலும் உலகப்போர் முடிந்த பின்பு நேசப் படைகள் INA வைச் சிறைப் பிடித்தது. அவர்களை இந்தியாவிற்கு அனுப்பியது. பிரிட்டிஷ் படையில் இந்திய வீரர்கள் பலர் இருந்தனர். அவர்களைப் பார்த்து பாலசேனா சிறுவர்கள் 'ஜெய்ஹிந்த்' என்ற சொல்லிவிட்டு ஓடுவார்கள். இதன் பிறகுதான் நேதாஜி பற்றியும் INA பற்றியும் இந்தியத் துருப்புகள் உணர்ந்தனர். வெள்ளையர்களுக்கு எதிராக அவர் கள் மனம் மாறினர்.

நேதாஜியும் தமிழர்கள் மீது மிகுந்த பாசம் கொண்டிருந் தார். படைப்பயிற்சியின் போது ஒரு தமிழர் இறந்த பொழுது மிகவும் வருத்தப்பட்டு இந்த மாதிரி நிகழ்ச்சி நடக்கக் கூடாது என ஆணையிட்டார். ஒரு முறை 600 க்கும் மேற்பட்ட தென் னிந்திய INA வீரர்களைக் கைது செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நேதாஜி ஜெனரல் திலானை அழைத்துக் கூறினார். ''இவர்கள் மிகச் சிறந்த வீரர்கள்; இவர்களை வீணாக மிரட்டி

னால் பயப்படமாட்டார்கள். மேலும் இவர்கள் கடமையுடன் இறுதிவரை போராடுவார்கள். இவர்கள் புரட்சி செய்ததற்குக் காரணம் இதுவரை இருந்த அவர்களது படைத்தலைவர்களின் தவறான போக்குதான். எனவே நீங்கள் தலைமை ஏற்றுச் செயல்படுங்கள்.''

நேதாஜி வேண்டுகோளுக்கு இணங்க திலான், படைத் தலைவரானார். அவர் கூறுகிறார். ''இவர்கள் தலைவராக நான் இருந்தது என் பெரும் பேறு. **INA - வின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்''.**

INA வின் தலைவர் ஜெனரல் கியானி கூறினார்; ''ஆரம்ப காலத்தில் இந்தத் தமிழர்கள் பயிற்சிக்கு வந்தனர். இவர்களை எப்படிப் படை வீரர்களாக்குவது? என்ற கவலை எங்களுக்கு இருந்தது. ஆனால் பயிற்சிக்குப் பின் இவர்கள் தலை சிறந்த வீரர்கள் ஆனார்கள். இவர்கள் இறுதிவரை போரிட்டார்கள். ஒருவர் கூடகாட்டிக் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக் கது.

ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில், இந்திய இனங்களில் கூர்க் காக்கள், ஜாட்டுகள், சீக்கியர்கள் எனச் சில இனங்களிலியே வீரம் மிகுந்த இனங்களாகக் கருதினார் (Martial race). அந்த இனங்களில் இருந்து படை வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார். தமிழ் மக்களைப் படையி னராகக் கொண்டு ராணுவம் நடத்திய நேதாஜியைக் கண்டு அவர் எரிச்சல் அடைந்து ரேடியோவில் கூறினார். ''மலேயா ரப்பர் தோட்டத்தில் ரப்பர் பால் உறிஞ்சும் தமிழர்களின் ரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது''. அதற்கு நேதாஜி இந்தத் தமிழர்கள்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் ரத்தத்தைக் குடிப்பார்கள் என்றார்.

INA வில் இருந்து கொண்டு பெரும் துரோகத்தைச் செய்த வன் கர்னல் துரானி! இந்தியாவிற்கு ஒற்றறிய வந்த இவன் ஆங்கிலேயரிடம் சரணடைந்து தங்கப்பதக்கம் பெற்றான். அவனே கூறுகிறான் ''நேதாஜி என்ன செய்தார்? இரண்டு டிவிஷன் தமிழ்ப் பையன்களை வைத்துக் கொண்டு INA ஆரம் பித்தார். அவர்கள் கையில் லத்திகளைக் கொடுத்து பயிற்சி

தந்தார். அவர்களுக்குக் கூட்டமாக 'வந்தே மாதரம்' பாட்டுப் பாடத்தான் தெரியும். ஆனால் அவர்கள் உணர்ச்சி வியக்கத்தக்கது.''

நேதாஜியின் ஆணைகளைக் கைகளில் ஏற்று தமிழர்கள் ஒற்றர் பள்ளியில் சேர்ந்தனர். சுவராஜ் நிறுவனத்தின் துணை இயக்குநர் அழகப்பா. பயிற்சி தந்தவர் சோமசுந்தரம். அங்கிருந்து நீர்மூழ்கிக் கப்பல் மூலமோ, பாரசூட் மூலமோ இந்தியாவிற்குப் பல ஒற்றர் வந்தனர். அவ்வாறு வந்தவர்களில் தூக்கிலப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள்தான். இதனை நினைக்கும் போது நமக்குக் கண்கள் குளமாகும்.

டெல்லியிலும், கல்கத்தாவிலும் INA ஒற்றர்களுக்கு ஆயுள் தண்டனை தரப்பட்டது. இந்திய விடுதலைக்குப் பிறகு இவர்கள் சிறையில் இருந்து விடுதலை பெற்றனர்.

இரண்டாவது உலகப்போர் 1945 மே மாதம் முடிந்தது. ஆனால், 1945 மார்ச் மாதத்தில் நான்கு தமிழர்கள் தூக்கிலிடப்பட்டனர். இது தமிழ்நாட்டின் கருப்புத்துரைகளின் அடிமை வெறியைக் காண்பிக்கும். இந்தியா விடுதலை பெற்ற பிறகு இவ்வீரர்களைப் பற்றி நாம் அறியாதது விந்தையிலும் விந்தை. தமிழனாகப் பிறந்ததால்தான் ராமுத் தேவர், ராமசாமி ஒன்றியார் போன்றவர்களின் புகழ் பாடப் பெறவில்லை.

தலைசிறந்த படைத்தலைவர்களை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நேதாஜி 46 பேர்களைத் தேர்ந்தெடுத்து டோக்கியோவிற்கு அனுப்பினார். அவர்கள் அங்கு தலைசிறந்த ராணுவப் பள்ளிகளில் பயிற்சிப் பெற்றனர். அவ்வாறு சென்றவர்களில் 16 பேர்கள் தமிழர்களே! இலங்கைத் தமிழர் கூட ஒருவர் இருந்தார்.

இலங்கை விடுதலை பெறுவதற்கு இலங்கைத் துறை ஒன்றை நேதாஜி உருவாக்கினார். INA வில் சேரத் தமிழர்கள் பெரும் ஆர்வம் கொண்டனர். படை சேர்க்கும் இடங்களில் ஒரே நாளில் 2500 பேர் சேர்ந்தனர். உடல் வலிமை இல்லாதவர்களும் தாங்கள் சேர்க்கப்படாவிட்டால் தங்களைச் சேர்த்துக்

கொள்ளும்படி சத்யாகிரகம் செய்தனர். 14 வயது சிறுமிகள் 16 வயது என பொய்கூறி INA வில் சேர்ந்தனர். திருமணம் புரிந்த அன்றேகூட INA-வில் சேர்ந்தவர் உண்டு. இப்படைக்கு உதவ மக்கள் பணத்தை வாரி வாரி தந்தனர். சில சமயங்களில் நேதாஜிக்குப் போடப்பட்ட மாலைகள் 30,000 ரூபாய் வரை ஏலத்தில் விலை போயின. ஒருவர் தன்னிடம் இருந்த 200 மாடுகளை அளித்தார். கிழிந்த உடையுடன் ஏழ்மையின் உச்சநிலையில் இருந்த ஒரு மூதாட்டி தன்னிடம் இருந்த மூன்று டாலர் தந்த போது நேதாஜி தயங்கினார். பணத்தை வாங்கிக் கொள்ளுமாறு மூதாட்டி நேதாஜியை வற்புறுத்தினார். நேதாஜியின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

INA வரலாற்றில் மிக அதிகப் பண உதவி செய்தவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள். பர்மாவில் மட்டும் ரூ.15 கோடி உதவினர். முத்தையா செட்டியார் என்பவர் வாரி, வாரி வழங்கினார். 5.9.43 அன்று செட்டியார்கள் மூவர் 3 லட்சம் ரூபாயை நேதாஜிக்குக் கொடுத்தனர். அன்று மட்டும் மக்களிடமிருந்து 20 லட்சம் வெள்ளி மொத்தமாகத் தரப்பட்டது. அக்காலத்தில் வள்ளல்களாகச் செட்டியார்கள் இருந்ததை ஷபராணி என்ற அதிகாரி பலமுறை கூறுகிறார். இத்தகைய செட்டியார்கள் சிலர் டோக்கியோவிற்கும் சென்று ராணுவப் பயிற்சி பெற்றனர்.

நேதாஜியைச் சுற்றித் தமிழர்கள் பலர் எப்பொழுதும் இருந்தனர். அவருடைய சமையல்காரர் பெயர் காளி. காளி செய்யும் ரசத்தை 'சூப்' என்று சொல்லி சுபாஷ் சுவைத்துக் குடித்து மகிழ்வார்.

நேதாஜி சிங்கப்பூர் வந்தபொழுது அவரை முதலில் வரவேற்றுப் பேசியவர் சிதம்பரம். இறுதியாக ஜப்பான் சரணாகதி கேட்டு நேதாஜிக்குச் செய்தி சொல்ல ஓடி வந்தவர் கணபதி. நேதாஜியின் இறுதிக் கடித்தை எழுதியவர் திவி என்ற தமிழர். நேதாஜியின் அமைச்சரவையில் S.A. ஐயர், A.D. லோகநாதன், திவி அமைச்சர்களாக இருந்தார்கள். பிற்காலத்தில் திரு மதி. சிதம்பரமும் துணை அமைச்சரானார்.

மலேயாவில் மட்டுமல்ல. ஜெர்மனியிலும் தமிழர்கள் நேதாஜிக்கு உதவினர். ஜெர்மனியிலிருந்து வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகளை நடத்தியவர் திரு. நாயுடு என்பவர். இவர் அந்தக் காலத்திலேயே பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் பெரிய வியாபாரியாகவும் மிகுந்த செல்வம் உடையவராகவும் இருந்தார். ஒரு உணவு விடுதியை வெற்றிகரமாக நடத்தி வந்தார். நேதாஜியின் விருப்பத்திற்கு ஏற்ப உணவு விடுதியை மூடிவிட்டு ஜெர்மனியை அடைந்து தமிழ் நிகழ்ச்சிகளை ஆரம்பித்தார். குண்டு மழை பொழிந்தபோதுகூட நிகழ்ச்சிகளை நிறுத்தவே இல்லை. ஜெர்மனியிலிருந்து ஹாலண்ட் சென்று தொடர்ந்து தமிழ் நிகழ்ச்சிகளை நடத்தினார். நாலரை ஆண்டுகளில் ஒரே ஒரு நாள்தான் தமிழ் நிகழ்ச்சி நடைபெறவில்லை.

மலேயாவிலும் நேதாஜிக்கு ஆதரவாக ''யுவபாரதம்'', ''சுதந்திர இந்துஸ்தான்'' போன்ற இதழ்கள் வெளிவந்தன. விடுதலை உணர்வை மக்களுக்கு ஏற்படுத்தின.

INA வினர் மலேயாவில் கைதிகளாக இருந்தபோது இந்திய ராணுவத்தைச் சேர்ந்த சென்னை ரிஜிமண்ட் போர் வீரர்கள், INA-வினரை விடுதலை செய்யவும் தயாராக இருந்தனர்!

பிறகு

மலேயாவில் இருந்த INA-வினரைப் பற்றி அறிவதற்காக காங்கிரஸ் கட்சி நேருவைச் சிங்கப்பூருக்கு அனுப்பியது. அங்கு அவருக்கு INA-வினர் மகத்தான வரவேற்பு தந்தனர்; தங்கள் சீருடையில் ராணுவ முறையில் மரியாதை செலுத்தினர்.

''வாழும் நடைமுறையில் இந்தியனைவிட ஆங்கிலேயப் பண்புகளை நேரு கொண்டவர்'' எனக் காந்தியடிகள் கருத்திற்கு ஏற்ப, நேரு சிங்கப்பூரில் இருந்த மவுண்ட்பேட்டன் பிரபுவிடம் ஆழ்ந்த நட்பு கொண்டார். மவுண்ட்பேட்டனால் தகர்த்து எறியப்பட்ட INA சின்னத்திற்கு நேரு மலர் மாலை வைப்பதைத் தான் தடுத்துவிட்டதாகத் தன் சுய வரலாற்றில் மவுண்ட்பேட்டன் கூறுகிறார். எந்த மவுண்ட்பேட்டனை எதிர்த்து நேதாஜி போரிட்டாரோ, அதே மவுண்ட்பேட்டனு

டன் நேரு ஒரு காரில் சிங்கப்பூரிலும், பிறகு டெல்லியிலும் பவனி வந்தார்!

மவுண்ட்பேட்டனை மிகவும் நேசித்த நேரு, லண்டனில் இருந்த கிருஷ்ண மேனனிடம் இந்தியாவின் அடுத்த வைசிராயாக மவுண்ட்பேட்டனைக் கொண்டு வர முயலுமாறு கூறினார். நேருவின் விருப்பத்தை கிரிப்ஸ் என்ற அமைச்சரிடம் மேனன் கூறினார். கிரிப்ஸ் இந்த வேண்டுகோளை ஆங்கிலப் பிரதமர் அட்லியிடம் கூற, மவுண்ட்பேட்டனை இந்தியாவின் வைசிராயாக அட்லி நியமித்தார்; மவுண்ட்பேட்டனும் அவர் மனைவியும் நேருவும் சிறந்த நண்பர்கள் ஆனார்கள்!

மவுண்ட்பேட்டன் போன்றவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நேரு INA-வினரை மீண்டும் இந்திய ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை. இந்தியாவை எதிர்த்து ஐதராபாத் நிஜாமின் துருப்புக்கள், இந்திய ராணுவத்திடம் போர் புரிந்தனர்; ஆனால், பிறகு அதே ஐதராபாத் ராணுவத்தினர் இந்திய ராணுவத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்!

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ''INA-காரர்களில் சில பெரியவர்களை மாத்திரம் பதவிகளுக்கு எடுத்துக் கொண்டு INA காரர்களுக்கு எந்த உதவியும் செய்யாமல் பட்டினியாய் சாகவிட்டது ஜீவகாருண்யமற்ற - தேசியமற்ற - தில்லுமுல்லு; அதோடு நிற்காமல் அவர்களைப் பட்டாளத்தில் சேர்க்க முடியாது என்று மானங்கெட்ட உத்தரவு போட்டது. நேதாஜி படத்திற்குகூடப் பட்டாளத்தில் தடை'' என்று வருத்தத்துடன் கூறினார்.

1953-ஆம் வருடத்தில் நேருவிடம் ஒரு கேள்வி கேட்கப் பட்டது: *''1944*-ல் INA மொய்ராங்கைக் கைப்பற்றியது இந்திய நாட்டின் விடுதலையா அல்லது ஆக்ரமிப்பா?'' இதற்கு நேரு, INA இந்தியாவில் ஆக்ரமிப்பு செய்ததாக கூறினார்! (It is Occupation) *(ஆதாரம்: கியானியின் நூல்)*

INA-வை ஆரம்பிக்க மிகவும் உதவிய பியூஜிவாரா *1986*-ஆம் வருடம் தனது *79*-ஆவது வயதில் இறந்தார். நேதாஜியின் மனைவி எமிலி இன்று ஜெர்மனியில் உடல் நலம் குன்றி வாழ்ந்து வருகிறார். அவர் மகள் அனிதா சென்னை வந்தபொ

பூது அப்போது முதல்வராக இருந்த காமராசர் அன்புடன் வரவேற்று ராஜபவனில் விருந்து அளித்தார். முத்துராமலிங்கத் தேவர் தன் தலைவர் மகளை மதுரைக்கு அழைத்துச் சென்று வாழ்த்தினார். அனிதா இன்று ஜெர்மனியில் உள்ள ஆக்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் பன்னாட்டு சட்டப் பேராசிரியை; அவர் கணவர் டாக்டர் மார்ட்டின் பிபாப் அங்கு பொருளாதாரம் போதிக்கிறார். இவர்கட்கு மூன்று குழந்தைகள்.

1987-ஆம் ஆண்டு அனிதாவும் அவரது கணவரும் ஜனாதி பதி ஜெயில் சிங்கின் விருந்தினர்களாக வந்தனர்; இவர்கள் குடியரசு நாளில் பங்கு ஏற்றனர்; பிறகு ஜெயில்சிங் தந்த விருந் தில் பங்கு பெற்றனர். எந்த நிகழ்ச்சியையும் தொலைக்காட்சி யினர் ஒளிபரப்பவில்லை! விருந்திற்கு அமைச்சர்களும் வர வில்லை. பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியும் வரவில்லை. ''என்னைக் கண்டல்ல, என் தந்தையின் நிழலைக் கண்டு இவர் கள் அஞ்சுகின்றனர்'' என்று அனிதா கூறினார்.

ஷா நவாஸ்கான், டாக்டர் ராஜு, போன்ஸ்லே, மத்திய துணை அமைச்சர்கள் ஆனார்கள்; ராகவன், திவி, கில் ஆகி யோர் இந்தியாவின் தூதர்கள் ஆன்றார்கள்.

கேப்டன் லட்சுமி கான்பூரில் வாழ்ந்து வருகிறார். கம்யூ னிஸ்ட் கட்சி உறுப்பினர். இவர் கணவர் ஷெகல் 1992-இல் மறைந்தார்.

S.A. அய்யர் பம்பாய் தகவல் தொடர்புத் துறையில் பணி யாற்றினார்; நேதாஜியின் நம்பிக்கைக்குரிய செயலர் மேஜர் பாஸ்கரன் சைகோன் சிறையில் வைக்கப்பட்டார். அங்கு வந்த சிறை அதிகாரி அயர்லாந்து நாட்டைச்சேர்ந்தவர். அவர் பாஸ்க ரனிடம் தனக்கு நேதாஜி மேல் மரியாதை உண்டு எனத் தெரி வித்து, சிறையைவிட்டு ஓடிவிடும்படி கூறினார்; பாஸ்கரன் மறுத்துவிட்டார். இன்று சென்னையில் உள்ள அவரது மகளை, சென்னை தேவகி மருத்துவமனை இயக்குநர் டாக்டர் சொக்கலிங்கம் திருமணம் செய்துள்ளார்.

சுவராஜ் நிறுவனத்தில் பயிற்சி பெற்று, சிறையில் வாடிய திரு. C.G.K. ரெட்டி இந்து நாளிதழில் பல கட்டுரைகள் எழுதி பெங்களூரில் அமரரானார். அங்கு பயிற்சி பெற்ற K.A.K.

மேனன் INA-வைப் பற்றி ஓர் ஆங்கிலப் புத்தகம் எழுதினார்; சென்னையில் உள்ளார்.

மலேயா கம்யூனிஸ்டுகள் லெப்டினனட் செல்வநாதன், குருதேவன் போன்ற பல தமிழர்கள் மரண தண்டனை விதிக்கப்பட்டு பிறகு நாடு கடத்தப்பட்டு இப்போது சென்னையில் வாழ்கிறார்கள்.

இந்தியா விடுதலை பெற்ற பின்னரும், முதல் 10 ஆண்டுகள், காங்கிரஸ் கட்சியின் இருமுறை தலைவராக இருந்த நேதாஜியின் பிறந்த நாளை அக்கட்சியினர் கொண்டாடவில்லை; நேதாஜியின் திரு உருவப்படம் ஜனதா ஆட்சியில் தான் 1978-இல் டெல்லி பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டது. நேதாஜியின் உருவம் கொண்ட தபால் தலை 1964-இல் ஜனவரியில் வெளியிடப்பட்டது. 1995 டிசம்பர் மாதத்தில் INA-யின் பொன்விழா தொடர்பாக லட்சுமி தலைமையில் ஒரு குழு சிங்கப்பூரில் புறப்பட்டு இம்பால் வழியாக இந்தியா அடைந்தது!

இந்தியாவின் மிகப் பெரிய விருது 'பாரத ரத்னா' விருது ஆகும். இதனை 1954-ல் ஆரம்பித்தார்கள். இதனை ஆரம்பித்த 38 வருடங்கட்கு பிறகு 1992-இல் மௌலானா அபுல் கலாம் ஆசாத்திற்கும், நேதாஜிக்கும் வழங்கப்பட்டன. நேதாஜி குடும்பம் அந்த விருதினை வாங்க மறுத்துவிட்டது.

இந்திரா காந்தி பிரதமராக இருந்தபொழுது ஒரு காலப் பெட்டகம் பூமியில் மிகவும் ஆழமாகப் புதைக்கப்பட்டது; பிறகு அதனை ஜனதா ஆட்சியில் வெளியே எடுத்துப் பார்த்த பொழுது அதில் நேதாஜி அல்லது INA பற்றி வரலாற்றுக் குறிப்புக்கள் இல்லை!

எல்லா விடுதலைத் தியாகிகட்கும் ஏற்படும் நிலைதான் INA தியாகிகட்கும் ஏற்பட்டது. பலர் வறுமையில் துன்பப்பட்டனர்; மாண்டனர். INA-வினருக்கு 1967-ல் தமிழக அரசாலும் 1972-இல் இந்திய அரசாலும் ஓய்வு ஊதியம் தரப்பட்டது. ஆனால், பர்மாவின் அடர்ந்த காடுகளிலும் மலைகளிலும் மரணப் பள்ளத்தாக்கிலும் இன்னுயிர் இழந்த INA-வின் முகம் தெரியா வீரர்களை என்று இந்தியர் பாராட்டப் போகிறார்கள்?

இணைப்பு - ஒன்று

இந்திய தேசிய ராணுவம் INA

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் - சிபா சாலர் - தனிப் பெருந் தலைவர்

படைப் பிரிவுகள்: மொத்தம் 30,000 முதல் 40,000 வரை

முதல் டிவிஷன்: தலைவர்: எம்.எப். கியானி, 1. சுபாஷ் பிரிகேட், மேஜர் ஜெனரல் ஷா நவாஸ் கான், 2. காந்தி பிரிகேட் - கர்னல் ஐ.ஈ. கியானி, 3. ஆசாத் பிரிகேட் - கர்னல் குல்சாரா சிங், 4. நேரு பிரிகேட் - கர்னல் அஸீஸ் அகமது

இரண்டாவது டிவிஷன், மூன்றாவது டிவிஷன், ராணுவ இயக்குனர் (அலுவலகம்): பான்ஸ்லே, மருத்துவப் பிரிவு: லோகநா

தன், ஒற்றர் பிரிவு: மேஜர் மாலிக், பயிற்சி பிரிவு: அர்ஸத், Q பிரிவு: கர்னல் திம்மையா; கல்வி, பிரச்சாரம்: கர்னல் ஜஹாங் கீர், பெண்கள் படை: (ஜான்சி படை) தலைவர்: கர்னல் லட் சுமி, துணைத் தலைவர்: மேஜர் மனோரஞ்சிதம் சத்யவதி நாயுடு.

பர்மா போர்க் களம்: பங்கு எடுத்துக் கொண்ட 6000 INA வீரர்க ளில், 2600 பேர்தான் உயிருடன் திரும்பினர். அவர்களில் 2000 பேர் நேராக மருத்துவமனை செல்ல நேரிட்டது.

போரிட்ட இடங்கள்: அரக்கான், தாமு, பலேல், கோஹிமா, இம்பால், உக்ருல், மரணப் பள்ளத்தாக்கு, கலாதன் பள்ளத் தாக்கு, பெகு.

ஐரோப்பா போர்க்களம்: பிரான்சு, ஜெர்மனி.

இணைப்பு - இரண்டு

பினாங் சுவராஜ் நிறுவனத்தில் ஒற்றர் பயிற்சி பெற்று இந்தியா வந்து ஆங்கிலேய அரசினால் தூக்கிலிடப்பட்ட INA வீரர்கள்.

1. சென்னை சிறை

10.9.43

1. V.M.A. அப்துல் காதர் - வயது 23, 2. S.A. ஆனந்த் - வயது 30, 3. பவுஜா சிங் - வயது 29, 4. S.C. பரதன் - வயது 26.

7.7.44

5. T.P. குமரன் நாயர் - வயது 36, 6. ராமுத் தேவர் - வயது 18

மார்ச், 45

7. N.K. ஞானராம் அல்லது உன்னிராம், 8. ரத்னம் அல்லது மூர்த்தி, 9. ராமசாமி அல்லது முத்துமணி, 10. சேது அல்லது கிருஷ்ணன்

டில்லி சிறை

23.8.43

1. அஜாய்ப் சிங் (பஞ்சாப்), 2. அகமது (பஞ்சாப்), 3. S.L. மஜூம்தார் (வங்காளம்)

கல்கத்தா சிறை

சேதுமாதவன், மோகிந்தர் சிங், சித்ரவதையில் இறந்தார்கள்.

ஆயுள் தண்டனை

டில்லி: 1. சியாம் லால் பாண்டே, 2. அவுத்ஸ்வர் ராய், 3. சோஹன் சிங், 4. கங்கா சிங், 5. சாது சிங், 6. S.N. சோப்ரா, 7. ராம் டுபே, 8. பகவத் உபாத்யாயா, 9. கர்த்தார் சிங், 10.

கன்வால் சிங்

கல்கத்தா

1. மோகன்ராம், *2.* அமெரிக் சிங் கில், *3.* ஹரிதாஸ் மித்ரா, *4.* சந்தர பாசு

மரண தண்டனை விதிக்கப்பட்டு தப்பியவர்: போனிபேஸ் பெரேரா - 5 ஆண்டுகள் சிறை.

இன்று உயிருடன் இருக்கும் தமிழர்கள்: *1.* முகமது கனி (கீராம் பூர்), *2.* சாந்தப் பிள்ளை (காரைக்கால்).

தூக்கில் இடப்பட்ட ஏனைய INA வீரர்கள்

1. சட்டார் சிங் - டெல்லி - *29.7.44.*
2. நாஸிர் சிங் - டெல்லி - *29.7.44.*
3. தூர்கா மால் - டெல்லி - *25.8.44.*
4. ஹசாரா சிங் - செங்கோட்டை - *25.10.44.*
5. சர்தாரா சிங் - கல்கத்தா - *23.3.45.*
6. நாகிந்தர் சிங் - கல்கத்தா - *28.8.43.*
7. கேசரி சாந்த் சர்மா - டெல்லி - *3.5.45.*
8. சரன்சிங் - முல்டான் - *28.8.43.*
9. தால் பஹதூர் தாபா - டெல்லி - *3.5.45.*
10. டால்பாரா சிங் - டெல்லி - *3.5.45.*
11. சனான் சிங்
12. குருசரண் சிங்
13. பிரிதிம் சிங்
14. கர்த்தார் சிங்

இணைப்பு - 3

டோக்கியோ கேடட்டுகள்

1. திரு. ஆர்.எம். அண்ணாமலை, காரைக்குடி 2. அமரர் பிரிகே டியர் அட்டார் முகம்மது, பாகிஸ்தான் 3. அமரர் அனுப்சிங் குமார், 4. ஏர்கமோடார் ஆர்.எஸ். பெனிகல், பெங்களூர் 5. அமரர் பிமோல் தேவ், பர்மா 6. அமரர் பிஷன்சிங், கடலில் மூழ்கியவர் 7. அமரர் எஸ்.கே. சாட்டர்ஜி, கல்கத்தா 8. திரு. என்.ஜி. சவுதிரி, கோலாலம்பூர் 9. கேப்டன் டி.தாசன், அயனா வரம், சென்னை 10. அமரர் க. துரைசாமி, 11. அமரர் ஏ.ஆர். டுட்டா, யு.எஸ்.ஏ., 12. திரு.வி.கணபதி, திருப்பத்தூர் 13. அம ரர் ஜி. கணபதி, கோலாலம்பூர் 14. திரு.டி.கனராஜன், பாலக் காடு 15. திரு. எம்.காந்திநாதன், கோலாலம்பூர் 16. திரு. ஏ.கே. கோஷ், மலேஷியா 17. அமரர் எம். காந்திதாஸ், 18. அமரர் ஏ.கே. குப்தா, ராஞ்சி 19. திரு. அர்பன்ஸ் சிங் குமார், புதுடில்லி 20. கேப்டன் பி. கர்மாகர், புதுடில்லி 21. திரு.சி.பி. கிருஷ்ணன், 22. அமரர் என்.கருப்பையா, 23. கேப்டன் கே.டி. மேனன், சென்னை 24. திரு. பி.எல். மெய்யப்பன், காரைக்குடி 25. திரு.ஆர். மெய்யப்பன், பம்பாய் 26. அமரர் பிரிகேடியர் பி.கே. மித்ரா, 27. திரு.என்.சி. முக்கர்ஜி, மலேஷியா 28. திரு. வி.நாச் சியப்பன், சென்னை, 29. கேப்டன் சி.பி. நாராயணன், இங்கி லாந்து 30. திரு.ஆர்.பி. நாயுடு, பம்பாய் 31. திரு.எஸ்.எஸ். நிந்தரா, சண்டிகார் 32. அமரர் நவரத்னம், இலங்கை 33. அமரர் கே. ரபீந்தரநாத், மலேஷியா 34. அமரர் பி.கே. ராஜன், ஆப்பி ரிக்கா 35. மேஜர் எம்.கே. ராம்குமார், திருவனந்தபுரம் 36. கேப்டன் ரஞ்சித்தாஸ், பம்பாய் 37. திரு. ராபர்ட் எஸ். பிராஸ் பர், கிழக்கு மலேஷியா 38. அமரர் ஆர்.கே. சேகர், வியாசர் பாடி, சென்னை 39. திரு. எஸ்.பி. சர்மா, சிங்கப்பூர் 40. திரு. எஸ்.பி. சர்மா, இங்கிலாந்து 41. திரு. சி.எல். தேவர், கனடா 42. திரு. எச்.எஸ். விரிக், சிட்னி 43. திரு. எஸ்.எஸ். விரிக், மெல்போர்ன் 44, திரு.எஸ். கர்மாகர், ஜாம்ஷெட்பூர் 45. திரு.வி. நடராஜன், சிங்கப்பூர் 46. திரு. எஸ்.வி. சர்மா, இங்கி லாந்து.

இணைப்பு - 4

பிரிட்டிஷ் ஏகாதிபத்ய முதுகெலும்மை முறித்த இறுதிக் கருவி

கர்னல் ஜி.எஸ். தில்லன் *அவர்கள், 12.10.1969 அன்று மதுரையில் ஆற்றிய உரைINA வில் தமிழர்கள் பங்கினை விளக்கமாகக் கூறும்.*

பதவிப் பித்தும் அதிகார ஆதிக்க அரசியலும் அதிகாரத்தின் பலன்களை பரிபூர்ணமாக அனுபவிக்கும் களியாட்டமும் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் சென்ற 25 ஆண்டுகளுக்கு

முன்பு நாம் அடிமைப்பட்டிருந்த மக்கள் தானா என்பதையே புரிந்து கொள்வதென்பது மிகவும் சிரமமாகும்! அன்று நமது பரிபூர்ண எஜமானர்களாக பிரிட்டிஷார் விளங்கினார்கள். அன்று தரைப் படையிலும், கடற்படையிலும் பிரிட்டிஷார் மிகவும் பலம் பொருந்தியவர்களாக இருந்தனர். அன்று பிரிட்டிஷாரின் கடற்படை வலிமையைக் குறிக்க கடல் அலைகளையும் பிரிட்டன் ஆளுகிறது என்று கூறி வந்தனர்.

அன்றைய நாட்களில் ''பிரிட்டிஷ் மன்னர் நீடூழி வாழ்ந்து எங்களை ஆள வேண்டும்'' என்று பள்ளிகளில் பாட்டுகளைப் பிள்ளைகளுக்கு கற்பித்து வந்தனர். அத்துடன் எப்படி சூரியன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் மறைவதில்லை என்பதைப் பெருமையாகச் சொல்லி பூகோளப் பாடத்தில் கேள்வி ஒன்றையும் கேட்பது வழக்கம்.

இவ்வளவுக்கு மிடையே நமது தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். நமது நாட்டிற்குள்ளேயும், வெளியேயும் உள்ள தேச பக்தர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உறுதியான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள். இவர்கள் தாய் நாட்டின் விடுதலைக்கு ஆக்கமும் ஊக்கமும் ஏற்படுத்தி வந்தனர்.

இந்திய சுதந்திர வரலாறு மிகவும் உற்சாகமூட்டக் கூடியதாகும். இந்திய சுதந்திரப் போராட்டம் தொடர்ந்து நூற்றாண்டுகளாக நடந்து வந்ததாகும். நமது போராட்டம் வீரத்திலும், தியாகத்திலும் ஏன் நாம் கையாண்ட ஆயுதங்களும், தந்திர முறைகளும், போராட்ட வரைமுறைகளும் போராட்டம் நடத்திய பகுதிகளும் தனிச்சிறப்பு வாய்ந்தவைகள். இவைகளுக்கு உலகில் ஈடு இணை கிடையாது.

நமது சுதந்திரப் போராட்டம் சில சமயங்களில் ஆன்மீகமாகவும் சில சமயங்களில் பயங்கரமானதாகவும் மற்றும் சில சமயங்களில் அமைதியானதாகவும், அகிம்சா முறையிலும் நடந்தது. ஆனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முதுகெலும்பை முறித்த கடைசி ஆயுதம் எது தெரியுமா? அதுதான் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் நிறுவிய இந்திய தேசிய ராணுவம்! இதன் கொடி மூவர்ணக்கொடி. அதில் பாய்கிற புலியும்

'டில்லி சலோ' என்ற கோஷமும் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்த ராணுவம் ஆசிய, ஐரோப்பிய போர் அரங்குகளிலும் புதியதொரு மாபெரும் எழுச்சியை ஏற்படுத்தி விட்டது.

இந்தியாவில் உள்ள தேசியப் பற்று கொண்டவர்களின் உள்ளங்களில் புரட்சிகரமான உணர்ச்சிபூர்வமான பெரும் மாறுதலை, ஏன் ஒரு பெரிய பிரளயத்தையே உண்டாக்கியது.

இதற்கு அன்றைய பிரிட்டிஷ் ராணுவத்திலிருந்த இந்தியப் படை வீரர்களும் கூட விலக்கல்ல. இந்த எழுச்சிக் கனல் இனி மற்ற நாடுகளை அடிமைப்படுத்தி வைத்திருக்க முடியாதென்பதை நன்கு உணர்த்தி அடிமைப்படுத்தும் எண்ணத்திற்குச் சமாதி வைத்தது.

இந்திய மக்கள், இழந்து விட்டிருந்த தேசிய உணர்வை மீண்டும் பெற்றனர். இந்தியாவை அன்னியப் பிடிப்பிலிருந்து விடுவிக்க வேண்டுமென்பதும் இனியும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை இந்திய மக்கள் சகிக்க மாட்டார்களென்பதும் பட்டவர்த்தனமாக்கப்பட்டு விட்டது. இந்த உணர்ச்சிகளுக்கு முத்தாய்ப்பு வைத்த மாதிரி அமைந்தது, பம்பாயில் அன்று பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துக் கடற்படையினர் செய்த கிளர்ச்சி. போலீஸ் தர்பார் மலையேறி விட்டது என்பதும் தெளிவானது. இனி இந்திய ராணுவத்தினரையும் அடக்கி ஆள முடியாதென்பதும் பகிரங்கமாகத் தெரிந்தது.

பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முயற்சியில் வெளிநாட்டில் வாழ்ந்து வந்த இந்தியர்கள் வகித்த பங்கு மிகவும் மகத்தானது. இப்படிப்பட்ட பங்கை வகித்தவர்களில் சிறப்பான இடத்தைப் பெற்றவர்கள் தமிழர்கள். இவர்கள் சிங்கப்பூர், மலேயா, பர்மா மற்றும் கிழக்காசிய நாடுகளில் பெரும்பான்மையானவர்களாக இருந்தவர்கள். எவ்வளவு அதிகமாக எண்ணிக்கையில் இவர்கள் இருந்தார்களோ அவ்வளவுக்கும் அதிகமான பங்கு வகித்தவர்களும் தமிழர்கள் தான்.

நேதாஜி நிறுவிய சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம் 30 லட்சம் மக்களின் நம்பிக்கையைப் பெற்றதற்கும் நன்றாகச் செயல்படவும் அங்கீகரிக்கப்படவும் உதவக் காரணகர்த்தாக்க

ளாக இருந்தவர்கள் தமிழ் மக்களே. இவர்கள் ஆற்றிய பங்கும் செயலுமே இதற்கு முக்கிய காரணம்.

இந்த மக்கள்தான் அரசாங்கத்திலும், இந்திய சுதந்திர லீக்கிலும் நிர்வாகத் துறையிலும் இ.தே.ராணுவத்திலும் அதன் விடுதலைப் போராட்டங்களிலும் முழுக்க முழுக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். நேதாஜி நிறுவிய சுதந்திர தற்காலிக அரசுக்குத் தேவையான அனைத்தும் இருந்தது. அதற்கு நேதாஜி தலைமையில் மந்திரி சபை இருந்தது. பிரதம மந்திரி, வெளி விவகார மந்திரி போன்றவர்களும் இருந்தனர். நேதாஜி மந்திரி சபையில் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் பிரதானமாக இருந்தனர்.

அன்றைய தளபதியாக இருந்த டாக்டர். லட்சுமி பெண்கள் அமைப்பின் பொறுப்பில் அமைச்சராக இருந்தவர். அத்துடன் பிரிட்டிஷ் படை வலிமைக்குச் சமமாக விளங்கிய ஜான்ஸி ராணி படைக்கும் லட்சுமி தளபதியாகவும் இருந்தவர். அன்றைய நாளில் சிங்கப்பூரில் மிகச் சிறந்த மகப்பேறு மருத்துவத் துறை நிபுணராக லட்சுமி விளங்கினார். இவ்வளவு நிறைய வருமானத்தையும் பெருமையையும் தானாக உதறித் தள்ளி விட்டு ராணுவ உடை தரித்து எல்லா இன்னல்களையும் இன் முகத்துடன் ஏற்று நடத்தினார் லட்சுமி. இவர் தலைமையில் இயங்கி வந்த ஜான்ஸி ராணி படையில் பங்கு கொண்டிருந்த பெண்களில் பெரும்பான்மையினர் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள்.

அன்று நேதாஜி நிறுவிய அரசில் விளம்பர, பிரசாரத் துறை அமைச்சராக இருந்தவர் திரு.எஸ்.ஏ. ஐயர். படையினர் சார்பாக அமைச்சராக இருந்தவர் ஜெனரல் ஏ.டி. லோகநாதன். இவரோடு மேலும் 8 அதிகாரிகள் ராணுவத் தரப்பில் பிரதிநிதித்வம் வகித்தார்கள். இவர், தன்னுடைய உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாமல் அந்தமான், நிக்கோபார் தீவுகளின் கவர்னர் பதவியை ஏற்றுக் கொண்டார். இத்தீவுகளைக் கைப்பற்றிய பின் ஜப்பானியர் நேதாஜி ஆட்களிடம் ஒப்படைத்தனர். பின்பு அத்தீவுகளுக்கு "சாஹீத், சுவராஜ்" என்று பெயர்கள் மாற்றியமைக்கப்பட்டன.

ஜெனரல் லோகநாதன் இந்திய தேசிய ராணுவத்திற்கு ஆற்றிய மாபெரும் தொண்டுகளை இங்கு நினைவு கூர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும். இந்திய தேசிய ராணுவத் தின் மிகவும் சிரமமான காலங்களில் எல்லாம் ஜெனரல் லோக நாதன் ஆற்றிய பணிகளைக் கண்டு எவரும் வியக்காமல் இருக்க முடியாது. இந்திய தேசிய ராணுவம் நிறுவிய போதும் சரி, அதன் நெருக்கடியான கட்டங்களிலும் சரி அப்படைகள் போர்க்களம் சென்ற காலங்களிலும் சரி, ரங்கூனிலிருந்து நேதா ஜியை சிங்கப்பூருக்கு அனுப்ப முயற்சித்தாலும் சரி, மாபெ ரும் வீரனாக விளங்கியவர் நமது ஜெனரல் லோகநாதன். வர லாறுகளில் நாம் படிக்கிற கோட்டைகளைக் காத்த மாவீரர்க ளின் செயல்களையே ஜெனரல் லோகநாதனின் பணிகள் நமக்கு நினைவூட்டின. அவரை அனைவரும் அன்பின் மிகுதி யால் 'மாமா' என்று அழைப்பார்கள். அவரும் மரியாதைக்காக எல்லோரையும் வயதைக்கூட பொருட்படுத்தாமல் 'மாமா' என்று திருப்பி அழைப்பார்.

அன்று செங்கோட்டையில் இந்திய தேசிய ராணுவத்தி னர் வழக்கு விசாரணையில் வயிற்றுப் புண்ணினால் ஜெனரல் லோகநாதன் மிகவும் துயருற்று வந்தார். அது இன்றைக்கும் என் நினைவில் பசுமரத்தாணிபோல் இருக்கிறது.

ஷாநவாஸ்கான், கர்னல் சைகால், நான் (தில்லான்) ஆகிய மூவர் மீதும் செய்த குற்றங்கள் என்னென்ன என்பதை பற்றிய குற்றப் பத்திரிகைகள் எங்களிடம் அளிக்கப்பட்டன. அதைப் பெற்றவுடனே எனக்கு மகிழ்ச்சி பொங்கியது. செங்கோட்டை யில் முதன் முதலாக விசாரிக்கப்படுகிற இந்திய தேசிய ராணுவ குற்றவாளிகளின் முதலாவது பட்டியலில் உள்ளவன் நான் என்பதை அறிந்துதான் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன். உடனே அன்று உடல் நலம் குன்றி, கட்டிலில் படுத்திருந்த ஜெனரல் லோகநாதனைக் காண குழந்தையைப் போல ஓடி னேன். அப்போது 'மாமா', 'மாமா' என்று மகிழ்ச்சியுடன் கத்திக் கொண்டே ஓடினேன். ''உங்களைவிட பெரியவராகப் போகிறேன்'' அதாவது எதிரிகளின் கைகளில் முதலாவதாக மரணமடையப் போகிறவன் இப்போது நான்தான்.

''நாங்கள்தான் முதலாவதாக விசாரணை செய்யப்படப் போகிறோம் என்று கூறி எங்கள் மீது மன்னருக்கு எதிராக போர் தொடுத்ததாக அளிக்கப்பட்டிருந்த குற்றப் பத்திரிகையைப் படித்தீர்களா?'' என்று அவரிடம் காட்டினேன்.

அன்று ஜெனரல் லோகநாதன் மிகவும் முடியாமல் இருந்தார். அவர் தனது வயிற்றுப்புண் வலியைக்கூட பொருட்படுத்தாமல் மெதுவாக மிகவும் சிரமப்பட்டுக் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தார். உடனே என் கையில் இருந்த குற்றப் பத்திரிகையை வாங்கி, படிக்க ஆரம்பித்தார். அதை வாசிக்க, வாசிக்க அவரது கண்களிலிருந்து நீர் வடிந்து கன்னங்களில் விழுந்தது. அப்போது கூடாது, கூடாது, நான் உயிருடன் இருக்கிற போது உன்னை அவர்கள் அவ்விதமாக குற்றம் சாட்டி விசாரணை செய்யக் கூடாது என்று ஜெனரல் லோகநாதன் உரக்கக் கூறினார்.

''உங்களில் மூத்தவர் நான்தான். எனவே, இவைகளுக்கு எல்லாம் நானே பொறுப்பாளி. அதனால் என்னைத்தான் முதலில் அவர்கள் தண்டிக்க வேண்டும்'' என்றார் ஜெனரல் லோகநாதன். அதோடு முதலில் நானே மரணமடைய வேண்டுமென்றார்.

மேலும் பலர் பெரும் பணியாற்றினார்கள். அவர்களில் திரு.எ. எல்லப்பா, திரு.ஜே. திவி முக்கியமானவர்கள். இவர்கள் இந்திய சுதந்திர லீக், ஆசாத் ஹிந்த்தளம் போன்றவைகளை நடத்துகிற பல்வேறு பொறுப்புகளுடன் அமைச்சர்கள் அந்தஸ்துள்ள ஆலோசகர்களாகவும் இருந்தனர். நேதாஜி அரசின் அமைச்சர்களாக இருந்த பெரும் பேறு பெற்றவர்களை மட்டும் குறிப்பிடுவதுடன் நிறுத்திக் கொள்ளலாமென்றிருக்கிறேன். நேதாஜி நிறுவிய அரசில் 1943 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ஆம் தேதியன்று அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டவர்களை மட்டும் குறிப்பிட்டால் போதுமென்று நினைக்கிறேன். அப்படி முக்கியமான பொறுப்புகளை வகித்த தென்னாட்டுத் தலைவர்களின் பெயர்களை கூறுகையில் சில முக்கியமானவர்களின் பெயர்கள் கூட விட்டுப் போகக் கூடுமென்று அஞ்சுகிறேன். நமது அமைப்புகள் தென் கிழக்காசியா, கிழக்காசியா போன்ற எல்லா நாடுகளிலும்

பரவி செயல்பட்டு வந்ததனால் சில முக்கியமான தலைவர்களின் பெயர்களைத் தவிர அனைவரின் பெயர்களையும் நினைவில் வைத்திருப்பதென்பது மிகவும் சிரமமாகும். திரு. ராகவன், திரு. மேனன், ஜெனரல் அழகப்பன், கர்னல் கே.பி.எஸ். திம்மையா, கர்னல் ராஜு, மேஜர் சாமி மற்றும் ராணுவ மருத்துவர் அதிகாரிகளில் தென்னாட்டைச் சேர்ந்தவர்களே மிகவும் அதிகம். இந்திய தேசிய ராணுவத்தின் மொத்த எண்ணிக்கையான நான்கு டிவிஷன்களில் பாதி பேர் தமிழகத்தைச் சேர்ந்த 'சிவிலியன் ரெக்ரூட்'கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நேரு பிரிகேட்டில் (4-வது கொரில்லா ரெஜிமெண்ட்) 600 தமிழர்கள் இருந்தனர். இதற்குத் தளபதியாக இருந்த பெரும் பேற்றை நான் பெற்றிருந்தேன். சில சமயங்களில் பல நாட்கள் குடிக்கத் தண்ணீரும் சாப்பிட சாப்பாடும்கூட இல்லாமல் இருந்தும்கூட என் கட்டளையைப் பின் பற்றியே நடந்தார்கள். அவர்கள் எவ்வளவு உண்மையாகவும், விசுவாசமாகவும் செயல்பட்டார்கள் என்பது இன்னும் என் மனதில் அப்படியே படம் பிடித்ததுபோல இருக்கிறது. ஒரு நாள் நள்ளிரவில் எதிரிகள் நம்மீது தாக்குதலை நடத்தினார்கள். அப்போது என் படையில் இருந்த தமிழ்நாடு வீரர்களில் ஒருவரை அழைத்து நீ சாப்பிட்டாயா? குடிக்கத் தண்ணீர் கிடைத்ததா? என்று வினவினேன். அந்த நேரத்தில் ராணுவ முறைப்படி நின்று, எல்லாம் கிடைத்ததென்றான் அந்த வீரன். அப்போது அவனது உதட்டில் புன்முறுவலும் முகத்தில் உறுதியும் காணப்பட்டன. ஆனால், அன்று அவனுக்கு குடிக்கத் தண்ணீரோ அல்லது சாப்பிட சாப்பாடோ இல்லை என்பது எனக்கு நன்கு தெரியும். அப்படி இருந்தும்கூட அவன் சொன்னது உண்மையல்ல என்பதை நான் வற்புறுத்தியதன் பேரிலும் ஒப்புக் கொண்டான். ஏன் அவன் அவ்விதம் சொன்னான் என்பதையும் கண்களில் நீர் மல்க கீழ்கண்டவாறு கூறினான்.

''சாகிப், நான் உணவு உட்கொள்ளவில்லை என்ற உண்மையை சொல்லியிருந்தால் அன்றைய நள்ளிரவு எதிர் தாக்குதலை சமாளிக்க என்னை அனுமதித்திருப்பீர்களா'' என்றான். இது உண்மையான தியாகத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

இந்திய தேசிய ராணுவத்தில் தென்னிந்தியர்கள் ஆற்றிய

பணியை ராமாயணக் காவியத்தில் வருகிற ஒரு சம்பவத்துடன் நான் ஒப்பிடலாமென்று நினைக்கிறேன். இவ்விதம் ஒப்பிடுவதினால் யாருடைய உணர்ச்சிகளையும் புண்படுத்துவதாகவோ அல்லது துவேஷத்தை ஏற்படுத்துவதாகவோ ஆகாதென்று எண்ணுகிறேன்.

ராமாயணத்தில் இலங்கையில் ராவணனிடமிருந்து சீதையை மீட்க ராமருக்கு உதவியது அந்தக் காலத்தில் தென்னகத்தினர்தான். அதேபோல தாய்நாடு விடுதலை பெற நேதாஜி நிறுவிய இந்திய தேசிய ராணுவத்திலும் அதை உருவாக்குவதிலும் தென்னக மக்கள் உதவினார்கள்.

1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27 ஆம் தேதி கிழக்காசிய மக்களுக்கு நேதாஜி ஒரு செய்தி விடுத்தார். அதில் கூறியதாவது: சகோதர சகோதரிகளே! இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வரலாற்றின் மிகப் பெரிய சகாப்தம் இப்போது முடிவடைகிறது. இந்த வீரசாகசத்தில் கிழக்காசியாவில் வாழ்ந்த இந்தியாவின் வீரர்களும் வீராங்கனைகளும் மிக உன்னதமான இடத்தைப் பெற்றுவிட்டனர்.

இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு படைகளில் சேர்ந்து உழைக்க முன் வந்ததின் மூலமும், பணம் மற்ற சப்ளைகளின் மூலமும் தேச பக்திக்கும் தியாகத்திற்கும் ஒளி விளக்காக நீங்கள் விளங்குகிறீர்கள். படை திரட்ட நான் விடுத்த அழைப்பிற்கு மிக உற்சாகமாக நீங்கள் அனைவரும் வந்து சேர்ந்ததுடன் மிகவும் பரோபகாரமான மனதுடன் நடந்து கொண்ட அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் என் மனதில் என்றென்றும் நிலை பெற்றிருக்கும்.

வற்றாத ஜீவநதியைப்போல, நான் அமைத்த படைக்கும் ஜான்சி ராணி படைக்கும் உங்களது ஆண் மக்களையும், பெண் மக்களையும் சேரும்படி அனுப்பி வைத்தீர்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்தியாவின் உண்மையான மக்களாக உங்களது கடமைகளை நீங்கள் ஆற்றியிருக்கிறீர்கள்.

உங்களது தியாகங்களையும் இந்திய சுதந்திரத்திற்கு நீங்கள் செய்த மகத்தான பெருந் தியாகங்களையும் உங்களது வீரச் சாதனைகளையும் எதிர்காலம் வாழ்த்தி வணங்கும்.

நம்முடைய ஈடு இணையற்ற வரலாற்றின் இந்தக் கட்டத்தில் உங்களுக்கு நன்றி சொல்லப் போகிறேன்.

தற்காலிகமாக ஏற்பட்ட தோல்வி கண்டு அதைரியப்படாதீர்கள். மகிழ்ச்சியுடன் இருங்கள். நல்லதிற்கே என்று எண்ணுங்கள். இவற்றுக்கெல்லாம் மேலாக இந்தியா விடுதலை அடைவது உறுதி என்ற நம்பிக்கையை மட்டும் விட்டு விடாதீர்கள். இனி இந்தியாவை அடிமைப்படுத்திக் கொண்டிருக்க உலகில் உள்ள எந்த சக்தியினாலும் முடியாது. இந்தியா விடுதலை பெற்றே தீரும். அதுவும் மிக விரைவில்'', 'ஜெய் ஹிந்த்'.

இந்தியாவிற்கு இந்திய தேசிய ராணுவம் சிறந்த பணியாற்றியது என்பதுடன் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலை இயக்கத்திற்கும் இது ஒரு முன்னோடியாக அமைந்தது என்பதிலும் சந்தேகமில்லை. இந்திய தேசிய ராணுவ வீரர்கள் வழக்கு விசாரணை செங்கோட்டையில் நடந்தபோது திரு. புலாபாய் தேசாய் மிகப் பொருத்தமாக பின்வருமாறு சொன்னார் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறுகிறேன்.

''இன்றைய நீதிமன்றத்தின் முன்னுள்ள வழக்கு விசாரணை என்ன தெரியுமா? அடிமைப்பட்டுள்ள மக்கள் தங்களது விடுதலைக்கு போராடுவதற்கு உள்ள உரிமையை எடுத்துக் காட்டுவதே இந்த வழக்கு. பல சாம்ராஜ்யங்களையும் ஏகாதிபத்தியங்களையும் தவிடு பொடியாக்கியது அடிமைபட்ட மக்களுக்கு சுதந்திர எழுச்சி அல்லவா?

விதி விளையாடியது. நம்முடைய பாரத நாடு சுதந்திரம் பெற்று ஏக இந்தியாவாக இருக்க வேண்டுமென்று நாம் போராடினோம். ஆனால், அது பிரிவினையானது மிகவும் துரதிஷ்டமானதாகும். அது நடந்தது நடந்து விட்டது. இனி அது பற்றிப் பேசிப் பயனில்லை. ஆனாலும், இனியாவது நமது மக்கள் ஒற்றுமையாக வாழவும் இந்தியா ஐக்கியமாக இருக்கவும் நாம் அனைவரும் பாடுபட முயல வேண்டுமென்று கடவுளின் பெயரிலும், மறைந்த நமது மாவீரர்களின் பெயரிலும் நமது முன்னோர்களின் பெயரிலும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் நேதாஜிக்குப் பிடித்தமான பாடலின் கருத்தை இங்கு கூறுகிறேன்.

நம் எல்லோருக்கும் ஒரே ஒரு பணியுண்டு. கொடுப்பதற்கென்று நாம் ஒவ்வொருவருக்கும் ஒரு உயிர்தான் உண்டு. சுதந்திரம் கெட்டு விட்டால் என்ன மிச்சம்? இங்கிலாந்து வாழ யார் சாவது? ஏன் சாவது? இந்தியா வாழ்ந்தால் எல்லோரும் வாழலாம்!

'ஜெய் ஹிந்த்'

இணைப்பு - 5

சுதந்திர இந்திய தற்காலிக சர்க்கார் பிரகடனம்

இந்திய மாமக்கள் 1757-ல் வங்காளத்தில் பிரிட்டிஷாரிடம் முதன் முதலாகத் தோல்வியுற்ற பின்னர், இழந்த விடுதலையை மீண்டும் பெறுவதற்காக நூறு வருடங்கள் வரையில் ஓயாது, ஒழியாது கடும் போர்கள் நிகழ்ந்து வந்தன. அக்காலத்திய சரித்திர ஏடுகளில், மக்கள் செய்த இணையற்ற வீரச்செயல்களும் உயிர்த் தியாகங்களும் நிறைந்து கிடக்கின்றன. தங்களுடைய ஒப்பற்ற ராணுவ சாகசங்களாலும், ஆச்சரியகரமான வீரதீர பராக்கிரமத்தினாலும், விளங்கியவர்களுள் சிராஜ் உத்

தௌலா, ஹைதர் அலி, திப்புசுல்தான், வங்காளத்தைச் சார்ந்த மோகன்லால், தென்னிந்தியாவைச் சார்ந்த வேலுத்தம்பி, அப்பா சாகிப் பான்ஸ்லே, மகாராஷ்டிர சிங்கமான பேஷ்வா பாஜிராவ், அயோத்தி பேகம்கள், சர்தார் சியாம்சிங், அதிகாரி வாலா, ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய், தாதியோதோபே, மகா ராஜா குமார்சிங், வீராதி வீரரான நானாசாகிப் முதலியோரின் பெயர்கள் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பட்டுள்ளன. தாய்நாட்டிற்காக உடல், பொருள், ஆவி எல்லா வற்றையும் தியாகம் செய்த அவர்கள் சாகாவரம் பெற்ற சிரஞ் சீவிகளாக விளங்குகின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக நமது மூதாதையர், இந்தியா முழுவ தற்கும் பிரிட்டிஷார் எவ்வளவு பேராபத்தை விளைவிக்கக் கூடியவர்கள் என்பதை முதலில் உணரவில்லை. எனவே, அவர்கள் பகைவர்களை எதிர்க்கும் முயற்சியில் ஒருமித்து நிற் கவில்லை. இறுதியாக, இந்திய மக்கள் தங்களுக்கு நேர்ந்துள்ள பேராபத்தை உணர்ந்தபோது, எல்லோரும் ஒன்றுபட்டு அந்நி யர்களான பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தைத் தகர்த்தெறிவதற்கா கப் போர் புரிந்தார்கள். 1857-ல் அவர்கள் பகதூர்ஷாவின் கொடி யின் கீழ் சுதந்திர யுத்தத்தை நடத்தினார்கள். அந்த யுத்தத்தின் ஆரம்பத்தில் தேச பக்தர்களுக்கு மகத்தான வெற்றிகள் கிடைத் தன என்றாலும், துர்ப்பாக்கியம் காரணமாகவும், சில தலைவர் கள் செய்த தவறுகளாலும் தேசியப் படைகள் சிதறுண்டு, பிரிட்டிஷாரின் ஆதிக்கம் மேலோங்கி, மீண்டும் நாடு அவர்க ளிடம் அடிமைப்பட நேர்ந்தது. அந்த விடுதலை யுத்தத்தின் முடிவு எவ்வாறாயினும், வெஞ்சமரில் பகைவர்களும் அதிச யிக்கத்தக்கவாறு போர் புரிந்து ஆருயிர் துறந்த வீராங்கனை ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாயும், சாணக்கிய முறைகளைக் கைக் கொண்டு பகைவர்களைப் பல மாதங்கள் வரையில் திக்கு முக்காடச் செய்த தாதியா தோபேயும், நானா சாகிபும் இந்திய வானில் என்றென்றும் அழியாத நட்சத்திரங்களாக ஒளி வீசித் திகழ்ந்து வருகின்றனர். தேசத்திற்காக இன்னும் அந்தத் தியா கங்களை செய்து வீரதீர பராக்கிரமத்துடன் சுதந்திரப் போரை நடத்த, அவர்களைப் பற்றிய நினைவு நமக்கு உற்சாகம் அளித்து வரும் என்பதில் ஐயமில்லை.

1857-ல் இந்திய தேசபக்தர்களின் பராக்கிரமத்தை நன்கு அறிந்து கொண்ட பிரிட்டிஷார் பீதியடைந்து, அதன்பின் இந்தியர்களைப் பலவந்தமாக நிராயுதபாணிகளாக்கி விட்டார்கள். பின்னர், பிரிட்டிஷாரின் கொடுங்கோன்மையும், மிருகத்தனமும் அதிகமாயின. எனவே, அவற்றின் விளைவாக இந்தியர்கள் சிறிது காலம் உணர்ச்சியற்றும், செயலற்றும் சோர்ந்து கிடந்தார்கள். 1885-ல் இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபை பிறந்ததும், மக்களிடையே சோர்வு அகன்று, புத்துயிரும் புதிய உணர்ச்சியும் உண்டாயின.

1885-லிருந்து முதலாவது உலக மகாயுத்தம் முடியும் வரையில் இழந்த சுதந்திரத்தைப் பெறுவதற்காக இந்தியர்கள் சாத்தியமான எல்லா முயற்சிகளையும் செய்தார்கள்; கிளர்ச்சி செய்தார்கள்; பிரச்சாரம் செய்தார்கள்; பிரிட்டிஷ் பொருள்களைப் பகிஷ்காரம் செய்தார்கள்; பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்; இறுதியில் ஆயுதங்களுடனும் புரட்சி செய்தார்கள். ஆனால், எல்லா முயற்சிகளும் இறுதி வெற்றியைக் கொடுக்கவில்லை. எனவே, தோல்விகளால் கலங்கியும், சுதந்திரத்தைப் பெற வேறு புதிய வழி ஏதாவது இருக்கிறதா என்று ஏங்கியும் மக்கள் தவித்துக் கொண்டிருந்தபோது, 1920-ல் மகாத்மா காந்தி முன் வந்து, ஒத்துழையாமை, சட்ட மறுப்பு என்ற புதிய ஆயுதங்களை உருவாக்கினார்.

அதிலிருந்து இருபது ஆண்டுகள் வரையில் இந்திய மக்கள் நாடு சுதந்திரம் பெறுவதற்காக தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். விடுதலையின் மகத்துவத்தை ஒவ்வோர் இந்தியரும் உணரத் தொடங்கினர். தலைவர்களின் உதாரணத்தைப் பின்பற்றி மக்கள் துன்பங்களை ஏற்றுக் கொள்ளவும், தியாகம் செய்யவும், சுதந்திரத்திற்காக உயிரைக் கொடுக்கவும் முன் வந்தனர். பெரிய பெரிய நகரங்களிலிருந்து மிகச் சிறிய கிராமங்கள் வரையில் எல்லா இடங்களிலும் உள்ள மக்கள் ஒரே அரசியல் ஸ்தாபனத்தின் கீழ் ஒன்றுபடலாயினர்.

அவ்வாறாக, இந்தியர்கள் மீண்டும் அரசியல் உணர்வு பெற்றதுடன், ஒரே அரசியல் இனமாகவும் விளங்கினர். அவர்கள் ஒரே லட்சியத்தைக் குறித்து, ஒரே குரலில் பேசுவதும்,

ஒருமித்து முயற்சி செய்வதும் சாத்தியமானது. 1937-லிருந்து 1939 வரையில் எட்டு மாகாணங்களில் அரசாங்க அதிகாரத்தை ஏற்றுக் கொண்ட காங்கிரஸ் மந்திரிகள் சுதந்திர ஆட்சிக்குத் தாங்கள் தயார் என்பதையும், தங்கள் சொந்த நாட்டை ஆட்சி புரியத் தங்களுக்கு திறமை உண்டு என்பதையும் நிரூபித்தார் கள்.

இந்த மகாயுத்தம் ஆரம்பமாகும் தறுவாயில், இந்தியா வின் விடுதலைக்கான இறுதிப் போராட்டத்திற்கு இந்திய மக் கள் தயாராகி விட்டனர். ஜெர்மனியும் அதன் நேச தேசங்களும் நமது பகைவர்களுக்கு ஐரோப்பாவில் அடிமேல் அடி கொடுத்து அவர்களுடைய பலத்தைத் தகர்த்துவிட்டனர். கிழக் காசியாவிலிருந்து பிரிட்டிஷாரை நிப்பொன் (ஜப்பான்) விரட் டியடித்து விட்டது. பல சந்தர்ப்பங்களும் மகிழ்ச்சியை அளிக் கும் விதத்தில் நமக்கு சாதகமாக இருக்கின்றன. தங்களுடைய தேசம் விடுதலை பெறுவதற்கான ஆச்சரியகரமான வாய்ப்பு இப்போது இந்திய மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

சரித்திரத்திலேயே முதல் தடவையாக, வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களும் அரசியல் துறையில் விழிப்படைந்து, ஒரே ஸ்தாபனத்தின் கீழ் ஒன்றுபட்டிருக்கிறார்கள். தங்களு டைய தாய்நாட்டிலுள்ள இந்திய சகோதர சகோதரிகளைப் போலவே அவர்களுடைய சிந்தனையும் உணர்ச்சியும் ஒரே விதமாக இருந்து வருகின்றது. தாய்நாட்டிலுள்ள மக்களைப் போல் வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களும் சுதந்திரப் பாதையில் சென்று வருகிறார்கள். கிழக்காசியாவில் இன்று முப்பது லட்சம் இந்தியர்கள் ''பரிபூரணத் தியாகம்'' என்ற கோஷத்தால் தூண்டப்பெற்று, பாரத நாட்டின் தர்மப்போரில் ஈடுபடத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு முன் னணியாக ''செல்வோம் டில்லி'' என்னும் வீரகோஷத்துடன் இந்திய சுதந்திர ராணுவம் கச்சை கட்டி, முரசொலி செய்து, ஆர்ப்பரித்து நிற்கும் கண்கொள்ளாக் காட்சியைக் காண்கி றோம்.

வேஷதாரிகளும் பேராசைக்காரர்களுமான பிரிட்டிஷார், பலவகையிலும் ஏழை இந்திய மக்களைச் சுரண்டி ஓட்டாண்டி

ளாக்கி விட்டார்கள். அதன் விளைவாக இன்று பாரதநாடெங் கும் கொள்ளையும் பஞ்சமும் தலை விரித்தாடுகின்றன. பசி யின் கொடுமையால் மக்கள் ஆயிரக்கணக்கில் மடிந்து வருகின் றனர். பிரிட்டிஷ் கொடுங்கோலர்கள் இன்று நமது சகோதரர்க ளின் நல்லெண்ணத்தை இழந்து ஏகோபித்த வெறுப்பிற்கு ஆளாகி விட்டார்கள். இந்தியாவில் அவர்களுடைய ஆட்சி ஊசலாடிக் கொண்டிருக்கிறது. துரதிர்ஷ்டகரமான பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதியான அடையாளமும் மறைவதற்கு ஒரே ஒரு தீப்பொறிதான் தேவை. இப்போது உருவாகியுள்ள இந் திய தேசியப் படையினரே பிரிட்டிஷ் ஆட்சிக்கு இறுதித் தீ வைக்கப் போகிறார்கள். தாய் நாட்டு மக்களின் உற்சாகமான ஆதரவும், பிரிட்டிஷ் இந்தியப் படையின் உதவியும், பொது மக்களின் அன்பும் ஆதரவும், வல்லமைமிக்க நேச தேசங்க ளின் உதவியும் தங்களுக்கு இருக்கின்றன என்ற நம்பிக்கை இந்திய தேசிய படையினருக்கு பூரணமாக இருப்பதால், அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றுவதில் தீவிர உறுதி கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம்விட இந்திய தேசீ யப் படையினர் தங்கள் சொந்த பலத்திலேயே பூர்ண நம் பிக்கை வைத்திருக்கிறார்கள்.

அடிமைத்தனம் என்னும் இருளில் இதுகாறும் அகப்பட் டுத் தவித்துவந்த நீசபாரதம் சுதந்திர ஒளியுடன் விளங்கப்போ வதால், ஒரு தற்காலிக அரசாங்கத்தை அமைத்து, அதன் கொடி யின்கீழ் நின்று இறுதிப்போரை நடத்த உறுதி கொள்ள வேண் டியது இந்திய மக்களின் கடமையாகும். ஆனால், இன்றைய நிலைமையில், இந்தியாவின் மாபெரும் தலைவர்கள் சிறைப் பட்டிருப்பதாலும், தாய் நாட்டின் மக்கள் முற்றிலும் நிராயுத பாணிகளாக்கப் பட்டிருப்பதாலும், தற்காலிக தேசீய அரசாங் கத்தை இந்தியாவில் நிறுவுவதோ அல்லது அதன் கீழ் ஆயுதம் தாங்கிப் போர் செய்வதோ சாத்தியமன்று.

இந்தியாவின் சுதந்திர உதயம் நெருங்கி விட்டது. இந்நி லையில் கிழக்காசியாவில் வசிக்கும் தேசாபிமானம் நிறைந்த இந்தியர்களின் கடமை என்னவெனில், வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் ஆதரவையும், தாய்நாட்டில் உள்ள

சகோதரர்களின் அன்பையும் ஆசிகளையும் கொண்டு, சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நிறுவுவதுடன், இந்திய சுதந்திர சங்கத்தின் ஆதரவில் இன்று போர் முரசு கொட்டி நிற்கும் இந்திய தேசீயப் படைகளுடன் சேர்ந்து தாய்நாட்டின் பரிபூரண விடுதலைக்காக உயிர் உள்ளளவும் உறுதியுடன் போராடுவதேயாகும்.

சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தைச் சேர்ந்த நாம் நமது முழுப் பொறுப்பையும் உணர்ந்து, நமது கடமைகளைச் செய்ய முற்படுகிறோம். நமது அன்னையின் விடுதலைக்காகப் போராட முற்படும் நமக்கு அருள்புரியும்படி எல்லாம் வல்ல முழு முதற் கடவுளை வேண்டிக் கொள்கிறோம்.

நம்நாடு, உலகத்தில் உள்ள மற்ற சுதந்திர நாடுகளைப் போல் மூவளமும் செறிந்து அவைகளுடன் சரிநிகர் சமானமாகத் தனது பண்டைப் பெருமையுடன் தலைதூக்கி நிற்கும் வரையில் தாய்நாட்டில் நமது தேசீயக் கொடி கம்பீரமாகப் பறக்கும் வரையில், நாமும் நமது சகோதரர்களும் உயிர் உள்ளளவும் போர் புரிவோம் என்று திரிகரண சுத்தியாக பிரதிக்ஞை செய்து கொள்கிறோம். நமது புண்ணிய பூமியிலிருந்து பிரிட்டிஷாரும் அவர்களின் நேச தேசத்தினரும் விரட்டியடிக்கப்படும் வரையில், தீவிரமான சுதந்திரப் போரை நடத்தும் பொறுப்பு தற்காலிக அரசாங்கத்தைச் சார்ந்ததாகும். விடுதலை பெற்ற இந்தியாவில் தேச மக்களின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட பொறுப்புள்ள நிரந்தரமான அரசாங்கத்தை அமைத்து, அதன் கையிலே தேச நிர்வாகப் பொறுப்பை அளிப்பதும் தற்காலிக அரசாங்கத்தின் கடமையாகும். இந்திய எல்லையிலிருந்து பிரிட்டிஷார் விரட்டப்பட்டு, இந்தியர்களால், இந்தியர்களின் நன்மைக்கான தேசீய அரசாங்கம் நிறுவப்படும் வரையில் தற்காலிக அரசாங்கம் தேசத்தின் நிர்வாகத்தை மேற்பார்வையிட்டு வரும்.

ஒவ்வொரு இந்தியரும் தற்காலிக அரசாங்கத்திடம் விசுவாசத்துடன் இருக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் கோருகிறது. அத்தகைய விசுவாசத்தைப் பெற இந்த அரசாங்கத்திற்கு உரிமையும் உண்டு. இந்தியப் பிரஜைகள் நலனுக்கும்

யாதொரு பேதமுமின்றி மத சுதந்திரமும், சம உரிமைகளும் சமமான சந்தர்ப்பங்களும் அளிக்கப்படுமென இந்த அரசாங் கம் உத்தரவாதம் அளிக்கிறது. இந்தியா முழுவதிலும் உள்ள மக்கள் யாவரும் மகிழ்ச்சியுடனும், சுபிட்சத்துடனும் வாழ வகை செய்வதே நமது கடமை என இந்த இந்திய அரசாங்கம் இதன் மூலம் உலகத்திற்குப் பிரகடனம் செய்கிறது. இந்திய மக்கள் யாவரும் ஒரே குலம், ஒரே இனம் என்ற முறையில் அணுவளவும் வேற்றுமையின்றி நடத்தப்படுவார்கள். இந்திய மக்களிடையே பிரிட்டிஷாரின் சூழ்ச்சி காரணமாக சிருஷ்டிக் கப்பட்ட வேற்றுமை உணர்ச்சிகள் ஒழிவதற்கான சகல முறை களையும் தற்காலிக அரசாங்கம் மேற்கொள்ளும்.

கடவுளின் பெயரால், இந்திய மக்களை ஒரே தேசீய இன மாக ஒருமைப்படுத்திய மூதாதையர் தலைமுறைகளின் பெய ரால், ஈடு இணையில்லாத பொக்கிஷமான வீரபராக்கிரமத் தையும், தியாகத்தையும் தமக்குப் பரம்பரைச் சொத்துக்களாக விட்டுச் சென்றுள்ள, சுதந்திரப் போர்களில் பகைவர்களை எதிர்த்து நின்று வீரஸ்வர்க்கம் அடைந்த தேச பக்தர்களின் பெயரால், நமது தாயின் மணிக்கொடியின் கீழ் ஒன்று சேரும் படியும், இந்தியாவின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக பகைவர் களைத் தாக்கும்படியும் நாங்கள் இந்திய மக்களை அழைக்கின் றோம். பிரிட்டிஷாருக்கு எதிரான இறுதிப் போரில் வெற்றி கிடைக்கும் வரையில் ஜயசங்கநாதம் ஒலிக்கும் வரையில், பகைவர்கள் விரட்டப்பட்டு மீண்டும் இந்தியா விடுதலை பெறும் வரையில், எத்தகைய இடையூறு களையும் லட்சியம் செய்யாமல் அஞ்சாநெஞ்சத்துடனும், ஆண்மையுடனும், இறுதி வெற்றியில் பூரண நம்பிக்கையுடனும் போரை நிறை வேற்றும்படி இந்திய மக்களை அழைக்கின்றோம்.

ஜெய் ஹிந்த்!

ஆஜாத் ஹிந்த் தற்காலிகச் சர்க்காரின் சார்பாகக் கைச்சாத் திட்டது.

சுபாஷ் சந்திரபோஸ் (ராஜாங்கத் தலைவர், பிரதம மந் திரி, யுத்தம், அயல்நாட்டு விவகாரம் இவைகளின் மந்திரி)

காப்டன் மிஸஸ். லட்சுமி (பெண்கள் ஸ்தாபனம்);
எஸ்.ஏ.ஐயர் (விளம்பரம், பிரச்சாரம்);
லெஃப்டனன்ட் கர்னல் ஏ.சி. சாட்டர்ஜி (நிதி);
லெஃப்டனன்ட் கர்னல் அஜிஸ் அஹமது,
லெஃப்டனன்ட் கர்னல், என்.எஸ். பகத்,
லெஃப்டனன்ட் கர்னல் ஜே.கே. பான்ஸ்லே,
லெஃப்டனன்ட் கர்னல் குல்ஜாரா சிங்,
லெஃப்டனன்ட் கர்னல் எம்.எஸ். கியானி
லெஃப்டனன்ட் கர்னல் ஏ.டி. லோகனாதன்,
லெஃப்டனன்ட் கர்னல் ஏசான் காதிர்
லெஃப்டனன்ட் கர்னல் ஷாநவாஸ் (ஆயுதம் தாங்கிய படைகளின் பிரதிநிதிகள்);
ஏ.எம். சாஹே, காரியதரிசி (மந்திரி பதவி);
ராஷ் பிஹாரி போஸ் (அதியுச்ச ஆலோசகர்);
கரிம் கனி
தேவநாத் தாஸ்,
பி.எம். கான்,
ஏ. எல்லப்பா
ஜே. திவி,
சர்தார் இஷார் சிங் (ஆலோசகர்கள்)
ஏ.என். சர்க்கார் (சட்ட ஆலோசகர்)

சியோனான்,
21.10.1943

உதவிய நூல்கள்

தமிழ்

நேதாஜி - சிவலை இளமதி.

நேதாஜி - எஸ்.எஸ். மாரிசாமி.

நேதாஜியின் வீரப்போர் - ஜெயமணி சுப்ரமணியம்.

நினைவு அலைகள் - சுதர்மன்.

கிழக்கு ஆசியாவில் நேதாஜி - கு.மு. வீராசாமி.

நேதாஜி காவியம் - வாய்மைநாதன்.

சரித்திரத்தை மாற்றிய சதிவழக்குகள் - சிவலை இளமதி.

தேவர் இதய நாதம் - முத்துராமலிங்கத் தேவர்.

ரத்தக்களரி - நேதாஜி.

புதுவாழ்வு - நேதாஜி.

இளைஞன் கனவு - நேதாஜி.

டில்லி நோக்கி - நேதாஜி.

புரட்சி - நேதாஜி.

விடுதலையின் விடிவெள்ளி - எஸ்.ஏ. அய்யர்.

கயிற்றில் தொங்கிய கணபதி - கலைஞர் மு. கருணாநிதி.

தென்னாட்டுப் புரட்சி - பொன். முத்துராமலிங்கம்.

விடுதலைப் போரில் தமிழகம் - ம.பொ.சிவஞானம்.

தென்னிந்தியாவைக் கண்டேன் - அமீர் ஹைதர் கான்.

இந்திய நாட்டின் எரிமலைத் தியாகிகள் - பாரதிபித்தன்.

இந்திய தேசிய ராணுவ மலர்கள்.

அப்துல் காதரும் ராமுத்தேவரும் - மா.சு. அண்ணாமலை.

சுபாஷ் சந்திரபோஸ் - சாம்பசிவன்.

மலேயா கணபதி - மலேசிய பழனி.

UNPUBLISHED

1. From Rangoon to Bangkok - by Major E. BASKARAN

2. POL DEPT, Govt of MADRAS - 1942, 43, 44, 45, 46 - Tamil Nadu Archives.

PUBLISHED

1. NETHAJI, Malaysian Perspective: Nethaji Centre, Kulalampore.

2. SPRINGING TIGER - TOYE.

3. NETHAJI IN SOUTH EAST ASIA - Dr. BHARGAVA.

4. INA SECRET SERVICE - Dr. BHARGAVA.

5. INA TOKYO CADETS - Dr. BHARGAVA.

6. MEMOIRS - M.N. ROY.

7. MY MEMOIRS OF INA & ITS NETHAJI - SHAH NAWAZ KHAN.

8. UNTO HIM A WITNESS - S.A. AIYER.

9. SELECTED SPEECHES OF BOSE - GOVT. OF INDIA.

10. NETHAJI - DEAD OR ALIVE - GUHA.

11. JUNGLE ALLIANCE - LEBRA.

12. NETHAJI - 6 VOLS. - NETHAJI RESEARCH BUREAU, CALCUTTA.

13. INDIAN PILGRIMAGE - S.C. BOSE.

14. INDIAN STRUGGLE - S.C. BOSE.

15. BLOOD BATH - S.C. BOSE.

16. S.C. BOSE - MARKANDEYA.

17. THE LAST DAYS OF NETHAJI - H.N. PANDIT.

18. NETHAJI & INDIA'S FREEDOM - N.R.B., CALCUTTA.

19. INA - MANGHAT.

20. EDWINA - RICHARD HOUGH.

21. GREAT INA - KIANI.

22. NETHAJI, PICTURES - N.R.B., CALCUTTA.

23. COUNTRY MUST KNOW WHAT HAPPENED TO NETHAJI -GUHA.

24. FUNDAMENTAL QUESTION OF REVOLUTION - S.C.BOSE.

25. THE GREAT ESCAPE - N.R.B., CALCUTTA.

26. THE STRUGGLE IN EAST ASIA - THIVY.

27. A BEACON ACROSS ASIA - WERTH.

28. STORY OF INA - GILL.

29. THE FLAMING SWORD FOREVER UNSHEATHED - S.K. BOSE.

30. HISTORY OF WORLD WAR II - MILLER.

31. THE RISE & FALL OF THIRD REICH - SHIRER.

32. THE MARCH ON DELHI - BARKER.

33. DEFEAT INTO VICTORY - SLIM.

34. THE WAR IN THE FAR EAST - COLLER.

35. ROAD PAST MANDALAY - MASTERS.

36. TO THE CORAL STRAND - MASTERS.

37. DEATH RAILWAY - RUSHIDIE.

38. 6000 DAYS - AMIYA RAO.

39. NEHRU - PATEL, V.B.

40. FREEDOM AT MIDNIGHT - LAPIERE & COLLINS.

41. INDIAN ARMY TRIUMPHANT IN BURMA - CHANDRA.

42. HISTORY OF INDIA'S FREEDOM - PADMANABHAN

43. STRUGGLE FOR FREEDOM - R.C. MAJUMDAR.

44. SIXTH COLUMN - DURRANI.

45. CIANO DIARIES - LIBASON.

46. ON TO DELHI - MENON.

47. A FREEDOM FIGHTER'S DIARY - MENON, K.A.K.

48. DISCOVERY OF INDIA - NEHRU.

49. AUTOBIOGRAPHY - NEHRU.

50. WORLD WAR II (4 VOLS.) - CHURCHILL.

51. INA & NETHAJI - INA FORUM.

52. AUTOBIOGRAPHY OF AN UNKNOWN INDIAN - CHAUDRI.

53. MARCH TO DELHI - SIVA RAMAN.

54. THE INDIAN NATIONALIST MOVEMENT 1885 - 48 SELECT DOCUMENTS - J.N. PANDEY.

55. WAR SPEECHES - CHURCHILL.

56. WORLD WAR II - ORBIS.

57. MUTINY OF INNOCENTS - DUTT.

58. NETHAJI - Dr. LAKSHMI & SHEGAL.

59. MAHATMA & NETHAJI - GUHA.

60. TRANSFER OF POWER - NICHOLES.

61. SUBHAS CHANDRA BOSE AS I KNOW HIM - KITTY KURTI.

62. HISTORY OF THE FREEDOM MOVEMENT IN INDIA - R.C. MAJUMDAR.

63. CONSPIRATORS, ABDUCTORS AND KILLERS OF NETAJI - V.P. SAINI.

64. NETAJI IN GERMANY - N.G. GANPULEY.

65. NETAJI IN GERMANY - ALEXANDER WERTH.

66. JAI HIND - DAIRY OF A REBEL DAUGHTER.

67. LAST DAYS OF NETAJI - G.D. KHOSLA.

68. NETAJI, MAN, MISSION AND MEANS - S.C. CHATERJI.

69. FREEDOM TO BREATHE - TRIBUVAN NATH.

70. DISSENT REPORT - BOSE, SURESH KUMAR.

71. NETAJI ENQUIRY COMMISSION REPORT - GOVT. OF INDIA.

72. HINDU - A HUNDRED YEARS OF INDIAN NATIONALISM.

73. THE ROLE OF THE GHADAR PARTY IN THE NATIONAL MOVEMENT - G.S. DEOL.

74. NETAJI - KABUL TO IMPHAL - H.N. PANDIT.

75. LOST HERO - MIHIR BOSE.

76. BHULABHAI DESAI - A BIOGRAPHY - M.C. SETALVAD.

77. THE WAR OF THE SPRINGING TIGER - GERARD M. CORR.

78. SELECT DOCUMENTS - ON INA - SAREEN.

79. A BUNCH OF OLD LETTERS - JAWAHARLAL NEHRU.

80. BRITISH SECRET REPORTS - CHOPRA.

81. MARCH TO FREEDOM IN MADRAS PRESIDENCY - SAROJA SUNDARA RAJAN.

82. TRADITION NEVER DIES - SINGH.

83. SUBASH, AS I KNOW - DILIP KUMAR ROY

84. BOW OF BURNING GOLD - HIREN MUKERJEE.

85. V.V.S. IYER - PADMANABHAN.

86. TILAK - KEER, D.

87. VEER SAVARKAR - KEER.

88. MAHATMA GANDHI - KEER.

89. MALAVIYA - GUPTHA.

90. HISTORY OF CONGRESS - PATTABHI SITARAMAYYA.

91. INDIAN REVOLUTIONARY MOVEMENT ABROAD - T. SAREEN.

92. MADAN LAL DHINGRA AND THE REVOLUTIONARY MOVEMENT - V.N. DATTA.

93. THE LAST YEARS OF BRITISH INDIA - MICHAEL EDWARDES.

94. THE STILWELL PAPERS - THEODER H. WHITE.

95. THE GREAT BATTLES OF WORLD WAR II - HENRY MAULE.

96. SUBHAS CHANDRA BOSE AND INDIAN COMMUNIST MOVEMENT - GAUTAM CHATTOPADHYAY.

97. LIFE AND TIMES OF BOSE - MADAN GOPAL.

98. INDIAN POLITICAL TRIALS - A.G. NOORANI.

99. MISSION WITH MOUNTBATTEN - JOHNSON.

100. S.C. BOSE - GROVER.

101. S.C. BOSE - S.R. BAKSHI.

102. S.C. BOSE - KAR.

103. S.C. BOSE AND MIDDLE CLASS RADICALISM - CHAKRAVARTHY.

104. WOMEN IN INDIA'S FREEDOM STRUGGLE - MANMOHANKAUR.

105. THE GANDHI READER - JACK.

106. CLASS, RACE AND COLONIALISM IN WEST MALAYSIA - STENSON.

ARTICLES

1. LEST WE FORGET - C.G.K. REDDY, THE HINDU.

2. OF UNSUNG FREEDOM FIGHTER - GOURAV, PATRIOT.

3. REVOLT IN THE INDIAN NAVY - THE HINDU.

4. ARTICLES FROM ORACLE.

5. HOW NAVY MUTINY WAS BETRAYED BY CONGRESS & MUSLIM LEAGUE - A NAVY MAN.
6. THE QUIT INDIA RESOLUTION - FRONT LINE.
7. THE STORY OF ROSS ISLAND - INDIA MAGAZINE.
8. FORGOTTEN SOLDIERS : STUDENTS IN TOKYO II WORLD WAR - GRANT K GOODMAN.

AUTHOR'S COLLECTION

1. INA CURRENCY & JAPANESE CURRENCY DURING THE OCCUPATION OF BURMA.
2. PHOTOS OF PEOPLE CONCERNED.
3. STAMPS.

CASSETTES

(A) AUDIO : VOICE OF NETAJI & CHALO DELHI - N.R.B., CALCUTTA.

(B) VIDEO : NETAJI & INDIA'S FREEDOM - N.R.B., CALCUTTA.

(C) VIDEO: ENEMY OF THE EMPIRE, B.B.C., LONDON.

இந்நூல் வெளிவர உதவிய பெருமக்கள்

நேர்காணல்

INA

ஜெனரல் தில்லான்
INA படைத்தலைவர்

கேப்டன் ஜானகி தேவர்
ஜான்சிராணி படைத்தலைவர், முன்னாள் மலேசிய பாராளு மன்ற உறுப்பினர்.

மேஜர் ஈ. பாஸ்கரன்
நேதாஜியின் நம்பிக்கைக்குரிய செயலர், சென்னை

லெப்ட். சந்திரன்
INA பேரவை, சென்னை.

ஹவில்தார் V. வைத்தியலிங்கம்
INA லீக், மதுரை.

கேப்டன் தாசன்
டோக்கியோ கேடட், ஏர் இந்தியாவில் உயர் பணிகளில் பணி யாற்றிய விமான ஓட்டி, இன்று சென்னையில் ஷெகல்ஸ் தூதர்.

K.A.K. மேனன்
இந்திய சுவராஜ் நிறுவனம், ஒற்றர் பள்ளி, பினாங்கு.

அமரர் C.G.K. ரெட்டி
இந்திய சுவராஜ் நிறுவனம், ஒற்றர் பள்ளி, பினாங்கு.
கட்டுரைகள் எழுதியவர்

லெப்ட்:. செல்வநாதன்
INA படை பயிற்றுனர், தாய்லாந்து அருகில்.

முத்து உமையாள் வேலாயுதம்
I.I.L. தலைவர், ஆசாத் ஹிந்த் பௌச், ரெட் ஹில்ஸ், சென்னை.

இந்திய ராணுவம்

கர்னல். ராஜன்
அமைதிப்படையில் பணியாற்றியவர், போர்க்கள வரலாற்று அறிஞர்.

INA வீரர்களின் உறவினர்

டாக்டர் பாலகிருஷ்ணன் - குமரன் நாயர் உறவினர், சென்னை.

திருமதி. மாலு அம்மையார் - குமரன் நாயர் மனைவி, கோழிக் கோடு.
திருமதி. பஞ்சவர்ணம் - ராமுத்தேவரின் சகோதரி, தும்படக் கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம்.

மற்றவர்கள்

திரு. மருதப்பன் - நேதாஜியின் ரேடியோ உரையைக் கேட்ட வர். சில காலம் காந்தியுடன் வார்தாவில் இருந்தவர்.

பழ. நெடுமாறன் - தலைவர், தமிழ் தேசிய காங்கிரஸ், மதுரை, INA வரலாறு தெரிந்த அறிஞர், பண்பாளர்.

அருண்மொழி, D.F.T. - திரைப்பட இயக்குநர் ''ஏர்முனை'' ''காணி நிலம்'' - இந்நூலாசிரியரை ஆரம்பத்தில் நூல் எழுத இயக்கியவர்.

ஜா. ரோலண்ட் நெல்சன், M.Tech. - நேதாஜி தபால் தலைகளை சேர்த்தவர்.

திரு. ராஜா. M.A., திரு. மணி. B.A., - RNR அரிசி ஆலை, மணப்பாறை.

திருமதி. சுலோச்சனா, தமிழ் ஆசிரியை, ஸ்ரீ சாரதா மேல்நி லைப் பள்ளி, சென்னை-17.

திரு. ச. மாணிக்கம் - தமிழ்ப் பேராசிரியர், டாக்டர் அம்பேத்கர் அரசு கல்லூரி, சென்னை-39.

திரு. சிவராமகிருஷ்ணன் - சென்னை.

திரு. மல்லிக் ரங்கநாதன் - ஆங்கிலப் பேராசிரியர், தலைசிறந்த எழுத்தாளர்.

அமரர் கே.சி. மனோகரன் - பேராசிரியர், பாதுகாப்பு இயல் துறை, சென்னைப் பல்கலைக் கழகம் (எப்பேர்ப்பட்ட இழப்பு! வார்த்தைகளால் எழுத முடியாது).

டாக்டர் இரா. இளவரசு - பேராசிரியர், தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.

திரு. இராம. திரு.சம்மந்தம் - ஆசிரியர், தினமணி, சென்னை.

திரு. புகழேந்தி - துணை ஆசிரியர், தினமணி, சென்னை.

திரு. குருதேவன், வயது 90, போராளி, சிங்கப்பூர்.

பின் இணைப்பு

ராமுத்தேவரைப்பற்றி...

இராமநாதபுரம் மாவட்டம் - ராஜசிங்கமங்கலம் தும்ப டக்கோட்டையில் பிறந்தவர் - தாய் காளியம்மாள் - சகோதரி கள் மூவர்.

தந்தை ராமலிங்கத் தேவர். பிழைப்பதற்காக பினாங்கு சென்றார். அவருடன் ஏழு வயது ராமுத்தேவரும் அங்கு சென்று ஜூனியர் கேம்ப்ரிட்ஜ் வரை படித்தார்.

நேதாஜி சிங்கப்பூர் வந்த பிறகு இந்திய மக்களுக்கு விடு தலை வெறி பிடித்துவிட்டது; அந்த விடுதலை வேள்வியில் ராமலிங்கத்தேவரும் விழுந்தார்; ராமுத்தேவரும் விழுந்தார்.

ராமு INA வின் 'ஒற்றர் படை' பள்ளியான சுவராஜ் நிறுவ னத்தில் சேர்ந்தார்; அங்குப் பயிற்சி பெற்ற 20 பேர் நீர்மூழ்கிக் கப்பலில் இந்தியாவிற்கு வந்தனர்; பிரிட்டீஷ் ராணுவம் அவர் களைக் கைது செய்தது. சென்னை சிறையில் நான்கு பேர் தூக்கிலிடப்பட்டனர்.

ராமுத்தேவர், குமரன் நாயர், சேது மாதவன் பர்மா வழி யாக இந்தியா வர முயன்றனர்.

ஆனால் முன்பே இவர்களைப்பற்றி ஆங்கிலேயர்கட்குத் தெரிந்ததால், இவர்களைக் கைது செய்ய முயன்றனர். இந்த மூவரையும் துப்பாக்கியால் சுட்டனர்; குண்டடி பட்ட குமரன் நாயர், ராமுத்தேவர், சேது மாதவன் அலிப்பூர் சிறையில் வைக் கப்பட்டனர்.

சித்ரவதை பொறுக்காமல் சேதுமாதவன் தற்கொலை செய்து கொண்டார். அலிப்பூர் சிறையிலிருந்து சில கடிதங் களை ராமு தன் தாய்க்கு எழுதினார். பிறகு அவர் சென்னை சிறைக்கு கொண்டு வரப்பட்டு **7.7.1944** அன்று தூக்கிலிடப் பட்டார்.

டெல்லி பாராளுமன்றத்தில் ஆங்கில அமைச்சர் ராமுத்

தேவர் உடலை யாரும் கேட்காததால் சென்னை ஓட்டேரியில் புதைத்ததாகக் கூறினர். ஆனால் உண்மை வேறு. தாய் காளியம்மாள் தன் மகன் உயிருடன் இருப்பதாக 1948 செப்டம்பர் வரை நம்பியிருந்தார். சுதந்திர இந்தியாவில் அவர் அலிப்பூர் சிறைக்கு 1948இல் கடிதம் எழுதி தன் மகனைப்பற்றி விசாரித்தார்.

அலிப்பூர் சிறை அதிகாரி ராமுத்தேவர் அப்பொழுது அங்கு இல்லை என்றுதான் கடிதம் எழுதினார். உண்மையை காளியம்மாளுக்குத் தெரிவிக்கவில்லை. இந்தியா விடுதலை அடைந்த பின்னரும் இந்த அன்னைக்கு தமிழக அரசோ, இந்திய அரசோ அவர் மகன் தூக்கிலிடப்பட்ட செய்தியைத் தெரிவிக்கவே இல்லை என்பதுதான் கொடுமை. அன்னை காளியம்மாள் தன் ஒரே மகன் வெள்ளையரால் தூக்கிலிடப்பட்டான் என்று தெரிந்ததும் சித்த பிரமை அடைந்தார்; சுய நினைவும் இழந்தார்.

சென்னை சிறையில் இந்திய விடுதலைக்காக 18 வயதில் தூக்கிலிடப்பட்ட ராமுத்தேவரின் அன்னைக்கு அற்ப காரணங்களைக் காட்டி தமிழக அரசு தியாகிகள் ஓய்வு ஊதியம் தர மறுத்துவிட்டது.

ஆனால் அவருடன் தூக்கிலிடப்பட்ட குமரன் நாயர் மனைவி மாலு அம்மையாருக்கு கேரள அரசு ஓய்வு ஊதியம் தந்துள்ளது. அவர் பெயரில் ஒரு தெரு கூட கோழிக்கோட்டில் உண்டு.

காளியம்மாள் இறுதியாக தமிழக அரசிற்கு ஒரு விண்ணப்பம் தந்தார். தான் ஓய்வு ஊதியம் பெற அரசிற்குத் தந்த தன் மகனின் போட்டோவையாவது அருள்கூர்ந்து திருப்பித் தருமாறு வேண்டினார். இவர் 1984இல் இறந்தார்.

ராமுத்தேவருக்கு மூன்று சகோதரிகள்! ஒருவர் இறந்து விட்டார். அவர் சகோதரிகள் பஞ்சவர்ணம், நாகமுத்தம்மாள் குடும்பங்கள் வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

.... ஒரு ராமுத்தேவரைதான் நாம் சந்தித்தோம். இன்னும் INA விடுதலை வீரர்கள் உள்ளார்கள். அவர்கள் வரலாற்றை எப்பொழுது தமிழர் அறிவர்.

சென்னையில் தூக்கிலிடப்பட்ட INA வீரர்கள்

அப்துல் காதர்

பவுஜா சிங்

பரதன்

குமரன் நாயர்

ஜானகி தேவர்

ராணி ஜான்சி படை

திரு. மேனன் இன்று;



அரக்கானில் போரிட்ட
ஹவில்தார் வைத்தியலிங்கம்

டோக்கியோ கேடட்டுகள்



வான் பயிற்சி



கடலில் பயிற்சி

தூக்கிலிடப்பட்ட மலேயா கணபதி

தூக்கிலிடப்பட்ட வீரசேனன்

போர்க்களம்

ராஷ் பிகாரி போஸ் சமாதி

கேப்டன் லட்சுமி, ஜானகி, காப்டன் தாசன்

மேஜர் பாஸ்கரன்

டாக்டர் வே.அனந்தகிரி

திருமதி கிரேஸ்தாசன் டாக்டர் ஜூலியா ராமதாஸ்

கேப்டன் தாசன்



டாக்டர் ராமதாஸ்

பியூஜிவாரா

பியூஜிவாரா, மோகன்சிங், ராகவன்

ராமுத்தேவர்.
அலிப்பூர் சென்ட்ரல் ஜெயில்
கல்கத்தா.
பெங்கால்.

Superintendent
Alipore Central Jail.

CENSORED AND PASSED
D.I.G. I.B., C.I.D.
BENGAL.

எனது அண்ணன் காளையர் அவர்கட்கு
நான் அநேக நமஸ்காரங்களும்,
தங்கைமார்களையும் விசாரிக்கிறது
பதில். எனக்கு "அம்மான்" பார்த்து
இருந்தது, இப்பொழுது தேவலை
சுகமாய் இருக்கிறேன் ஆனா
லும் இவைகளெல்லாம் தூக்கமே
இல்லை. காரணம் தங்களையும்,
தங்கைமார்களையும் நினைத்துக்
கொண்டே இருக்கிறது தான்.
நான் எழுதினால் பதில் கிடைக்குத
தா?

Superintendent
Central Jail.

என்னை விட்டால் வாரேன்
இல்லாவிட்டால் என்ன செய்ய
லாம். ஒன்றும் தெரியாத என்னை
ப்பிடித்து வைத்து இருக்கிறார்கள்
[illegible]க்குத்தான் தெரியும்
என்னை எப்பொழுது விடுவார்க
ளென்று. ஆகையால்

ராமுத்தேவர் கடிதம்

நேதாஜி

நேதாஜியின் மனைவி
எமிலி ஷெங்கல்,
மகள் அனிதா

நல்வாழ்த்துக்கள்

வீரா & வீரா

சென்னை - 32



தமிழில் முதல் முதலாகப் பல புதிய தகவல்கள்...

7.7.44 அன்று தூக்கிலிடப்பட்ட ராமுத் தேவர் யார்?

ராணுவப் பயிற்சி பெற டோக்கியோ சென்ற INA வீரர்கள் என்ன ஆனார்கள்?

நேதாஜியின் பொக்கிஷம் என்னவாயிற்று?

நேதாஜி திருமணம் செய்து கொண்டாரா?

INA தமிழ் வீரர்களைப் பற்றி ஆங்கிலேயப் பிரதமர் சர்ச்சில் என்ன கூறினார்?

தூக்கிலிடும் முன்பு அப்துல் காதர் என்ன கூறினார்?

நேதாஜி உயிருடன் உள்ளாரா?

இதுவரை வெளிவராத ஏராளமான புகைப்படங்களுடன்...

"இந்த நூலைப் படிப்பதின் மூலம் ஒருவேளை உங்கள் வாழ்க்கையே மாறக்கூடும்"

- கேப்டன் தாசன், ஷெகல்ஸ் நாட்டுத் தூதர்

"INA ஒற்றர் படைப் பற்றி ஆராய ஆசிரியர் ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்துள்ளார். மிகச் சிறந்த நூல்".

- மேஜர் பாஸ்கரன், நேதாஜியின் செயலர்

"இந்நூல், நடந்த நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில் வரலாறாகவும், அந்நிகழ்ச்சிகளைச் சுவை தோன்றச் சொல்லும் வகையில் இலக்கியமாகவும் விளங்குகின்றது. இந்நூலை உலக முழுவதும் உள்ள தமிழ் மக்களுக்குப் பரிந்துரை செய்கிறேன்."

- முனைவர் இரா. இளவரசு

இந்திய தேசிய ராணுவம், நேதாஜியைப் பற்றிய முழுமையான நூல்.